# நீறுக்குள் நெருப்பு

சிறுகதைத் தொகுப்பு



இணுவில் ஆர். எம். கிருபாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீறுக்குள் நெருப்பு

சிறுகதைத் தொகுப்பு

**இணுவில் ஆர். எம். கிருபாகரன்**
**(முருகேசு கிருபாகரன்)**

**இணுவில் திருவூர் ஒன்றிய வெளியீடு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நூல் | நீறுக்குள் நெருப்பு<br>சிறுகதைத் தொகுப்பு |
| | "NEERUKKUL NERUPPU"<br>Collection of Short Stories |
| Author: | Inuvil R.M. Kirupaharan |
| முதற் பதிப்பு | சித்திரை 2007 |
| பிரதிகள்: | 500 |
| ஆசிரியர்: | இணுவில் ஆர். எம். கிருபாகரன்<br>(முருகேசு கிருபாகரன்)<br>3642, லோரன்ஸ் அவன்யூ கிழக்கு<br>ஸ்காபுரோ, ஒன்ராறியோ,<br>M1G 1P6 |
| தொலைபேசி | 416. 430. 0422 |
| பதிப்புரிமை: | ஆசிரியருக்கே |
| பின் அட்டை: | செல்வி. துசியந்தி சத்திய சீலன் |
| கணனி வடிவமைப்பு<br>அச்சுப்பதிவு: | கிராபிக் லாண்ட அச்சகம்<br>285 புரோகிரஸ் அவன்யூ<br>ஸ்காபுரோ<br>647. 219. 7576 |
| வெளியீடு: | இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் திருவூர் ஒன்றியம்
## கனடா

## பதிப்புரை

எமது ஒன்றியம் கடந்த ஏழு ஆண்டுகளாக இங்குள்ள எம்மூர்ச் சிறார்களிடையே, தமிழ் மொழித் திறமைகாண் போட்டிகளையும் பண்ணிசை போட்டிககளையும், ஒன்று கூடல்களையும் தைப்பொங்கல் விழாவையும், ஆண்டு தோறும் நடாத்தி வருகிறது. இவற்றின் மூலம் எமது தமிழ் சைவப் பண்பாட்டு விழுமியங்களை இளந்தலைமுறைக்கும் ஊட்டி வைத்து இங்கும் எம் மக்கள் ஒற்றுமைப்பலமும் கௌரவமும் பேணி வாழச் செய்வதற்காக உழைத்து வருகிறது.

இந்த வகையில் கடந்த ஆண்டுகளில் இணுவில் வீரமணி ஐயர் அவர்களின் திருச்செந்தூர் முருகன் கீர்த்தனைகளை நூல் வடிவிலும் இணுவைச் சிவகாமி அம்மன் கீர்த்தனைகளை இறுவட்டாகவும் தயாரித்து வெளியிட்டோம்.

கனடா கு. சிவகுமாரன் அவர்களின் சிறுவர் தமிழ்மாலை இறுவட்டு வெளியீட்டு விழாவையும், நோர்வே. ந. சண்முகப்பிரபு அவர்களின் உலகத்தமிழ்க் கவிதை நூல் வெளியீட்டு விழாவையும் நடத்தினோம். மேலும் இணுவை சின்னத்தம்பிப் புலவரின் பஞ்சவர்ணத்தூது வெளியீட்டு விழாவையும் விரைவில் நடத்த உள்ளோம். இந் நிலையில் இணுவில் திருவூர் ஒன்றியத்தின் மிகக் கூடிய அசைவுள்ள சொத்தாக - இதன் செயலாளராகக் கடந்த 7 ஆண்டுகளாக உன்னத பணியாற்றி வரும் இணுவில் ஆர். எம். கிருபாகரன் அவர்களின் நீறுக்குள் நெருப்பு என்னும் இச் சிறுகதைத் தொகுதியை அச்சிட்டு வெளியிடக்கிடைத்த வாய்ப்பினையிட்டுப் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம்.

இது போன்ற நூல்கள், இறுவட்டுகளை வெளியிடுவதன் மூலம் தொடர்ந்தும் தமிழ் கூறும் நல்லுலகு முழுமைக்கும் எமது ஊர் ஒன்றியம் தன் பணியை விரிவாக்கி வரும் என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறோம்.

வணக்கம்
28.04.2007

செ. தளையசிங்கம்
தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

அன்று 1975ஆம் ஆண்டு முதன் முதலாக என்னால் எழுதப்பட்ட துணுக்கு “கலகலப்பு” நகைச்சுவை மாத இதழில் “தெய்வச் செயல்” எனுந் தலைப்பில் வெளியான போது அடைந்த மகிழ்ச்சியும் உற்சாகமும் என்னை மேலும் எழுதத் தூண்டின. அப்போது 17 வயதான நான் க. பொ. த. (சாதாரணதரம்) படித்துக் கொண்டிருந்தேன். ஓய்வுள்ள நேரங்களிலே கவிதை, அரசியல் - பொருளாதாரக் கட்டுரைகள், நகைச்சுவை கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள் என்பவற்றை யாழ்ப்பாணத்தில் வெளிவந்து கொண்டிருந்த ஈழநாடு, ஈழமுரசு, உதயசூரியன் பத்திரிகைகளில் எழுதினேன்.

பின்பு கனடாவுக்குப் புலம் பெயர்ந்த பிறகு கனடியப் பத்திரிகைகளில் அரசியல் ஆய்வுக் கண்ணோட்டங்கள் எழுதிவரும் போது சிறுகதையும் எபத ஆரம்பித்தேன். இலங்கை எழுத்தாளர்களான செங்கை ஆழியான், இணுவில் கே. எஸ். ஆனந்தன், கே, டானியல், அகஸ்தியர், இலங்கையர்கோன், தெணியான், யோ.பெனடிக் பாலன், சிற்பி, வ.அ,இராசரத்தினம், போன்றோரின் கதைகளை விரும்பி வாசிப்பதுண்டு. தமிழக எழுத்தாளர்களிலே பேரறிஞர் அண்ணாா, கலைஞர் கருணாநிதி, கவியரசு கண்ணதாசன் போன்றோரின் படைப்புகள் என்னை ஈர்ததில் ஆச்சரியப் படுவதற்கில்லை. கல்கியின் “சிவகாமியின் சபதம்”, சாண்டில்யனின் “கடல்புறா” அகிலனின் “கயல்விழி” போன்ற நாவல்களில் வரும் கதாப்பாத்திரங்களும் வர்ணனைகளும் இன்றும் என் கண் முன்னே நிற்கின்றன.

எனது கதைகளைப் பிரசுரித்த நம்நாடு, ஈழநாடு, ஈழமுரசு, வீரகேசரி, உதயன், முழக்கம் பத்தரிகைகளுக்கும், உங்கள் நண்பன், பறை சஞ்சிகைகளுக்கும் என் மனமார்ந்த நன்றிகள் என்றும் உண்டு. அத்துடன் அவற்றின் ஆசிரியர்கள் தந்த உற்சாகம் என்னைத் தொடர்ந்தும் எழுத வைக்கிறது என்பது உண்மை.

கதைகளில் வரும் பாத்திரங்கள் யாவும் அன்றாட வாழ்விலே அடிக்கடி நம்மிடையே உலாவும் முகங்களே. படைப்புகள் கற்பனைக் கதைகள் ஆயினும் ஒவ்வொரு கதையினதும் கருவுக்குரிய அணு ஏதோ ஓர் உண்மைச் சம்பவம் அல்லது செய்தியிலிருந்து பிறக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப்போர் வீறுநடைபோடும் இந்த வேளையிலே படைப்பாளிகளின் பங்கு எவ்வளவு கனகாத்திரமானது என்பதை அனுபவ வாயிலாகக் காண்கிறோம். தமிழீழ தேசத்தில் ஆக்கிரமிப்புப் படைகளின் கொடுமைகளால் தமிழ் மக்களுக்கு நிதமும் நிகழும் மனித அவலங்கள் பெரும்பாலான கதைகளில் இடம் பெறுகின்றன. மீதிக்கதைகள் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை மையமாக்கிப் பின்னப்பட்டவையே.

விடுதலைப்போர் நடைபெறும் போது படைக்கப்படும் இலக்கியங்கள் காலத்தின் பதிவாக உள்வாங்கப்படுகின்றன. இந்தியவிடுதலைப் போராட்ட காலத்தின் பதிவுகளை கல்கியின் படைப்புகளிலே காணலாம். அதைப்பின்பற்றி எனது கதைகளும் காலத்தின் பதிவுகளாக உலாவருகின்றன.

நான் எழுத ஆரம்பித்த காலம் முதல் தொடர்ந்து எழுத வேண்டும் என்று என்னை ஊக்குவித்துவரும் பண்டிதர் இணுவில் ச. வே. பஞ்சாட்சரம் அவர்களே இந் நூலின் உருவாக்கத்திலும் ஆலோசனைகள் வழங்கியுள்ளார். அவருக்கும் இந்நூலை அழகுறவும், தரமாகவும் அச்சிட்ட கிராபிக்லாண்ட் அச்சகத்தார்க்கும், பின்அட்டை ஓவியம் வரைந்த செல்வி துசியந்தி சத்தியசீலனுக்கும் என் இந் நூலை வெளியிடும் இணுவில் திருவூர் ஒன்றியத்திற்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு
அன்புடன்
இணுவில். ஆர். எம். கிருபாகரன்
28. 04. 2007

3642 Lawrence Ave. East
Scarborough, ON., M1G 1P6
416. 430. 0422
email: cool416@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இணுவில் கலை இலக்கியக் கழக அமைப்பாளர்
## பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் வழங்கிய

## முன்னுரை

அறம் செய்ய விரும்பு என்றார் ஔவையார். இது அவரது அறிவுரை - ஆணை! நமது புத்தி இதனை ஒரு படிப்பினை என்று ஏற்றுக் கொள்வதோடு அநேகமாக நின்று விடுகிறது. செயற்படும் உந்தல் இதனால் நம் மனங்களில் கிளம்புவது நிச்சயமில்லை.

ஆனால் இதே கருத்தை வள்ளுவர்

"அறத்தா றிதுவென வேண்டா! சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தானிடை."

என்று வெளியிடுகிறார். அதாவது அறஞ்செய்து வாழ்பவன் பிறரால் தூக்கிச் சுமந்து மதிக்கப்படுவான். அற நெறியில் ஒழுக அறஞ்செய்யத் தவறுபவன் பிறரைத் தூக்கிச் சுமக்கும் துயரநிலைக்கு ஆளாவான் என்று அனுபவத்தைக் கிளறுங் கலை நயத்தோடு கூறுகிறார். இது மறம் தவிர்த்து அறம் புரிந்து வாழவேண்டும் என்ற உள்ளுந்தலை எந்த அளவுக்கோ எம்முள் கிளப்பி விடுவதாக அமைகிறது.

இது போலவே நீதி நூல்கள், தத்துவ நூல்கள் வெறுமனே தத்துவங்களாக முன் வைக்கும் நீதிக் கருத்துகளை நவரச உணர்ச்சி அனுபவ மசாலை கலந்து வெளியிடுவதன் மூலம், அக்கருத்துக்கள் வாசகன் உள்ளத்தின் ஆழ அகலங்கள் எங்கும் ஊடுருவி உறைத்து வேரூன்ற வைக்கும் ஆற்றல் பெற்றுவிடுகின்றன, கதை வடிவிலான இதிகாசங்கள், காவியங்கள், நாடகங்கள் போன்ற இலக்கியங்கள்.

சமகாலச் சமூக நிலையைப் பொறுத்த அளவிலும் அரசியல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக. ஆன்மீகக் கருத்துக்கள் வெறுமனே வரட்டுப் பிரசாரத் தணல்களாக மேடைகளில், ஏடுகளில், நூல்களில் கொட்டித் தீர்க்கப்படும் வேளைகளில் அவை மக்களின் ஆழ்மனங்களில் இலேசான தாக்கத்தையேனும் ஏற்படுத்துவதில்லை. அணுவள வேனும் சிந்தனையைக் கிளறுவதில்லை.

ஆனால் இக்கருத்துகள் பொருத்தமான சம்பவங்களினூடான அனுபவங்களாக நயம்படப் புனையப்படும் சிறுகதை, நாவல், நாடக இலக்கியங்கள், மக்கள் மனங்களை ஈர்த்து, இனித்து அம்மனவுலகங்களைப் பிடித்து ஆட்டும் வல்லமை பெற்று விடுகின்றன. எனினும் இவ்வல்லமையின் பெரும்பங்கு இவற்றைப் படைக்கும் எழுத்தாளர்களின் அறவுணர்ச்சி, இரசனை, இலட்சியத் தெளிவு, கற்பனைத்திறன் என்பவற்றின் ஆழத்தைப் பொறுத்தே அமைகின்றது.

இந்த வகையில் இணுவில். ஆர். எம். கிருபாகரன் தமிழீழ மக்களின் நிரந்தரமான - நிலையான நல்வாழ்வுக்கு - பாதுகாப்புக்கு உள்ள ஒரேயொரு வழி தமிழீழத் தனியரசு நிறுவப் படுவது தான் என்ற உண்மையை ஆழமாகப் புரிந்து கொண்டு கவிதைகளாக, கட்டுரைகளாக, சிறுகதைகளாக இலக்கியங்களைப் படைத்து வருபவர். இந்தத் தொகுதியில் இடம் பெற்றுள்ள அவரது சிறுகதைகளில் 75 வீதமானவை அந்த விடுதலை இலட்சியத்தை நேரடியாவும் மிகுதிக் கதைகள் மறைமுகமாகவும் பிரதிபலிக்கின்றன. இந்த இலட்சியத்துக்குப் பங்கமற்ற வகையிலேயே தமிழ்ச்சமூகத்தின் பொதுவான பிரச்சினைகளை மையப்படுத்திய கதைகளையும் வெகு அவதானத்தோடு அவர் எழுதியிருப்பதைக் காணமுடிகிறது. அவரது இந்த இலட்சிய உறுதிப்பாடும், அவரிடம் என்றும் காணப்படும் தன்னடக்கமும், கடின உழைப்பும், சமூக மனப்பான்மையும், வாசிப்புப் பழக்கமும், மென்மையான மனப்பாங்கும், நுண்மையான சுவையுணர்வும் சேர்ந்து அவர் படைக்கும் இலக்கியங்களுக்குக் கவர்ச்சியையும் வலிவையும் வழங்கி வருகின்றன.

சமகாலத் தாயகத்திலும் புலம் பெயர் நாடுகளிலும் தமிழ் மக்கள் வாழ்க்கையில் ஏற்படும் யதார்த்தமான அனுபவங்கள் பற்றிய தமது மனத்திரைப் பதிவுகளை அழகாக அளவாக இக்கதைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரித்துக் காட்டுகிறார் கிருபாகரன். தமது கதைகளின் சாதாரண பழகு தமிழ்ச் சொற்களாலான வருணனைகள் மூலம்அற்புதமான காட்சிப் படிமங்களை வாசகர் மனக்கண்முன் பளிச்சென நிறுத்தியுள்ளவர் பிரபல சரித்திர நாவல் ஆசிரியர் அமரர் கல்கி அவர்கள். கிருபாகரனின் இக்கதைகளில் அந்த அழகை நிரம்பக் காணமுடிகிறது. தாயகத்து யாழ்ப்பாணக் களத்தில் எழுந்த கதைகளை வாசிக்கும் போது யாழ்ப்பாண மண்வாசனை மனத்தை நிறைக்கிறது. அது போலவே இவர் காட்டும் வன்னியின் புதிதாக முளைக்கும் குடியேற்ற வயல்களின் இளம்பச்சைப் பயிர்ப் பரப்புகள், மலையகத் தோட்டத் தொழிலாளரின் தனித்துவ சோக வாழ்வியற் கோலங்கள் என்பன சொற் சித்திரங்களாக வாசகர் நெஞ்சில் குடியமரும் வலிமை பெற்று விளங்குகின்றன.

உலகில் தமிழினத்தின் நிலைபேற்றை உறுதிப் படுத்த தேவையான உடனடிப் போராட்டத்தில் பங்கேற்கும் தியாகிகளை உருவாக்கி விடும் நோக்கத்தோடு எழுதுவது ஒருவகைப் பணியாக அமைய, அப்போராட்டத்தினூடு அமையப்போகும் நல்லெதிர்காலத்தைத் தக்கவைக்கும் பொறுப்புணர்ச்சியை ஒவ்வொரு தமிழனுக்கும் ஊட்டிவிடும் தூரநோக்கோடு தமிழ்ச்சமூகத்தின் சீர்திருத்தத்தினை இலக்காகக் கொண்ட இலக்கியங்களைப் படைப்பது இன்னொரு வகைத் தமிழ்ப்பணியாக அமைகிறது. இந்த இருவகைப் பணிகளிலும் கிருபாகரன் ஈடுபாடு கொண்டு உழைப்பதனை இத்தொகுதி உணர்த்தி நிற்கிறது.

ஈழத்தின் முன்னணித் தமிழ் ஏடுகளான வீரகேசரி, ஈழநாடு. ஈழமுரசு, கனடாவில் வெளிவரும் ஏடுகளான, முழக்கம், உதயன், ஈழமுரசு, நம்நாடு, பறை, உங்கள் நண்பன் என்பவற்றில் காலத்துக்குக் காலம் வெளிவந்ததன் மூலம் இலக்கிய உலகின் அங்கீகாரத்தையும், வாசகர்களின் பாராட்டுக்களையும் ஈட்டிக் கொண்ட கதைகளே கிருபாகரனின் இந்தச் சிறுகதைகள்.

1970களில் ஈழத் தாயகத்தில் இலக்கியப்பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்த இணுவில் கலை இலக்கியக் கழகம் நடாத்திய இலக்கியக் கருத்தரங்குகளிலும் அது ஊர்கள் தோறும் நிகழ்த்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரங்குகளிலும் ஆர்வத்தோடு பங்கு பற்றி வந்தவர் கிருபாகரன். அக்கழகக் கவியரங்குகளில் பங்கு பற்றி, இன்னும் இலக்கியப் பணிகளில் ஆங்காங்கு ஈடுபட்டுக் கொண்டிருக்கும் படைப்பாளிகள் ந. சண்முகப்பிரபு (நோர்வே) வ.க.பரமநாதன் (டென்மார்க்) தி. திருநந்தகுமார் (நியூசீலந்து) இணுவையூர் செ. பாஸ்கரன்(அமெரிக்கா) முனைவர் செ. வ. மகேஸ்கரன் (பேராதனை) ந. கணேசலிங்கன் (நீர்கொழும்பு) செ.வ. மனோகரன் (ஜேர்மனி) இ.அருட்செல்வம் (இணுவில்) வைத்திய கலாநிதி செ. ஆனந்தவரதன் (இங்கிலாந்து) போன்றோர் மத்தியில் மிகவும் குறிப்பிடத்தக்க படைப்பாளியாக விளங்குபவர் ஆர். எம். கிருபாகரன்.

இவரது இந்த "நீறுக்குள் நெருப்பு" தொகுதிச் சிறுகதைகளில் தாயகக் களங்களில் உருவான கதைகள் நிச்சயமாகப் புலம்பெயர் நாடுகளின் இன்றைய தமிழ்த் தலைமுறைக்கும் இனிவரும் தலைமுறைகளுக்கும் தாயகத்தினது, விடுதலைப் போராட்டக்கால வாழ்வியற் கோலங்களை உணர்வு பூர்வமாக மனக்கண்முன் நிறுத்திச் சிந்திக்க, எழுச்சிகொள்ள வைக்கும் என்பதில் ஐயமில்லை.

அதுபோலவே இத்தொகுதியின் புலம் பெயர் நாடுகளின் கதைகளும் அந்நாடுகளின் தமிழரது வாழ்வியற் சித்திரங்களைச் சமகாலத் தாயக உறவுகளும் அவர்களின் பின்வரும் வாரிசுகளும் தரிசிக்கவும், நெஞ்சுருகவும் வைக்க உதவும் என்பது ஒருதலை.

இனஅழிப்புக்குள்ளாகி அன்றாடம் அல்லோலகல்லோலப்படும் தாயகத் தமிழர்களிடையே இலக்கிய வாசிப்புப் பழக்கம் வெகுவாகத் தேய்ந்து கொண்டு போகிறது. தரையில் வீசப்பட்ட மீன்படும் துடிப்பு, திணறல்களுக்கு உள்ளாகியிருக்கும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் இலக்கிய வாசிப்புப் பழக்கம் அடியோடு அற்றுப் போகும் நிலை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

மேலும் தமிழ்த் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள். நாடகத் தொடர்கள், திரைப்படங்கள் தாம் இன்று புலம் பெயர் நாட்டுத் தமிழ்ச்சிறார்கள் ஓரளவாவது தமிழை அறிந்து கொள்ள உதவுகின்றன. மறுபக்கமாக நோக்கும்போது வாசிப்புப் பழக்கம் ஏற்படுவதற்குத் தடையாகவும் இவை காணப்படுகின்றன. இச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறார்களுக்கு நடனம், சங்கீத வகுப்புகள், தமிழும் கற்பிக்கும் வகுப்புகளாக மறைமுகமாக எந்த அளவிலோ பயன்பட்டு வருகின்றன. இவ் வகுப்புகள் போல, பேச்சுக்கலைப்பயிற்சி வகுப்புக்கள், நாடகம், சிறுகதை, கவிதை எழுதும் கலைப் பயிற்சி வகுப்புகளும் புலம் பெயர்நாடுகளில் நடாத்தப் படுமானால் அந் நாடுகளில் தமிழும் தலைமுறை தலை முறையாக வாழும். கிருபாகரன் போன்ற இலக்கியப் படைப்பாளிகள், பணியாளர்களும் தோன்ற வாய்ப்புண்டாகும். இறுதியாக மானத் தமிழுலகுக்கு விடுதலைப் போராளிகளை, மாவீரர்களை, விடுதலைத் தொண்டர்களை, விடுதலைக் கலைஞர்கள், கவிஞர்களை, எழுத்தாளர்களை ஏராளமாக வழங்கிப் பெருமை சூடிநிற்கும் இணுவில் மண்ணின் தமிழுணர்வு மிக்க படைப்பாளியான ஆர். எம். கிருபாகரன் தன் பணியைத் தொடர்ந்தும் உற்சாகமாக ஆற்றத் தமிழ் முருகன் திருவடிகள் வலிமை வழங்க வேண்டி வாழ்த்தி அமைகிறேன்.

ச.வே.பஞ்சாட்சரம்

ஸ்காபுரோ
கனடா
20.04.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்...


| | |
|---|---|
| சபலம் சாத்தியமாகாதபோது | 01 |
| உனக்கு நீயே நீதிபதி | 07 |
| உழைப்பவன் அறிவான் உழைப்பை | 13 |
| ஈகம் இந்த மண்ணிற்காக | 20 |
| நேர்மை | 28 |
| சேவை செய்வதே ஆனந்தம் | 37 |
| தேவை இதுபோல் தெளிவு | 46 |
| பரீட்சைக்கு நேரமில்லை | 56 |
| நம்பிக்கைச் சக்கரம் | 64 |
| துன்பத்தில் இன்பம் | 71 |
| திருந்தாத உள்ளம் | 76 |
| பறக்க இடம் தேடும் அகதிப் பறவை | 82 |
| நீறுக்குள் நெருப்பு | 88 |
| இவர்களும் மனிதர்களே | 94 |
| புதிதாய் ஒரு உறவு | 101 |
| காத்திருக்கும் கடமைகள் | 108 |
| இன்றைய தொழிலாளி நாளைய போராளி | 113 |
| மனங்கள் மாறட்டுமே | 118 |
| அவலங்கள் எதுவரை...? | 125 |
| இது தான் எங்கள் வாழ்க்கை | 130 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# சபலம் சாத்தியமாகாதபோது...

அழகான கட்டடம் என்று சொல்ல முடியாவிட்டாலும் அந்தக்கட்டடம் அந்தச் சுற்றுவட்டாரத்திலே உள்ளவற்றில் அழகானதே. அது எடுப்பான புதியதோற்றத்தில் காணப்பட்டாலும் வெறும் சுண்ணாம்பு வெள்ளை அடிக்கப்பட்டிருந்தது. அரசாங்கத் திணைக்ளமொன்றின் தலைமைச் செயலகமாகச் செயற்படும் அங்கே இயக்குநர் நாயகமாக கபிலன் கம்பீரமாக வீற்றிருந்தான். இயக்குநரின் அலுவலக அறைமட்டும் இதமாகக் குளிரூட்டப்பட்டிருந்தது. அவனைக்காண வருவோர்க்கென்று சொகுசான கதிரைகள் மேலதிகமாகப் போடப்பட்டிருந்தன. அவனின் பதவியின் உயர்வைக் காட்ட அந்த அறை இடாம்பீகமாவே தென்படுகிறது. இன்று காலை முதல் கபிலனைக்காண எவரும் வரவில்லை. இல்லை வர அனுமதிக்கப்படவில்லை. இயக்குநர் அலுவலாக இருக்கிறார் என்ற காரணத்தோடு அறை பூட்டியிருந்து. கபிலன் மதிய உணவுக்காக வெளியே போகும் நேரமும் வந்துவிட்டது. இந்த நாலுமணி நேரத்தில் அலுவலக வேலை என்று எதுவும் கபிலனால் செய்யப்படவில்லை. அடுத்த கிழமை பெண்பார்க்கப் போவதை நினைத்தபோது கபிலனுக்கு அங்கே எதையும் செய்ய மனம் இடம் கொடுக்கவில்லை. அரசாங்கத் திணைக்களம் தானே வேலை செய்யாவிட்டாலும் பதவிக்குள்ள மவுசும் சம்பளமும் தொடர்ந்து கிடைக்கும் என்று கபிலன் மனதிலே நினைத்துக்கொண்டான். பார்க்கப்போகும் பெண்ணின் படத்தைப் பார்ப்பதிலும் இரசிப்பதிலும் நேரம் போனதே தெரியவில்லை. ‘‘கிளாலி படகுச்சேவை தொடங்கியாச்சு பெண்ணின் படத்தையும் இத்துடன் அனுப்புகிறேன். படம் பிடித்திருந்தால் உடனே வரவும்” இது கபிலனின் அப்பா எழுதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதம். நாளையே ஊருக்குப் புறப்படவேண்டும் என்று நினைத்தபடி வீதியில் நடந்த கபிலனுக்குக் கொழும்பு வெயில் நெருப்பாகச் சுட்டது.

கிளாலியில் படகால் இறங்கி யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திற்கு மினிவானில் சென்று அங்கிருந்து வாடகை வண்டி மூலம் ஊருக்குப் புறப்பட்டான் கபிலன். கிளாலியிலே படகுச் சேவை நடைபெற்றதற்கு அடையாளமாக அன்று யாழ். பேருந்து நிலையம் அதிகாலை வேளையிலும் சுறுசுறுப்படைந்திருந்தது. ஏராளமான ஆட்டோக்களும் துவிச்சக்கர வண்டிகளும் மூட்டை முடிச்சுகளோடு பயணிகளைச் சுமந்தபடி அங்கிருந்து புறப்பட்டன. வீட்டையடைந்தபோது நன்றாக விடிந்துவிட்டது. வீட்டு முற்றத்தைக் கூட்டித் துப்புரவு செய்து கொண்டிருந்தார் கபிலனின் தாயார். கபிலனின் வரவு எதிர்பார்த்ததுதான். ஆனால் கடிதம் போட்டு மூன்று கிழமை கூட ஆகவில்லை அதுக்குள் மகனே வந்துவிட்டதில் ஒரு விதத்தில் பூரிப்பு தாயாருக்கு "எத்தினை நாள் நிண்டாய் நல்லூரில் போட் ஏற" என்று கேட்டபடியே தாய் வீட்டுக்குள் நுழைய கபிலனும் பின் தொடர்ந்தான்.

ஊரிலுள்ள வழக்கமான கோவில்கள் எல்லாவற்றிற்கும் ஓர் சூறாவளித் தரிசனம் முடித்துவிட்டு திரும்பினான் கபிலன். "கபிலா ஒருமாத லீவு போட்டுத்தானே இம்முறை வந்திருக்கிறாய் ஒற்றை இரட்டை பிடிக்காமல் இந்தச் சம்பந்தத்துக்கு ஒரு திடமான முடிவைச் சொல்லு'' தாயார் கபிலனுக்கு சொல்லியபடி சமையலில் மும்முரமாயிருந்தார். "இந்தச் சம்பந்தத்துக்கு ஒரு திடமான முடிவைச் சொல்லு'' என்ற வசனம் கொஞ்சம் கெஞ்சலாகவும் இனிக் களைச்சுப்போனேன் என்ற பாணியிலும் உரத்துக் கேட்டது. வீட்டிலுள்ளவர்களுக்கும் கேட்கும்படியும் அவர்களின் ஆதரவும் தன் கருத்துக்கு இன்னும் உற்சாகம் கொடுக்கும் என்று ஏங்கி நின்றது. கபிலனின் அன்னை மனம். இவை எல்லாவற்றிற்கும் மௌனமாக இருந்த கபிலன் தன் சிந்தனைப் பறவையைப் பின்னோக்கி சிறகடிக்கவிட்டான்.

சே, நேற்று என்ற மாதிரியிருக்கு ஏழுவருசமாச்சு கலியாணம் எண்டு பேசத் தொடங்கி, அதுக்குள்ள எத்தனை சாதகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை படம், எத்தனை புறோக்கர்மார். எல்லாத்தையும் நினைத்தால் முடிவில்லாத திரைப்படம் பார்த்த மாதிரியிருக்கு. கபிலனுக்கே இப்படியெண்டால் ஏழுவருசமாக அவனுக்குப் பெண்ணைத் தேடியலைந்த அவனின் அப்பா, அம்மாவின் கஸ்டத்தை யாரிடம் போய்ச் சொல்லி அழுவது? அவர்களுக்கு கஸ்டத்தைக் கொடுத்து விட்டேனா, கபிலனின் மனம் சஞ்சலப்பட்டது. முதலில் வந்த சம்பந்தம், தகப்பன் தர்மலிங்கம் வழி தூரத்துச் சொந்தம் கடைக்கார இராமநாதனின் மகளுக்கு. கபிலனை விட பெண்ணுக்கு பதினொருவயது தான் குறைவு. அதுவும் போதாது என்று குழப்பப்பட்டது. பிறகு சிலிங்கோ கவுசில் வேலை செய்யும் மாலா என்ற விதானையாரின் பேத்தி. மாலா கபிலன் எதிர்பார்க்கிற பெண்ணுக்குரிய அம்சமும் உள்ள பெண்தான். ஆனால் ஸ்ரைல் கூடின பொம்பிளை இது வேண்டாம் என்று குழம்பிப்போச்சு. கபிலன் ஸ்ரைல் கூடின பெண் பரவாயில்லைப் பாப்பம் என்றாலும் தகப்பன் தர்மலிங்கம் "இவ நாட்டியக்காரி" எண்டு சொல்லிச் சம்மதிக்கமாட்டார். கலியாணப் பேச்சு எண்டு கதை அடிபடவே ஏழுவருசத்துக்கு முன்னரே சிநேகிதன் கண்ணா மூலம் தாய்க்குச் சொல்லி விட்டான் பொம்பிளை எப்படி இருக்கவேணும் என்று. அதிலொன்றுதான் தமிழ்ப்பண்பாடுள்ள பெண் வேண்டும். சரி தமிழ்ப்பண்பாடு எண்டால் அதுக்கெல்லாம் வரையறை ஏது? பண்பாடில்லாவிட்டால் யாராவது சிரிக்கமாட்டார்களா? இதையெல்லாம் நினைத்து மனசைப் போட்டுக்குழப்பியது தான் மிச்சம்.

நல்லூரில் பல வருசமாக சட்டத்தரணியாகத் தொழில் செய்பவர் செல்லையா, இவரின் கடைசிமகள், பல வருடங்களாகக் கலியாணம் பேசப்படுகிறதாம் பெண் படமும் பிடித்தது பொருத்தமும் நல்லபொருத்தம் அந்தஸ்த்துக்குரிய இடம் எல்லாம் அமைந்து சீதனமாகத் தருவதாய்ச் சொன்ன தென்னந்தோட்டத்திற்கு ஒரு பக்க எல்லை மயானம் ஒன்று இருக்கிறது என்று தகப்பன் தர்மலிங்கம் ஒரேயடியாக மறுத்தது கபிலனுக்கு மனவருத்தம். மறத்துப் பேசமுடியவில்லை. அந்த நேரம் சட்டத்தரணி செல்லையாவுக்கும் மாற்றுவழி இல்லாததால் அந்தச் சம்பந்தம் தொடரமுடியவில்லை. அந்தத் தென்னந்தோட்டக்காணியைச் சீதனமாக வாங்கிப் போட்டு பின்பு விற்று பதிலாக வேறு காணி வாங்கலாமே என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபிலனுக்கு ஓர் ஆதங்கம். காணி விற்பது என்பது உயிர்போறவிசயம் மாதிரி தகப்பன் தர்மலிங்த்துக்கு.

கபிலன் ஆரம்பத்தில் எப்படியான பெண் பார்க்கவேண்டும் என்று போட்ட நிபந்தனைகள் எல்லாமே காலப்போக்கிலே தளரத் தொடங்கின. வேலை செய்யும் பெண் என்றால் மட்டுமே கலியாணம் என்று அடித்துச் சொல்லி வாதாடிய கபிலன் இன்று வேலை செய்யும் பெண் பற்றிப் பேச்செடுப்பதில்லை. பட்ட அனுபவங்கள் அவனை மேலும் பதப்படுத்திவிட்டதோ என்று அவன் வீட்டில் பேசிக் கொண்டார்களாம். வேலை செய்யும் சில பெண்கள் கபிலனைவிட அதிகம் படித்தவராய் அல்லது அதிக சம்பளம் எடுப்பவராகவே வந்தது. கபிலனால் இவற்றை யெல்லாம் ஜீரணிக்கமுடியாமல் தட்டிக் கழிப்பதைத் தவிர வேறு வழியில்லாமல் போயிற்று. சம்பளம் கூட எடுக்கும் அந்தப் பெண்களின் சம்பளத்தொகையை சில புறோக்கர்மார் கூட்டிச் சொன்னபோதும் கபிலன் நம்பினான். தன் சம்பளத்தோடு அதையும் கூட்டிப் பார்த்போது விழிகள் விரிந்தன அவனுக்கு. கல்லைக்கண்டால் நாயைக்காணோம் பழமொழிதான் அடிக்கடி மனதில் வந்து போனது. நான்கைந்து வருடங்களுக்கு முன் கலியாணம் பேசிவந்த ஜெயக்குமாரியை வீதியில் கண்டபோது அவனால் நம்பமுடியவில்லை. பெண் எடுப்பான தோற்றம் ஆனால் சிவப்பாக இல்லை என்று குழம்பிவிட்டது. நேற்று அவளைக் கண்டபோது மூன்று பிள்ளைகள் கணவன் சகிதம் போகிறாள். கணவனோ வாட்டசாட்டமாக அழகாகவும் இருந்தான். கடந்த காலத்தில் விட்ட தவறை எண்ணிக்கபிலனின் மனம் சஞ்சலப்பட்டது. என்னை விட அதிகவயதுடைய எத்தனையோ பெடியங்கள் எல்லாம் இங்கே இன்னும் பிரம்மச்சாரிகள். தனக்குத் தெரிந்தவர்கள் பலரின் பெயர்களை ஞாபகப்படுத்திக் கொண்டான் கபிலன். தன் மனதை ஆறுதல் படுத்துவது தற்காலிகமாக இவர்களே. பேசாமல் கலியாணப் பேச்சை எடுக்காமல் விட்டிருக்கலாம். இந்தப் பொல்லாத செவ்வாய்க்குற்றமுள்ள எத்தனையோ பேரின் கலியாணங்கள் சீக்கிரம் நடந்து முடிஞ்சு பிள்ளைகள் பிறந்து பிறந்தநாள் விழாவுக்கும் எல்லாம் போய்வந்தாயிற்று. தனக்கு மட்டும கலியாணவிசயம் தொடர்கதையாகப் போய்க்கொண்டிருக்கிறது. தன் போக்கை நோவதா தன் விதியை நோவதா என்று நினைத்து முடிக்க தூரத்திலே எறிகணைகள் விழுந்து வெடித்த சத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப்பகுதியை அதிர வைத்தது. பலாலி முகாமிலிருந்து எதிரிஏவிய எறிகணைகள் அவனின் கிராமத்தில் வீழுந்ததில் ஒரு வீடு தரை மட்டமாம். யாரோ வீதியிலே கதைத்துக் கொண்டு செல்வது தெளிவாகக் கேட்டது.

எறிகணை விழுந்த சத்தத்தோடு மூச்சு இரைக்க ஓடோடிவந்தா;ர் தர்மலிங்கம் கொளுத்திய வெயிலில் வந்தவர் பிடித்து வந்த குடையைச் சுருக்கி செருப்பை முன் கூடத்திலே விட்டு உள்ளே வந்தார். இன்னும் எறிகணைகள் வந்து விழலாம் என்ற அச்சம் அவரின் பதற்றத்தில் தெரிந்தது. தகப்பன் தர்மலிங்கம் அருகிலே சேர்ந்து சாப்பிட்டக் கொண்டிருந்த மகனிடம் “கபிலா நாளைக்கு நல்ல நாளாம், ஸ்ரீமதியின் தகப்பனோடை பேசி முடிச்சாச்சு. பெண் பார்க்கப் போகவேணும்” என்றார். கொழும்பிலிருந்து தான் கொண்டு வந்த ஸ்ரீமதியின் படத்தை மீண்டும், மீண்டும் பல தடவைகள் இரகசியமாகப் பார்த்துக் கொண்டான். சரி இனிவருவது வரட்டும். முந்திய கலியாணப் பேச்சுக்களிலே விட்ட பிழை இதிலே விடக்கூடாது.

இந்தக் கலியாணமும் சரிவராவிட்டால் இனிமேல் கலியாணமே வேண்டாம். இது கபிலன் தன் அனுபவத்தில் எடுத்த தீர்மானம். ஊரின் மத்தியிலே உள்ள சிவன் கோவிலில் பெண் பார்க்கும் படலம் முடிந்தது. இரு பகுதியாரும் நன்கு பிடித்துக் கொண்டதில் மிக்க மகிழ்ச்சி. கபிலனே ‘‘ஸ்ரீ மதியோடை ஒருக்கால் கதைக்கவேணும்” என்று சொல்லிக்கொண்டு ஸ்ரீமதி நின்ற பக்கம் விரைந்தான். அருகிலே கபிலன் வர வெட்கப்பட்ட ஸ்ரீமதி இலேசாக புன்நகைத்தாள். “ ஸ்ரீமதி என்னை உமக்குப் பிடிச்சிருக்கா” என்றபடி ஸ்ரீமதியின் முகத்தைப் பார்த்தான் பதிலை எதிர்பார்த்தபடி, ஸ்ரீமதி மாறாத புன்னகையுடன் “ம்” என்று மட்டும் தலையசைத்தார். ஸ்ரீமதி நல்லா வெட்கப்படுகிறவா என்று கபிலன் நினைத்தபோது ஸ்ரீமதியே பேச ஆரம்பித்தார். இரண்டு மூன்று வருடத்துக்கு முன்னமே உங்கள் சாதகமும் படமும் அம்மாவிடம் வந்தது. நீங்கள் வலுநுணுக்கம் பார்ப்பியள் எண்டு நான் தான் சொன்னேன் அம்மாவிடம் இந்தக்கலியாணம் வேண்டாம் என்று. ஆனால் இப்ப நீங்கள் நல்லா அலைஞ்சு களைச்சுப் போய்விட்டியள், உங்கள் எல்லாற்ற முகத்தைப் பார்த்தாலே தெரியுது, பாவமாவும் இருக்கு பார்க்க. திரும்பவும் இது வந்தபோது அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோசப்பட்டார். நீங்கள் எப்படியும் சம்மதிப்பீங்கள் என்று தெரிஞ்சுபோச்சுது. கபிலன் இமை கொட்டாது ஸ்ரீமதியின் வதனத்தையே வெறித்துப் பார்த்தபடி நின்றான். “இதையும் விட்டால் இனிக் கலியாணம் நடந்தமாதிரித்தான்” என்று மனத்துள்ளே நினைத்தபடி கபிலன் கோயிலை விட்டு மற்றோருடன் வெளியேறினான். தர்மலிங்கத்தாரோ ஒரு சுமையை இறக்கிவிட்ட திருப்தியில் கபிலனின் கலியாணத்துக்கு முகூர்த்தம் குறிக்கும் எண்ணங்களைச் சுமந்தபடி வீடுநோக்கி நிம்மதியாக நடந்து கொண்டு போகிறார்.

05.03.1998.
-நம்நாடு-
ரொறன்ரோ, கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# "உனக்கு நீயே நீதிபதி"

அந்தப் பகுதியில் பலமாக அடித்த காற்று மரங்கள் முழுவதிலும் இருந்து உதிரவிருந்த சருகுகளை எல்லாம் அள்ளியிறைந்திருந்து. வசந்தம் என்பார்களே அதுவும் இன்னும் சில வாரங்களில் விடைபெறவிருக்கிறது. சுற்றப்புறத்திலே இருந்த மரங்களைப் பார்த்தாலே தெரிந்தது. மரங்களிலே இலைகள் மஞ்சள் நிறமாகி பொன்னிலையாகப் பளபளத்திருந்தன. இந்த பூங்கா காற்று வருவோர்க்கு உகந்தது என இல்லாதுவிடிலும் ஓரளவு நிம்மதி வாங்கவருவோர்க்கு என்னவோ உகந்ததுதான். தனிக்கல்லினால் செய்த ஆசனங்கள் ஆங்காங்கே மரங்களின் கீழ்ப்போடப்பட்டிருந்தன. ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவர், இருவராக ஓரளவு சனக் கூட்டம் காணப்பட்டது. கூட்டத்தில் ஒருவனாய் அமர்ந்து வானத்தையே வெறித்துப்பார்த்தபடி விஜயன் இருந்தான். நிர்மலமான ஆகாயத்தில் இடையிடையே ஓடிமறையும் முகில் கூட்டத்தைத் தவிர வேறெதையும் அவனால் காணமுடியவில்லை நட்சத்திரங்களோ இன்னம் கடமைக்கு வரவில்லை. அருகிலிருந்த ரொரன்றோ பெருந்தெருவால் சென்ற தீயணைப்பு வண்டிகள் எழுப்பிய அவசர ஒலியால் நினைவுகளைத் ரொறன்ரோவுக்கத் திருப்பினான், விஜயன். கடந்த சில திங்களாக விஜயனின் அன்றாட நடவடிக்கைகளில் ஓர் தளர்வைக் காணமுடிந்தது. அதைக் வெளிக்காட்டாமல் மறைக்க அவன் முயன்றபோதும் அகக் கோலங்கள் அனைத்தும் முகக் கண்ணாடியினிலே வெள்ளிடைமலையாகத் தெரிந்தன. அவனின் அக்கா அகிலா பல முறை முயன்றும் கவலைக்குக் காரணம் அறிய முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயன் ஆறு வருடங்களுக்கு முன் ஜேர்மனியில் ஸ்ருட்காட் நகரில் குடியேறினான். ஓர் புதியவாழ்வு மலரும் என்றெல்லாம் கனவுகள் பலவோடு இருக்கும் போது தான் நல்ல சம்பளத்திலே நிரந்தர வேலை உணவு பதனிடும் ஆலை ஒன்றில் கிடைத்தது. பல வருடக்கணக்காக அந்த நகரில் வாழும் நம்மவர் பலர் வேலை தேடி அலையும் போது விஜயனக்கு அடித்த அதிட்டம் கண்டு நம்மவரே மனம் பொருமினர். வேலைத் தலத்தில் விஜயன் சந்தித்த யேர்மனிய யுவதி பௌளா சொற்ப காலத்தில் அவனின் மனைவியானாள். அவளின் எடுப்பான தோற்றமும் வயதுக்கு மீறிய மதமதப்பான உடல்வாகும் விஜயனைக் கவர்ந்தன. பௌளாவைக் காணும்போது, தமிழீழத்தில் விஜயன் பார்த்த ஆங்கிலத்திரைப்படக் கதாநாயகிகளை ஏதோ நேரில் பார்ப்பது போன்ற ஓர் பிரமையை உண்டாக்கியது. பௌளாவும் விஜயனும் சரளமாகப் பழகியபோது திருமணம் செய்ய முடிவு செய்தனர். எளிமையான முறையில் பதிவுத் திருமணமாய்ச் சடங்கு நடைபெற்றது. அடுத்த சில அகவைகளிலே கிறிஸ், றோஸ் என்ற மழலைகளைப் பெற்றெடுத்தனர். பௌளா மெல்ல மெல்லத் தமிழ் கற்க, விஜயனும் அவளிடம் கேட்டு டொச் மொழி படிக்க மழலைகள் இரண்டும் தாயோடு ஒட்டிக்கொண்டு டொச் மொழியிலே தாய் மொழியாக மழலை பேசின. விஜயன் என்னதான் தமிழ் கற்பிக்க முயற்சி செய்தும் மழலைகள் பாசத்தைக் கொட்டினவே தவிர டொச்சிலே மழலை பேசின. ஆரம்பத்திலே டொச் தெரியாமல் அரைகுறையாய் ஊமைப் பாசையில் பௌளாவுடன் பேசிய பல சம்பவங்கள் விஜயனால் என்றும் மறக்க முடியாதவை.

எனக்குள் எழும் அலையலையான கேள்விகளுக்கு விடைகாண முடியாமல் மனம் அல்லாடியது. அன்பான மனைவி பௌளா பாசத்தோடு என்றும் கட்டிக் கொள்ளும் குழந்தைகள் இவர்கள் எல்லோரையும் விட்டு விட்டு ஓர் குடும்பத் தலைவனான நான் இன்னுமோர் அந்நிய தேசத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறேன்? சுவரிலிருந்த மணிக்கூடு ஏழுமுறை அதிர்ந்துவிட்டுப்பின் வாளாவிருந்தது. அடடே ஏழுமணி யென்றால் பௌளா ஓய்வாகத் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருப்பாள். குழந்தைகள் கிறீசும், றோசும் தாய்மடியிலும் என் மடியிலும் மாறிமாறித் தாவி விளையாடுவார்களே. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழாவிட்டாலும் குழந்தைகளின் குதூகலத்தைப் பார்த்து பௌளாவுடன் மகிழ்ந்த நாட்கள் எத்தனை எத்தனை? இலங்கை உணவுவகைகள் என்றால் பௌளாவுக்கு கொண்டாட்டம் மாதிரி. அதுவும் தன்கையால் பிட்டுச் சமைத்து எனக்குப் பரிமாறுவது அவளுக்குக் கொள்ளை ஆசை. நம் நாட்டுச் சமையலைத் தான் அந்நியராக நின்று சமைத்துத் தந்து என்வாயால் அதன் ருசி எப்படி என்று அறிவதில் அவள் அடையும் ஆனந்தம் தான் எவ்வளவு.

தாயகத்திலிருந்து எனக்கு வரும் கடிதங்களை மொழிபெயர்த்து ஒவ்வொன்றாய் நான் விளக்கம் சொல்லப் பொறுமையோடும் ஆவலோடும் பௌளா கேட்கும் விதமே தனி. கடிதங்களைப் படித்ததும் நான் உணர்ச்சிவசப்பட்டால் அவள் கூறும் ஆறுதல் வார்த்தைகள் கேட்பதும் தனிசுகமே. நண்பர் பாக்கியநாதனின் கல்யாணத்துக்குத் தான் சேலை உடுக்கவேண்டும்என்று அடம்பிடித்துச் சேலையோடு கலியாண வீட்டுக்குப் போய் மணமக்களோடு நின்று எடுத்த படத்தைப் பெரிதாக்கி முன் கூடத்தில் மாட்டி அடிக்கடி அதைப்பார்த்து இரசிப்பாள். தமிழ்ப் பண்பாடு பற்றி அவள் அதிகம் அறிந்திருக்கவில்லை என்றாலும் கோயில் குளம், கல்யாண வீடு என்றால் சேலையுடன் போவது தனக்கு மனத்திருப்தி என்பாள். அறியாமையாலும் வரட்டுக் கௌரவத்தாலும் சில தமிழ்ப்பெண்கள் சேலையையும் பொட்டையும் தவிர்க்கும் போது பௌளா பொட்டிட்டு என்னோடு வெளியே போவது எனக்கும் ஓர் ஆறுதலையே தந்தது.

பழைய நினைவுகள் கடல் போல் பரந்து அலையாக அடித்துக் கொண்டன. அதிலே விஜயன் மிதந்து கொண்டிருக்கப் பிள்ளைப்பாசம் என்ற சுழி அவனைத் தன் போக்கில் இழுத்துச் சென்றது. கனடா வந்து ஓராண்டாகிறது, வந்த நாள் முதல் மனதைக் கல்லாக்கியே வந்த விஜயன் ஜேர்மனிய நினைவுகளை மறக்க முயற்சி செய்து வெற்றி கண்டான். ஆனாலும் இடையிடையே மனச்சாட்சி உறுத்தியபோது தடுமாறினான். மனைவி பௌளாவின் நினைவுகளிலிருந்து தான் விடுபட்டாலும் மகன் கிறிஸ், மகள் றோஸின் நினைவுகளிலிருந்து விடுபட முடியவில்லை. எப்பொழுதும் தங்கை றோஸைச் சீண்டி அழவைத்து அதிலே வேடிக்கை பார்ப்பது கிறிஸ்க்கு ஓர் விளையாட்டு. அண்ணனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடுக்குதனம் தாங்காமல் தன் பிஞ்சு விரல்களால் கிறிஸைச் சுட்டிக்காட்டி "அடிஅடி" என்று சைகை காட்டும் மகள் றோஸ் நினைவில் தவறாது வந்து போவாள். இத்தனை நினைவுக்குரிய அன்புள்ளங்களை எல்லாம் ஜேர்மன் மண்ணிலே தவிக்கவிட்டு விஜயன் மட்டும் ஏன் இங்கு ஓடி வந்தான்?

இரண்டு வருடங்களுக்கு முன்பு விஜயனின் அக்கா அகிலா கனடாவுக்கு வந்தபோது ஜேர்மனிக்குத் தொலைபேசியில் பேசியபோது தான் விஜயன் மனதிலே அந்த எண்ணத்தை விதைத்தாள். ''தம்பி விஜயா ஏதோ தெரியாத்தனமாக வெள்ளைக்காரியிடம் மாட்டுப்பட்டால் அப்பிடியே இருந்து விடுறதா? அவையளுக்கு ஏதோ தங்களைக் கவனிக்கத் தெரியும் தானே உனக்கு எண்டு வாழ்க்கை ஒண்டு வேண்டாமே? உங்கே இருந்தால் உந்த வெள்ளைக்காரியும் பிள்ளையளும் சேர்ந்து உன்னை உருப்படவிடமாட்டினம். எல்லாத்தையும் விட்டு நீ இங்கே கனடாவுக்கு வந்து விடு" இப்படி ஆரம்பித்து இறுதயில் வராவிட்டால் அக்கா தம்பி உறவு வேண்டாம் என்று பாசத்தைக்காட்டி மிரட்டும் அளவுக்கு வந்தது. ஆரம்பத்தில் விஜயன் இதைப்பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. நாளாக நாளாக பெரும் நெருக்குதல் ஆகிவிட்டது. அக்கா அகிலா விடுவதாய் இல்லை. ''உன்னை கனடாவுக்கு கூட்டிவர ஒருவரிடம் ஒழுங்குகள் செய்தாச்சு. நாளை உன்னைச் சந்திப்பார். உடனடியாகப் புறப்படவேண்டும் நொண்டிச் சாட்டுகளைச் சொல்லிக் காலம் கடத்தாதே" என்று அக்கா தொலைபேசியில் வலியுறுத்தியபோதுதான் விஜயன் பதறினான். பௌலாவிடம் வெளியே போய் வருகிறேன் என்று சாதாரணமாகச் சொல்லிவிட்டு மழலைகளுக்கு முத்தம் கொடுத்துவிட்டு பிரியமனமில்லாமல் வெளியேறினான். விக்கித்து வரும் அழுகையை அடக்கமுடியாமல் அடக்கி ஒருவாறு வெளியே தெரியாமல் மறைத்தான்.

கனடாவில் வந்து சேர்ந்ததும் தொலைபேசியில் பௌலாவுக்கு "இங்கு வந்துவிட்டேன்" என்று மொட்டையாக ஓர் வசனத்தில் தகவல் ஒன்று, அவ்வளவு தான். வந்துவிட்டேன் என்ற சொல்லின் விளக்கம் இனி உவ்விடம் வரமாட்டேன் என்று பௌலா விளங்கினால் சரி. அதன் பின்னர் எந்தத் தொடர்பும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே வந்த பிறகு அக்கா ஜேர்மனியில் எப்படியிருந்தாய் என்று ஒரு தடவையாவது என்னைக் கேட்டதில்லை. என்கம் அவைபற்றி பேச மனதிலே பசுமையான இடமில்லை. அப்படித்தான் ஏதும் பேச வேண்டியிருந்தால் "அங்கேயிருந்த என் நிம்தியைக் கலைச்சு இங்கே என்னை இழுத்துக் கொண்டுவந்து அப்படி என்ன நிம்மதி நீ கண்டாய்" என்று ஏகவசனத்தில் பொரிந்து தள்ளியிருப்பேன். அக்கா தன் தவறை மறைக்க தொடர்நது மௌனம் சாதித்தாள். ஏதோ தெரிந்தோ தெரியாமலோ ஒருத்தியை விரும்பி ஒரு வாழ்க்கையைச் தொடங்கியாச்சு அதை கூடப்பிறந்தவள் என்ற முறையில் ஆசீர் வதித்து வாழ்த்த வேண்டியவர் திட்டித் தீர்ப்பது போல அந்த வாழ்க்கையையே விட்டு வா என்று ஒற்றைக்காலில் நின்று பிரித்து எடுத்ததை நினைக்க நினைக்க எரிச்சலாய் இருந்தது. என்னதான் யார் பெரிய புத்திமதி சொன்னாலும் கேட்கும் எனக்கு மதி எங்கே போயிற்று? சொல்லுவார் சொன்னாலும் கேட்பார் மதி எங்கே போயிற்று? முதுமொழியோடு தான் விட்ட தவறையும் ஒப்பிட்டபோது தவறு பூதாகரமாகத் தெரிந்தது விஜயனுக்கு.

விஜயனுக்கு மனச்சாட்சி அடிக்கடி சுட்டெரிப்பது போல் இருந்தது. பௌலாவும் குழந்தைகளும் தன்னைக் காணாத நாள் முதல்பட்ட வேதனைக் கெல்லாம் தானே முழுப்பொறுப்பு என்று மனதார ஒத்துக் கொண்டான். பௌலாவோடு கோபித்துக் கொண்டு வந்திருந்தால் கூட சமாதானம் ஆகியிருக்கலாம். ஏதோ திருடன் போல் ஒளித்து இருப்பதுபோல் மனம் உறுத்தியது. தன்னைப் பௌலா தான் மன்னித்தாலும் கூட பிள்ளைகளுக்கு இந்தப் பிஞ்சு வயதில் தன்னைப்பற்றி ஓர் தப்பான எண்ணம் வந்துவிடுமே என்று எண்ணியபோது உடல் கூசியது. இவ்வளவு நாளும் எப்படி மனதைக் கல்லாக்கி வைத்திருந்தேன்? எந்த முகத்தோடு அவர்கள் முன் போய் நிற்பது? இங்கேயிருந்து மனம் வேகுதே, அதைவிட அவர்களிடம் போய்விட்டால் செய்த தவறுக்கும் பிராயச்சித்தமாகும் முழுக்குடும்பமும் குதூகலிக்குமே. இது மாதிரி முன்பு கூட விஜயன் நினைத்திருக்கிறான். ஆனால் தன்னையறியாமல் சடப்பொருளாயிருந்துவிட்டான். இந்தமுறை ஓர் உசுப்பு உசுப்பிவிட்டது. அக்கா அகிலா என்ன ஆண்டவனே வந்து தடுத்தாலும் பௌலாவும் பிள்ளைகளும் ஏற்கும் வரை அவர்களிடம் போயே தீருவது என்று மனசு வலிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டபோது உடலிலும் புதிய குருதி புனலாய்ப் பாய்ந்தது. புதிய உற்சாகம் பிரவாகம் கண்டிருந்தது. இந்த ஒரு வருசமாக உடலிலே கண்டிருந்த தளர்வும் மனதிலே கண்டிருந்த ஏக்கமும் போய்ப் புதிதாய் மலர்ந்த மலராக முகம் பிரகாசித்தது. பௌலாவுடனும் மழலைகளுடனும் திரும்ப, நான் வாழ்ந்தே தீருவேன் என்ற மனத் திடத்தோடு பௌலாவுக்குத் தொலைபேசித் தொடர்புகொள்ள தொலைபேசியை நோக்கி நடந்தான் விஜயன்.

12.06.1998
-உதயன்-
ரொறன்ரோ
(உதயன் பத்திரிகையின் 2வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட சிறுகதைப்போட்டியில் பாராட்டுப் பெற்ற சிறுகதை.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

# "உழைப்பவன் அறிவான் உழைப்பை"

அடிக்கடி எழுந்து அடங்கிய பேரலைகள் நீண்டு கிடந்த கல்கிசைக் கடற்கரையைத் தடவிச் செல்வது போலிருந்தது. அலைகள் வந்து மணலை முத்தமிட்ட இடம் நுரைகளால் கோடிடப் பட்டிருந்தது. ஞாயிறு மேற்கு வானிலே இறங்கிக் கொள்ளக் கதிர்கள் படும் கடல்மேனி தங்கமுலாம் பூசினாற் போல பளிச்சிட்டது. தாழை மரங்களின் கீழ் கண்ணுக்கெட்டிய தூரம்வரை பாரிய கருங்கற்கள் வரிசையில் நின்றன. சுதர்சன் கருங்கல் ஒன்றில் அமர்ந்தபடி கடற்கரையில் போவோர் வருவோரின் நடமாட்டத்தை உற்றுப்பார்த்தபடியிருந்தான். அந்த இரம்மியமான இயற்கையழகை இரசிக்கும் நிலையில் அவன் மனம் நிச்சயமாக இல்லை. அன்று மதியம் சுதர்சன் மனைவியுடன் வாக்குவாதப்பட்டபோது மகள் சுகிர்தாவின் தலையீடு அவனை ஒருகணம் தடுமாறவைத்தது. "அப்பா இவ்வளவு நாளும் அம்மாவுக்குத் தொந்தரவு கொடுத்தது காணாது எண்டு சுவிஸ் மாமா இரண்டுபேருக்கும் தொந்தரவு பண்ணுறீங்களே அவையள் பாவம் என்ன செய்வினம்." இதுதான் மகள் சுகிர்தா அப்பாவைப் பார்த்து உதிர்த்த சொற்கள். சுதர்சனின் மைத்துனர்கள் ரகுவும் ரவியும் சுவிசில் வேலை செய்கிறார்கள். சுதர்சனக்கு கலியாணமாகி ஆறுவருடங்கள் ஆகிவிட்டது. அக்கா சுமதியின் சீதனம் நகை கலியாணச் செலவு எல்லாம் தம்பிமார் அனுப்பிய காசில் கோலாகலமாக நடந்தது. அப்பொழுது முதல் இடையிடையே சந்தோசமாகத் தம்பிமார் பணஉதவி செய்வது வழமை. இதுவே காலப்போக்கில் கொஞ்சம் கொஞ்சமாக வாயால் வலியக் கேட்டு வாங்குகிற அளவுக்கு வந்தது. இது விடயத்தில் சுமதிக்கு உடன்பாடில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் சுமதிக்கும் சுதர்சனுக்கும் இடையே வாக்கு வாதம் நடந்த சம்பவங்கள் பல. அப்போதுதான் இன்றும் மதியம் மகள் தாய்க்கு ஆதரவாகத் தனக்கு எதிராக அப்படிச் சொல்லிவிட்டாளா. சுதர்சனால் தாங்கமுடியவில்லை. அடநம்ம பிரச்சனை நம்மோடு இருக்கட்டும், இந்தப் பிஞ்சுக்குழந்தை ஐந்து வயதுக்குள்ள இப்படிப் பேச நாங்கள் பெற்றோர் தான் காரணம். பிறந்த நாள் முதல் நாளடைவில் கேட்டுக் கேட்டு இளம் விளைநிலத்தில் விழுந்த நச்சுவிதையின் முதல் அறுவடைதான் இன்று நடந்திருக்கிறது. நேரம் நன்கு இருட்டிவிட்டது. அதற்குப் பிறகு கடற்கரையில் திருடர் பயம். நேரே காலாற வீட்டுக்கு நடந்து சென்றான் சுதர்சன்

வெளிநாட்டுத் தனியார் நிறுவனம் ஒன்றில் உயர் அதிகாரியான சுதர்சன், கொழுத்த சம்பளம் பெறுகிறான். அதைவிட ஊக்கத் தொகை அது இது வேறு. கல்யாணமான மூன்று வருடங்கள் ஓர் அறை, சமயலறை என்று சிறிய வீடு வேண்டாவெறுப்பாகச் சுளைபோல ஆறாயிரம் ரூபாவை வாடகைக்குக் கொடுக்க வேண்டியதாச்சு. அந்தச் சிறிய வீட்டில் இருந்து சுதர்சனும் சுமதியும் குழந்தையோடு காலம் தள்ளியதே பெரியபாடு. இரண்டாவது பிள்ளையும் பிறந்தபோது வீடு பெரியதாய் வேண்டும் என்று தேடிச் சுதர்சன் வீட்டுக்கு அலைந்தான். கொழும்பில் சாதாரண வீடு கிடைக்கிறதே பெரியபாடு. சுதர்சனின் எதிர்பார்ப்புக்குப் பலத்த அலைச்சலின் பிறகு தரகன் மூலம் ஆடம்பரமான வீடு கிடைத்தது. சகலவசதியும் உள்ள பெரியவீடு, வாடகை பன்னீராயிரம் ரூபா மாதம். தன் மாதச்சம்பளமும் கிட்டத்தட்ட அதேதொகைதான் என்று தெரிந்தும் சுதர்சன் இந்த வீட்டை எப்படியும் எடுத்தே தீருவது என்பதில் பிடிவாதமாய் இருந்தான். “உங்கள் சம்பளம் முழுக்க வாடகைக்குப் போனால் மற்றச் செலவுக்கு எங்கே போறது” என்று சுமதி சொல்லியும் கேட்கமறுத்து விட்டான் சுதர்சன். “எந்தச் செலவு வந்தாலும் அதைச் சமாளிக்கப் போறது நான் தான்” என்று சுமதியின் வாயை அடைத்துவிட்டான்.

மாதங்கள் சில ஓடி மறையக் கணவனை ஒருநாள் சுமதி “எப்படி இந்தச் செலவையெல்லாம் சமாளிக்கிறீங்கள், கடன் ஏதாவது வாங்கினீங்களா” என்று கேட்ட போது “அப்படி ஒண்டும் இல்லையே” என்று மழுப்பிச் சமாளித்துவிட்டான் சுதர்சன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொருநாள் உண்டியல் மூலம் இருபதாயிரம் ரூபா சுவிசிலிருந்து சுமதியின் தம்பிமார் அனுப்பியிருந்தனர். தொகை வழமைக்கு மாறாக இருந்ததால் அன்று சுமதிக்கு இலேசாக எழுந்த சந்தேகம் வீட்டில் பெரிய பூகம்பத்தைக் கிளப்பிவிட்டது. சுதர்சன் அலுவலகத்திலிருந்து வந்து ஆயாசமாகக் காலைநீட்டி முன் கூடத்தில் இருந்தபோது கையில் தேநீர்க் கோப்பையோடு சுமதி வந்தாள். "சுவிசிலிருந்து தம்பி காசு இருபதினாயிரம் அனுப்பியிருந்தார், கொண்டு வந்து தந்தாங்கள், அனுப்பச் சொல்லி நீங்க கேட்டியளா" என்று கேட்டபடி தேநீரை மேசையில் வைத்து விட்டுக் கதிரையில் தொப்பென்று சாய்ந்தாள். இப்படிக் கேட்பது சுதர்சனுக்கப் பிடிக்கவில்லை. ''எல்லாம் தேவையோடுதான் நான் சுவிசுக்கு மச்சானைக் காசு கேட்டன்" என்று சுதர்சன் முடிக்கு முன்னரே சுமதி " இதுவரை வாங்கினதே நாலு லட்சத்துக்கு மேல் போட்டுது, அதை எப்ப குடுத்து முடிக்கிறது அதுக்கே வேறை வழியில்லாத நேரத்திலை அப்பிடி என்ன தேவைக்கு இந்த இருபதினாயிரம்" என்ன விக்கி விக்கி இரைந்து பேசினாள். இதைக் கேட்ட சுதர்சனுக்குக் கோபம் வந்துவிட்டது. ''வாங்கின காசைத் தரச் சொல்லி அவங்கள் இதுவரை கேட்கவில்லையே. நீ எனக்குப் புத்திமதி சொல்லுகிறாயா?" சுதர்சன் பேசியபடி பார்வையால் சுட்டெரித்தான். இதைச் சற்றும் எதிர்பாராத சுமதி முறைத்தபடி சமயலறைக்குள் புகுந்து கொண்டாள்.

காலச் சுழற்சியில் திங்கள்கள் சில ஒடி மறைந்தன. சுமதியின் கவலையெல்லாம் தம்பிமார் பனியிலும் குளிரிலும் உறக்கமின்றிக் கஸ்டப்பட்டு உழைத்த காசெல்லாம் அவைக்கே பயனில்லாமல் சுதர்சன் கண்ணை மூடிக்கொண்டு வாங்குவது. "வாங்கிய காசைத் திருப்பித்தா அக்கா" என்று ஒருநாள் நிச்சயம் தம்பிமார் கேட்கத் தான் போகினம்.கைநீட்டிக் காசை வாங்கியவர் கணக்கு வைக்காவிட்டாலும், அத்தான் ஏதோ கேட்கிறாரே என்று கொடுத்துவிட்டுத் தம்பிமார் கணக்கு நிச்சயம் வைப்பார்கள். கொடுத்தகாசைத் திருப்பித்தா என்று கேட்கும் போதுதான் ஒருவரின் குணத்தை மற்றவர் அறிவார்.

சுதர்சனின் மனக்கணக்கெல்லாம் சம்பளம் முழுக்க வாடகையுடன் போவதால் மற்றச் செலவெல்லாம் தனக்கு நோவு இல்லாமல் வேறு யாரோ செலவு செய்வது போலிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைத்துனரின் காசு தாராளமாகக் கையில் புரளுவதால் பேருந்தில் வேலைக்கு போய்வந்த சுதர்சன் ராக்சிக்குத் தாவினான். மதிய நேரம் அலுவலக நண்பர்குழாம் சூழ உயர் ரக விடுதியில் மதுவுடன் உணவுண்டான். சுதர்சனின் தூரத்து நண்பர்களும் நெருங்கி வந்தார்கள். சுதர்சன் வழமை போல் சுவிசுக்கு தகவல் கொடுக்க, காசும் இடையிடையே வந்து கொண்டிருந்தது. சுமதிக்கு இது தெரியும், தெரியாதமாதிரி இருந்து கொள்வாள்.

அனுப்பும் பணம் வீட்டுக்கு வந்தால் சுமதிக்குத் தொடர்ந்து பதில் சொல்ல முடியாது என்று தனக்குள் நினைத்த சுதர்சன் அலுவலகத்துக்குப் பணத்தை அனுப்பச் சொன்னான். அடுத்தவனின் காசைத் தண்ணீர் மாதிரிப் பாவித்துப் பழகிய சுதர்சன் காசு வருவதில் வரும் தாமதத்தையே பொறுக்காதவனாய் உடனே சுவிசுக்குத் தொலைபேசியில் அவசரம் காசு அனுப்பச் சொல்லும் அளவுக்கு அநாவசியச் செலவுகள் வைத்திருந்தான். “இனித் தம்பி காசு அனுப்பத் தேலையில்லை'' என்று ஒருநாள் சுமதி தம்பிமாருக்குச் சொல்லத்தான் போகிறாள் என்று நினைத்தபோது சுதர்சனக்கு தலை வியர்த்துக் கொட்டியது.

சுமதியின் தம்பி தற்செயலாக ஒருநாள் வீட்டுக்குத் தொலைபேசியில் பேசியபோது தன்னை அத்தான் அலுவலகத்துக்குக் காசை அனுப்பச் சொன்ன விபரத்தைச் சுமதி அறிந்தாள். கேள்விப்பட்டதும் துடித்துப் போனாள். வழக்கமாகக் தம்பிமாருடன் தொலைபேசியில் கதைக்கும் போது வீட்டிலிருந்து கடிதம் வந்ததா என்று தொடங்கி உடம்பைக் கவனி என்று, வந்து உனக்கொரு கலியாணம் சீக்கிரம் பேசவேண்டும் என்று கதையை நீட்டும் சுமதி அன்று வலுச்சுருக்கமாகக் கதையைத் துண்டித்தாள். “தனக்கு ஏன் இந்த விசயத்தை சுதர்சன் மறைக்க வேண்டும்?'' மனதுக்குள் பல கேள்விகள் நிழலாடியது. வாய்த்தர்க்கம் எண்டு வந்தால் என் வாயை அடைத்துவிடுவார் அவர். எதிர்த்துப் பேசத் தைரியமில்லை. அவர் உழைப்பதும் செலவு செய்வதும் எல்லாம் எங்கள் குடும்பத்துக்கே என்று நினைத்துக் கொண்டிருந்த என்னைச் சந்தேகப் பட வைத்துவிட்டாரே! கலியாணமான புதிதில் எந்த ஒரு சின்ன விசயமும் என்னோடு கலந்து கதைக்காமல் செய்யமாட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைய வளைய வந்து வார்த்தைக்கு வார்த்தை சுமதி என்று அழைப்பதிலே தனிச்சுகம் காண்பவர் சுதர்சன். அப்படிப்பட்டவருக்கு நாள் செல்லச்செல்ல என்ரை பெயர் வேப்பங்காயாப்போச்சு. சே, என்னமாதிரியிருந்த மனிசன் தம்பி உதவி செய்யத் தொடங்கிய நாளிலிருந்து மனம் மாறிப் போனார். "என்ரை சொல்லுக்கு அவரிட்டை மதிப்பில்லாமல் போச்சு" சுமதி தன்னையும் மறந்து பேசுகிறாள். வாங்கித் தள்ளின இந்தக் கண்டறியாத காசை எப்ப குடுத்து முடிக்கிறது. வாங்கினதைக் கையிலை வைச்சிருந்தாலும் கேட்டவுடனே குடுத்துவிடலாம். இந்த மனிசன் காசுவாங்கிறதே அவசரத் தேவைக்கு இல்லாமல் அள்ளிச் செலவு செய்யத்தானே. எப்படி ஏதும் மிஞ்சும்? அனல் மூச்சுப் பறக்க சுமதியின் உதடுகள் மட்டும் அசைந்தன. வார்த்தைகள் வரமறுத்துவிட்டன.

அன்று மதியம் வந்த வெளிநாட்டுக் கடிதம் சுமதியின் கண்களை உறுத்தியது. சுவிஸ் தபால் முத்திரை ஒட்டிய அக் கடிதத்தைப் பிரிக்க அவள் கைகள் நடுங்கியது. கொழும்புக்குச் சுமதியின் குடும்பம் வந்த நாள் முதல் கடிதம் போடாத தம்பிமார் தொலைபேசியில் விசயத்தைப் பேசுவதோடு சரி கடிதம் ஏன் எழுதவில்லை என்று கேட்டால் "எழுத நேரமில்லையக்கா" என்ற சாட்டு வேறு.

தம்பி கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறானோ? ஒருநாளும் போடாதவன், கடிதம் போட்டிருக்கிறான். பரபரப்போடு கடிதத்தைப் பிரித்து வாசித்தாள். தம்பிமார் இருவரும் எழுதியகடிதம் அது.

அன்புமிக்க அக்கா, அத்தான், மருமக்கள் அறிவது,
நாம் நலமே, நாடுவதும் அஃதே. ஊரிலிருந்து கடிதம் வந்து கனநாளாச்சு, நாங்களும் கடிதம் போடுவது குறைவுதான். இங்கே உழைத்த காசுகளை மிச்சம் பிடிச்சுச் சீட்டுகள் கட்டினோம். சீட்டுக்காறன் இரண்டு இடத்திலை சீட்டு முறிஞ்சுபோச்சுது எண்டு சொல்லி காசு தரவில்லை. திட்டம் போட்டு நல்லா ஏமாத்தியிருக்கிறாங்கள். அதனால் தான் சேருகிற காசை நாங்கள் தேவைக்குக் கேட்டபோது அனுப்பினோம். கொழும்பில் பாங்கில் போட்டிருப்பியள், உங்கே வட்டியும் கூட ஒரு முதல் ஆகியிருக்கும், காசு மொத்தமாக ஒன்பது லட்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை இலங்கை காசுக்கு வந்திருக்கும் என நினைக்கிறம். வட்டியில் அரைவாசியை நீங்கள் எடுக்கவும். மீதி வட்டிமுதலை எங்களுக்கு அனுப்பிவிடவும். இங்கு சூரிச்சில் வியாபாரம் ஒன்று தொடங்குகிறோம். காசை உடனடியாக இல்லாவிட்டாலும் இரண்டு மாதத்துக்குள் அனுப்பிவிட்டால் போதும். அத்தானுக்குத் தான் சிரமத்தைக் கொடுத்துவிட்டோம் அடிக்கடி வங்கிகளுக்கு ஏறி இறங்க.

மிகுதி ரெலிபோனில்
இப்படிக்கு
ரகு – ரவி

கடிதத்தைப் படித்து முடித்தபோது தலையில் பெரிய சுமை ஒன்று வைத்துவிட்டது போல் சுமதி உணர்ந்தாள். தன்னையறியாமல் மயங்கி விழுந்து விடுவாளோ என்ற பயம் அவளை ஆட்கொள்ளப் பக்கத்திலிருந்த நாற்காலியில் அமர்ந்து சாய்ந்து கொண்டாள். இந்த மனிசன் வந்த காசிலை கொஞ்சத்தையாவது மிச்சம் வைச்சிராத நேரத்திலை பார்த்துக் காசைக் கேக்கிறாங்கள். அக்கா என்று என்னைத்தானே நம்பித் தந்தவங்கள். ஒரு தாய் வயிற்றுப்பிள்ளையள் எண்டாலும் வாயும் வயிறும் ஏன் கணக்குக் கூட வேறைதானே. கஸ்டப்பட்டு உழைத்த காசைச் சும்மா விடுவாங்களா? என்று சுமதியின் மனவோட்டங்கள் நான்கு திசையும் அலை பாய்ந்தன.

மேசையின் மேல் விரித்து வைத்திருந்த கடிதத்தைச் சுதர்சன் கண்டதும் எடுத்து மேலோட்டமாய் வாசித்தான். முகத்தைச் சுளித்தபடி "சுமதி உன்ரை தம்பிமாருக்குச் சொல்லு வாங்கின காசை வசதியுள்ள நேரம் தரலாம்" அவையின்ர அவசரத்துக்கு இப்ப காசு இல்லை. இது உனக்கே தெரியும். நீயே இவையளுக்குப்பதில் சொல்லிப்போடு. உன்ரை தம்பிமார் போனில் கதைக்கத் துணிவில்லாமல் கடிதம் போட்டுக் கழுத்தை அறுக்கிறாங்கள். '' என்ற சுதர்சன் சுமதியின் பதிலை எதிர்பார்க்காமல் வெளியே புறப்படத் தயாரானான். மறுத்துப் பேச மனமில்லாமல் வாசலுக்கு வழியனுப்பவந்த சுமதியின் முகத்தைச் சுட்டெரிப்பதுபோல் பார்வையால் அளந்தான். இந்த அமைதியைக் கலைத்தபடி வீட்டுவாசலில் காவல் துறை வண்டியொன்று வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய இருகாவலர்கள் வீட்டின் வாசல் படிக்கு வந்தனர். "சுதர்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டு சொல்லுறது நீங்கள் தானே, உங்கள் முதலாளி நீங்கள் அலுவலகத்தில் ஒருலட்சம் ரூபா கையாடியிருக்கிறதாகப் புகார் கொடுத்திருக்கிறார். உங்களைக் கைது செய்கிறோம்" என்று விளக்கியபடி பருமனான தோற்றமுடைய அந்தக் காவல்துறை அதிகாரி கண்ணிமைக்கும் நேரத்தில் சுதர்சனின் கையில் விலங்கை மாட்டினான். இதைச் சற்றும் எதிர்பாராத சுமதியும், சுதர்சனும் திகைத்து நின்றனர். சுதர்சன் "சுமதி எங்க முதலாளி பொய் சொல்லமாட்டார். செலவுக்குக் காசில்லாதபோது அவரின் இரும்புப் பெட்டியில் கைவத்தேன். அவர் என்ன உன்ரை தம்பியா காசைத்தா எண்டு கடிதம் அனுப்ப." என்று சொல்லிக் கொண்டு காவல் துறையினரையும் முண்டியடித்துக் கொண்டு அவர்களின் வாகனத்தில் ஏற முயன்றான். காவலரும் ஏற வாகனம் புகையைக் கக்கியபடி விருட்டென்று மறைந்தது. வந்த அழுகையைக் கையால் மறைத்த சுமதி வீட்டிற்குள் சென்றாள். யன்னலூடாக இதையெல்லாம் வேடிக்கை பார்த்த மகள் சுகிர்தா " அம்மா அம்மா ஏன் அழுறியள்" என்று சிணுங்கினாள். அழுகையை ஒருவாறு அடக்கிவிட்டாள் மகள் சுகிர்தாவுக்காக. ஆனால் மனமோ உறைந்து கல்லாகிவிட்டிருந்தது. சுமதி குடும்பத்து எதிர்காலத்தை நினைத்துச் சுகிர்தாவை அணைத்தபடி சிலையாகி நின்றாள்.

-நம்நாடு- 9.7.1998
ரொறன்ரோ, கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# ஈகம்
## இந்த மண்ணிற்காக...

அருவிக்கரை எங்கும் சருகுகள் இறைத்தது போல் இருந்தது. சற்று முன்புதான் சூரியன் உதித்திருக்கிறது. தரையில் படும் வெயில் குளிர்மையாயிருந்தது. அருவியில் படும் கதிர்கள் அருவியைப் பளபளப்பாக்கின. காலையிலே அருவியிற் தண்ணீர் அள்ள வரும் பெண்களின் பேச்சொலி இடையிடையே கேட்டது. நாலைந்து பெண்கள் தலையிலும் இடுப்பிலும் குடத்தோடு நடந்து வந்தனர். கோகிலாவும் அவசரம் அவசரமாக அருவியிலே இறங்கிக் குடங்களிலே தண்ணீரை நிரப்பிக் கொண்டு கரையிலே குடங்களை வைத்து விட்டு நிமிர்ந்தபோது பக்கத்திலிருந்த பற்றைக் காடுகளூடாக கனகா அக்கா வியர்க்க வியர்க்கக் கையில் ஓர் பெரிய பையோடு நடந்து வந்தாள். “கனகா அக்கா” என்று அவளைக் கூப்பிடடபடி நெருங்கி வந்தாள் கோகிலா. கையிலிருந்த பையைக் கீழே போட்டுவிட்டு “என்ன கோகிலா முந்தா நாள் கமத்துக்கு வாறன் எண்டு சொன்னாய், உன்னையோ வேறு ஒருத்தரையோ இன்டைக்கு வரை காணவில்லை. என்ன நடந்துதோ எண்டு பயந்துபோனான். அது தான் விடிய முன்னமே காட்டுப்பாதையால நடந்து வாறன்” என்றபடி கனகா அருவிக்ரையை நோட்டம் விட்டாள். “இல்லைக் கனகா அக்கா இண்டைக்கு நான் உன்னட்டை வரத்தான் இருந்தன் நீயே வந்திட்டாய், சரிபையை எடுத்துக் கொண்டு வா, போகப்போக கதைச்சுக்கொண்டு போகலாம்.” கோகிலா பதில் சொல்லிக் கொண்டு குடங்களைச் சுமந்தபடி நடக்கத் தொடங்கினாள். கனகா பின் தொடர்ந்தபடி கதைத்துக் கொண்டு வந்தாள். “கனகாக்கா, முந்தாநாள் உன்ரை கமத்துக்கு வர எண்டு இருக்க விடியக்காலமை இந்த இடம் முழுக்கச் சுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைச்சு ஒரே இராணுவமயம்தான். இந்த அருவிக்கரையால போராளிகள் போய்வாறதாய்த் தகவல் வந்ததாம். இதிலையிருக்கிற சனத்துக்குத் தெரியாமல் வராது . போராளிகள் பற்றி முழுத்தகவல் சொல்லச் சொல்லி எல்லாரையும் வரச் சொல்லி உந்தப்பள்ளிக் கூடத்தடியில் இருத்திக் கூட்டம் வைச்சாங்கள். ஒருசனமும் காட்டிக் குடுக்கேல்லை. கோபம் வந்து எல்லாற்றை குடும்பப் பங்கீட்டு அட்டை, அடையாள அட்டை எல்லாத்தையும் இராணுவம் பறிச்சுக் கொண்டு போட்டாங்கள். இதிலை பக்கத்திலை அருவியடிக்கு தண்ணி எடுக்க வரவே பயமாயிருக்கு. என்ன நடக்கப் போகுதோ தெரியாது?" கோகிலா பெரியதொரு மூச்சு விட்டுச் சொல்லி முடித்தாள். "போராளியளோடை மோத முடியாத கோழையள் பார்த்தியா அப்பாவிச் சனத்தின்ரை அட்டையைப் பறிச்சு வைச்சிருக்கினம்" கனகா கோகிலாவுக்கு ஆறுதல் சொன்னாலும் அவள் மனம் பாதிக்கப்பட்டவர்களுக்காய்ப் பச்சாதாபப்பட்டது. கோகிலா "அக்கா இந்த ஊரின்ரை வருமானமே இந்த விளைநிலத்திலை தானிருக்கு. இது நல்லாத் தெரிஞ்சிருந்துங்கூட ஆக்கிரமிக்க வந்தவன் நாங்கள் பயிர் செய்ய எத்தனை தடையள் போடுகிறான். இப்ப, அரசாங்கம் தந்த பங்கீட்டுச் சாமானுகளைக் கூட கிடைக்காமல் செய்து பட்டினி போட்டால் நிரந்தரமாகவே எல்லாரும் ஓடிவிடுவம் எண்ட நினைப்பு இவங்களுக்கு" என்றபடி கோடரியால் விறகுக் குற்றி ஒன்றைப் பிளப்பதில் மும்முரமாய் நின்றாள்.

மாரியில் மட்டுமல்ல கோடையிலும் பச்சைப் பசேலென்றிருக்கும் அந்த விவசாயக் கிராமம் காடாகிக் கிடந்தது. வயல்களின் வரம்புகள் மட்டும் இடையிடையே வெளியே தெரிந்தது. அதுவும் இல்லை என்றால் அந்த இடம் வயலாகவிருந்தது என்பதை வயற்சொந்தக்காரர்களே நம்பமாட்டார்கள். இடையிடையே சிறு வீடுகள் தென்பட்டன. முப்பது நாற்பது வருசத்துக்கு முன் ஆரம்பித்த இந்தக் குடியேற்றத்திட்டம் ஒரு சகாப்தத்துக்கு மேல் செல்வம் கொழிக்கும் பிரதேசமாக இருந்தது. பாசனவசதியோடு இருபோகமும் பயிர் செய்தபோது குடியேற்றக்காரர்களுக்குப் பசியோ பஞ்சமோ இருந்ததில்லை. இன்று நிலைமை தலைகீழாகி விட்டது. அரச நிவாரணத்தை மட்டுமே நம்பியிருக்க வேண்டிய துர்பாக்கியமே தாண்டவமாடுகிறது. இது போதாது என்று அடிக்கடி சுற்றிவளைப்பு, கைது காணாமல் போதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறாமல் நடக்கும். அரசாங்க நிவாரணச் சாமான்கள் ஒழுங்காக வருகிறதோ இல்லையோ அரசபடை வந்து அராஜகம் செய்யும்.

காலை உணவை இருவரும் முடித்துக் கொள்ள மதியம் ஆகியது, கனகா விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டாள். கோகிலாவை பழைய நினைவுகள் ஆட்கொண்டன. இருபத்திரண்டு வயதில் திருமணமாகிய கையோடு கணவன் தம்பிநாயகத்தோடு இந்தக் கமத்துக்கு வந்தவள் கோகிலா. வெறுமனே தரிசு நிலமாய்க் கிடந்த இந்த ஏழு ஏக்கரையும் செழிப்பான வயலாக்கினது தம்பிநாயகமும் கோகிலாவும்தான். இருவரின் ஒவ்வொரு வியர்வைத்துளியும் மண்ணிலே வீழ்ந்தபோது அது வீணாகவில்லை, மண்ணுக்கு உரமானது. விடாமுயற்சியின் பலன் விளைச்சலில் தெரிந்தது. கோகிலாவின் தகப்பன் சீதனமாய்க் கொடுத்த இந்தக் குடியேற்றத்திட்ட வயல் இருவருக்கும் அந்நிய இடமாகத் தெரியவில்லை. சொந்த ஊரில் இருந்தது போன்ற பிரமையே எப்போதும் இருக்கும். வளம் கொழிக்கும் வன்னி மண்ணிலமைந்த அந்தக் குடியேற்றக் கிராமத்தைச் சூழ எங்கும் தமிழ்க்கிராமங்கள் பலநூறு வருசத்துக்கு முந்தியே இருந்ததாக முதியவர்களிடம் கேட்டு அறிந்திருந்தாள் கோகிலா. காலப்போக்கில் பெரும்பான்மை இனத்தவரைக் குடியேற்றவசதியாகச் சீருடையினரால் அடாவடித்தனங்களும் உருட்டல் மிரட்டல்களும் பொதுச் சனத்தின் மேல் ஆரம்பிக்கப்பட்டன. இதையெல்லாம் தட்டிக் கேட்க சங்கம் அமைத்துப் போராட வேண்டிவந்தது. தம்பிநாயகத்தைத் தலைவராக்கி புகார், மனு, கோரிக்கை என்று பொதுச்சனம் பொங்கி எழுந்தபோதுதான் ஒரு நாள் சீருடையணியாத இராணுவம் வீடுதேடி வந்து விசாரணையென்று தம்பிநாயகத்தை இழுத்துச் சென்றது. கோகிலாவும் மகள் வனிதாவும் வீட்டிலிருந்து அழுது புலம்புவதைவிடுத்து நேரே, இராணுவமுகாமின் மேலதிகாரியிடம் சென்றனர். தங்கள் குடும்பத் தலைவரை விடுவிக்கும்படி முறையிட்டபோது முடியாது என்று முதலில் பதில் வந்தது. சிலநாள் போக அப்படி ஓர் ஆளை நாங்கள் கைது செய்யவில்லையே என்று வழமைபோல் கையை விரித்துவிட்டார்கள். வெள்ளம் தலைக்கு மேல் போய்விட்டதோ என்று பதைபதைத்த கோகிலாவும் வனிதாவும் மேலதிகாரியிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெஞ்சிக் கூத்தாடிப் பார்த்தார்கள், என்ன நடந்தது என்றாவது சொல்லுங்கள் என்று. கோகிலாவையும் சிறுமி வனிதாவையும் இராணுவ அதிகாரிகள் ஏற இறங்கப்பார்த்து விட்டு வித்தியாசமாகச் சிரித்தார்கள். பார்வையின் அர்த்தத்தைப்புரிய அதிக நேரம் கோகிலாவுக்கு எடுக்கவில்லை. தாயும் மகளும் விம்மல் விசும்பலுடன் வீடுவந்து சேர்ந்தனர். தம்பிநாயகம் உண்மையில் இறந்திருந்தால் வாய்விட்டு அழுது தீர்த்து விடலாம். ஆனால் என்ன அவருக்கு நடந்தது என்று அறியாமல் என்ன செய்வது என்று புரியாமல் தம் விதியை எண்ணி கோகிலாவும் வனிதாவும் நொந்தனர். எப்படிப்பார்த்தாலும் இழப்பு இழப்புத்தான். அதன் தாக்கம் குடும்பத்தில் ஈடுசெய்ய முடியாதஅளவுக்கு இருந்தது.

கோகிலா எதற்கும் கலங்காத தைரியசாலிதான். இருந்தாலும் தாரத்தின் இழப்பல்லாவா? ஒரு பெண்ணுக்கு எத்தனை பேறுகள் இருந்தாலும் தாலிகட்டிய கணவன் போல வருமா? அதுவும் கைது செய்து கொண்டுபோய் இப்போது இல்லை என்றால் அநியாயம் தானே! கதியற்று நின்ற கோகிலாவையும் வனிதாவையும் பார்த்துச் சொந்தக்காரர், அயலவர், சிநேகிதம் என்று அனுதாபப்படமுடிந்ததே தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. கோகிலாவின் சகோதரி ஒருத்தி கொழும்பிலை இருக்கிறதாலே தாயும் மகளும் போய் அங்கை இருக்கேலாதோ என்று சொல்லியவர் சிலர். கோகிலாவின் தமையன் ஒருவர் வெளிநாட்டிலையாம், ஏன் அவர் அங்கை கூப்பிட மாட்டாரோ என்றெல்லாம் தங்களுக்குள் அபிப்பிராயப்பட்டோர் பலர். கோகிலாவும் வனிதாவும் தொடர்ந்து கமத்தில் இருந்தால் தங்களுக்குப் பாரமாகி விடலாம் என்று நினைச்ச ஒவ்வொருவரும் தங்கள் பொறுப்புக்களைத் தட்டிக் கழித்தார்கள்.

கோகிலாவின் மனவைராக்கியத்தை யாரும் அறிய முடியவில்லை. வனிதாவும் கனகா அக்காவும் மட்டும் தான் ஓரளவுக்குக் கோகிலாவின் மனதை எடைபோடக்கூடியவர்கள். "என்னபாடு பட்டாவது இந்தக் கமத்தைப் பழைய படி நல்ல நிலைமைக்கு ஒரு நாள் கொண்டுவருவேன்" என்று கோகிலா அடிக்கடி கூறும் உறுதி வனிதாவின் மன உறுதியை ஓர் படி மேலும் உயர்த்தியது. "என்ன நடந்தாலும் இந்த மண்ணை விட்டுப் போகமாட்டேன். எங்கள் தாயகமீட்பில் ஒவ்வொருத்தரும் தங்கடை இயல்புக்கு ஏற்ற திறமைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துப் பங்களிப்புச் செய்தே தீரவேண்டும்” இது கோகிலா மகளிடம் ஓதிய வேதம். அகவைகள் சில கழிய ஓர் நாள் வனிதாவும் வேறு பல சகமாணவர்களும் விடுதலைப் போராட்டத்தில் தங்களை இணைத்துவிட்டதாகத் தகவல் வந்தது. மற்றைய மாணவர்களின் வீடுகளிலே அழுகுரல்கள் கேட்கத் தான் செய்தது. கோகிலா வீட்டிற்குத் தெரிந்தவர்கள் அயலிலே கமம் செய்வோர் என்று துக்கம் விசாரிக்க வந்தார்களாம். வந்தவர்களின் எதிர்பார்ப்பு ஏமாற்றமாகிவிட்டது. ஒரே ஒரு மகள் இயக்கத்தில் சேர்ந்து விட்டதால் கைம்பெண் கோகிலா தலைவிரிகோலமாய் அழுவாள் என்று நினைத்து வந்தவர்களைக் கோகிலா வரவேற்று உபசரித்தபோது முகத்திலே அசடு வழிந்தது. நாலாம் வாய்க்காலில் மேட்டுக்காணி செய்கிற பவளம் ஆச்சி “பிள்ளை தகப்பன் இருந்தால் இந்தப்பிள்ளை இப்பிடிப்போயிருக்கமோ?” என்று கேட்டதுக்கு கோகிலா ‘‘ இல்லையாச்சி வனிதா மாதிரி எல்லாப்பிள்ளையளும் ஏன் எங்களைப்போல பெரிய ஆக்களும் கூட ஏதோ ஒரு வகையில் தங்கள் பங்களிப்பைச் செய்தால் இவ்வளவு அவலமும் வராது’’ என்றபோது எல்லோரும் வாயடைத்து நின்றனர். ஏதேதோ பேச வந்தவர்கள் எல்லாம் கோகிலாவைக் கண்டபின் அடக்கி வாசித்தார்கள். கோகிலாவின் முகத்திலே பலநாளுக்குப் பின் ஓர் சந்தோசக்களையை அனைவரும் பார்த்தார்களாம்.

வயல் அருகே வீட்டில் தனியே இருந்த கோகிலாவைக் கனகா அக்கா தன்னுடன் வந்து இருக்கச் சொல்லிப் பலமுறை கேட்டுவிட்டாள். தனியாகக் கோகிலா படும் கஸ்டத்தைக் கண்டு கோகிலா முன் கண் கலங்கியுமிருக்கிறாள் கனகா அக்கா. கோகிலா எதற்கும் மசியவில்லை “கனகா அக்கா, ஒவ்வொரு இழப்பும் தொடர்ந்துவரவர எனக்கு அதை எப்பிடியும் தாங்கவேணும்எண்டு மனவைராக்கியம் கூடுதே தவிர மனம் உடையேல்லை. அக்கா நீங்கள் இவ்வளவுக்கு இறங்கி வந்து கேட்டும் நான் வரேல்லை எண்டு மனம் நோகாதேங்கோ. பாதுகாப்பு எண்டு சொல்லி உங்களோடை நான் வந்து பாரமாய் இருக்காமல் பிரயோசனமா ஏதாவது ஒன்று சாதிக்க விரும்புகிறேன். அது இந்த நாட்டுக்காக இருந்தால் அதுவே எனக்கு ஆத்ம திருப்தியாயிருக்கும். இனி நான் யாருக்காக வாழவேண்டும்? இதுவரைக்கும் வீட்டுக்காகத்தான். இனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்காக வாழவேணும். இது என்ரை ஆசை கனகாக்கா" எனறு கோகிலா சொல்லி முடிக்க முன்னரே கனகா எழும்பி "சரிசரி அதையாவது செய்து திருப்திப்படு, நான் போய்வாறன்" என்று நீண்டதர்க்கத்துக்கு முற்றுப் புள்ளியிட்டாள். கனகா அக்கா போனபின் கோகிலாவின் மனம் வெதும்பியது. கூடப் பிறந்த சகோதரி மாதிரி வாஞ்ஞையோடை வந்து வலதுகையாக எல்லா உதவியும் செய்கிற கனகா அக்காவை மனம் நோக வைச்சேனா? கோகிலா மனம் வருந்தினாள். அன்றிரவு நித்திரை வர மறுத்து விட்டது, புரண்டு புரண்டு படுத்ததுதான் மிச்சம்.

பழைய நினைவுகளிலிருந்து மீண்டவளுக்குக் கனகா அக்கா உடன் பிறவாச்சதோகதரியாகக் கிடைத்ததில் இதயம் குளிர்ந்தது. எவ்வளவோ குடும்பச் சுமையில் தவிக்கிற கனகா அக்காவை கடமைப்படுத்துகிறேனா என்று நினைக்க மனதில் ஏதோ உணர்வது போலிருந்தது. கால ஓட்டத்தில் மாதங்கள் சில கரைந்து செல்ல வனிதாவந்து இருநாள் தங்கிவிட்டுப் போனாள். அந்தப் பகுதியில் போராளிகளின் நடமாட்டம் இருந்தது. இதனால் இடையிடையே எறிகணைத்தாக்குதல் நடக்கும். அருகிலுள்ள முகாமிலிருந்து வரும் எறிகணைகள் அருவிக்கரை, காட்டுப்பகுதி எங்கும் விழுந்து வெடிக்கும். ஆரம்பத்தில் இது குடியேற்றவாசிகளுக்கு கிலி, மரணபயம் என்று வயிற்றிலே புளியைக்கரைத்தது. நாளாவட்டத்தில் மரணபீதி வாழ்க்கையோடு ஒன்றிப் போய்விட்டது. எறிகணை வீச்சின் எச்சங்களாகக் கிராமத்திலே முறிந்து தொங்கும் பெரிய மரங்கள், பாதிக் கட்டடம் இடிந்த பாடசாலை, வீடுகள் என்று பெரிய பட்டியல் போடலாம்.

அந்திசாயும் நேரம், கோகிலா ஆடுமாடுகளுக்குப் புல்லுப் பிடுங்கிய பின் வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். வானம் கறுத்திருந்தது. எந்த நேரமும் மழை வரலாம் என்பதற்கு அறிகுறியாய் காற்றுக் குறைவாகப் புழுக்கம் இருந்தது. இன்று மழை பெய்தால் நாளை புல்லுப்பிடுங்க முடியாது, கோகிலா வழமையைவிட அதிகமாய்ப் புல்லைப் பிடுங்கிச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு வந்தாள். அப்போதுதான் தன் வீட்டைச் சுற்றி இராணுவம் நிற்பதைக் கண்டாள். அவர்கள் வந்த காரணத்தை மனதிலே ஊகித்துக் கொண்டு வீட்டு வாசலடியைப் போய்ச் சேர்ந்த போது தலையிலிருந்த புல்லுக்கட்டைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொத்"தென்று போட்டாள். அருகிலே நாற்காலியில் இராணுவ உயர் அதிகாரி ஒருவன் கால்மேல் கால்போட்டபடி சிகரட்டை அலட்சியமாகப் பற்றவைத்து புகையை மூக்கால் விட்டுக் கொண்டிருந்தான். அங்கு சில கணம் நிசப்பதம் நிலவியது. வீட்டுக்குள்ளும் படையினர் சிலர் நடமாடினார்கள். அதிகார தொனியில் கட்டளை பிறப்பித்தபடி அதிகாரி கோகிலாவைத் தன் பார்வையால் அளந்தான். கோகிலாவை நெருங்கிய சிப்பாய்கள் வனிதா இயக்கத்தில் இருப்பது பற்றிக் கேள்விகள் தொடங்கி போனவாரம் வரை வீட்டில் வந்து தங்கிச்சென்ற போராளிகள் வரை துருவித் துருவிக் கேட்டார்கள். கோகிலா பதில் ஏதும் சொல்லாமல் முகத்தை விறைப்பாக்கிக் கொண்டாள். போன கிழமை வீட்டில் வந்து தங்கிப்போன போராளிகளின் முகங்கள் அவள் மனத்திரையில் விம்பமாய் விழுந்தன. தங்கள் முகாமுக்கு வரும் வழிசொல்லி, ஏதாவது உதவி வேணுமென்றால் தயங்காமல் கோகிலா அக்கா கேளுங்கோ என்று வழிக்குவழி சொல்லிப்போன இந்த மறவர்களை எப்படிக் காட்டிக்கொடுக்க முடியும்? முடியாது! முடிவாக அவள் மனம் மறுத்தது. அவளின் மௌனம் சிப்பாய் ஒருவனின் சினத்தைச் சிதறடித்தது. துப்பாக்கிப் பிடியால் அவளின் முதுகிலே பலமாய் ஓர் அடி அடித்தான். பக்கத்தில் நின்றவர்களில் ஒருவன் " நீ போராளின்ரை முகாமுக்கு போய் வாறது தெரிஞ்சுதான் கேக்கிறம். எங்கே அது இருக்கு? சொல்லு சொல்லாட்டி உன் புருசனக்கு நடந்தது தான் நடக்கும்" என்று அரை குறைத் தமிழில் சொல்லி அவளின் தலை மயிரைப் பிடித்து உலுப்பினான்.


எட்டப்பர் யாரோ அற்ப சலுகைக்காகத் தன்னைக் காட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இனி இவர்களுக்குப் பதில் சொல்லுவதில் பயனிருக்காது. மனம் உறதி பூண்டது. வருவது வரட்டும் என்று நினைத்தபடி ஓட ஆரம்பித்தாள். இரு சிப்பாய்கள் அவளைப் பின் தொடர்ந்து துரத்தி வந்தார்கள் இவர்களின் சப்பாத்தின் "தொப், தொப்" என்ற சத்தத்ததைக் கேட்டுக் கொட்டிலில் நின்ற மாடுகளும் ஆடுகளும் மிரண்டன. கோகிலாவைப் பிடிக்கமுடியாத சிப்பாய்கள் சுட்டுத் தீர்த்தார்கள். சுருண்டு வீழ்ந்த கோகிலாவின் இமைகள் கொஞ்சம் கொஞ்சமாக மூடிக்கொண்டன. தன்னுயிரை இழந்தாலும் தன்னால் பல உயிர்கள் காப்பாற்றப் பட்ட பெரிய நிம்மதியில் அவளின் இதயம் தன் துடிப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்திக்கொண்டது. இந்த நாட்டுக்காகப் பிரயோசனமாய் ஒன்றாவது சாதிக்கவேண்டும் என்ற வைராக்கியம் நிறைவேறிய திருப்தியிலே கோகிலா தன் சொந்த மண்ணில் மீளாத் துயில் கொண்டாள்.

14.06.1999
-ஈழநாடு-
(ஆறு நாடுகளில் ஒரே நேரத்தில் வெளியாகும் பத்திரிகை)
ரொறன்ரோ, கனடா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# “நேர்மை”

“அப்பாடா” என்று காலை நீட்டிக்கொண்டு இருந்த ஞானம் முதலாளியார் கையில் நெட்டி முறித்துக்கொண்டிருந்தார். இது அவரது மூன்றாவது முறிப்புமுயற்சி, வெற்றிபெற்றார். ஞானம் முதலாளிக்குச் சின்னவயதிலிருந்தே ஒரு பழக்கம் மாறாமல் அப்படியே இருக்கிறது. ஏதாவது யோசிக்கத் தொடங்கினால் நெட்டி முறிப்பது தான். தென்மாராட்சிக்கு வந்து பலவாரங்கள் ஆகியும் இடம்பெயர்ந்து வந்தகளை அவரின் அகத்திலும் முகத்திலும் தெரிந்தது. எதிலுமே ஒரு பிடிப்பில்லாத தன்மையே பூதாகாரமாய் அவரிடம் காணப்பட்டது. வெயில் முகத்தில்பட வியர்வையைத் துவாயால் துடைத்துவிட்டுச் சுழற்றிச் சுழற்றி விசிறினார். ஞானம் முதலாளியார் தங்கியிருந்த பிள்ளையார் கோயில் வெளி மண்டபத்தில் சனக்கூட்டம் நிரம்பி வழிந்தது. பாரிய இடப்பெயர்வின் போது தென்மராட்சியிலே வீடுகள் நிரம்பி இடம் கிடைக்காததால் பாடசாலை, கோயில் என்று தஞ்சம் புகுந்த குடும்பங்களில் ஞானம் முதலாளியாரின் குடும்பமும் ஒன்று. கோயிலின் வெளி மண்டபத்தின் ஓர் மூலையில் மனைவி பாக்கியம் இடம் பிடித்துக் கொண்டார். இரண்டு பக்கம் சுவர் இருப்பதால் சாமான்கள் வைத்து எடுத்துப் பாதுகாக்க இலகுவாயிருந்தது. ஞானம் முதலாளிக்கு அந்தச் சுவரும் இல்லையென்றால் சாய்ந்து இருப்பதற்கு வேறு இடம் தான் சுவரோடு தேடியிருப்பார். நடு மண்டபத்தில் இருந்த பல குடும்பங்களை விடத் தங்களுக்கு வசதி அதிகமாய்க் கிடைப்பதாக பாக்கியத்துக்கு உள்ளூர மகிழ்ச்சி. அவலங்களுக்கு நடுவே ஓர் சிறு வசதிகூடப் பெரிய மகிழ்ச்சியைத் தருவதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளியாரும் உணரத் தவறவில்லை. அவசரஅவசரமாக முக்கியமான சாமான்களை மட்டும் எடுத்து சூட்கேஸ்களில் திணித்துக் கொண்டு வீட்டைவிட்டுப் புறப்பட்டபோது அழுதது பாக்கியத்துக்கு நல்ல ஞாபகம். கொண்டுவந்த சாப்பாட்டுச் சாமான்கள் முடிய இப்பொழுது பங்கீட்டுச் சாமானகள் தான் கைகுடுக்கிறது. ஊரிலை சமைத்தமாதிரி பொரித்துக் கரித்துச் சமைக்கமுடியாவிட்டாலும் ஏதோ ஒரு சோறு கறி என்று எல்லோரும் சமையலிலும் சாப்பாட்டிலும் சமத்துவம் பேணினார்கள்.

ஞானம் முதலாளி வீட்டில் சாப்பாடு என்றால் தடல்புடலாகத்தான் இருக்கும். பொருளாதாரத் தடை போட்டு அரசாங்கம் என்னபாடுபடுத்தினாலும் அவர் சாப்பாட்டு விசயத்தில் வாயைக் கட்டியதில்லை. இன்று கறிக்கு உறைப்பு போதாது என்று ஞானம் முதலாளியார் மனைவி பாக்கியத்தை கடும் வார்த்தைகளால் அர்ச்சித்தார். அக்கம்பக்கத்திலிருந்தவர்கள் ஒரு மாதிரியாகப் பார்த்த போது பாக்கியத்தை அவமானம் தணலாய்ச் சுட்டது. சூழ்நிலையை மறந்து இப்படிப் பேசுவதா? வாய்திறந்து திருப்பிப் பேசினால் பெரிய சண்டையாகும். எதற்கும் மௌனியானாள். தன்வாயை அடைத்துக் கொண்ட பாக்கியத்துக்குத் தன் கண்ணீரை அடக்கமுடியவில்லை. முதலாளியார் சாப்பிட்டதும் சால்வையை நிலத்திலே போட்டு விட்டுஅயர்ந்து தூங்கினார். இருந்த இடத்திலேயே சுவரோடு சாய்ந்து இருந்த பாக்கியத்தைத் கோழித்தூக்கம் அணைத்துக் கொண்டது.

“முதலாளியார், முதலாளியார்” என்று யாரோ கூப்பிடும் குரல் கேட்டுப் பாக்கியம் கண் விழித்தபோது மல்லிகா நின்றாள். மல்லிகாவோடு மூன்று பிள்ளைகளும்ஒரு கைக் குழந்தையும் வந்திருந்தார்கள். “என்ன பிள்ளை நீயும் இதிலே கிட்டத்தானோ இருக்கிறாய்'' பாக்கியம் புருவத்தை வில்லாக்கி வினாத் தொடுத்தாள். “இல்லையக்கா நாங்கள் மட்டுவிலில் இருக்கிறம். நீங்கள் இதிலை இருக்கிறதாய்க் கேள்விப்பட்டு இப்படியே வந்தனான்” சொல்லியவாறு மல்லிகா கையை ஊன்றி நிலத்தில் பாக்கியத்துக்குப் பக்கத்தில் இருந்தாள். பாக்கியத்துக்கு மல்லிகாவைப் பார்க்கப் பாவமாய் இருந்தது. நாள்க்கணக்காய் மாற்றப்படாத உடுப்பு வாடிய முகம், ஒழுங்காய்ச்சாப்பிட்டிருப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாளோ என்ற எண்ணவைக்கும் பஞ்சடைந்த கண்கள் இவ்வளவும் சேர்ந்த மொத்த உருவமாய் மல்லிகா இருந்த கோலம் யாரையும் பரிதாபப் படவைத்துவிடும்.

மல்லிகாவின் குழந்தைகள் பசிக் களையிலே சோர்ந்து போயிருந்தனர். மல்லிகாவை அவள் கல்யாணமாகி ஊருக்கு வந்தநாள் முதல் பாக்கியத்துக்குத் தெரியும். அன்றாடம் உழைத்துத்தான் அன்றைய சீவியம், குடிகாரப் புருசன் அடி உதை என்று அமளிப்படுவது தெரிந்த சங்கதிதான். ஆனால் இந்த நிலமையில் பார்த்ததில்லை. மல்லிகாவின் மனம் ஊசலாடியது. ஊரிலே என்றால் வந்தவுடன் பாக்கியமக்கா ருசியாகத் தேத்தண்ணி தருவா. பச்சைத் தணியாவது கிடைக்குமா இங்கே? ஆனால் பாக்கியத்தின் நினைப்பு வேறாய் இருந்தது. வந்த இடமோ தங்கிப் போறமடம் மாதிரியிருக்கக் தேத்தண்ணி குடுத்தாலென்னவிட்டாலென்ன? பாக்கியத்துக்குக் குழந்தைகளைப் பார்க்கப்பாவமாய் இருந்தது. மல்லிகாவின் கோலம் வேறு. புருசனுக்கு தேத்தண்ணி குடுக்கிற நேரம். எல்லோருக்கும் சேர்த்துத் தேநீர் கொண்டுவந்தாள் பாக்கியம். முதலாளியார் அப்போதுதான் நித்திரையால் எழும்பிக் கண்ணைத்துடைத்தபடி சுற்றும் முற்றும் பார்த்தார்.

மல்லிகாவைக் கண்டதும் ஞானம் முதலாளியார் ஒரு கேலிச் சிரிப்போடு “வந்து கன நேரமோ” என்று கேட்கவும் “இப்பத்தான்” என்று மல்லிகா பதில் சொல்லவும் சரியாயிருந்தது. அவள் பதிலிலே உற்சாகமில்லை. அது ஊனமுற்றிருந்தது. தேநீரை உறுஞ்சிய முதலாளியார் நினைவுகளால் பின்னோக்கினார்.

அப்பொழுது அவரது கடையில் அடகு வியாபாரம் கொஞ்சம் சூடு பிடித்த நேரம். ஒரு நாள் மல்லிகா ஒரு சோடி காப்பு சங்கிலியோடு அடகு வைக்க வந்திருந்தாள். என்னதான் பெறுமதியான நகையோடு ஆர் வந்தாலும் குறைந்த பெறுமதிக்கு அடகு கேட்டாலும் அவையவையின் வீட்டு “பசை”த் தன்மை பார்த்துத் தான் காசு கொடுப்பவர் ஞானம் முதலாளி. ஆளுக்கேற்ற வட்டி விதிப்பார். எடுத்த எடுப்பிலே மல்லிகாவைப் பார்த்ததும் “காசு கைவசம் இல்லை வேணும் எங்கேனும் போய்க்கேள் மோனை’’ என்று சொல்லிவிட்டார். எவ்வளவோ சொல்லிப்பார்த்தாள், கெஞ்சினாள் மல்லிகா. “காசு இல்லையே”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஒரேயடியாய்க் கையை விரித்தார் மீண்டும் வீட்டுக்குள்ளே காசை வைத்துக் கொண்டு “இல்லை” என்று ஒரு ஏழையை அதுவும் பொம்பிளையை திருப்பி அனுப்பி விட்டேனோ என்று நினைத்த போது மனச்சாட்சி சாட்டையடி கொடுத்தது. இருந்தாலும் வைச்ச அடைவை எடுப்பினமோ எண்டு சந்தேகமானவையை “இல்லை” எண்டு திருப்பினால் பழிபாவமில்லையே என்று தன்னைத்தானே ஆறுதல் படுத்திக் கொண்டார் ஞானம் முதலாளியார். அப்போது தான் படலை திறக்கும் சத்தம் கேட்டு எட்டிப்பார்த்போது மல்லிகாவின் புருசன் சுந்தரம் அதே நகையோடு வந்து “என்ன முதலாளியார் என்ரை மனிசி அடைவுக்கு வர நீங்கள் காசில்லை எண்டு சொல்லித் திருப்பி அனுப்பிப் போட்டியள். நான் தான் அனுப்பிவிட்டேன். எனக்கு வர நேரமில்லை எண்டு....” “தான் ஆர் எண்டு அவ அப்பவே சொல்லியிருக்கலாமே ஏதோ பாத்துக் குடுத்திருப்பன்.” முதலாளியார் சமாளித்துக் கொண்டார். அவரைப் பொறுத்தவரை சுந்தரம் மகாகுடிகாரன் தான் ஆனால் நேர்மையானவன். நகையை வாங்கிக் கொண்டு காசு கொடுத்தார்.

சில நாட்களிலே மல்லிகாவே வந்து அடைவை மீட்டுக் கொண்டாள். அன்று முதல் முதலாளியார் வீட்டிலே மல்லிகாவின் மேல் சிறு நம்பிக்கை துளிர் விட்டது. இடையிடையே நகை அடகு வைப்பது எடுப்பது என்று ஞானம்முதலாளி வீட்டுப் படியேற வேண்டி வந்தது சுந்தரம் குடும்பத்திற்கு. முதலாளியார் யாரையும் முழுமையாக நம்பிவிடமாட்டார். சுந்தரம் கைமாற்றாக வாங்கிய காசு ஒரு தடவை பலநாள் இழுத்தடிப்புக்குப் பிறகே திருப்பிக் கொடுக்க முடிந்தது. பொறுப்புக்கு எதுவும் வாங்காமல் கொடுத்த காசு என்பதால் ஞானம் முதலாளியார் இது திரும்பி வராதகாசு என்று முடிவும் கட்டிவிட்டார். ‘‘சுந்தரம் பிழை விடமாட்டான் பரவாயில்லை குடுங்கோவன்” என்று சொன்ன பாக்கியத்தின் சிபாரிசு சுந்தரத்துக்கு அவசர தேவைக்குப் பணம் உதவியது. ஆனால் காசு தவணைக்குள் வராதபோது முதலாளியார் பாக்கியத்தை வார்த்தைகளால் பின்னி எடுத்து விட்டார். இதைப் பாக்கியம் என்றும் மறக்க முடியாது. “பெரிய பெரிய காசுக்காறரே வைச்ச அடைவைத் திருப்பி மீட்கேலாமல் ஆலாப்பறக்கேக்கை சயிக்கில்லை விறகு கொண்டுவந்து விக்கிற சுந்தரத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுளையாக காசைக்குடுத்துப்போட்டு இப்ப முழிக்கிறதிலை என்ன பிரயோசனம்.” எரிஞ்சு விழுந்தார் ஞானம் முதலாளியார். “ஆர் ஆருக்கு குடுக்கல் வாங்கலோ எனக்குத் தெரியும். நீ தலையிடப் படாது’’ கணவரின் கண்டிப்பான வசனங்கள் கேட்டுத் துடித்துப்போனாள் பாக்கியம். அவரோடு இருந்த வழக்கமான அன்னியோன்னியத்தைக் குறைத்தாள். இரண்டொருநாள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலோடு சரி. இதை நினைக்க நினைக்க இருவருக்கும் சுந்தரம் – மல்லிகா மீதிருந்த நம்பிக்கை கரையத் தொடங்கியது. மாறாகக் கோபம்தான் வந்தது.

திங்கள்கள் சில காலச்சக்கரத்தோடு சேர்ந்து உருண்டன. ஒரு நாள் மல்லிகா வந்து அழாக்குறையாக “முதலாளியார் இரண்டு பவுண் நகை தேறும். வைச்சுக் கொண்டு எவ்வளவு எண்டாலும் தாங்கோ, சீக்கிரம் மீட்டுப்போடுவன்” என்றாள். அடைவாக என்றதால் உடனே சம்மதித்தார். இதற்குள் மல்லிகா தோடு, மூக்குத்தி, காப்பு என்று கழற்றிக் கொடுத்தாள். பாக்கியம் இடையிடையே மல்லிகாவைச் சந்தை, கடைப்பக்கம் போனவேளை சந்தித்தாள், முதலாளியார் காணச் சந்தர்ப்பம் வரவில்லை.

கோயில் வாசலில் யாரோ ஒருவர் தேங்காய் உடைத்த சத்தம் முதலாளியாரின் நினைவுகளைச் சிதறடித்தது. பாக்கியமும் மல்லிகாவும் இடம் பெயர்ந்தநாள் முதல் இன்று வரையான புதினங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். அதிலே பட்ட அவலங்களும் கிடந்த பட்டினிகளும் தலைமை தாங்கின. மல்லிகா மனதைத் திடப்படுத்திக் கொண்டு வந்த அலுவலை முடித்துவிடத்துடித்தாள். அதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தாள். இவையிரண்டு பேரும் நல்ல சந்தோசமாக இருக்கிற நேரம் தான் என் முடிச்சை அவிழ்க்க வேணும். வந்த காரியம் காயோ பழமோ பிறகு பார்க்கலாம். களைத்துப்போய்ப் படுத்திருக்கும் பிள்ளைகளைப் பார்க்க மல்லிகாவின் பெற்ற வயிறு பற்றி எரிந்தது. இரவுச்சாப்பாட்டைச் சாப்பிடக் கேட்பா பாக்கியம் அக்கா அதுவரைக்கும் குழந்தைகள் பசி தாங்கமாட்டாதுகள். வெட்கத்தை விட்டு ‘‘அக்கா பிள்ளையளுக்கு நல்ல பசி. மத்தியானமும் அரைவயிறுதான். ஏதன் இருந்தால் சாப்பிடக் குடுங்கோ…” வார்த்தைகள் தயங்கியபோது பாக்கியம் “மல்லிகா நீ பாத்த வேலை, உதை முதலிலே சொல்லியிருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பாட்டைத் தேத்தண்ணிக்கு முன்னமே குடுத்திருக்கலாம்." பேசியபடி சமைத்த பாத்திரங்களைத் தூக்கிக் கொண்டு வந்தார். பாக்கியம் குழைத்த சோற்றை மல்லிகாவின் பிள்ளைகள் பசி தீரச் சாப்பிட்டார்கள். இதைப்பார்த்த பசியோடிருந்த மல்லிகாவுக்குத் தானும் சாப்பிட்ட திருப்தி தெரிந்தது. குஞ்சுகளின் பசி தாய்ப்பட்சிக்குத்தானே தெரியும்.

நாசுக்காகக் கதையைக் குடுத்தால்தான் ஞானம் முதலாளியார் மனம் கசிவார். இது தெரிந்த மல்லிகா "வந்த விசயத்தை மறந்து நான் ஊர்க்கதை, தேத்தண்ணி எண்டு இருக்கிறன். முதலாளியார்...''பீடிகை போடடாள். பாக்கியம் காதைக் கூர்மையாக்கிக் கொண்டாள். முதலாளியாரோ மல்லிகாவை வைத்த கண் வாங்காமால் உற்றுப் பார்த்தார். "முதலாளியார் முந்தி நாங்கள் வைச்ச அடைவு நகையளை மீட்கக் காசு இருந்தது. ஆனால் அடுத்தநாளே எல்லாரும் இடம் பெயர வேண்டிவந்தது. இவருக்கும் தொழில் இல்லாததாலை இருந்த காசு கரைஞ்சு கரைஞ்சு போக மீதியை மனக் கவலை மருந்து எண்டு குடிச்சு அழிச்சார். நாலாவது பிள்ளைக்கு வருத்தம் வந்து ஆஸ்பத்திரிக்குப் போனால் மருந்து இல்லை. வெறும் மருந்துத் துண்டு தான் தந்தினம். வெளியிலை அறாவிலைக்கு மருந்து வாங்கக் காசில்லை. பங்கீட்டுச்சாமான் கொஞ்சம் வித்துத்தான் சமாளிச்சன். நாளைக்கு மந்திகை ஆஸ்பத்திரியிலை பெரிய டொக்டர் வாறாராம் காட்டப் போறன். உங்களிட்ட வைச்ச நகைக்கு ஒரு விலையைப் போட்டு தருமதி போக மிச்சக் காசைத் தாங்கோ கார்பிடிச்சுப் போக எழுநூறு ரூபா வருமாம்" மல்லிகா தன் இக்கட்டான நிலையைக் கதை போல் சொல்லி முடித்தாள். அதிலே இடம்பெயர்ந்தோரின் இன்னல்கள் நிழலாடின. பொருளாதாரத் தடையின் விளைவு வெளிப்படையாகத் தெரிந்தது. மல்லிகா எதிரேயிருந்த இருவரையும் கடைக்கண்ணால் பார்த்தாள். நேரேபார்க்கக் கூச்சம் திரை போட்டது. அவர்கள் முகத்திலே ஈயாட்டம் இல்லை. முதலாளியார் ஏதோ சொல்ல வாயெடுத்தார். வார்த்தைகள் வந்தவழியே பின்னோக்கின. என்ன பதில் சொல்லப் போகிறார்களோ? சாதகமான பதிலைத் தரட்டும் அதில்தான் வந்த காரியமே தங்கியிருக்கு. இஸ்ட தெய்வங்களை மனசுக்குள்ளே வேண்டிக் கொண்டாள். நெஞ்சு "பக் பக்" என்று அடித்துக் கொண்டிருந்தது. சில விநாடி நிசப்தம் நிலவியபின் பாக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மல்லிகா எங்களை மன்னிச்சுக் கொள் பிள்ளை. நாட்டு நிலமை தெரியும் தானே, திடீரெண்டு எல்லோரும் இடம்பெயர்ந்து ஓடி வரேக்கை பெறுமதியான சாமான் எல்லாம் கொண்டு வர முடியேல்லை. எல்லாம் வீட்டில தான் ஊரில இருக்கு. எடுத்துக் கொண்டு வெளிக்கிடலா மெண்டால் ஆமியும் வெளிக்கிட அமளிச் செல்லடி, துவக்குச் சூட்டுச் சத்தமும் கேட்டுது. பின் ஒழுங்கையில் செல் விழுந்து இரண்டுபேர் காயமாம். குளறிச் சத்தம் கேட்டுது. என்ன ஏது எண்டு பாக்கப் பயத்தில அப்பிடியே வெளிக்கிட்ட பயணம் தான். இனி எப்ப போகப் போறமோ... ஆருக்குத் தெரியும். நாங்கள் என்ன செய்ய...? “கைகளை அகலமாய் விரித்துப் பெருமூச்செறிந்தார். பாக்கியத்தின் முகபாவனையில் கண்ட சோகம் தாங்காமல் முதலாளியார் “ இருந்த காசை எல்லாம் அடைவுக்குக் குடுத்து நகையளை வீட்டிலை வைச்சுவிட்டு நாங்கள் இஞ்சை இந்தக் கோயில் மண்டபத்திலை படுறபாடு உனக்குத் தெரியும் தானே மல்லிகா'' என்றார் மனைவிக்கு ஒத்தாசையாக.

அப்போதுதான் மல்லிகாவின் மனதிலே பொறிதட்டியதாய் ஓர் ஞாபகம் வந்தது. கலங்கிய தன் கண்ணைக் கசக்கிவிட்டு உடுப்புகள் வைத்த துணிப்பையுள் கையை விட்டு ஆவலாய்த் துழாவினாள். அவள் தேடிய அவசரமும் பதட்டமும் உண்மையில் பாக்கியத்தையும் கணவரையும் ஒரு கணம் மனதைப் படபடக்க வைத்தன. பொலித்தீன் பை ஒன்றை முதலாளியாரிடம் மரியாதையாக நீட்டிய மல்லிகா ‘‘இது உங்கவீட்டுச் சாமான் தானே, நல்லாப்பாருங்கோ” என்றாள். இடையில் நின்ற பாக்கியம்எட்டிப் பையை வாங்கிப் பார்த்துவிட்டு ‘‘ஐயையோ இது எங்கடை நகையள் வைச்சபை, இஞ்சாருங்கோ. மல்லிகாவுக்கு இது எப்படி வந்தது...?'' பரபரப்போடு நடுங்கும் கைகளோடு கேட்டாள். மல்லிகா “பாக்கியமக்கா இடம் பெயர்ந்த அன்று நேரே வெளிக்கிட்டு உங்கட வீட்டை வந்தோம். வீடு பூட்டியிருந்தது. ஆனால் முற்றத்திலை நடுவிலை யாரோ கிடங்கு வெட்டிப்போட்டு மண்வெட்டியைப் போட்டபடி விட்ட அடையாளம் தெரிஞ்சது. எட்டிக் கிடங்கைப் பார்த்தால் ஒன்றுமில்லை. இது யாரோ களவுக்கு இந்தச் சமயத்திலை வந்திருக்கினம் எண்டு விளங்கிட்டுது. நானே மண்ணை இன்னும் கொஞ்சம் வெட்டினேன். இந்தப்பை இருந்தது. மண்ணைத் தட்டிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுப் பத்திரமாகக் கொண்டு வந்து சேர்த்தது பெரியபாடு. இவருக்கே தெரியாது இப்பிடி ஒரு சாமான் உடுப்புகளோடை இருந்தது. தெரிஞ்சால் மனுசன் காசில்லாத நேரங்களில் ஆர் வீட்டுநகை எண்டும் பாராமல் வித்து அழிச்சுப் போடுவார். கள்ளருக்குப் பாதுகாத்ததை விட என்ர மனுசனுக்குப் பயந்து பாதுகாத்தது தான் கூட" என்று சொல்லக் கைக் குழந்தை "வீல்" என்று அழும் சத்தம் கேட்டது. குழந்தையைத் தூக்கி அழுகையை நிறுத்தினாள் மல்லிகா. நகைகள் கிடைத்த மகிழ்ச்சி, அதிர்ச்சி இரண்டையும் ஒரே நேரத்தில் ஜீரணிக்க முதலாளி தம்பதியினரால் முடியவில்லை. பாக்கியத்துக்குத் தன்னையறியாமல் விழிகளிலே வழிந்தோடும் கண்ணீரைக் கூடத் துடைக்கமுடியவில்லை. அவளது கைகள் நகைப் பைக்குள் புதைந்து கிடந்தது. பைக்குள் வைத்த நகைகள் பத்திரமாக இருப்பதை உறுதி செய்தாள் பாக்கியம். "என்ன எல்லாம் சரியாயிருக்கா அக்கா'' மல்லிகா வினாவினாள். அவளின் குரலிலே புதுத் தெம்பு தெரிந்தது. ஞானம் முதலாளியார் குறுக்கிட்டார் "பிள்ளை மல்லிகா நீ இதைக் கொண்டு வந்து ஒப்படைக்கப்பட்ட கஸ்டமும் அவலமும் உனக்குத்தான் தெரியும். சரியானதைச் செய்திருக்கிறாய். நகையளும் எல்லாம் சரியாகத் தான் இருக்கும். நாங்கள் குடுத்து வைச்ச மனிசர். இல்லை யெண்டால் இது உன்ரை கையில கிடைக்குமே? வேறு ஆக்கள் எடுத்திருந்தால் எங்கடை நிலைமை என்ன?... வீட்டை விட்டு வந்தநாள் முதல் இதைப்பற்றித்தான் யோசனை. நித்திரை வராது. சண்டையும் அழுகையும் தான் மிச்சம். உனக்கு என்ன கைமாறு செய்யப்போறமோ தெரியாது...'' முதலாளியாரின் நா தளதளத்தது. கண்ணிலே நீர் பனித்தது. ஏதோ பெரிய புதையல் கிடைத்ததாய் வந்த சந்தோசம் கரை புரண்டது. இன்ப அதிர்ச்சியிலிருந்து விடபடமுடியாததை மறைக்க முதலாளியாரும் பாக்கியமும் வாய் நிறையச் சிரித்துச் சிரித்துப் பேசினார்கள் மல்லிகாவோடு. இதற்கிடையில் மல்லிகாவின் குழந்தைகள் இரண்டு பொறுத்துப்பொறுத்துப் பார்த்துவிட்டு அம்மா வீட்டை போவம் அம்மா" என்று சிணுங்கினார்கள் பாக்கியம் குழந்தைகளைக் கட்டி அணைத்துக் கொண்டார். கோயில் வாசலில் இடம் பெயர்ந்து வந்திருந்தவர்கள் தங்கள் இடங்களில் இருந்தபடி இவர்களை வேடிக்கை பார்த்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகா அடைவு வைத்த நகைகளைக் கையிலே எடுத்த பாக்கியம் “உனக்குக் கைமாறா உன்ரை நகையளையே திருப்பித்தாறம், காசு தர வேண்டாம் மல்லிகா. என்ரை சொந்த நகையாயிருந்தால் அதிலும் ஒரு பங்கு உனக்குத் தந்திருப்பேன்” என்றார். மல்லிகா “இல்லை அக்கா நீங்கள் நட்டப்படாமல் இருந்தால் சரி . என்கேன் அடுத்தவையின்ரை நகையை “சிரித்துக் கொண்டே சொன்னாள். ஞானம் முதலாளியார் கையைக் காட்டி “ அப்பிடிச் சொல்லாதை மல்லிகா. பங்கீட்டுச் சாமானகளை வித்துபிள்ளைக்கு அநியாயவிலைக்கு மருந்த வாங்கியிருக்கிறாய். மிச்ச நேரம் பட்டினிதானே. அதே நேரம் இவ்வளவு நகையளும் உன்ரை உடுப்புப் பையுக்குள்ள தானே இருந்தது. நீ நினைச்சிருந்தால் வித்துச் சாப்பிட்டிருக்கலாம். நேர்மை எண்டு சொல்லுறது இதைத்தான். எந்தச் சூழ்நிலையிலும் உன்ர நேர்மை நேராகத்தான் இருக்குது. உன்னை மறக்கமாட்டம் பிள்ளை“

மல்லிகா புறப்படத்தயாரானாள் அன்றிரவுக்குள் ஒரு நகையாவது வித்துக் காசாக்கினால்தான் அடுத்த நாள் குழந்தையை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகலாம். அவள் சிந்தை முழுவதும் இதையே சுற்றிவந்தது. மல்லிகா குழந்தைகளுடன் விடைபெற்ற போது ஞானம் முதலாளியாரும் பாக்கியமும் மனம் நெகிழ்ந்து வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்கள்.

27.6.1999
-வீரகேசரி-
இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# சேவை செய்வதே ஆனந்தம்

அந்தகாரம் இன்னும் முற்றாக மறையவில்லை, வைகறையில் தெரியும் வானம் மட்டும் அடிப்பாகம் செப்பு முலாமிட்டது போலிருந்தது."கோமதி கோமதி... முகம் கழுவிப் போட்டியே இந்தா தேத்தண்ணி... குடி" கோமதியின் தாயார் தேநீரை அவளருகில் வைத்துவிட்டுப் போனார். " முகமே கழுவவில்லை அதற்குள்ள..." தனக்குத்தானே சொல்லிக் கொண்டு கோமதி கிணற்றடிக்குப் போனாள். முதல் நாளிரவு நித்திரையில்லாமல் அழுது வடிந்த கண்ணீர் விழியோரம் காய்ந்திருந்தது. நன்றாக முகத்தைக் கழுவி விட்டு முன் கூடத்திற்கு வந்த போது தாய் " என்ன கோமதி, கொஞ்ச நாளாகப் பாக்கிறன் மற்றும் நாளில ஏழுமணி வரைக்கும் நித்திரை கொள்ளுற நீ இப்ப நேரத்தோடை எழும்புகிறாய். உன்ரை முகமும் அழுது நித்திரை முழிச்ச முகம் மாதிரியிருக்கு, ஏன் என்ன நடந்தது'' பலநாட்களாய் அவதானித்து விட்டு ஆவலோடு நிதானமாய்க் கேட்டார் தாயார் இந்தக் கேள்வியை. ஏற்கனவே கோமதியால் எதிர்பார்க்கப்பட்ட கேள்விதான் இது. பகல் நேரத்தில் கேட்டிருந்தால் பதிலைப் பவ்வியமாய்ச் சொல்லிச் சமாளித்திருக்கலாம். இப்போது இதுபற்றிக் கதைத்தால் நிச்சயம் அழுகைதான் வரும் என்னை நானே அம்மாவிடம் காட்டிக் கொடுத்ததாய் முடியும், கோமதி மனதிற்குள் நினைத்துக் கொண்டு "அம்மா அதைப் பிறகு ஆறதலாயச் சொல்லுகிறேன்'' சுருக்கமாய்ச் சொல்லிவிட்டு விருட்டென்று அவ்விடத்தைவிட்டு அகன்றாள் கோமதி.

அம்மாவின் கேள்விக்குத் தப்பிவந்தாலும் மனதிலே ஓர் பாரம் உதைத்துக்கொண்டிருந்தது. கோமதியின் மனம் பின்னோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடியது. மறக்கமுடியாக நினைவுகள் பல வரிசையாய் வந்தன. ஆனந்தி, இவள் கோமதியின் பால்யச் சிநேகிதி, வன்னியிலிருந்து வந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து படித்து வந்தவள். படிப்பிலே சூரப்புலி, விளையாட்டுத்துறையிலே வீராங்கனை ஆனந்தி தனது பெற்றோர் தம்பி சகிதம் கோமதியின் வீட்டுக்குப் போகும் ஒழுங்கை முகப்பு வீட்டில் வாடகைக்கு குடியிருந்தவள். இருவரும் ஒரே வயது ஒரே வகுப்பு. ஒன்றாகவே பள்ளிக்கூடம் போய்வருவதும் கூட. சிறுமிகளாக இருவரும் துவிச்சக்கரவண்டி ஓடிப்பழகும் போது அந்த ஒழுங்கையால் போய்வருவோரில் மோதிப்பல பேரிடம் ஏச்சுவாங்கியதையெல்லாம் ஆனந்தி அடிக்கடி ஞாபகப் படுத்துவாள். உடனே கோமதி வாய்விட்டுச் சிரிப்பாள். பள்ளிக்கூடத்துப் பக்கத்து வளவில் கல்லெறிந்து விளாங்காய் விழுத்தி அதை அடிமரத்தில் குத்திப்பிரித்து இருவரும் புளிக்கப் புளிக்கச் சாப்பிட்டதை நினைத்தால் இன்றும் இனிக்கும்.

பெரியவளாக ஆனதும் சில எல்லைக் கோடுகளுக்குள் நின்று பள்ளி வாழ்க்கையை அனுபவித்தது மறக்கமுடியாத பசுமை நினைவுகள். வாழ்வியலில் துன்பம் என்றால் என்னவென்று அறியாத பயம் அறியாத வயது, துள்ளித்திரிந்து குதித்து வாழ்ந்த நாட்கள் உருண்டோடின. ஆனந்தியின் பாட்டனின் மறைவிற்குப் பின்னர் வன்னியில் வயல்களைப் பராமரிக்க ஆள் இல்லாமல் போக ஆனந்தியைக் கல்லூரியின் விடுதியில் விட்டு வன்னிக்குப் பெற்றோர் சென்றனர். கல்லூரி விடுதிக் கட்டுப்பாடுகள் முதலில் ஆனந்திக்குப் பெரிய சங்கடத்தைக் கொடுத்தது. இருந்தாலும் படிப்பை ஒருமுகப்படுத்த அவையே படிக்கற்களாக அமைந்ததை அவளே உள்ளூர உணர்ந்தாள். அம்மா, அப்பா, தம்பி என்று கலகலப்பான சூழலில் பள்ளிக்கூடம் போனவளுக்கு விடுதி என்னவோ திறந்வெளிச் சிறைச் சாலையாகவிருந்தது. வீட்டை நினைத்து சிலநேரங்களில் கண் கலங்கினாள். நாளாவட்டத்தில் இது ஆனந்திக்குச் சரியாகிவிட்டது. கோமதி வகுப்பு நேரங்களில் பக்கத்திலே இருந்து கலகலப்பூட்டி ஆனந்தியின் கவலைகளைக் கரைத்து விடுவாள். இருந்தும் கல்லூரி முடிந்து வீடுதிரும்பும் போது நாலுமணிக்கு ஆனந்தியின் முகம் இலேசாக வாடிவிடும். "சீ என்னால் வழமை போல் வீட்டை போகமுயவில்லையே..." என்று நினைக்கவும் தவறுவதில்லை. கவலைப்படாமலும் இருக்கமுடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்னடி சிறைக் கைதிகளைப் பார்க்கவந்து போறவை மாதிரி நீ வீட்டை போகிறாய் நான் தான் இங்கே...” பெருமூச்சு விடுவாள் ஆனந்தி. இயல்பு வாழ்க்கையிலே எத்தனைதான் ஆயிரக்கணக்கிலே கனவுகள் இருந்தாலும் பெரும்பாலானவை மனதுள் புதையுண்டுதான் கிடக்கின்றன. எதிர்காலத்திட்டங்கள் இன்பக் கனவுகள் எல்லாம் இன்னொருத்தருக்குச் சொல்லி மகிழ்வதில்லை. ‘‘என்னடி படிபடியெண்டு படிச்சுப் பெரிய உத்தியோகம் பார்க்கவா போறம், இருபத்தைஞ்சு வயதளவில் ஒருத்தருக்குக் கழுத்தை நீட்டப்போறம். பிறகு என்ன பிள்ளையள், குட்டியள், குடும்பச்சுமை...’’ கோமதி அலுத்துக்கொண்டே சொல்ல ‘‘ஏனடி படிச்சதுக்கு வேலை கிடைச்சாலும் நீ செய்ய மாட்டாய் போலிருக்கு’’ ஆனந்தி புதிர்போடுவாள். பதில் சொல் முடியாத கோமதி உதட்டைப் பிதுக்குவாள். ‘‘கோமதி. ஏதோ பிறந்தோம், வளர்ந்தோம் இருந்தோம் இறந்தோம் எண்டு இல்லாமல் வாழவேணும். நாஙகள் காட்டுகிற வாழ்க்கை உதாரணத்தை மற்றப் பெண்களும் பின்பற்ற வேணும்...” என்று ஆனந்தி அடுக்கிக் கொண்டே போனாள். “என்னடி இது இந்த வயதிலை பெரிய பெரிய உபதேசம் எல்லாம் பண்ணுகிறாய்...” பொய்க்கோபத் தோடு சிரிப்பை உதிர்த்தாள் கோமதி வழமைபோல.

காலப்போக்கிலே இருவரும் பரீட்சைகளை எழுதிவிட்டு வீட்டில் இருந்தார்கள். ஆனந்தி வன்னிக்குத் திரும்பியபோது அறுவடைக்காலம்; மும்முரமாயிருந்தாள். அப்பொழுதுதான் வெளிநாட்டுத் தொண்டு நிறுவனம் ஒன்றின் வேலை விளம்பரத்தைப் பார்த்துவிட்டு அதற்கு விண்ணப்பித்தாள். நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு அடுத்தவாரமே வேலையில் இணையும்படி ஆனந்தி கேட்கப்பட்டாள். வேலை கிடைத்த சந்தோசத்தில் துள்ளிக் குதித்தாள் ஆனந்தி. போரினால் நலிவடைந்த குடும்பங்களில் குறிப்பாக வறுமையில் வாடும் பெண்கள், போரினால் விதவையானவர்கள், அநாதைக் குழந்தைகள் போன்றோர்க்கு மறுவாழ்வு அளிப்பதை கோட்பாடாகக் கொண்ட அரச சார்பற்ற தொண்டு ஸ்தாபனத்தில் வேலை என்பதில் இரட்டிப்புமகிழ்ச்சி. சிறு வயதிலிருந்து கஸ்டப்பட்டவர்களுக்கு உதவவேண்டும் என்ற இரக்கசுபாவமும் தொண்டு செய்யும் மனப்பாங்கும் தன்னகத்தே இயற்கையாக உடையவள் ஆனந்தி. தான் எப்படி எப்பயெல்லாம் பொதுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை செய்யவேண்டும் என்று கனவு கண்டாளோ அவையனைத்தையும் நனவாக்கக் களம் கிடைத்துவிட்டது போல் கிடைத்த நற் செய்தியைக் கோமதியின் வீட்டுக்குக் கடிதம் மூலம் தெரிவித்துவிட்டு, கோமதியின் பதிலை எதிர்பார்த்தாள்.

வன்னியிலும் கிழக்கு மாகாணாத்திலும் தொண்டு நிறுவனத்தின் அலுவலகங்கள் சுறுசுறப்பாய் இயங்கிக் கொண்டிருந்தன. ஆக்கிரமிப்பு இராணுவத்தின் கெடுபிடிகளுக்கு மத்தியில் நல்ல முறையில் சேவையைத் தொண்டுநிறுவனம் வழங்கத் தவறியதில்லை. போர்ச் சூழலில் எதிரியின் அடக்குமுறை பொருளாதாரத்தடை, குண்டுவீச்சு, எறிகணை வீச்சு, உணவு, மருந்துத்தடை இத்தனைக்கும் ஈடுகொடுத்து எந்த ஒரு நாட்டின் உதவியுமின்றிச் சொந்தக்காலிலேநின்று தாய் நாட்டை மீட்கப் போராடும் தமிழினத்துக்கு இது போன்ற தொண்டு நிறுவனங்களின் உதவி நிச்சயமாக வெயிலில் நடந்து தவித்தவனுக்கு நிழல் கிடைத்த மாதிரி ஆறுதல். தினசரி நிறுவனத்தின் அலுவலக வாசலில் அதிகாலையில் நூற்றுக்கணக்கில் பொதுமக்கள் வரிசையாக நின்று சேவையைப் பெறுவார்கள். முதல்நாள் ஆனந்தி வேலைக்குச் சென்றபோது அலுவலக வாசலில் பலர் முண்டியடித்துக் கொண்டு நின்றதைக் கண்டதும் கண் கலங்கிவிட்டாள் "ஓ" இவ்வளவு தொகையிலே நம் சனம் இவ்வளவு தூரத்துக்குப் பாதிக்கப்பட்டார்களா? இந்த நிறுவனத்தின் வளங்கள் அனைத்தும் பாதிக்கப்பட்ட இம் மக்களக்காவே பயன் படுத்தப்படவேண்டும்" ஆனந்தி மனதைத் திடப்படுத்தினாள்.

முதல் நாள் கொடுக்கப்பட்ட பணியே ஆனந்திக்கு மனதை நெகிழவைத்தது. இரு சிறுவர்கள் யாருமற்ற அநாதைகள். தந்தை இறந்துவிட்டாராம். தாயை இராணுவம் சோதனைச் சாவடியில் வைத்துக் கைது செய்து விட்டதாம். தற்போது அகதி முகாமில் இருக்கிறார்கள். தாயைக் கண்டு பிடித்துத் தரும்படி அழுதழுது நடந்தவற்றைச் சொன்னார்கள் சிறுவர்கள் இருவரும். அவர்களைப் பார்க்கப் பாவமாகவிருந்தது. "பிள்ளையள் காலமை சாப்பிட்டீங்களா?"ஆனந்தி தாய்மை உணர்வோடு கேட்டாள். "இல்லையக்கா தேத்தண்ணிக்கூட குடிக்காமல் வந்து வரிசையில் நின்றபடியால் தான் இப்ப ஆவது உள்ளே வந்தோம்'' சிறுவரில் பெரியவன் தலையைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொறிந்தபடி சொன்னான். அப்போதுதான் தனது சுடுநீர்ப் போத்தலில் உள்ள தேநீரின் ஞாபகம் வந்தது. ஆவல் பொங்கத் தனது தேநீரை அவர்களுக்கு ஊற்றிக் கொடுத்தாள். சிறுவர்கள் இருவரும் தாகம் தீரக் குடித்தார்கள். அவர்களின் முறைப் பாட்டை முழுமையாகப்பெற்று உடனடியாக நடவடிக்கை எடுக்க ஆவன செய்வதாகக் கூறிச் சிறுவர்களை அனுப்பிவைத்தாள். இவர்களைப் போல் விதவைகள் பலர் வந்து தங்கள் பிரச்சினைகளைச் சொன்னார்கள். ஒவ்வொருவரினதும் கதைகளின் பின்னணியிலும் சொல்லிமாளாத சோகக்கதைகள் புதையுண்டு இருப்பது வெளிப்பட்டது. அப்பாவிப் பொது மக்களான இவர்கள் ஆயுதப்படையாலும் தமிழ்க் குழுக்களாலும் கொல்லப் பட்டவர்கள. இவர்களின் பிரச்சினைகளைக் கேட்டுப் பதிவு செய்து விடுவது பெரிய விடயமில்லை. இவர்களுக்கு நீதிகிடைக்க வேண்டும். இவர்களின் பிரச்சினைகளின் அடிப்படையாவது தீர்க்கப்படவேண்டும். இல்லையென்றால் இந்த நிறுவனமோ, நானோ இருந்தென்ன பயன். ஆனந்தியின் எண்ணங்கள் உயிர்பெற்று உலாவின. இப்படியே ஒருவாரம் மின் வேகத்தில் போய்விட்டது. கோமதியுடன் இதுபற்றிப் பேசி வாதாடினால்த்தான் ஆனந்திக்கு மனம் திருப்திப்படும். அடிக்கடி போய்வரக் கூடிய இடமாயிருந்தால் ஒவ்வொருநாள் நடந்தகையும் கோமதியுடன் கலந்து பேசலாம். ஆனந்தியின் மனம் அங்கலாய்த்தது. சரி என்ன செய்வது. கடிதத்தில் தான் எழுதலாம். அது கூட யாராவதுபோய்வருபவர்களிடம் கொடுத்தால்தான் நேரத்துக்குப் போகும். இனிப்பதில் வர எத்தனை நாளோ? அலுத்துக்கொண்டே ஆனந்தி கடிதம் வரைய ஆரம்பித்தாள்.

இன்னொருநாள் ஆனந்தியின் அலுவலகத்திற்கு நடுத்தர வயதுக் குடும்பஸ்தர் ஒருவர் சிறுமி ஒருத்தியுடன் வந்து நின்றார். வேறு அலுவலர்கள் அவருக்கு உதவ முன்வந்த போதும் விடாப் பிடியாகத் தான் ஆனந்தியைத்தான் சந்திக்வேண்டும் என்றார். அன்று முழுவதும் வேலைப்பளு மிக அதிகமாயிருந்தது ஆனந்திக்கு. அத்தனைக்கும் மத்தியில் இந்தக் குடும்பஸ்தரின் குறைகளைக் கேட்டறிந்த விதம் கண்டு சக உத்தியோத்தர்கள் ஆனந்தியை மெச்சினார்கள். ஆனந்தி “உங்களைப் போல பாதிக்கப்பட்ட ஆக்களக்கு சேவை செய்யுறதைத் தவிர வேறை என்ன எங்களுக்கு வேணும்? இந்த நிறுவனத்தின் நோக்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது தானே. உங்க பிரச்சினையைப் பயப்படாமல் சொல்லுங்கோ...” அன்பும் ஆதரவும் இணைந்தே வார்த்தைகள் நடம்புரியக் கேட்டபோது குடும்பஸ்தருக்குக் கண்கள் குளமாகிவிட்டன. “தங்கச்சி உங்களைப் போல் ஆறுதல் வார்த்தை சொல்லுறதுக்கு ஆக்கள் இருக்கிறபடியால்தான் ஏழையாயிருந்து இப்ப அநாதையாக்கப்பட்ட என்னைப் போல ஆக்களுக்கு ஓர் நிம்மதி கிடைக்குது’’ நாதளதளத்தது குடும்பஸ்தருக்கு. மேலும் தொடர்ந்தார் “எங்களுக்கு நடந்த கொடுமை மாதிரி யாருக்கம் நடக்கக் கூடாது. நான் மன்னாருக்கு அரிவி வெட்ட நான் இரண்டு கிழமை போயிருந்தன். வீட்டை வந்த ஆமி என்னைக் கேட்டிருக்கினம். மன்னாருக்கு போனதை என்ர மனிசி சொன்னா. “வந்த உடனே முகாமுக்கு வந்திட்டுப் போகச் சொல்லு” என்றானாம். இப்படியே அடுத்து நாலுநாளா வந்தாங்களாம். “மன்னாரால் வரவில்லையே” என்று மனிசி சொல்லியும் நம்பாமல் அவவைச் சுட்டுப் போட்டுப் போயிட்டாங்கள். பயந்து குளறின் இந்த 8 வயது மகளை வெருட்டி அப்பா வந்தால் உடனே முகாமுக்கு வரச் சொல்லு எண்டு துவக்கைக் காட்டி வெருட்டியிருக்கிறாங்கள். அந்த அநியாயப்படுவார்’’ ஆனந்தி தந்தை - சிறுமி இருவரின் முகத்தையும் மாறிமாறிப் பார்த்தாள். சிறுமியின் கண்களில் நீர்வழிந்து தாரை தாரையாக ஓடியது. இடையிடையே விசும்பல் ஒலியும் கேட்டது. குடும்பஸ்தர் இந்தப் பிள்ளைக்கு அந்தக் காட்சியைப் பார்த்ததிலிருந்து சித்தப்பிரமைபிடிச்ச மாதிரி வந்திருக்கு. இதுக்கு உடனே வைத்தியம் செய்யவேணும். அரசாங்க ஆஸ்பத்திரியில் மருந்து இல்லையாம். அதனாலை இஞ்சைவந்தனான். இந்தப்பிள்ளையைக் காப்பாற்றுறது உங்கடை கையில் தானிருக்கு.’’ ஆனந்தியின் கையைப் பிடித்துக் கெஞ்சிக் கேட்டார். இவரின் கெஞ்சலைக் கேட்டதும் ஆனந்திக்கும் பேச்சுத் தளதளத்தது. அவரின் கண்களை உற்று நோக்கினாள். “நீங்கள் என்ரை அப்பாவின் வயதுடையவர். என் கையைப்பிடித்துக் கெஞ்சிக் கேட்கலாமா? இங்கே வந்தவர்களுக்கு உரிய சேவை செய்து அனுப்புறதுதான் எங்கடை கடமை. மனிதாபிமானம் ஒன்று அதுக்கு மேலே இருக்கு. எங்களால ஆன உதவி அவ்வளவும் எங்களின்ரை உயிரைக் கொடுத்தாவது செய்வோம். நீங்க பயப்படாதேங்கோ” சிறுமியும் தந்தையும் முகமலர்ச்சியுடன் இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்திக்குக் கிழமை நாட்கள் வருவதே தெரியாமல் பொழுது போய் விடும் அளவுக்கு அத்தனை வேலைப்பளு. கோமதியின் நீண்ட கடிதமொன்று வந்தது. சரியாக ஒரு மாதத்தின் பின் வந்து சேர்ந்திருக்கிறது. இந்தக் கிளாலிக்கடல் தாண்டிவர ஒரு மாதமா? யாரிடம் சொலிலி அழுவது. கடிதத்தை மேலோட்டமாய்ப் படித்த ஆனந்திக்கு அதிலே ஒரு பந்தி கண்ணை உறுத்தியது. "தொண்டு எப்படியெல்லாம் செய்யவேணும் எண்டு நீ கனவு கண்ட மாதிரி உனக்கு வேலை கிடைச்சு, அதை நனவாக்குகிறாய் பார்த்தாயா? உன்னைப்பற்றி நினைக்க எனக்குக் கூட மனம் மாறுகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று என்னுடன் முன்பு பல முறை வாதாடுவாய். அப்போதெல்லாம் நானுண்டு என் வேலையுண்டு என்ற தோரணையில் தான் வாதாடினேன். நீ முன்பு வாதாடிய மாதிரி உன் மனம் போல் வேலை கிடைச்சிருக்குது. நீ வேலை செய்யும் நிறுவனத்தில் நானும் தொண்டர் ஆக ஆவது வேலை செய்ய ஆவலாயிருக்கிறேன். உங்கேயே எனக்கு வேலைக்கு நீ தான்டி சிபாரிசு பண்ண வேணும்...'' கோமதியின் அச்சுப்போன்ற எழுத்துக்கள் ஆனந்திக்கு கண்ணை உறுத்தவே செய்தது. உண்மையில் ஆனந்தம் பொங்கியது. ''தன்ர வேலையைவிட வேறை எதுவும் தெரியாதவளுக்கு இப்படியொரு சேவை மனப்பான்மை வந்திருக்கு என்றால் அது இன்றைய தேவைதான். போரினால் ஒரு புறம் மக்கள் பாதிக்கப்பட்டு அழிய மறுபுறத்தில் ஒரு சிலர் எங்களுக்கு எதுவுமே தெரியாது என்று இருக்கக்கூடாது. இயன்ற உதவிகள் செய்தே தீர வேண்டும்" மேலும் தொடர்ந்து கோமதியின் கடிதத்தின் பிற்பாதியில் ஊர்ப்புதினங்கள் சகமாணவிகளின் புதினங்கள் என்று அலட்டி அலட்டி எழுதியிருந்தாள். கோமதியின் மனமாற்றத்தால் ஆனந்திக்கு எல்லையில்லாத உற்சாகம் கரைபுரண்டோடியது.

பழைய நினைவுகளிலிருந்து மீண்டு வந்த கோமதியின் இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. ஆனந்தியின் அம்மா எழுதியகடிதத்தில் "இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் வைத்து ஆனந்தி காணாமல் போய்விட்டாள்" என்றும் இரண்டாவது கடிதத்தில் "காணாமல் போய் ஒரு கிழமையாச்சு ஒரு தகவலும் இல்லை, கோமதிப் பிள்ளை நீ ஆனந்தியின் சிநேகிதி என்பதால் உனக்குக் கடிதம் எழுதுவதில் எனக்கு ஒரு மன ஆறுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்குது” என்றிருந்தது. கடிதத்தின் வரிகள் கடிதம் வந்த நாள் முதல் வேதனையை நன்றாக ஆழப்படுத்திவிட்டன. ஆனந்தியை நினைத்தாலே உடல் பதறுகிறது. அவளுக்கு என்ன நடந்ததோ, என்ன ஆனாளோ. ஆனந்தியை நினைக்கக் கைகள் இயங்க மறுத்தன. கால்கள் நகர மறுத்தன. இமைகள் மூடமுடியவில்லை. மொத்தத்திலே கோமதியை நடைப் பிணமாக்கிவிட்டது. அன்று வெள்ளிக்கிழமை குளித்துவிட்டு விபூதி பூசிக் கொண்டிருக்கத் தபாற்காரனின் மணிச்சத்தம் கேட்டது. கோமதி துள்ளிக் குதித்தோடிப்போய் கடிதத்தை வாங்கிப்படித்தாள். ஆனந்தியின் கடிதம் அது. கண்ணைத் தீட்டிக் கொண்டு கடித வரிகளைப் படித்தாள். ‘‘கோமதி உனது விருப்பப்படி இங்கே ஓர் வேலை கிடைத்திருக்கு, உடனே புறப்பட்டுவா. அலுவலக உதவியாளர் வேலை இது. செய்து பார்த்தால் நீயே திருப்திப்படுவாய் என்று நல்லாக எனக்குத் தெரியும். உடனே வந்து மேலுள்ள விலாசத்தில் முகாமை யாளரைச் சந்தித்து இத்துடன் வரும் நியமனக் கடிதத்தைக் கொடு. அவர் மீதி எல்லாவற்றையும் கவனிப்பார். நான் நாளை அவசரமாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு ஓர் விசாரணை சம்பந்தமாய்ப் போய்வரவேண்டும். ஆதலால் நீ வரும் போது நான் நிற்க முடியாமல் போனதையிட்டு குறை நினைக்காதே”

இப்படிக்கு
அன்புடன் ஆனந்தி

கடிதத்தின் கடைசி வரிகளைப்படிக்கு முன்னரே நீர் கண்களில் தளம்பிவிட்டது. ஆனந்தி எனக்கு இப்படி ஒரு பெரிய உதவியைச் செய்த உனக்கு இந்தக் கதியா? கோமதியின் உள்ளம் அழுதது. வாய் ஊமையானது. ஒரு தொண்டர் நிறுவன ஊழியருக்கே இந்தக் கதியென்றால் சாதாரண பொதுசனத்தின் கதி, எப்படியிருக்கும்? அதோகதிதான். நினைக்க நினைக்க மனம் தாங்க முடியவில்லை, கண்களைத் துடைத்துவிட்டுத் தாயிடம் சென்றாள். “அம்மா இவள் ஆனந்தி வேலை செய்கிற தொண்டு நிறுவனத்தில் எனக்கும் வேலை கிடைச்சிருக்கு! இது அவளின்ரை சிபாரிசில் கிடைச்சது. உடனே வரச்சொல்லிக் கடிதம் போட்டிருக்கிறாள்’’ பரபரப்பாய் கோமதி சொல்லி முடித்தாள். “மோனை நாட்டுப் பிரச்சினை இவ்வளவு மோசமாய் இருக்கு. இதுக்குள்ள நீ வேலைக்குப் போகவேணுமா? அதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு தூரத்திலை என்றால் வேண்டாம். நீயும் அங்கை பயந்துபயந்துகொண்டிருக்க உன்னை நினைச்சு நாங்கள் இங்கே பயந்து பயந்து கொண்டிருக்க வேண்டாம்.” தாய்ப்பாசம் ஒருபுறம் பயம் ஒருபுறம் பொங்கத் தாய் கூறிவிட்டுக் கோமதியை உற்றுப்பார்த்தார். கோமதிக்கு முகம் வாடிவிட்டது. கோபமும் பொங்க ‘‘அம்மா என்ன நீங்கள்? இன்னும் என்னை உற்சாகப்படுத்தி அனுப்புவியள் எண்டு நான் நினைக்க நீங்கள் போக விடமாட்டியள் போலையிருக்கு” தாயார் எவ்வளவோ சொல்லிப்பார்த்துவிட்டு மசியாத கோமதியைப் பார்த்து “நி தலைக்கு மேல் வளர்ந்த பிள்ளை, நல்லது கெட்டது தெரிஞ்ச வயது. தடுக்கிறேன் என்றிருக்கக் கூடாது. ஆனந்தியும் என்ன கஸ்டப்பட்டு எடுத்துத் தந்த வேலையோ அவளுக்குத்தான் தெரியும். கிடைச்ச வேலையை விட்டிட்டுப் பிறகு மனவருத்தப்படக் கூடாது. உன்ரை விருப்பம் போல் போய்வா” மனம் இசைந்து சம்மதம் சொன்னார். தாயின் சம்மதம் இவ்வளவு சீக்கிரம் சொற்ப விவாதத்திற்குள் கிடைக்கும் என்று கோமதி எதிர்பார்க்கவில்லை. கவலையிலும் மனம் களிப் படைந்தது. மகிழ்ச்சியால் உடம்பெல்லாம் பூரிப்படைந்திருந்தது. இருந்தும் மனதின் ஓர் மூலையில் சிறுசலனம்; ஆனந்தியைக் காணவில்லையே என்ற செய்தியைத் தாய்க்குச் சொல்ல வில்லையே என்று. இருதய நோயாளியான அவவுக்க இதைச் சொன்னால் தாங்கமுடியாது. நிலைமை விபரீதமாகிவிடும். இவ்வளவு நாளும் நான் காத்த அமைதி, மௌனம் அனைத்தும் வீணாகிவிடும். அம்மாவின் சம்மதம் வீட்டிலுள்ள அனைவரின் சம்மதத்திற்குச் சமம். ஆனந்தியின் விடயத்தைத் தாயாரிடம் படிப்படியாகத்தான் சொல்லவேணும். கோமதி மனதில் தீர்மானித்தாள். பயணத்திற்கான ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டு வேலையில் சேர்ந்ததும் முதல் கடமையாக ஆனந்தியைக் கண்டுபிடிப்பேன் என்று கோமதி உறுதி பூண்டாள்.

4.5.2000
-நம்நாடு-
ரொறன்ரோ, கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# “தேவை இதுபோல் தெளிவு”

“அகதியாய் வந்துவிட்டால் எல்லாமே எப்படியோ கிடைக்குது இந்த மரியாதை ஒண்டைத்தவிர ...” என்று பொருமித் தள்ளியபடி வீட்டு முன் கதவைத் திறந்தபடி உள்ளே நுழைந்தார் இமானுவேல். கூடத்தில் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் இலண்டன் பங்குச் சந்தைப்பக்கத்தில் மூழ்கியிருந்த அலோசியஸ் இமானுவேலின் வருகையை எதிர்பார்த்தவராய் “வந்தாச்சோ! போனகாரியம் எப்படி...?” கேள்வி கேட்டுவிட்டு மீண்டும் பத்திரிகையில் மூழ்கினார். போன காரியம் எப்படியும் அவமானப்பட்டுத் திரும்பி வருவேன் என்று அலோசியசுக்குத் தெரியும் நன்றாகவே. தெரிஞ்சும் வேண்டும் என்றுதானே என்னை அந்த அலுவலகத்துக்கு அலோசியஸ் அனுப்பி இருக்கிறார். சம்பந்தமில்லாத அலுவலகத்தில் சம்மபந்தமில்லாத விசயத்தைக் கேட்டால் என்னைப் போல் அசடு வழியத்தானே வேணும்’’. இதை இமானுவேல் நினைக்க நினைக்க வெட்கமாவும் வேதனையாகவும் இருந்தது. பதில் சொல்ல மனம் இடம் கொடுக்கவில்லை. “அலோசியஸ் என்ன நினைத்தாலும் பரவாயில்லை.” பல்லைக் கடித்துக் கொண்டு இருந்தார் இமானுவேல்.

இமானுவேல் இலண்டன் வந்து. போன சித்திரையோடு ஒரு வருடமாகிறது. அகதிஅந்தஸ்த்துக் கோரி வந்து இறங்கியபோது அலோசியஸ் தான் கூட்டிவந்து தன் வீட்டில் தங்கவைத்தார். இன்றுவரை தெரிந்தவன், சொந்தக்காரன் என்றால் அலோசியஸைத்தவிர இமானுவேலுக்கு வேறுயாருமில்லை. இன்று செய்யும் வேலை கூட அலோசியஸ் தன் சிபாரிசில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் கொடுத்ததே. ஆரம்பத்தில் பல ஆயிரம் தடவை அலோசியசுக்கு நன்றி சொல்லியிருப்பார். எல்லா வசதிகள் இருந்தும் இல்லாத ஒன்று என்றால் அது நிம்மதிதான். அதைக்கண்டு பல மாதங்கள் ஓடிவிட்டன. மனைவி பிள்ளைகள், சுற்றம் என்று தாயகத்திலே விட்டுப்பிரிந்த உறவுகளை நினைக்க ஏதோ உடம்பிலிருந்து விட்டுபோனதாய் உணர்த்தியது இமானுவேலுக்கு. அடிக்கடி வரும் கடிதங்கள் தான் உறவுகளின் அன்பையும் செய்திகளையும் காவிவருகின்றன. வரும் கடிதங்களைப் படிக்கப்படிக்க அவர்களும் தன்னோடு இருப்பதாய் உணர்வுகள் பிரவாகிக்கும். இதற்காகவே பழைய கடிதங்களைப் பலமுறை திருப்பிப் படித்ததும்உண்டு. தன்னைத் தானே தேற்றுவதற்கு அதைத் தவிர வேறு வழி தெரியவில்லை இமானுவேலுக்கு.

அலோசியசின் பிரியபத்தினி மரியா ஆக்கிய உணவுகளால் இமானுவேலுக்கு நாக்கிலே ருசி தெரியாமல் போய்விட்டது. மேற்கு நாட்டு உணவு வகைகளைச் சமைத்துச் சாப்பிடுவதில் ஏதோ வரட்டுப் பெருமை கொள்வார் மரியா. “சோறு, பிட்டு, இடியப்பம் எல்லாம் ஒரு சாப்பாடா? இவன் வெள்ளைக்காரன் வெள்ளைக்காரன்தான். அவன்ரை சாப்பாட்டுக்கு முன்னாலை எங்கடை கண்ட கண்ட சாப்பாடுகள் ஒரு மூலைக்கு வருமே?” இது சாப்பாட்டைப் பற்றிப் பேச்சு அடிபட்டால் மரியா சொல்லும் அபிப்பிராயம்.இமானுவேலுக்கு வந்த புதிதில் மரியாவின் சாப்பாட்டை மறுக்க முடியவில்லை. வாயிலும் வைக்க முடியவில்லை. இருந்தும் ஏதோ பசிக்குக் கிடைத்ததைச் சாப்பிட்டு வயிற்றை நிரப்பிக் கொண்டார். நாளாவட்டத்தில் பழகிக்கொள்ளச் சோறு, கறி, பலகாரங்களின் சுவை அவரின் நாவிலிருந்து வாபஸ்பெற்றது. ஆனாலும் இமானுவேலின் வாயில் ஊர்ச்சாப்பாட்டு ருசி ஊஞ்சல் ஆடவே செய்தது. வெறும் வாயால் எச்சிலை உமிழத்தான் முடிந்தது. எப்போதாவது நம்மவர் வீட்டில் சாப்பிட்டால் தான் பழைய உமிழ்நீர் இமானுவேல் வாயில் சுரக்கும்.

முப்பது வருசத்துக்கு முன்னர் இலண்டனிலே வந்து குடியேறிய அலோசியஸ் - மரியா தம்பதியினருக்குக் குழந்தை குட்டி கிடையாது. வீடும், காரும் குழந்தைகள் போலிருக்கே என்று அலோசியஸ் நினைப்பாராம். பொறியியிலாளராகக் கட்டிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனமொன்றில் அலோசியசும், கணக்காளராக மரியாவும் வேலை செய்து சேமித்த பணமெல்லாம் லட்சக்கணக்கில் லொயிட்ஸ் வங்கியிலே முதலிடப்பட்டது. இதுவரை நிதியுதவி கேட்டு வந்த ஈழத்தமிழ்ச் சமூக ஸ்தாபனங்களுக்கு கையை விரித்துப் பஞ்சதுன்பம் கொட்டித் திருப்பியனுப்புவதில் மரியாவை மிஞ்சக் கணவரால் முடியாது. அலோசியஸ் ''எங்கடை சனத்துக்குத்தானே'' என்று கொஞ்சம் நஞ்சம் இரக்கப்பட்டு மனம் கசியும் நேரம் மரியா நந்தி போல் குறுக்கே நின்றுவிடுவார்.

இமானுவேல் அலோசியஸ் வீட்டிற்கு வந்த பிறகுதான் ஓரளவுக்குத் தன்னும் ஊர்ப்புதினங்களை இவர்கள் அறிகிறார்கள். முன்னர் ஊரோடு தொடர்பு மிகக் குறைவாக வைத்துக் கொள்ள விரும்பினார் அலோசியஸ். மரியாவுக்கு ஊரில் சொந்தபந்தம் எவரும் இப்பொழுது கிடையாது. அலோசியசுக்கு மட்டும் வயதான தந்தையும் அக்கா ஒருவரும் ஊரில் இருக்கிறார்கள். எப்போதாவது ஓர் கடிதம் அக்கா குடும்பத்திடமிருந்து வரும். அது கூட அலோசியசின் வற்புறுத்தலின் பேரில் சண்டை இராணுவம், இயக்கங்கள், அகதிகள் பற்றி எதுவும் எழுதக் கூடாது. வெளியே தெரிந்தால் வெள்ளைக்காரன் தங்களை பயங்கரவாதி என்று நினைப்பானாம். போராட்டம் பற்றிக் கடிதம் எழுதுவது, வாசிப்பது, அதுபற்றிப் பேசுவதே இங்கே சட்ட விரோதம். இவைகளைப்பற்றி எதையும் நீங்கள் கடிதத்தில் எனக்கு எழுதக் கூடாது. அது எங்களுக்கு ஆபத்து. அக்காவின் குடும்பத்தின ருக்கு அலோசியஸ் இப்படித்தான் கடிதம் எழுதினராம் மரியாவின் ஆலோசனையின் பின்பு: இலங்கையில் இல்லாத பயங்கரவாதத் தடைச் சட்டங்கள் இங்கிலாந்தில் இருப்பதாகத் தங்களுக்குள் ஓர் பிரமை அலோசியஸ் தம்பதிகளுக்கு. ஊரில் இருந்து இப்பொழுதெல்லாம் வருடம் ஒரு முறை கடிதம் வரும். அதிலே ஏதோ எப்படியோ தாங்கள் இருக்கிறோம் என்று மட்டும் வரும். ஊர்ப்புதினங்கள் மருந்துக்கும் கிடையாது. மனித அவலங்களே சாதாரண செய்தியாகும் இன்றைய இக்கட்டான நிலையிலும் ஊர்ப்புதினங்களை எழுத அக்கா குடும்பத்தினர் எவரும் நினைப்பதில்லை.

இமானுவேல் லண்டனில் வந்திறங்கியதும் முதல் வேலையாகச் சுகம் கூட விசாரிக்காமல் அலோசியஸ் "இமானுவேல் இங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டம், இயக்கம் பற்றி நினைக்கவும் கூடாது பாருங்கோ. பிறகு உங்களுக்கு மட்டுமல்ல எங்களுக்கும் உபத்திரவம் வரும். இலங்கைக்கே திருப்பி அனுப்பிப்போடுவான் பிரிட்டிஸ் காரன்" என்று குட்டிப் பிரசங்கம் நடத்தினார். என்னையொத்த வயது அலோசியஸ் எனக்குப் பிரசங்கம் செய்யவில்லை, தன்னைப் போல் என்னையும் மாற்ற மூளைச் சலவை செய்யப்பார்க்கிறார். இமானுவேலுக்கு இது விளங்க அதிக நேரம் எடுக்கவில்லை. இங்கிலாந்தில் முதலில் வந்திறங்கியவுடன் உள்ளூர் சட்ட நிலவரங்கள் தெரியாமல் இருக்கலாம் அதற்காக எந்த இடத்தில் எப்படி நடக்கவேண்டும் என்ற இங்கிதமே தெரியாதவனா நான்? நாஎழுந்தது உறைப்பாய் ஒன்று கொடுத்தால்தான் இவர் கொஞ்சம் அடக்கி வாசிப்பார். இருந்தும் துணிவு தூரத்தே நின்றுவிட்டது. வந்ததுதம் வராததுமாய் பகைத்துக் கொள்ளக் கூடாது. ஊரில் இருக்கும் போதே அலோசியசைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார் இமானுவேல். அம்மா சொன்ன கணிப்பு நூறு வீதம் உண்மையாகிறது. "இவன் அலோசியஸ் தகப்பனுக்கே நிபந்தனையோடு கடிதம் போடுகிற ஆள். இதை வைச்சு அவனை எடைபோடு தம்பி. இவன் செய்யுறது எல்லாம் சரி எண்டு நம்பிவிடாதே" இது தான் லண்டன் புறப்பட முன் அம்மா எனக்குச் சொன்ன உபதேசங்கள். அலோசியசே நாளாவட்டத்தில் தன்னைத்தானே தன் செய்கைகளால் தாழ்த்திக் கொண்டார்.

வன்னியிலே வாடும் எம் உடன் பிறவாச் சகோதரர்களுக்கு நிதி சேர்க்க நண்பர் குழாம் ஒன்று இமானுவேலைத் தேடி வந்தது. அன்று பொது விடுமுறை ஓய்வாக எல்லோரும் வீட்டில் இருக்கும் நாள். மரியா வீட்டு வாசலிலே செழித்து வளரந்திருந்த பூக்கன்றுகளுக்குத் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தபோது இமானுவேலின் நண்பர்கள் எதிர்ப்பட்டனர். இவர்கள் உள்ளே நுழைந்ததும் மரியா தண்ணீர் இறைப்பதை நிறுத்தி வாசலில் செருப்பை கழற்றி வைத்துவிட்டு சமையலறையில் புகுந்து கொண்டார். எல்லோருக்கும் தேநீர் தயாரித்துக் கொண்டு முன் கூடத்தில் பிரவேசித்த மரியா முகத்தைச் சுளித்துக் கொண்டார். வந்த நண்பர்கள் நிதியுதவி, பங்களிப்பு பற்றி விளக்கம் சொல்ல இமானுவேல் அதை வரவேற்று தன் பங்களிப்புக்குச் சம்மதமும் தெரிவித்தார். இவையெல்லாவற்றையும் கேட்டுவிட்ட மரியா வேண்டா வெறுப்பாகத் தேநீரை வைத்துவிட்டு விருட்டென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இடத்தை விட்டு அகல முயன்றார். மரியா வந்த வேகமும் வந்தவர்களைப் பார்த்த விதமும்? அலோசியசுக்குப் புரிந்தது; மரியாவின் மனக்கோலம். ஏதுமறியா இமானுவேல் அலோசியசின் முகத்தைப் பார்க்க வந்தவர்கள் இவர்கள் இருவரையும் மாறிமாறிப் பார்த்தார்கள். அலோசியஸ் சங்கடப்படுவதுமட்டும் வெளிப்படையாகத் தெரிந்தது. கண விநாடி நிசப்தத்தைக் கலைத்தபடி வந்தவருள் பிரமுகர் ஒருவர் அலோசியசையும் மரியாவையும் பார்த்து "இலண்டனில் கனகாலமாய் இருக்கிறநீங்கள் தான் முன்னுக்கு வந்து பெரிய அளவில் நிதியுதவி செய்து மற்றவைக்கு முன் உதாரணமாக முன்வரவேணும். இது எங்கள் எல்லோருடைய பணிவான வேண்டுகோள். உங்களுடைய பங்களிப்பு எத்தனையோ ஆயிரம் பேரை உங்கடை உடன் பிறவாச் சகோதரங்களைப் பட்டினியிலிருந்து காப்பாற்றும். அந்தப் புண்ணியம் உங்களுக்குத் தானே சேரும்" பிரமுகர் மீதியைப் பேசிமுடிக்க முன்னரே மரியா எழுந்தார். ஏதோ விபரீதம் நடக்கப்போவதை எண்ணி அலோசியசுக்கு நெஞ்சு படபடத்தது. ஏதோ கேட்கக்கூடாததை கேட்டுவிட்டதாய் மரியா குமுறினார். ''உங்களுக்கெல்லாம் வேறை வேலை இல்லையோ? பங்களிப்பாம், பங்பளிப்பும் நிதியுதவியும். வன்னியிலை இருக்கிறவைக்குத் தெரியும் எப்படிச் சாப்பிடுறது எண்டு. அதுக்கு இங்கே ஒருவரும் வந்து தண்டத் தேவையில்லை. வன்னியிலை பசித்தால் இலண்டனில் காசு கொடுக்க முடியாது." மரியாவின் திமிரான பேச்சு அங்கே அனைவரையும் ஊமையாக்கியது. மரியாவின் கோபம் அடுத்துத் தன்மீது திரும்பு முன் மரியாவுக்குத் துணையாக தானும் ஏதோ சொல்ல வேணுமே என்பதற்காக அலோசியஸ் "அவ கேட்ட கேள்வியில் நியாயம் இருக்குத்தானே'' என்று ஆமோதித்துவிட்டுத் தலையைக் கவிழ்த்துக் கொண்டார்.

தூங்குபவனை எழுப்பிவிடலாம். தூங்குவது போல் பாசாங்கு செய்பவனை எழுப்பமுடியாது. நிதிதிரட்ட வந்த பிரமுகர்கள் இயலுமானவரை விளக்கம் கொடுத்தார்கள். மரியாவும் அலோசியசும் மாறி மாறிக் குதர்க்கம் பேசினார்களே தவிர எதையுமே கேட்கமறுத்தனர். இவர்களால் அவமானப் படுத்தப்பட்ட பிரமுகர்களுக்கு முன்னாலேயே தன் பங்களிப்பைச் செலுத்தினால்தான் இரண்டுபேரின் திமிருக்கும் பதிலடியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழும். இமானவேலின் மனம் குமுறியது. நானும் பேசினால் பெரிய வாக்குவாதமாய் முடியும். வேண்டாம் அந்த விபரீதம் இது இமானுவேலின் உள் மனதுச் சமாதானம். "இது எனது பங்களிப்பு" என்று இமானுவேல் காசோலையை நீட்டியபோது வந்த பிரமுகர் நன்றிப் பெருக்கோடு பெற்றுக் கொண்டார். வந்தவர்கள் விடைபெற்றனர். இது எரியும் நெருப்பிலே எண்ணெய் வார்த்தது போல மரியாவின் மனம் கொழுந்து விட்டெரியவைத்தது. இமானுவேலுடன் முகம் கொடுத்துப் பேசவெறுத்தனர். இவற்றைப் பொருட்படுத்தாத இமானுவேல் வேண்டா வெறுப்பாக அந்த வீட்டில் இருக்கும் சூழ்நிலையை அந்தச் சம்பவம் சமைத்துவிட்டது. என் மனச்சாட்சிக்குப் பயந்து என்தலையாய கடமைகளைச் செய்திருக்கிறன். தாயகத்தில் வாடும் ஏதிலிகளுக்கு உதவுவது வெளிநாட்டிலுள்ள ஒவ்வோர் தமிழரின் முதல் கடமை. அதைச் செய்கிற பரம திருப்தி எனக்குப் போதும். இமானுவேலின் முடிவு இது. வீட்டில் நிலவிய வெம்மையான சூழலிலும் தென்றலாய் பட்டவை இந்தத் திருப்தி நிகழ்வுகளே. மனதை அழுத்திய சுமை சற்று அகன்றதாய் ஓர் ஆறுதலடைந்தார் இமானுவேல்.

இயந்திர வாழ்க்கை ஓட்டத்தில் நாட்கள் பல வேகமாய்க் கடந்தன. தாயகத்தில் அலோசியசின் தகப்பன் மரணப் படுக்கையாகி விட்டார். கடைசியாகப் பார்க்க ஆசையாம். உடனே வருமாறு தொலைபேசியில் அழைப்பு வந்தது. போவதா விடுவதா என்று தீர்மானிக்கமுன் இருவாரங்கள் ஓடி மறைந்தன. தீர்மானித்ததும் இருவரும் புறப்பட்டனர். தாங்கள் ஊருக்கு வருகிறோம் என்று அறிவிப்புக் கொடுத்துவிட்டு விமானம் ஏறியது தான் தெரியும், இவர்கள் ஊர்ப்போய்ச் சேருமுன்னரே தந்தையார் கண்ணை மூடிவிட்டார். இறுதிச் சடங்குகள் முடிந்தகையோடு கொழும்பு திரும்பினார்கள். அப்போது நடந்த சம்பவம் அலோசியஸ் மரியா இருவரின் மனதிலும் தலைகீழ் மாற்றத்தை ஏற்படுத்தியது.

இலண்டனில் தேம்ஸ்நதி தீரத்துப் புறநகர் அது. அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது. ஆனால் இருசோடிக் கண்களுக்கு மட்டும் தூக்கம் தொலைந்துவிட்ட ஒன்றாயிருந்தது. அலோசியஸ்-மரியா இருவருக்கும் எவ்வளவோ முயன்றும் நித்திரை கொள்ள முடியவில்லை. கொழும்பிலே புறப்பட்ட நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் கடந்த இரவு இலண்டனில் வந்து இறங்கும் வரை விமானத்தில் அரை நித்திரை அவ்வளவு தான்.

இருவரின் எண்ணப் பறவைகளும் ஒரே திசையில் சிறகடித்துப் பறந்தன. ஊரிலிருந்து கொழும்புக்கு வரும் வழியில் பயணத்தை நிறுத்திய இராணுவச் சோதனைச் சாவடி மனத்திரையில் விம்பமாய் வீழ்ந்தது, அதோ முதலில் விசாரித்த சிப்பாய் அடையாள அட்டை இல்லை என்றதும் அவர்களின் பிடரியில் ஒரு தள்ளு தள்ளுகிறான். மேலதிகாரியின் அலுவலகத்தின் முன் மண் தரையில் பலர் இருக்கின்றனர். அவர்களிடத்தில் போய் இருவரையும் தள்ளிவிட்டான் இன்னுமொரு சிப்பாய் நிலத்தில் இருக்கும்படி சைகை காட்டிவிட்டுச் சிங்களத்தில் எதோ திட்டிவிட்டுப் போனான். அலோசியஸ் மரியாவின் முகத்தைக் பார்த்தார். மரியா மருட்சியுடன் நிலத்தைப்பார்த்துக் கொண்டிருந்தார். அக்கம் பக்கம் இருந்த சிலர், பலர் முன்னிலையில் படையினரால் தாக்கப்பட்டனர். நடுத்தரவயது மாது ஒருவர் தலையில் குருதிவழிய வழிய உட்கார்ந்திருந்தார். “துவக்குப் பிடியால் அடித்தாங்கள்” என்று பேசிக் கொண்டார்கள். இதைக் கேட்ட மரியாவுக்கு இரத்த ஓட்டமே உடம்பில் நின்று விடும் போலிருந்தது.

பல மணி நேரத்தின் பின் இருவரும்உள்ளே அழைக்கப் பட்டனர். “பிரித்தானியக் கடவுச் சீட்டைக் கொழும்பிலே வைத்துவிட்டு வந்தோம் அடுத்தகிழமை பயணமாகிறோம்” என்றெல்லாம் சொல்லிப்பார்த்தார் அலோசியஸ். இராணுவ அதிகாரி மசியவில்லை. கொழும்பிலே காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட பதிவுத்துண்டை இராணுவ அதிகாரி கசக்கி எறிந்தான். வேறு சில ஆவணங்கள் காட்டிய நிலையிலும் இருவரும் தடுத்து வைக்கப்பட்டனர். “பிரித்தானிய கடவுச்சீட்டை கொழும்பிலை வைச்சிட்டு அடையாள அட்டைகூட இல்லாமல் இங்கு ஏன் வந்தாய்” என்று கொச்சைத் தமிழில் பேசிய அதிகாரி என்னிடம் லண்டன் கதை சொல்லுகிறியா”? என்று ஏளனமாய்ச் சிரித்தான். “இந்தத் துண்டு இலக்கத்துக்குக் கொழும்பிலே உங்க கடவுச் சீட்டு பதியாமல் இருந்தால் அவ்வளவுதான் சித்திரவதையில் ஆளே போய்விடும். அதுவரை உங்களை விடமுடியாது என்றபடி கைத்துப்பாக்கியை நெஞ்சுக்கு நேரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்தபடி கர்ச்சித்தான்.

மரியாவுக்கு அழுகையழுகையாக வந்தது. அலோசியசுக்கு என்னசெய்வதென்று தெரியவில்லை. ஆண்கள் பெண்கள் என்று தனித்தனியான பகுதிகளில் தடுத்து வைக்கப்பட்டனர் மாற்று உடுப்புக் கூட இல்லாத நிலையில் சொல்லொணா அசௌகரியங்களுக்கு மத்தியில் இருபது நாட்கள் ஓடிமறைந்தன. அந்த இருபது நாட்களும் இருபது வருடங்கள் மாதிரி நீண்டு கொண்டு சென்றன. அந்தக் கொடிய நாட்களின் ஆரம்பத்தில் சில நாட்கள் இருவரும் சித்திரவதை துன்புறுத்தலு க்குள்ளாக்கப் பட்டனர். வழமை போல் மனித உரிமைகளும் மீறப்பட்டதாய் மரியா மற்றையவரிடம் குறைப்பட்டார். பட்டவதைகளால் உடல் காயங்கள் இல்லாவிட்டாலும். உளரீதியாய் இருவரும் ரணவேதனையால் வதைபட்டனர். இவ்விருவரின் பேசும் தொனியே காட்டிக் கொடுத்துவிடும். வேறு தடயங்களோ சாட்சிகளோ தேவையிராது.

தடுப்பு முகாமில் தந்த சாப்பாட்டின் மணத்தை இன்றும் நினைத்தால் போதும் மரியாவுக்கு குமட்டிச் சத்திவரும். இதைவிட அங்கே தடுத்துவைக்கப்பட்ட மற்றையோர் சொல்லக்கேட்ட கதைகள் இராணுவக் கொடுமையின் கடூரத்தை அலோசியசுக்கும் மரியாவுக்கும் இடித்துரைத்தன. கண் முன்னால் தன் கணவனையும் பிள்ளைகளையும் பறிகொடுத்த செல்வகுமாரியின் கதை சொல்லி மாளாது. சொல்லிக் கொண்டிருக்கும் போது செல்வக் குமாரியின் வாயைப் பொத்தினாவாம் மரியா. கதையைத் தொடர்ந்து கேட்க முடியாமல். ஏனையோர் தங்களுக்கும் மற்றையவர்களுக்கும் நடந்தவைகளைச் சொல்லும்போது அவர்களின் முகத்தில் காணும் பீதியே போதும் போதும் என்றாகிவிட்டது மரியா அலோசியசுக்கு. தாங்கள் உயிர் தப்புவோம் என்ற நம்பிக்கையிழந்த நேரத்தில் தான் விடுதலையானதும் தப்பினோம் பிழைத்தோம் என்று கொழும்புக்கு ஓடிவந்ததும் முதல் வேலையாய்ப் பிரித்தானிய தூதரலாயத்தில் ஓர் புகார் கொடுத்தனர். இந்தச் சூழ்நிலையிலிருந்து விட்டுப்போனால் போதும் என்று அடுத்த நாள் விமானமேறுவதற்குப் பிரயாணப்பைகளை ஒழுங்கு செய்தபோதுதான் அவை கனம் குறைந்திருந்தது தெரியவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனுள் இருந்த பெறுமதியான உடுப்புகள் வேறு பல பொருட்கள் தடுப்பு முகாமில் பிரயாணப் பையைச் சோதனையிட்டவர்களால் கையாடப்பட்டிருந்தன. பிச்சை வேண்டாம் நாயைப்பிடி என்ற அச்ச அவசரத்தில் இவையெல்லாம் பார்க்க முடியுமா? அலோசியஸ் அவசரப்பட்டார் விமானம் கொழும்பை விட்டுப புறப்பட்ட போதுதான் இருவருக்கும் நீண்ட பெருமூச்சு வந்தது. அந்தப் பெருமூச்சுக்கு அர்த்தங்கள் ஆயிரம் இருப்பதை வேறு யாரறிவார்.

விடிந்து சூரியன் ஏறிச் சென்ற விடவே இருவரும் நித்திரையால் எழுந்தனர். கூடத்துக்கு வந்தபோதுஇமானுவேல் தொலைக் காட்சியில் மூழ்கியிருந்தார். மிகவும் ஆயாசமாக. மனத் தாபங்களை மறந்து மனம் திறந்து அலோசியசும் மரியாவும் ஊர்ப்புதினங்களை இமானுவேலுடன் பகிர்ந்து கொண்டனர்.

தாயகத்தில் போர்ச்சூழலில் சிக்கி இடம் பெயர்ந்த அகதிகளுக்கு நிதிகேட்டு வந்தவர்கள் முன்னால் அவமானப்படுத்தியதோடு தாங்களும் உதவி செய்யாததற்காக பெரிதும் மனம் வருந்தினார் கள். " உண்மையில் எங்கள் மக்கள் வாடிவதங்கும் போது வெளிநாட்டில் புலம் பெயர்ந்த தமிழரின் முதற் கடமை அவர்களுக்கு உதவுவதுதான். இந்தக் கடமையைப் புலம் பெயர்ந்த தமிழர்கள் எவரும் எந்தக் காரணத்தைக் காட்டியும் தட்டிக் கழிக்க முடியாது. அது பாவமம் கூட . அந்தப் பாவத்தைச் செய்த இந்த இரண்டு பாவிகளையும் மன்னிக்க வேணும். அலோசியஸ் உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார். "நாங்கள் மட்டும் தப்பி வந்து விட்டோம், மற்றையவர் பற்றிக் கொஞ்சமும் எண்ணாமல் இருந்த எங்களைக் காலம் எண்ணவைத்திருக்கு. எங்களைப் போல படித்திருந்தும் கூட நாட்டுப்பற்றில்லாமை அறியாமை இவைகளால் இன்னும் எத்தனை பாவிகள் இது போன்ற காரியத்தைச் செய்கிறார்களோ தெரியாது. இண்டைக்கு நாங்கள் உதவவில்லையெண்டால் நாளைக்கு அடுத்த சந்ததி எப்பிடி உதவும் என்று எதிர்பார்க்க முடியும். அதுவும் புலம் பெயர்ந்த நாடுகளிலே" மரியாவின் ஆதங்கம் அவவின் மனதில் ஏற்பட்ட தெளிவைத் துலாம்பரமாய்க் காட்டியது. "இமானுவேல் இதுமாதிரியான நல்லகாரியங்களுக்கு நாங்களே முன்னுக்கு வந்து இனிமேல் வாரி வழங்குவோம். உங்கள் நண்பர்கள் எங்கே? அவர்களிடமும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவணையாக இந்தக் காசோலையைக் கொடுக்கவேண்டும், இப்பொழுதே... என்று அவசரப்படுத்தினார் அலோசியஸ். இத்தனை மமதையிலிருந்த இவர்கள் எப்படித் தெளிவு பெற்றனர். என்ற ஆச்சரியத்தில் மகிழ்ச்சியோடு தன் நண்பர் குழாமிடம் கூட்டிச் செல்லத் தயாரானார் இமனனுவேல். இவர்களைப் போல அறியாமையாலும் தான்தோன்றித் தனத்தாலும் தாயகத்தைப் பற்றிக் கொஞ்சம் கூடச் சிந்திக்காமல் புலம் பெயர்ந்த நாடுகளிலே வாழும் நம்மவர் பலருக்கு எப்போது இவர்கள் போலப் புத்தி தெளிவது என்ற நெருடல் இமானுவேலின் மனதிலே இல்லாமலில்லை.

20.06.22002
-நம்நாடு-
ரோறன்ரோ கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8
# பரீட்சைக்கு நேரமில்லை

அரவிந்தனுக்குக் கடற்கரை மணல் காலிலே தணலாகச் சுட்டது. தினமும் அந்தச் சுடு மணலிலே மத்தியான வெயிலில் நடந்ததில் ஏற்கனவே போட்ட கொப்பளங்கள் இன்னும் மாறவில்லை. கொப்பளத்தில் சுடுமணல் படும்போது ரண வேதனை தான். என்ன செய்வது போன கிழமை வரை போட்ட செருப்பு அறுந்து விட்டது. அறுந்த செருப்பில் தைப்பதற்கு இனி இடமில்லை. எத்தனை தரம் தைத்துப் போட்ட தேய்ந்த செருப்பு. அதுகூட சக வகுப்பு மாணவன் அன்புதாசன் பாவித்துவிட்டுக் கொடுத்தது தான். ஒரே ஊரில் ஒரே பள்ளிக் கூடத்தில் ஒரே வாங்கில் பக்கத்திலே இருந்து படிக்கும் அன்புதாசன் கொஞ்சம் தயாள குணமுள்ளவன். இல்லையென்றால் பள்ளிக்கூடம் விட்ட பிறகு மத்தியான வெயிலில் அரவிந்தன் மீன் பிடிக்கப் போகும் போது போடச் செருப்பு இல்லை என்று கேள்விப் பட்ட உடனேயே தான் பாவிக்கும் செருப்பை அரவிந்தனுக்குக் கொடுத்துவிட்டுத் தன் தாய்க்குப் பொய் சொல்வானா தன் செருப்புத் தொலைந்துவிட்டது என்று? ஈரமணலில் கால்படும்போது ஓரளவு சுகம் தெரிந்தது அரவிந்தனுக்கு. இன்று நேரத்தோடு வந்ததால் கொஞ்சம் கூடுதலாகப்பட்டது. கடல் வலயத் தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட பல்லாயிரம் தமிழ் மீனவர்களில் அரவிந்தனின் அப்பா நமசிவாயமும் ஒருவர். பெரிய வள்ளத்தில் வேலை செய்த நமசிவாயம் தொழிலிழந்த போது வேறு வழியில்லாமல் தூண்டிலில் மீன் பிடித்து ஓரளவுக்காவது குடும்பத்தைக் காப்பாற்றினார். இது பத்து வருடத்துக்கு முன் நடந்தபோது அரவிந்தன் ஒருவயதுக் குழந்தை. நமசிவாயம் திடீரெனக் காலமானபோது குடும்பச்சுமை தாய் மாரியம்மா மீது விழுந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று பிள்ளைகளையும் வளர்க்க அவள் பட்டபாடு அவளுக்குத் தான் தெரியும். கணவன் தொழிலிழந்தபோது வேறு ஊரில் போய்க்கடல் தொழில் செய்யலாமே என்று மாரியம்மா சொன்னபோது வேண்டாம் எங்கடை ஊரையும் இந்தக் கடல் தாயையும் விட்டு வரமாட்டேன் என மறுத்தவர் நமசிவாயம். மாரியம்மா இன்று வரை இடம் பெயராமல் இருக்கக் காரணம் கணவர் காட்டிச் சென்ற மண்பற்றுத்தான். அரவிந்தன் பிடித்த சிறு மீன்களை விற்றுவிட்டுக் கடைத் தெருவுக்குச் சென்று சாமான்கள் வாங்கிக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தான். இருட்டத் தொடங்கிவிட்டது. மாரியம்மா சோற்றை வடித்துக் கொண்டிருந்தாள். தமையன் அசோகன் எறிகணை வீச்சிலே ஒரு காலை இழந்த பாவி. ஆறுவயதிலே முடமாகிவிட்டான். அசோகன் அடுத்த நாள் பள்ளிப்பரீட்சைக்குத் தயார் செய்து கொண்டிருந்தான், குப்பி விளக்கு வெளிச்சத்தில்.

அரவிந்தன் வாங்கிவந்த சாமான்கள் சமையலில் பங்கெடுத்துக் கொண்டது. அரவிந்தன் வீட்டுக்கு வந்தநேரம் முதல் வீடு கலகலப்பில் மூழ்கியது. இந்தக் கலகலப்புக்கூட அரவிந்தன் கொண்டுவரும் சாமான்களின் கனத்திலே தங்கியிருக்கிறதை அந்த வீடுதான் அறியும். வெறும் கையோடு தூண்டிலையும் முகத்தையும் தொங்கப் போட்டுக்கொண்டு அவன் வீட்டுக்கு வந்தால் அன்றிரவும் அடுத்தநாளும் அரைப்பட்டினியோ காற் பட்டினியோ தான். காற்று மழையைப் பொறுத்து மீன் பட்டால்தான் அரவிந்தனின் வீட்டில் அடுப்பே ஒழுங்காய் எரிய முடியும். தாய் மாரியம்மா கருவாட்டு வாடியிலை இடைக்கிடை வேலைக்குப் போவதால் ஏதோ கொஞ்சக் காசு வந்து மூன்று நேரம் சாப்பிடமுடிகிறது.

அன்று காலை முதல் ஊதற் காற்றுப் பலமாக அடித்துக் கொண்டிருந்தது. மழை விட்டுவிட்டுப் பெய்தது. பள்ளிக் கூடம் சென்ற அரவிந்தன் மழையால் நேரத்தோடு வீட்டுக்கு வந்துவிட்டான். ஏதோ சமையலறையிலே கிடைத்ததைச் சாப்பிட்டுவிட்டு வீட்டு வாசலில் நின்று ஆகாயத்தைப் பார்த்தான். இன்னும் கடும் மழைபெய்யும் அறிகுறியாக வானம் கருமுகில்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. மாரியம்மா தன் தலையிலே சாக்கு ஒன்றைப் பிடித்தபடி வீட்டுக்குள் வந்தாள். கையிலே வழிந்த ஈரத்தைத் துடைத்தபடி ‘‘அரவிந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இண்டைக்குக் கடலுக்குப் போகவேண்டாம். இந்தக் காத்து மழையுக்குள்ள போய்க் கஸ்டப்படாதே. இருக்கிற சாமானுகள் நாளை வரைக்கும் போதும்'' ஏற்கனவே இந்தக் காத்து மழையிலை கடலுக்குப் போவதா விடுவதா என்று தீர்மானிக்காமல் தவித்த அரவிந்தனுக்குத் தாய் சொன்னது சரியெனப்பட்டது.

''அம்மா இன்னும் மூண்டு கிழமையிலை சோதினை வருகுதாம். காசு கட்டவேணும்" அரவிந்தன் தாயிடம் தயங்கித் தயங்கிக் கேட்டான். "என்ன சோதனை அடிக்கடி வருகுது" தாய் வினாத் தொடுத்தபடி முற்றத்தை நோக்கி நடந்தாள். "இது புலமைப்பரிசில் சோதனையாம், இதிலை சித்தியடைஞ்சு புலமைப்பரிசில் கிடைச்சால் வாசிற்றி வரைக்கும் காசில்லாமல் படிக்கலாமாம்" அரவிந்தன் திண்ணையிலிருந்து சொன்னான். பிள்ளையின் உயர் கல்வி என்றதும் மாரியம்மாவுக்குப் பழைய ஞாபகங்கள் நடந்த சம்பவங்கள் நிழலாடின. நமசிவாயம் இருந்தபோது நடந்த சம்பவங்கள். நிஜங்களாய் உள்ளத்திலே உருவம் பெற்றன.

முல்லைத் தீவு மாவட்டத்திலே அது ஓர் மீனவக் கிராமம். காலை வேளையில் கடற்கரை களை கட்டியிருந்தது. காக்கைகளும் கடல் நாரைகளும் அங்குமிங்கும் கத்தியபடி பறந்து அமர்க்களப்படுத்தின. வியாபாரிகளும் மீனவரும் வியாபாரத்தில் கொள்வனவில் மும்முரமாயிருந்தார்கள். வள்ளத்திலுள்ள மீன் கூடைகளை தலையிற் சுமந்தபடி நமசிவாயம் வந்து கொண்டிருந்தான். வாயிலே பீடி புகைந்து கொண்டிருந்தது. அன்று அவனது வள்ளத்தில் மிக அதிகமான மீன்கள் பிடிபட்டிருந்தன. அத்தனை கூடை மீன்களையும் சுமந்து கொண்டு வந்ததில் நமசிவாயத்துக்குப் போதும் போதுமென்றாகிவிட்டது. மணிக் கணக்காய் அலைகடலிலை மீன் பிடிக்கிறது சுலபம் போல இருந்தது. தலை விண்விண்ணென்றது. பசி வேறு ஒருபுறம் வயிற்றைப் பிடுங்கியெடுத்தது. முதல் நாளிரவு மாரியம்மா கட்டித்தந்த சோறும் கணவாய்க் கறியும் விடிய நாலுமணி வரை தாக்குப் பிடித்திருக்கும். அதன் பிறகு...? வேலைப் பளு பசியை முன்னுக்குத் தள்ளிவிடும். காலையிலே உடம்பு வியர்த்துக் கொட்டியது. தலையிற் கட்டியதுவாயை அவிழ்த்து முகத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடைத்து விட்டு வீடு வந்து சேர்ந்தான். வீட்டில் திண்ணையிலே தயாராயிருந்த தேநீரை களைதீரக் குடிக்கவும் கோழித்தூக்கம் அவனை அரவணைக்கவும் சரியாயிருந்தது.

''சாப்பாடு ஆயத்தமாயிருக்கு எழும்பிச் சாப்பிடுங்கோ'' மாரியம்மாவின் குரல் கேட்டுத் தூக்கத்தைக் கலைத்துக் கொண்டு எழ முயன்றான், முடியவில்லை. கையை ஊன்றி எழும்பிப்பார்த்தான் அதுவும் முடியவில்லை. பதிலாக முதுகுதான் விண்ணென்று வலித்தது. இதுநாரிப்பிடிப்புத்தான் என்று உணர்ந்த நமசிவாயம் "மாரியம்மா இஞ்சை வா, ஒருக்கா கையைப்பிடிச்சுத் தூக்கி விடு" என்ற குரல் கேட்டதும் கணவன் படும் அவஸ்தையைக் கண்ட மாரியம்மா கையைப்பிடித்துத் தூக்கி இருத்தி விட்டாள். நேற்று வள்ளத்திலே மூன்று பேர்தான் வேலை. சிவராசனும் கண்ணுத்துரையும் வரவில்லை. சுகமில்லையாம். நேற்று மீனும் ஏராளம் பட்டுது. தனியா கூடைகளையைத் தூக்கிச் சுமந்து நாரிக்குள்ள பிடிச்சுப் போட்டுது". நமசிவாயம் சொல்லிக் கொண்டு எழும்ப முயன்றார். முடியாமல் திரும்பவும் திண்ணையிலே இருந்து விட்டார். காலைச் சாப்பாட்டை மாரியம்மா கொண்டு வந்து அருகில் வைத்தாள். நமசிவாயம் பலகாரத்தை ஒரு பிடி பிடித்தபடி "மாரியம்மா இண்டைக்கு நான் பட்ட பாடுபோதும். இந்தக் கஸ்டம், தரித்திரம் எல்லாம் எங்களோடையே முடியட்டும். பிள்ளைகளை எந்த வழியிலாவது பிச்சையெடுத்தாலும் பரவாயில்லை படிப்பிச்சு நல்ல நிலமைக்குக் கொண்டு வரவேணும்" என்று சொல்ல அதை ஆமோதிப்பது போல் மாரியம்மா சந்தோசமாய்த் தலையசைத்தாள். பலகாரத்தை மேலும் வாய்க்குள் திணித்தபடி நமசிவாயம் "சந்ததி சந்ததியாத் தெரிஞ்ச தொழில் எண்டு செய்யிறம். ஆபத்தான தொழில்தான் சில வேளையில் ஆனா வேறு வழியில்லாமல் செய்யவேண்டியிருக்கு. அது காணாதெண்டு புதுசா நேவிக்காரனுக்கும் பயப்படவேணும். கடல் வலயத் தடைச் சட்டம். என்ன வாழ்க்கையிது. நாம் பட்ட வேதனை, கஸ்டம் நம்ம பிள்ளையள் படக்கூடாது'' மாரியம்மா குறுக்கிட்டு "ஒண்டுக்கும் கவலைப்படாதேயுங்கோ எல்லாம் கடவுள் விடட வழி" என்று சம்பாசனைக்கு முற்றுப் புள்ளியிட்டாள்.

அரவிந்தன் படிப்பிலே மகா கெட்டிக்காரன். வகுப்பிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடங்களிலும் அவனுக்குத்தான் அதிக புள்ளிகள் கிடைக்கும். அக்கா தமயந்திக்கும் அண்ணன் அசோகனுக்கும் தான் சளைத்தவன் அல்ல என்பதைத் தொடர்ந்து நிரூபிப்பவன். படித்து எப்படியும் முன்னேறவேண்டும் என்ற எண்ணம் அரவிந்தனின் மனதிலே சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. தன் ஓய்வான நேரத்திலே பாடம் சொல்லிக் கொடுத்த சிவசோதி ஆசிரியை தான் அரவிந்தனுக்கு உந்து சக்தி. இப்படிப் படித்தால்தான் இப்படி வருவாய் என்று படம் போட்டுக் கொடுத்து அதற்கேற்பப் பாடங்கள் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியையை உயர் ஸ்தானத்தில் மனதிலே பூஜித்து வருகிறான் அரவிந்தன். தன் குடும்ப நிலையை உணர்ந்து இலவசமாய் எந்தப் பிரதிபலனும் எதிர்பாராமல் பாடம் படிப்பிக்க யாரை அணுகுவது? மனதில் ஒரே கலக்கம். ஓரளவு வசதியான குடும்பத்திலே பிறந்த அன்புதாசன் அரவிந்தனின் உயிர் நண்பன். ஒரே வாங்கிலே அருகருகே இருந்து படிப்பவர்கள். இணைபிரியாதவர்கள். அன்பு தாசனின் அப்பா அவனைத் தனியார் கல்வி நிலையத்தில் மாலை வகுப்புகளில் சேர்த்துவிட்டார். இதனால் அன்புதாசன் உற்சாகத்துடன் இருந்தான். தன் குடும்ப வசதிக்கு இதை நினைத்துப்பார்க்கவே முடியாது என்ற ஏக்கம் அரவிந்தனைப் படாத பாடு படுத்தியது. சாப்பாட்டிற்கே அல்லாடுகிற நிலைமையில் பாடசாலையில் படிக்கிற படிப்பே பெரிய விடயம். இதை நினைத்து நினைத்துப் பசியே தெரியாமல் பல நாட்கள் நகர்ந்ததை அரவிந்தன் அறியான். பணமும் இருந்தால் தான் படிப்பும் இல்லாமல் படிக்கவசதிகள் வருமா? அவனின் பிஞ்சுமனம் சிந்தனைகளால் சித்திரவதைப் பட்டது. அரவிந்தனின் மனநிலமையை அறிந்த ஆசிரியை சிவசோதி அப்போது தானே வலிய வந்து பாடம் சொல்லிக் கொடுக்க முன் வந்தார். வாடியபயிருக்கு வானம் பொழிந்த மாதிரி அரவிந்தனின் அகமும் முகமும் குளிர்ந்தன. அவனின் அறிவுப் பசிக்கு நல்ல தீனி கிடைத்தது.

மத்தியானம் பள்ளிகூடம் விட்டதும் வீட்டுக்கு வரும் அரவிந்தன் ஏதோ வீட்டில் இருக்கும் சாப்பாட்டை அருந்திவிட்டு ஓய்வாக இருக்கக்கூட நேரமில்லாமல் தூண்டிலையும் கூடையையும் தூக்கிக்கொண்டு கடலுக்குப் போய்வந்தான். முன்பெல்லாம் கடற்கரையால் பிந்தி வந்தாலும் பரவாயில்லை மீன் விற்ற காசுக்குச் சாமான்கள் வாங்கி வந்தால் போதும். அதன் பிறகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கும் நேரத்தில் பாடங்களைப் படிப்பான். இப்போ ஏழுமணிக்கு எல்லாம் சிவசோதி ஆசிரியை வகுப்புக்கு தயாராகிவிடுவார். ஏழுமணிக்குப் பிந்திவிட்டால் வகுப்புக்குப் போக ஓர் இனம் புரியாத குற்ற நெருடல் அரவிந்தனை வாட்டி வதைக்கும். அவவின் நேரத்தை வீணாக்குகிறேனா? என்று.

வழமைபோல் அரவிந்தன் மீன் பிடித்துக்கொண்டிருந்தான். கடற்கரையை ஒட்டிய ஒழுங்கைக்கு அப்பால் ஒரு சிறு மைதானம் உள்ளது. சிலநேரங்களில் சிறுவர்கள் பந்தடித்து விளையாடுவார்கள். அரவிந்தனின் வயதை ஒத்த சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பந்தடிக்கும் போது சிறுவர்கள் போடும் இரைச்சல் ஆரவாரம் கடற்கரையில் எதிரொலிக்கும். இந்த இரைச்சல் அரவிந்தனுக்கு காதில் ஈட்டி கொண்டு குத்துவது போலிருந்தது. அவன் மனம் துள்ளியது அன்புதாசனும் நிச்சயம் அந்தக் கூட்டத்தில் நின்று விளையாடுவான். ''என்ன செய்வது என்ரை வகுப்புப் பெடியங்கள் விளையாட நான் மட்டும் இங்கே மீன் பிடிக்க வேண்டியிருக்கு'' தனக்குத்தானே சொல்லிக் கொண்டு மீன்பிடிப்பதில் மீண்டும் மும்முரமானான். தன்னை ஆறுதல் படுத்தி விட்டு மனக் குதிரையைத் தட்டி விட்டான். எப்போது சுதந்திரமாய் திரிஞ்சு விளையாடுவது, ஆசைப்பட்ட சாப்பாடு எல்லாம் சாப்பிடுவது, வீட்டில் எல்லாரும் ஒன்றாக வயிறாரச் சாப்பிடுவது? ஆக்கிரமிப்பு அரசு போட்ட பொருளாதாரத்தடையும் மீன் பிடிக் கட்டுப்பாடும் இராணுவக் கட்டுப்பாடில்லாத பகுதி மக்களைத் தாள்பணிய வைக்க முடியவில்லையே தவிர அன்றாட இயல்பு வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தாமலில்லை. அரவிந்தனின் பள்ளிக் கூடத்தில் ஒருமாதமாக இரண்டு ஆசிரியர்கள் இல்லை. பல நாட்களின் பின்பு விடயம் வெளிவந்த போது இரு ஆசிரியர்களும் தாண்டிக்குளம் ஊடாக வவுனியா சென்றபோது கைது செய்து விசாரிக்கப்பட்டது தெரியவந்தது. கல்விப்பணிப்பாளரின் நேரடித் தலையீட்டின் பின்னர் ஒரு மாதத்திலாவது விடுவிக்க முடிந்தது. இந்த நிலையில் பள்ளிக்கூடமாவது பாடம் நடாத்துவதாவது? ஏற்கனவே இருபாடசாலைகள் இடம் பெயர்ந்தோரால் நிரம்பி வழிவதால் அரவிந்தனின் பள்ளிக்கூடமும் அவ்விரு பாடசாலைகளின் சுமையைச் சுமக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னேரத்தில் ஒழுங்கை மைதானத்தில் சிறவர்களோடு தானும் விளையாட வேண்டும் என்ற ஆசையை அரவிந்தனால் தணிக்கமுடியவில்லை. ஒருநாள் மீன்கள் மிக அதிகமாய்ப் பிடிபட்டது. உடனே நிறுத்திவிட்டுச் சந்தைக்குப் போய் விற்றுச் சாமான்கள் வாங்கிக் கொண்டு மைதானத்துக்கு ஓடி வந்தான். அங்கே ஒருசிறுவர்களும் இல்லை. இருளத் தொடங்கிவிட்டதால் எல்லோரும் போய்விட்டார்கள். அரவிந்தனுக்கு அழுகை அழுகையாய் வந்தது. "இவ்வளவு தூரம் ஓடி ஓடி வந்து எல்லா வேலையும் முடிச்சும் கூட ஒரு நிமிடமாவது இந்த நண்பர்களுடன் விளையாட முடியவில்லையே. இளம் நெஞ்சம் வெதும்பியது. கண்கள் நீர்ப்பிரவாகம் கண்டன. விசும்பியபடி மைதானத்தில் இருந்துவிட்டான். கொண்டு வந்த சாமான்கள் அநாதையாய் அவனருகில் கிடந்தன. எவ்வளவு நேரம் அங்கே இருந்தானோ தெரியாது. கடல் ஆர்ப்பரிக்கும் சத்தம் மட்டும் தெளிவாகக் கேட்டது. வானம் நிர்மலமாய்க் காட்சியளித்தது. நட்சத்திரங்கள் மின்னின. "ஏழுமணியிருக்குமா? சிவசோதி ஆசிரியை என்னைத் தேடியிருப்பா" அப்போதுதான் அவனுக்கு வகுப்பு ஞாபகம் வந்தது. வீட்டை நோக்கி ஓடினான்.

அன்றொருநாள் இரவு நெடுநேரம் வரை படித்துக் கொண்டிருந்தான் மிக மும்முரமாய். விடிந்தால் புலமைப்பரிசில் பரீட்சை ஆரம்பம். "என்னபாடு பட்டாவது இந்தப் பரீட்சையில் சித்தி கிடைக்கவேண்டும்.'' என்ற வெறி அவனது நாடி நரம்புகளில் உள்வாங்கப்பட்டது. தன் குடும்ப நிலையை எண்ணி எண்ணி வேதனைப்பட்டான். "இந்தத் தரித்திர நிலமை யை மாற்ற நிச்சயம் என்னால் முடியும். படிச்சு நல்ல நிலமைக்கு வந்து விட்டால் குடும்பமே காப்பாற்றப்படும். வறுமையைக் காட்டிப் படிப்பை நிறுத்தக் கூடாது." படிக்கும் பாடத்தின் இடையில் இந்தப் படம் தான் அவன் மனத்திரையிலே ஓடியது. இதை நினைத்ததும் எல்லோரையும் வாழவைத்த ஓர் திருப்தி அவன் மனதிலே இருந்தது.

இரவு நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு வானிலே பேரிரைச்சல் கேட்டது. திண்ணையின் கூரையூடாக ஓரளவு ஆகாயத்தைப் பார்க்கலாம். இரு கிபீர் விமான அரக்கன்கள் சீறிப்பாய்ந்து சென்றன. கண் மூடித்திறப்பதற்குள் வெடியோசை போல் குண்டுகள் வெடிக்கும் சத்தம் கேட்டது. இருட்டையும் பாராமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் பதுங்கு குழிக்குள் சென்றனர்.

விடிந்ததும் அரவிந்தன் பள்ளிக்கூடத்திற்குப் புறப்பட்டான். அவன் வீட்டின் அருகே யாரோ கதைக்கும் சத்தம் கேட்டது. "மகாவித்தியாலத்திலை குண்டு விழுந்து முழுக்கத் தரைமட்டம்" கேட்டதும் நம்ப முடியவில்லை பதறியடித்துக் கொண்டு பாடசாலைப் பக்கம் ஓடினான். அங்கே அவனது பாடசாலை இருந்த இடமே தெரியாமல் வெறும் கற் குவியலாய்க் கிடந்தது. அக்கம் பக்கத்துச் சூழலை வைத்தே அது பாடசாலை இருந்த இடம் என்று காணமுடிந்தது. அதிர்ந்து போய் நின்ற அரவிந்தனின் தோளில் யாரோ தட்டுவதை உணர்ந்து திரும்பியபோது அன்புதாசன் நின்றான். அன்புதாசனைக் கண்டதும் அரவிந்தனுக்கு அழுகை அழுகையாய் வந்தது. "எப்பிடியடா இண்டைக்குச் சோதினை எழுதுறது" என்று அப்பாவித்தனமாய்க் கேட்டான் அரவிந்தன். எப்படி அரவிந்தனுக்கு ஆறுதல் சொல்லுவது என்று தெரியாமல் அன்பு மௌனமாய் நின்றான். அந்தச் சுற்றுவட்டாரத்திலே பலநூறு பேருக்குக் கல்விச் செல்வம் அளித்த பள்ளிக்கூடத்தில் குண்டு போட்டாச்சு என்றதும் பொதுச்சனங்கள் ஆயிரக்கணக்கில் கூடிவிட்டனர். மாரியம்மாவும் சிவசோதி ஆசிரியையும் அரவிந்தனைக் கண்டதும் அருகிலே வந்தனர். "எப்பிடிச் சோதினை எழுதுவது, இனி எங்கே போய்ப்படிப்பது" அது அரவிந்தனின் புலம்பல். அவனின் முகத்திலே தெரிந்த பயத்தையும் ஏமாற்றத்தையும் மாரியம்மா கண்டுகொண்டாள். "டேய் அரவிந்தன் சோதினை எழுதுகிற நேரம் பார்த்து இந்தக் குண்டு போடாமல் விட்டாங்களே என்று ஆறுதல் படு. ஆக்கள் இருந்தால் எப்பவும் படிச்சுச் சோதினை எழுதலாம். விழுந்த இந்தக் குண்டைக் கண்டு பயந்து விடாதே" புண்பட்ட அரவிந்தனின் மனதுக்குத் தாயின் ஆறுதல்மொழி ஒத்தடம் போலிருந்தது.

13.08.2003

-ஈழமுரசு-

ரொறன்ரோ, கனடா

ஒரே நேரத்தில் பத்துக்கு மேற்பட்ட நாடுகளில் வெளிவரும் பத்திரிகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

# நம்பிக்கைச் சக்கரம்

அர்த்த இராத்திரி நேரம் இது என்பதைச் சற்றுமுன் சென்ற கடைசிப் பேருந்து இந்த வீதியால் சென்றதிலிருந்து அறியக் கூடியதாயிருந்து. சேகரின் துவிச்சக்கர வண்டியின் “கிறீச். கிறீச்” சத்தம் மட்டும்தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது. சிறு ஒழுங்கையிலிருந்து பெரிய வீதிக்கு வந்த சேகரைப் பேருந்து விட்டுச் சென்ற புகை திக்குமுக்காட வைத்தது. அமாவாசைக்கு இருட்டில் பெரியவீதியை அடையாளம் காணுவதே சேகருக்குக் கஸ்டமாக இருந்தது. வலப்பக்கமாகத் திரும்பிக் கொஞ்சத் தூரம் போக அந்த வீடு வந்தது. முன்பெல்லாம் வீதி மின் விளக்குகள் எரிந்த அந்தக்காலம் இந்த ஒழுங்கை முழுவதும் நல்ல வெளிச்சம் இருந்தது. இப்போது அந்த மின் கம்பங்கள் மட்டும் நினைவுச் சின்னம் மாதிரி நின்றன. இந்த வீட்டுப் படலையை அடையாளம் பிடித்தால் தான் அதுக்கு நேரே முன்பாகப் போகிற கை ஒழுங்கைக்குள் இறங்கலாம். அதுக்குள்ளே முதல் வீடுதான் சேகரின் பெரியப்பாவீடு. பாரிய இடப்பெயர்வுடன் பெரியப்பா குடும்பம் வன்னிக்கு இடம் பெயர்ந்து விட்டது. இந்த வீட்டில் விலையுயர்ந்த சாமான்கள் ஏராளம் இருக்கிறதால் வீட்டைப் பாதுகாக்கச் சொல்லிப் பெரியப்பா அடிக்கடி கடிதம் போடுவார். முக்கியமாக இரவு நேரத்தில் இரண்டு தரமாவது போய்ப்பார்த்து விட்டு வந்தால் தான் சேகருக்கு நிம்மதி வரும்.

சேகரின் வீட்டிலிருந்து கொஞ்சத் தூரம் தான் பெரியப்பாவீடு, என்றாலும் இராணுவ ஆக்கிரமிப்பு நேரம் இரவில் தனியே போவது மகா ஆபத்தானது. இராணுவமே இருட்டில் நின்று சுட்டு விட்டுப் பயங்கரவாதி என்று முத்திரை குத்திவிடுவான். இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிந்து வெளியே வருவது மிகக் குறைவு. பெரியப்பா வீட்டைப் பார்த்து வரப் புறப்பட்ட சேகருக்கு ஒரு ரோச் லைற்றும் ஓர் பொல்லும் தான் தற்காப்பு ஆயுதங்கள். பெரியப்பாவின் வீட்டை அடைந்த சேகர். வளவுக்குள் சுற்றுமுற்றும் ரோச் வெளிச்சத் தைப் பாய்ச்சினான். அங்கே யாரும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு புறப்படத் தயாரானபோது வீட்டிற்குள் யாரோ கதைக்கும் சத்தம் கேட்டது. வீட்டில் ஆட்கள் இல்லாது பூட்டியிருக்கும் போது இந்த நேரம் என்ன சத்தம் இது? சேகரின் மூளையைப் பலகேள்விகள் குடைந்தன. உடல் நடுங்கியது, வேர்வை வியர்த்துக் கொட்டியது. எதற்கும் இன்னும் கொஞ்சநேரம் நின்று பார்ப்போம் என நினைத்துத் துவிச்சக்கரவண்டியை விட்டிறங்கினான். சிறு நிசப்தத்தின் பின் மீண்டும் வீட்டுக்குள் குரல்கள் கேட்டது. இதயம் படபடத்தது. துணிவை வரவழைத்துக்கொண்டு “யாரது உள்ளேநிற்கிறது” சேகர் உரத்த குரலிலே கத்தினான். பயத்தினால் வரண்ட நாவிலிருந்து சத்தம் விட்டுவிட்டு வந்தது. எச்சிலை விழுங்கிவிட்டு சுதாகரித்துக்கொண்டு மீண்டும் “யாரது உள்ளே” என அலறினான். இராணுவம் உள்ளே பூட்டை உடைத்துவிட்டு நிற்கிறானோ? சேகரின் மனம் நானாவிதத்திலும் அங்கலாய்த்த இந்த நேரம் பார்த்து உள்ளேயிருந்து இரு சிறுவர்கள் வெளியே ஓடினார்கள். தன்னைச் சமாளித்துக் கொண்டு ஆத்திரமேலீட்டால் ‘‘டேய் நில்லடா’’ என்று கத்தியபடி சிறுவர்களைத் துரத்தினான். அந்தச் சத்தம் நள்ளிரவின் மயான அமைதியைக் கலைத்தது. சத்தத்தால் பயந்த சிறுவர்கள் சிதறியோடினார்கள். ஒருவன் சேகரிடம் பிடிபட மற்றையவன் தப்பினோம் பிழைத்தோம் என்று தப்பி ஓடிவிட்டான். பிடிபட்டவன் திமிறித் துள்ளி பிடியை விடுவித்து ஓட முயன்றான். சேகர் விடவில்லை உடும்புப் பிடியாய்ப்பிடித்த போது சிறுவன் “ என்னை விட்டிடுங்கோ அண்ணை’’ என்று கத்தினான். சிறுவனின் ஈனக் குரலில் இயலாமை தெரிந்தது. அத்துடன் அயலார் யாராவது கேட்டு விடாமல் அடக்கிக்கொண்டான்.

“டேய் நீ யாரடா, யாற்றை மகன்? ஏன் இங்கே வந்தாய்” சேகர் மூச்சிறைக்கப் பேசினான்” “அண்ணை என்னை ஒண்டும் செய்யாதேங்கோ” சிறுவன் மீண்டும் மன்றாடினான்.

சிறுவன் மேல் பச்சாதாபப்பட்டு “இப்படிவாடா தம்பி உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைச் சொன்னால் தான் விடுவேன்" என்று சேகர் அன்பாகச் சொல்ல சிறுவனும் தான் யார் என்று சொன்னான். ரோச்லைற் வெளிச்சத்தில் சிறுவனைப்பார்த்த சேகருக்கு அவனையார் என்று அறிய அதிகநேரம் எடுக்கவில்லை. சிறுவனின் அப்பா விக்கினராசாவை நினைத்தபோது ஒரு கணம் நிலை குலைந்தான் சேகர். தன்னுடன் வேலை செய்கிற தேவராசாவின் அண்ணன் தான் விக்கினராசா. ஒருவருடத்திற்கு முன் காணாமல் போனபல நூறு அப்பாவிகளில் ஒருவர். மூன்று பிள்ளைகளின் தகப்பனான விக்கினராசா இராணுவச் சுற்றிவளைப்பு ஒன்றில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். விசாரித்து விட்டு விடுவோம் என்ற வழமையான உறுதிமொழியின் பின் முகாமுக்கு இழுத்துச் செல்லப்பட்டவரின் முகத்தைக்கூட இன்றுவரை அவரின் மனைவி மக்கள் பார்க்கவில்லை.

நினைவிலிருந்து விடுபட்ட சேகர் சிறுவனையணைத்தபடி "தம்பி உன்ரை பெயரென்ன" என்ற போது அவன் "கண்ணன்" என்றான். பதின் மூன்று வயதான கண்ணனைப் பார்க்கச் சேகருக்கு பாவமாயிருந்தது. "இப்போ எங்கே இருக்கிறியள்" சேகர் வினாவ "இதிலை பள்ளிக்கூடத்திற்குப் பின்னால் ஒரு வீட்டிலை இடம் பெயர்ந்து வந்திருக்கிறம்" என்றான் கண்ணன். "தம்பி குடும்ப வருமானத்திற்கு என்ன செய்யிறியள்" சேகர் கேட்டபோது கண்ணனால் உணர்ச்சிகளை அடக்க முடியவில்லை அழுதழுது தன் குடும்பத்தின் கண்ணீர்க் கதையைச் சொன்னான்.

வலிகாமத்தில் நல்ல வசதியோடு வாழ்ந்தவர் விக்கினராசா. கூட்டுறவுச் சங்கக்கடை முகாமையாளராக வேலை செய்து கொண்டு தோட்டம் துரவு என்று மேலதிக வருமானம் உள்ளவர். பொதுவாக விவாசாயத்தை மட்டும் நம்பிவாழும் விவசாயிகளின் வருமானமும் வாழ்க்கையும் சகடக்கால் மாதிரி ஒரே நிலையில் இருப்பதில்லை. அமோகவிளைச்சல் வந்தால் அதிக விலைக்கு விற்கமுடியாமல் போகும். ஒரு வருடத்தில் வந்த லாபம் அடுத்த வருடம் போய்விடும். ஏதோ ஒரு காரணத்தால் சராசரி விவசாயியின் வாழ்க்கைக்கு இது ஓர் சாபக்கேடு எனத் தோன்றுகிறது. ஆனால் விக்கினராசாவின் விவசாய வாழ்க்கையின் நிலை என்றுமே உச்சமாயிருந்தது. பூமித்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை என்றும் சோதித்ததில்லை. கொழுத்த வருமானம் வந்தது. சங்கக்கடைத் தொழில் ஏதோ ஒரு பொழுதுபோக்கு மாதிரியிருந்தது. அவ்வளவுக்கு அவ்வளவு காசுப்புழக்கம் தாராளமாகத் துள்ளி விளையாடியது.

யார்கண் பட்டதோ விக்கினராசாவின் குடும்பத்தில் அடுத்தடுத்துப் பேரிடிகள் விழுந்தன. பாரிய இடப் பெயர்வுடன் குடும்பத்துடன் தென்மராட்சிக்கு இடம் பெயர்ந்தனர். இடப்பெயர்வுக்கு நாலுநாளுக்கு முன் விக்கினராசா கையிலிருந்த காசையெல்லாம் பாதுகாப்புக்காக வங்கியில் போட்டுவிட்டார். இடம் பெயரும்போது கூடப் போதியளவு கையிருப்பு இல்லாமலே புறப்படவேண்டி வந்தது. மூன்று பிள்ளைகளுடன் விக்கினராசா குடும்பம் தென்மராட்சியை அடைந்த போது போதும் போதும் என்றாகிவிட்டது. இலட்சக்கணக்கில் சனங்கள் நெரிசலாக நடந்தபோது மிதிபட்டுப் பாதங்கள் நோவு கண்டிருந்தன. விக்கினராசாவின் மூத்தமகன் கௌதமிற்குக் கோவில் திருவிழச்சனக் கூட்டத்தில் இடிபட்டு நடப்பது என்றால் கொண்டாட்டமாம். ஆனால் இடப்பெயர்வில் கொஞ்சத்தூரம் நடந்தபோது இனி நடக்கமுடியாது என அடம்பிடித்திருக்கிறான். இந்தப் பதினைந்து வயது கௌதம். இவனின் தங்கையும் தம்பி கண்ணனும் தான் அப்பா அம்மாவுக்கு ஒத்துழைப்புக் கொடுத்தார்கள். சாவகச்சேரியில் ஓர் வீட்டில் ஏழு குடும்பம் இருந்த போது விக்கினராசாவின் குடும்பமும் சேர்ந்து எட்டாகியது. இடநெருக்கடிக்குள் ஒரு மாதிரி சில வாரங்கள் மெல்ல மெல்ல நகர்ந்தன. கொடிகாமப்பக்கம் வீடுகளில் சனம் குறைவு என்று யாரோ சொல்லக் கேட்டு அங்கு விக்கினராசா குடும்பத்தினர் போனார்கள். அங்கேயும் அக்கரை பச்சை கதைதான் என்று போய்ச்சேர்ந்தபோது தான் விக்கினராசா உணர்ந்தார்.

தொடர்ந்து விடாத அலைச்சலிலும் சனக்கூட்டத்திலும் இருந்தோருக்குத் தொற்றுநோய்கள் ஏற்பட்டன. விக்கினராசாவின் மனைவி தேவிகாவுக்கு மலேரியாக்காய்ச்சல் கண்டிருந்தது. “ஆள் தப்பிப் பிழைப்பது கொஞ்சம் சிரமம்” என்று வைத்தியர்கள் சொல்லி எச்சரிக்கை செய்யும் அளவுக்கு மலேரியா தேவிகாவை மிகக் கடுமையாக வாட்டி வதைத்தது. போதியளவு வைத்திய வசதிகளும் இல்லாத படியால் நோயாளர்கள் பெரிதும் அவதிக்குள்ளானார்கள். ஆஸ்பத்திரியும் வீடும் என்று மாறிமாறி ஓடித்திரிந்ததில் விக்கினராசா குடும்பம் அலைச்சலால் பெரிதும் அவதிப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனம் சனம் அயல் என்று வாழ்ந்த வசதிக்கும் தற்போதுஉதவி ஒத்தாசை இல்லாத இடத்தில் கையிலே காசும் வரண்ட நிலையிலே குழந்தைகளுடன் விக்கினராசா பட்ட கஸ்டத்தை வார்த்தைகளால்; வர்ணிக்க முடியாது. விக்கினராசா தேவிகா தம்பதிகளின் சகோதரர்களுடன் சேர்ந்து இடம் பெயர்ந்தால் பெரிய உதவியாய் இருந்திருக்குமே என்று நினைத்து மனம் வருந்தினார்கள். தேவிகாவின் ஒன்றுவிட்ட அக்காவின் குடும்பத்தினர் மட்டும் அங்கே இல்லை என்றால் விக்கினராசா தவியாய்த்தவித்திருப்பார். அவர்களின் ஆதரவு விக்கினராசாவின் பிள்ளைகளுக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது. விக்கினராசாவின் மகள் ''அப்பா எல்லாற்றைவீட்டிலும் யாரும் ஆஸ்பத்திரியில் இருந்தால் இப்படித் தான் கஸ்டப்படுவினாமா? கொஞ்சநாளா நீங்கள் வீட்டிலை இருந்து சாப்பிடேக்கை நாங்கள் காணவில்லை ஏன் அப்பா?" என்று கேட்டபோது விக்கினராசாவிடமிருந்து பதில் வார்த்தை வரவில்லை. வெறுப்புடன் ஓர் வரட்டுப் புன்னகைதான் வந்தது. "இல்லை யம்மா ஊரில் இருந்திருந்தால் இவ்வளவு கஸ்டமும் வந்திராது'' மகளின் கேள்விக்கு விக்கினராசா ஆறுதலாகப் பதிலைத் தாமதமாய்ச் சொன்னார்.

காசுக்கையிருப்புக் கரைந்தபோது கொண்டுவந்த நகைகள் மட்டுமே கைகொடுத்தன. அரச ஊழியர்களுக்குச் சம்பளம் ஏதோ பிந்தியாவது கிடைத்தது. ஆனால் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கோ இழுபறியாகவே சம்பளம் கிடைத்தது. கடமைக்குத் திரும்பும்படி சகல ஊழியர்களும் வேண்டப்பட்டிருந்தும் தேவிகா ஆஸ்பத்திரியிலிருந்த ஒன்றரைமாதம் விக்கினராசாவால் வேலைக்குப் போக முடியவில்லை. கொண்டுவந்த நகைகள் விற்றுத்தீர்ந்த போதுதான் விக்கினராசா விழித்துக் கொண்டார். ஏதோ கிடைக்கிற சம்பளம் சாப்பாட்டுக்குப் போதுமானது. தேவிகாவின் உடற்பலவீனம் ஆளின் உருஅமைப்பையே மாற்றிவிட்டது. நல்ல சத்தான சாப்பாடு சாப்பிட்டால் அன்றி உடம்பு தேறமுடியாது என்று வைத்தியர்கள் சொன்ன அறிவுறுத்தலையும் அலட்சியம் செய்யமுடியவில்லை.

தேவிகாவின் ஒன்றுவிட்ட அக்காவிடம் கடன் வாங்க வேண்டிவந்தது. "மாதச்சம்பளம் எடுக்கிற உங்களுக்கே இந்த நிலையெண்டால் எங்களைப்போல வியாபாரிகளுக்கு நிலமை எப்பிடியிருக்கும்" ஒன்றுவிட்ட அக்காவின் முணு முணுப்பு இது. தேவிகா தன் கஸ்டத்தை ஒன்றுவிட்ட அக்காவிடம் சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதல் படலாம் என்று போனால், அவள் கதையைத் திருப்பிவிடுகிறாளா? தேவிகாவின் நெஞ்சைக் குடைந்த நிகழ்வுகளும் ஒருபுறம் தாங்கள் தந்த கடனையும் சீக்கிரம் திருப்பித் தரும்படி நச்சரிப்பும் சகிக்க முடியாதவை.

அந்தப்பகுதி திடீரென இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டது. சகலரின் அடையாள அட்டைகளும் நுணுக்கமாகப் பரிசோதிக்கப்பட்டன. மூன்று பொதுமக்கள் ஜீப்பில் ஏற்றப்பட்டனர். அவர்களுள் விக்கினராசாவும் ஒருவர். தேவிகாவும் பிள்ளைகளும் இராணுவ அதிகாரியிடம் மன்றாடிக் கெஞ்சிக் கேட்டும் இராணுவம் மசியவில்லை “சந்தேகத்தில் பிடிச்ச ஆளை விசாரித்துவிட்டு விடுவோம்” என்ற வழமையான இராணுவ வார்த்தையிலே கொண்ட சிறு நம்பிக்கையில் விக்கினராசாவின் குடும்பம் வாழ்ந்தது. மனித உரிமைகள். அமைப்பு மனித நேய அமைப்பு, செஞ்சிலுவைச் சங்கம் எனத் தேவிகாவும் பிள்ளைகளும் அலையாய் அலைந்தார்கள். சந்திக்காத பொது அமைப்புகள் இல்லை என்ற அளவுக்கு தேவிகாவின் முயற்சி கடுமையானதாயிருந்தது. ஆனால் பலன் தான் இல்லை. கணவரின் விடுதலையில் நம்பிக்கையிழந்து கண்ணீரிரே வாழ்க்கையாய்த் தூக்கமின்றித் தவித்தார். பிள்ளைகள் முன் தன் கவலையை இயலுமானவரை காட்டிக் கொள்வதைத்தவிர்த்தார். இருந்தாலும் ‘‘அம்மா அப்பா எப்பவருவார்” என்ற பிள்ளைகளின் கேள்விகள் தேவிகாவைக் கொல்லாமல் கொன்றன. மௌனமே பதிலாக வரும்.

தேவிகாவின் முயற்சியால் இராணுவத்தளபதியைச் சந்தித்து மகஜர் கொடுக்கமுடிந்தது. ஆனால் விக்கினராசா எங்கே என்ற விபரங்கள் கூடச் சொல்லப்படவில்லை. எப்படியோ ஓர் ஆறுதலுடன் வீடுவந்தார் தேவிகா. கையில் காசும் இல்லாத நேரம் இது நடந்ததால் தேவிகாவை இது பேரிடியாய் வாட்டி வதைத்தது.

இடம் பெயர்ந்து வரும்போது காணி உறுதிகளும் முக்கிய தஸ்தாவேஜுகளும் ஓர் தகரப் பெட்டியில் போட்டு வீட்டு வளவுக்குள் புதைத்து விட்டு வந்ததால் அவசரத்துக்கு ஈடு வைக்கக்கூட காணிகள் உதவவில்லை. தேவிகாவின் சீதனவளவு வீடு தன்பெயரில் இருந்தும் அதுகூடப் பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படவில்லையே என்ற கவலை தேவிகாவைப்பிழிந்தெடுத்தது. யாரோ சொன்னதாக இராணுவத் தளபதிக்கு இரண்டுலட்சம் ரூபா கொடுத்தால் விட்டுவிடுவானாம் என்று ஓர் கதை தேவிகாவின் காதில் விழுந்தது. காசுக்கு எங்கே போவது? வீட்டுக்குப் போய் வலிகாமத்தில் யாரிடமாவது காசு வாங்கி வரலாமென்றால் எங்கள் இடங்களில் மீளக் குடியமரவே முடியாது. மனம் அறுந்த பட்டம் போல் அலைக்கழிந்தது.

வீட்டு நிலைமையைக் கண்டு கௌதமும் தங்கையும் ஏக்கத்தை தவிர வேறெதையும் வெளிப்படுத்தவில்லை. கடைக்குட்டி கண்ணனோ இந்த இரண்டு இலட்சத்தை எங்கேயாவது கொள்ளையடித்தாவது கொடுத்து அப்பாவை மீட்க வேண்டும் என்று உறுதியாய் முழுமூச்சுடன் காரியத்தில் இறங்கினான். பக்கத்து வீட்டுச் சிநேகிதன் துவாரகன் சொன்ன செய்தி ஒன்று கேட்டுக் கண்ணன் பரபரப்பானான். "சேகரின் பெரியப்பா வீட்டில் கட்டுக்கட்டாய் காசு, நகை எல்லாம் ஒளிச்சு வைச்சிருக்கினம். அந்த இடம் கூட எனக்குத் தெரியும்" என்ற செய்திதான் அது.

இதைக் கேள்விபட்ட கண்ணனுக்கு இருப்புக் கொள்ளவில்லை துவாரகனைக் கேள்விகளால் துளைத்தெடுத்துவிட்டான். துவாரகன் வீட்டையும் இட அடையாளத்தையும் காட்டுவதாய்ப் போன போதுதான் சேகரிடம் பிடிபட்டுவிட்டான் கண்ணன். சேகருக்குக் கண்ணன் மேல் கோபத்திற்குப் பதில் இரக்கம் தான் வந்தது. "கண்ணா எதுக்கும் பயப்படாதை என்னிடமுள்ள காசு எல்லாத்தையும் போட்டால் இரண்டு இலட்சத்துக்கு மேல் வரும். அதில் இரண்டு இலட்சைத்தை உன் அப்பாவை வெளியிலை கொண்டுவர நான் உதவியாய் கடனாய்த்தாறன்" என்று சேகர் உறுதி சொன்னான். சேகரின் கண்ணிலும் குரலிலும் தெரிந்த உறுதி கண்ணனுக்குத் தன் தகப்பனை விடுதலை செய்வதில் பெரியதோர் நம்பிக்கையைக் கொடுத்தது. இருவரும் ஆனந்தக் கண்ணீர் பனிக்க பெரியப்பாவின் வீட்டு வளவை விட்டு வெளியேறினார்கள்.

2.4.2004
-முழக்கம்-
ரொறன்ரோ, கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

# துன்பத்தில் இன்பம்

அழகிய இயற்கைக் காட்சிகளிலே லயித்திருந்த தேவதாசனின் மனதில் இடையிடையே அந்தக் காட்சிகள் கடல் அலைகள் போல் வந்து வந்து போயின. இயற்கையை இரசிக்கலாம் என்று வயல் வெளிக்கு வந்து நின்ற தேவதாசனுக்கு இயற்கையைத் தொடர்ந்து இரசிக்க முடியவில்லை. பச்சைப் பசேல் என்று நெற்பயிர் செழித்திருந்தது. திரும்பிய நாலுதிசையும் அதே காட்சிதான். இன்னும் கொஞ்ச நாளில் கதிர் முற்றினால் அறுவடைவரும் பிறகுவயல்களின் சோபையும் அழகும் இல்லாமல் போய்விடும். ஏனோ தேவதாசனின் மனம் மகிழ்ச்சியில் குளித்தது. இராணுவக் கொடுமைகளால் கணவனையும் உடைமைகளையும் இழந்த விதவை களுக்கான குடியிருப்புத் திறப்புவிழாவின் நிகழ்ச்சிகள் தான் அவன் மனதில் வந்து ஆனந்தத் தாண்டவம் ஆடிநின்றன. குடியிருப்புத் திறப்புவிழாவில் விதவைகள் குடும்பத்தோடு வந்து தங்கள் குடியிருப்பின் திறப்பைப் பொறுப்பாளரிடம் போது அவர்களின் மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. ஆனந்தக் கண்ணீர் பெருக நன்றிப் பெருக்கோடு அவர்கள் தேவதாசனையும் கூட நின்று உழைத்தவர்களையும் நோக்கிக் கை கூப்பி வணங்கிய காட்சிகள் தான் தேவதாசனால் மறக்கமுடியாத காட்சிகள். அப்பொழுது அக்குடியிருப்பை உருவாக்கத் தேவதாசனும் நண்பர்களும் பட்ட கஸ்ட நட்டங்கள் மனத்திரையில் விம்பங்களாக விழுந்தன. .

தேவதாசனும் நண்பர்கள் முருகன், ரகு. கவி ஆகியோரும் ஆலய வீதியில் நின்று வழக்கம் போல் கதைத்துக் கொண்டிருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார்கள். இரவு நேரத்திலே மின்னும் வெளிச்சத்தில் இடையிடையே ஓடும் துவிச்சக்கரவண்டிகளையும் பாதசாரிகளையும் தவிர வேறெந்த அசைவும் சத்தமும் இல்லாத அமைதிச் சூழலில்தான் தேவதாசன் நண்பர்களோடு கூடிப் பேசுவதுண்டு. இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி என்பதால் பயமின்றி நடமாடக் கூடியதாயிருந்தது. அந்தப்பகுயில் இடம் பெயர்ந்து வந்து தங்கியிருப்போர் தொகை ஏராளம். இவர்கள் எதிர்நோக்கும் அவலங்களும் அவஸ்தைகளும் அதை விட ஏராளம். அவர்களுள் சிறுவர்கள், குழந்தைகள், பெண்கள் படுகிற அவஸ்தைகள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை.

என்னதான் நிவாரணங்கள் கிடைத்திருந்தாலும் அவை யெல்லாம் யானைப் பசிக்குச் சோளப்பொரி கிடைத்தமாதிரி அவர்களுக்குப் போதுமானதாய் இல்லை. தேவதாசனின் நண்பர்களுள் ரகு சுறுசுறுப்பானவன். ரகுவின் ஆலோசனையின்படி முதலில் போரினால் கணவனையிழந்த விதவைகளுக்கான குடியிருப்புக் கட்டுவதென முடிவு செய்யப்பட்டது. சரீர உதவி எனில் ஏதோ செய்துவிட்டுப் போவது தானே என்று இருந்துவிடலாம். ஆனால் இந்தத் திட்டத்திற்குப் பணம் ஏராளம் தேவைப்படுமே. யாரும் நண்பர்களுக்குள் பேசவில்லை. அமைதியைக் கலைத்துக் கொண்ட கவி “ஆளுக்கு ஒரு ஐம்பது போட்டால் இரண்டு லட்சம் வரும் அது காணாதோ?” என்றான். மீதி மூன்று பேரும் பெரிதாய்ச் சிரித்தனர். அந்தச் சிரிப்பின் அரத்தங்கள் பல வேறு வகைப்பட்டவை. தேவதாசன் “என்னடாப்பா காசு போட வேணும் என்றதும் ஓடிவிடாதேங்கோ” என்று சொன்ன போது மீண்டு சிரிப்பொலி எழுந்தது. பொது மக்கள் தொண்டர் நிறுவனங்கள் மற்றும் அரசாங்க அதிபர் ஆகியோரிடம் நிதி சேகரிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. இடம் பெயர்ந்தோர்க்கு உதவ எத்தனையோ அமைப்புக்கள் இருந்தாலும் தேவதாசனின் நண்பர்கள் நாலுபேரும் ஏதாவது நல்லதாய்ச் செய்யவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியிருந்து.

முதலில் குடியிருப்புக்குரிய நிரந்தரக் காணிக்கு அரசாங்க அதிபர் ஊடாக விண்ணப்பித்த போது நிராகரிக்கப்பட்டது. மீள விண்ணப்பித்து அரசாங்க அதிபரை நேரடியாகச் சந்தித்து விளக்கிக்கூறியபோது வெற்றியளித்தது. அந்த வெற்றியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னணியில் இந்துமதி என்ற அரசாங்க அதிபர் காரியாலய ஊழியர் உதவி செய்தார் எனப் பின்னர் அறிந்தனர். காணி கிடைத்தபோது குடியிருப்பே கட்டி முடித்தமாதிரி மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தார்கள். அடுத்த கட்டமாக நிதி சேர்க்க முனைந்தபோது பொதுமக்கள் மத்தியில் அதிகம் பழகவேண்டிவந்தது. கவி அடிக்கடி சொல்லுவான் “எங்களைக் கண்டதும் இடத்தைக் காலி செய்துவிட்டு ஓடிய சனம் கண்டதும் காணாமல் போனவர்கள் என்று எண்டு பலவிதமாய்ச் சனம் இருக்கினம்'' நண்பர்களுக்குள் வாய்ச்சாதுரியம் மிக்க முருகனை எப்பொழுதும் நிதிதிரட்ட முன்னுக்கு அனுப்பி விடுவது வழக்கம். அவன்தான் பொதுசனத்துக்குள் கூச்சமில்லாமல் பேசி எப்படியோ நன்றாய் வசூலித்தே வருவான். பார்க்கப்போனால் ஏதோ ஒருவகையில்எல்லோரும் வாரிவழங்கியிருக்கிறார்கள் என்று முருகனே சொன்னான். முருகன் மட்டும் இல்லை என்றால் இந்தப்பகுதி மக்களிடம் சராசரியாக எல்லோரையும் பங்பளிப்புச் செய்ய வைக்க வேறு யாராலும் முடியாது. போட்ட திட்டத்தின்படி பொது நிறுவனங்களிடம் நிதி கேட்டாக வேண்டும். பொதுநிறுவனங்களையணுகிய போது நல்ல வரவேற்புக் கிடைத்ததுடன் வாரி வழங்கினார்கள். இப்படியொரு குடியிருப்பு அமைக்க முனைந்ததையிட்டுப் பாராட்டினார்கள். “மேலும் உதவி வேண்டுமானால் தயங்காமல் கேளுங்கோ” இது பொது நிறுவனங்கள் பல இட்ட அன்புக் கட்டளை. தங்கள் கஸ்ட நிலையிலும் தயங்காமல் பங்களிப்புச் செய்து எல்லோரையும் இன்ப அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டார்கள்.

அதே நேரம் அமையவிருக்கும் குடியிருப்பு சம்பந்தமாய் விதவைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. ஒவ்வோர் விண்ணப்பமும் ஒரு சோகக்கதை சொல்லும் அளவுக்கு அல்லல் பட்டிருக்கிறார்கள் விதவைகள். தனியே ஒரு விதவை பிள்ளைகளுடன் இடம் பெயர்ந்து எத்தனையோ அசௌகரியங்களுக்கு மத்தியில் வாழும் போதுள்ள கஸ்டங்களை வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாது. பட்டால் தான் தெரியும் பதைபதைப்பு வாழ்க்கை என்ன வென்று விண்ணப்பித்த விதவைகளுள் ஒருவர், விண்ணப்பப் படிவத்தின் கீழ் பிற்குறிப்பு “ஒரு பெண்ணின் கண்ணீரின் அர்த்தம் இன்னொரு பெண்ணுக்கத்தான் புரியும். எங்களை நேர்முகம் காணப்போகும் நீங்கள் அனைவரும் ஆண்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு எங்கே எங்கள் கண்ணீரின் அர்த்தம் புரியப் போகிறது ஒரு அபலைப்பெண்ணின் குமுறல்'' என்று எழுதியிருந்தார்.

விண்ணப்பத்தைப் பரிசீலித்தவர்களுக்குத் தூக்கிவாரிப் போட்டதாம் இதை வாசித்தவுடன். "இதென்ன இது இவர்களுக்கு குடியிருப்பு வழங்கி உதவலாமென்றால் உதவமுன்னரே வசைமாரி வருகிறதே" என மனவருத்தப்பட்டார்களாம். "தங்கள் விண்ணப்பத்தில் தனிக் கவனமோ அனுதாபமோ உண்ணடாக்க ஒரு குறுக்குவழிதான் இது" என்று ரகு அடித்துச் சொன்னான். "சரி சரி ஒருபெண் விரக்தியில் கூட இப்படி எழுதியிருக்கலாம் தானே" என ரகுவைச் சமாதானம் செய்ய வேண்டி வந்தது தேவதாசனுக்கு. எப்படியோ அந்தப் பெண்ணுக்குக் குடியிருப்பு ஒன்று கிடைத்தது. அந்த மகிழ்ச்சியில் தானும் கூடநின்று குடியிருப்பைக் கட்டி முடிக்கும் வேலைகளில் ஒத்தாசை செய்தார். அந்தப்பெண் உதவுவதைக் கண்ட ஏனைய பெண்களும் பொதுமக்களோடு சேர்ந்துசேர்ந்து கட்டி முடிப்பதில் முழு மூச்சாய்த் தோள் கொடுத்தார்கள். பொதுமக்கள் முன்னின்று உழைத்ததாலோ என்னவோ குடியிருப்பு நேரகாலத்தோடு கட்டி முடிந்தது.

அப்பொழுதுதான் அவர்களுக்குள் உள்ள ஒற்றுமை வெளியே தெரிந்தது. முழுமூச்சாய் ஒத்துழைத்த பொதுமக்களுக்கு ஒரு பகுதி சனம் உணவு சமைத்துக் கொடுக்க இன்னுமொரு குடும்பம் தேநீர் வழங்கியது. நல்ல அந்நியோன்யமாய்ப் பல காலம் பழகிவர்கள் போல, சிலநாட்கள் செய்த வேலையின் போது அன்பு காட்டி நின்றனர். எங்கெங்கோ பிறந்து வளர்ந்த சலக தரப்பிலான சனங்களும் இடம் பெயர்ந்தபோது அகதிகள் என்ற வார்த்தைகள் வந்தபோது தமக்குள் உள்ள ஏழை பணக்காரன், சாதி, மத பேதமெல்லாம் மறந்து ஒன்றாய் நின்று குடியிருப்பைப் கட்டி முடிக்கப் பாடுபட்டிருக்கின்றார்கள். உண்மையில் பார்க்கப் போனால் ஆசையாகவும் சந்தோசமாகவும் இருந்தது. சீக்கிரமாக குடியிருப்புக் கிடைத்த குடும்பங்கள் மட்டுமல்ல சகலரது முகத்திலும் மகிழ்ச்சி தெரிந்தது. குடியிருப்புப் பெற்ற விதவைகள் விழா மேடையருகே நாலு நண்பர்களும் நின்றபோது அணுகி "தம்பிமாரே எத்தனையோ நாளுக்குப்பிறகு இண்டைக்குத் தான் சந்தோசமாயிருக்கிறம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுக்குப்பாடுபட்ட நீங்கள் நல்லாயிருப்பீங்கள். இந்த உதவியை மறக்கமாட்டம்" என்று வாயார வாழ்த்திக் கொண்டு போனார்கள்.

இவ்வளவு நாளும் தேவதாசன் இதுக்காகப்பட்ட கஸ்டங்கள் எல்லாம் பறந்தோடிவிட்ட நிம்மதியில் திளைத்தார். "இனி என்ன அடுத்த திட்டம்?" என்று நினைத்தபடி துவிச்சக்கரவண்டியில் போய்க் கொண்டிருக்கும் தேவதாசனுக்கு அருகில் குடியிருப்புப் பகுதியில் சிறுவர்கள் விளையாடிய பொழுதெழுந்த மகிழ்ச்சிக் குரல்கள் காதிலே தெளிவாகக் கேட்டவண்ணமிருக்கின்றன.

13.05.2004
-நம்நாடு- ரொறன்ரோ. கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

# திருந்தாத உள்ளம்

அந்தக் காலை வேளையிலே கொட்டிக்கிடந்த பனியில் ஆதவனின் கதிர்கள் பட்டு எங்கும் கண்ணைக் கூசியது வெளிச்சம். நடுங்கும் குளிரிலும் நின்று தனது கார்மீது படிந்திருந்த தூசிகளைத் துடைத்துக் கொண்ட தேவன் தனக்குள் ஓர் இறுமாப்பும் பெருமையும் கொண்ட களிப்பில் வீட்டுக்குள் நுழைந்தான். மிக அண்மையில் அதியுயர் விலைக்கு வாங்கப்பட்ட புத்தம் புதிய காரின் எழிற் கோலம் அவனை ஏதோ அடைய முடியாததை அடைந்து விட்ட நினைப்பில் ஆழ்த்தியது. இன்று விடுமுறைநாள், இன்னும் சில மணிநேரத்தில் தன் நண்பன் கோபுவுடன் அரட்டையடிக்கக் காரில் கூட்டிச் செல்வதாய் இருந்தான். அதற்குள் ஊரில் இருந்து வந்த தொலைபேசி அழைப்பின் தாக்கம் தேவனின் மனதை உஸ்ணப்படுத்திவிட்டது.

தேவனின் தூரத்து உறவினரான தம்பையா வாத்தியார் வன்னியிலிருந்து கொழும்புக்கு வந்த போது தேவனின் தாயார் மகனுடன் கதைத்துத் தங்களின் இக்கட்டான நிலமையை விளங்கப்படுத்தச் சொல்லியிருந்தார். "தம்பி தேவன்! உன்ரை அப்பா, அம்மா சதோதரங்கள் அங்கே வன்னியில் படுகிற கஸ்டம் கொஞ்சநஞ்சமல்ல. அதை நான் ஒவ்வொன்றாகச் சொல்லுற தெண்டால் சொல்லி முடியாது. உனக்கு எத்தனையோ கடிதங்கள் அவையள் போட்டுக் களைச்சுப்போச்சினம். நீ பதிலே போடுறதில்லையாமே. ஏன் தம்பி தெரியாமல் தான் கேட்கிறேன் உனக்கு ஒரு நாலுவரியிலை கடிதம் எழுத உங்கே நேரம் இல்லையோ?'' தம்பையா வாத்தியார் இரைந்து பேசும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபாவமுடையவர். அவரின் அதிர்ந்த தொனியில் முழங்கிய கணைகள் தேவனைத் தடுமாறவைத்தன. ஏதோ சொல்ல வாயெடுத்தான் வார்த்தைகள் தான் வரமறுத்து விட்டன. பானையில் இருந்தால்தானே அகப்பையில்... தம்பையா வாத்தியார் தொடர்ந்தார் "தம்பி நீ கனடாவுக்குப் போனபிறகு அவையளுக்கு ஒரு சதம் கூட காசு அனுப்பவில்லையாமே. ஒரு நேரக் கஞ்சி குடிக்கவே அவையள் படுகிற பாடு பெரிய கண்றாவி" தேவனுக்கு தம்பையா வாத்தியாரின் இந்த உபதேசங்கள் ஏதோ கேட்க விரும்பாத ஒன்றாக செவியிலே தேள் கொட்டியது போலிருந்தது. ஏதோ ஒருவிதத்தில் உரையாடலை நிறுத்தியாக வேண்டும். "சரி சரி வாத்தியார் நீங்கள் சொன்னமாதிரியே செய்யிறன்." என்றபடி தொலைபேசி இணைப்பைத் தேவன் துண்டித்தான். "வாத்தியாருக்கு வேறைவேலையில்லை" என்று முணுமுணுத்தபடி அவரை ஏமாற்றிவிட்ட நினைப்பில்வெற்றிப் புன்னகை முகத்தில் இழையோடியது. நண்பன் கோபுவுக்கு தொலைபேசியில் "கோபு இப்ப வர முடியவில்லை பின்னேரம் வாறன்.'' என்றுவிட்டு மேசையோடு போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

தேவனின் தாயும் தமக்கையும் எழுதிய பல கடிதங்கள் மேசையில் பரவிக் கிடந்தன. அவை கிடைத்த போது வாசித்தவை தான், இருந்தும் ஒரே பல்லவியைத்தான் பாடிநிற்பதாய்த் தேவனுக்குத் தோன்றியது. தாயாரின் கடிதமொன்று "தம்பி தேவன் அறிவது, நலம் நலமறிய ஆவல், உனது கடிதம் வந்து எத்தனை வருசமாச்சு. சந்தோசமாய்க் கனடாவுக்கு நீ போய்ச் சேர்ந்ததாக எழதிய கடிதத்தின் பின் என்ன ஆனாய் என்று ஒரு கடிதம் கூட வரவில்லையே. மாதம் இரண்டு கடிதம் போட்டோம் அதுவும் கிடைக்கவில்லையா? ஊரில் இருந்து இடம் பெயர்ந்து வந்து வன்னியில் இருக்கிறோம் என்று போனவருடம் தொடக்கம் அக்கா எழுதிய கடிதங்கள் கூடக் கிடைக்கவில்லையா? அப்பா தொழில் இல்லாமல் இருக்கிறார். இங்கு நாம் படுகிற கஸ்டம் எல்லாம் பற்றி உனக்கு கடிதம் எழுதியே அலுத்துப் போச்சு. கையோடு கொண்டுவந்த நகையெல்லாம் வித்துச் சாப்பிட்டாச்சு, இருக்கிற நல்ல உடுப்புகளும் விற்கிற அளவுக்க வந்துட்டுது நிலமை. உனக்குக் கடிதம் போட முத்திரைக்குக் கூட காசில்லாம் கடன்பட்டுக் கடிதம் எழுதினோம். எங்கள் நிலமை இப்படியென்றால் நம்மைவிடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸ்டப்பட்டதுகள் நிலமை எப்பிடியிருக்குமென்று யோசிச்சுப்பார். ஏதோ தாற நிவாரணப் பொருட்களைக் கொண்டு ஒரு நேரக் கஞ்சியாவது குடிச்சம். இனி இப்படியே எத்தனை நாளைக்கு…?

கடிதத்திலிருந்து மீண்ட தேவன் "சே ஏன் இவையெல்லாரும் தங்கள் கஸ்டத்தை எனக்கு எழுதவேணும்" என்று நினைத்தபடி தான் கடிதத்தினுள் மூழ்கியதை யாராவது பார்த்தார்களா என்று அறியச் சுற்று முற்றும் பார்த்தான் தேவன். நல்லவேளை யாரும் கிட்ட இல்லை என்பதில் ஒரு திருப்தி. அவனுடன் வீட்டில் இருக்கும் மற்ற நண்பர் மத்தியிலே ஒரு கிசு கிசு உண்டு. தேவன் வீட்டுக்காரரைக் கவனிக்கிறதில்லை. காசு அனுப்பினதும் இல்லை. ஏன் கடிதம் கூடப் போடுறதில்லை. இவன்ரை உழைப்பு ஆடம்பரக் காருக்கும் பகட்டு வாழ்க்கைக்கும் ஊதாரிச் செலவுக்கும் போதாது. இவனாவது அவையளைக் கவனிக்கிறதாவது. தனக்கு ஒரு வீடு, நாடு எண்டு ஒன்று இருக்கிற நினைப்பே இல்லாத ஜென்மம் இவன். அங்கே ஊரில என்ன நடக்குது என்று அறிய ஒரு துடிப்புக் கூட இல்லாதவன். இவனை நம்பி லட்சக் கணக்கிலை செலவழிச்சு வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு, உழைச்சு அனுப்புவான் எண்டு நம்பியிருக்கிற தாய் தகப்பன் உண்மையில பெரிய பாவம் செய்தவை. இவை தேவன் வீட்டில் இல்லாத நேரங்களில் நண்பர்களின் அரட்டைத் தலையங்கங்கள். பரவிக்கிடந்த கடிதங்களையெல்லாம் ஒன்றாக அடுக்கி மேசையின் ஓரத்தில் வைத்துவிட்டு அவ்விடத்தை விட்டகன்றான் தேவன்.

வீதியெங்கும் வாகனநெரிசல் காணப்பட்டது. வழக்கமாக மாலையில் இது சர்வசாதாரணம். இன்று விடுமுறை யாயிருந்தும் ரொறன்ரோ வீதிகளில் பரபரப்புக் காணப்பட்டது. காரை ஓட்டிச் சென்ற தேவனுக்கு மனம் அலை பாய்ந்தது. இதற்குள் நண்பன் கோபு உணவகம் ஒன்றில் காத்திருப்பதாய்ச் சொல்லியிருந்தான். தேவன் போய் அருகில் இருந்தபோது வந்திருந்த பற்றுச் சீட்டைத் தேவன் பக்கம் நகர்த்திவிட்டு மதுப்புட்டிகளைக் காலி செய்து கொண்டிருந்தான்.

இருவரும் உணவகத்தைவிட்டுக் கோபுவின் வீட்டையடைந்த போது போதை நன்றாகத் தலைக்கேறியிருந்தது. நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு கோபு "டேய் தேவா என்ன வீட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காறற்றை ரெலிபோனையும் கடிதத்தையும் நினைக்க வாயடைச்சுப் போச்சா உனக்கு" "சீச்சீ என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய்? உதுக்கெல்லாம் கவலைப்பட நான் என்ன பைத்தியக்காரனா?" தேவன் விட்டுக் கொடுக்காமல் உளறிக் கொட்டினான். இப்படியே தொடங்கி அரட்டையிலும் விதண்டாவாதத்திலும் நேரம் போனதே தெரியவில்லை.

தம்பையா வாத்தியார் பாரிய மனச்சுமையோடு வன்னிக்குப் பயணமானார். இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் நுழைந்தவர் போக்குவரத்துக் கஸ்டங்களுக்கு மத்தியல் வீடு போய்ச்சேர்ந்தார். வாத்தியார் வந்த செய்தி கேட்டுத் தேவனின் வீட்டுக்காரர்கள் எல்லோரும் ஓடோடி வந்தனர். இதுவரை வருடக்கணக்காகக் கடிதம் கூடப் போடாத மகன் தொலைபேசியிலாவது ஏதும் கதைத்திருப்பான், காசும் வாத்தியாருக்கு அனுப்பியிருப்பான் என்ற ஆவலில் மூவரும் தம்பையா வாத்தியாரின் குடிசை வாசலில் நின்றனர். தம்பையா வாத்தியாரோ என்ன பேசுவது இவர்களின் கேள்விக்கு என்ன பதில் சொல்லுவது, என்ற தயக்கத்தில் தலையைத் தொங்கப் போட்டபடி மூன்றுபேரையும் எதிர் கொண்டார். ''என்ன வாத்தியார் தம்பியோடை கதைச்சிருப்பீங்கள், எப்படிச் சுகமாயிருக்கிறானோ, ஏனாம் கடிதம் போடுறதில்லை'' தேவனின் தாய் கேள்விக்கணைகளால் துளைத்தெடுத்தார் மகனின் மீதுள்ள வாஞ்சையால். "ஓ தேவனோடை கதைச்சன் சுகமாயிருக்கிறானாம். தான் கடிதம் போடுறானாம் எண்ட சொன்னான்" தம்பையா வாத்தியார் சொற்களை விழுங்கியபடி சொல்லிச்சமாளித்தார். ''அவன் அனுப்பின காசு இதிலை ஏழாயிரம் ரூபா இருக்கு" என்று வாத்தியார் காசை நீட்டினார். தேவனின் தகப்பன் அதை வாங்கிக்கொண்டார். ஆனந்தப் பெருக்கால் உணர்ச்சிவசப்பட்ட தகப்பன் நன்றியோட வாத்தியாரைப் பார்த்தார். இவ்வளவு கஸ்டங்களுக்குள்ள கொழும்புக்குப் போய் தம்பியோடை கதைச்சு அவன் அனுப்பின காசைப்பாதுகாப்பாகக் கொண்டு வந்திருக்கிறியள் வாத்தியார் " அது தாயார் மகிழ்ச்சியில் என்ன சொல்லுவது என்று தெரியாமல் தந்த புகழாரம். தன் இளைய மகன் வெளிநாட்டிலிருந்து கைச்செலவுக்கு அனுப்பிய காசில் ஒரு பகுதியை இவர்களின் மகன் தேவன் கனடாவிலிருந்து அனுப்பியதாய்ப் பொய் சொல்லிக் கொடுத்ததுக்கு இது மாதிரியான புகழாரம் என்னவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நையாண்டி செய்வது போலிருந்தது தம்பையா வாத்தியாருக்கு. தேவனுடன் தொலைபேசியில் கதைத்தபோது அவனின் அலட்சியமான பதிலையோ காசு அனுப்பாததையோ இவர்களிடம் எப்படிச் சொல்லுவது? ஏற்கனவே உளமும் உடலும் நொந்து போயுள்ள இந்த மூன்று சீவன்களும் உள்ளதைச் சொல்லிவிட்டால் தாங்கமாட்டார்கள். அந்தச் சக்தி இவர்களிடம் எப்பொழுதோ விடைபெற்றுவிட்டது. தான் கொடுத்த ஏழாயிரம் மகிழ்ச்சியைக் கொடுக்கும், தான் சொன்ன பொய் சரியெனப்பட்டது வாத்தியாருக்கு. அந்த மனத்திருப்தியில் சம்பவங்களை அசைபோட்டபடி பயணக் களைப்பில் தம்பையா வாத்தியார் கண்அயர்ந்தார்.

தேவனின் தாயாருக்கு அளவில்லாத மகிழ்ச்சி ‘‘பிள்ளை எப்படியெல்லாம் இருக்கிறானோ ஏதோ நாங்கள் எவ்வளவோ கடிதங்கள் போட்டதுக்கு இந்தக்காசை அனுப்பியிருக்கிறான்.” பெற்ற மனம் ஒருவகைப்பூரிப்பில் கொண்டாடியது. இடம் பெயர்ந்து வந்த நாள் முதல் பட்ட அவஸ்தைக்கு நடுவே மகிழ்ச்சிக்கு இடமில்லாத போது இன்று தான் இவர்கள் மனமாரச் சிரித்தார்கள். சில உணவுப் பண்டங்களை விசேடமாய்த் தயாரித்துச் சாப்பிட்டபோது நீண்ட இடைவெளிக்குப்பின் விருந்து உண்பதுபோல் இருந்தது. அத்தனைநாள் பட்டதுயர் எல்லாம் பனியெனக் கரைந்தது போல் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள். தனக்கு ஓர் ஊன்றுகோல் கிடைத்த உணர்விலே தகப்பன் மிதந்தார். வயதான காலத்தில் மகனின் உழைப்பு வருகிறது என்ற புதிய நம்பிக்கை அவரிடம் பிறந்தது. மகனின் உழைப்பில் சாப்பிடும்போது ஒவ்வோர் சோற்றுப் பருக்கையும் அமிர்தக்கட்டியாகச் சுவைத்தது. மகன் வெளிநாட்டில் இருப்பதாய்ப் பெருமையாகச் சிலரிடம் கதைத்தபோது “என்ன பிரயோசனம் பிச்சை எடுக்காத குறையா நிக்கிறியள், கடிதம் கூடப் போடாத பிள்ளை இருந்தென்ன விட்டென்ன” என்று புறத்தியார் திருப்பியடித்தது போலிருந்தது. இந்த ஏளனங்கள் கேட்டுக் கூனிக் குறுகியவருக்கு இப்போது அவர்கள் முன் போய் நிமிர்ந்து நிற்க வேண்டும் போல் இருந்தது.

நாட்கள் நகர இரகசியம் பரகசியமானது. தம்பையா வாத்தியார் தன் காசைத் தேவன் அனுப்பியதாகச் சொல்லிக் கொடுத்தது தெரியவந்தது. மகிழ்ச்சி கொண்டாடிய வீட்டில் சத்தமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமல் போனது.

தேவனைப்பற்றிய கவலைகள் எல்லாமே கரைந்து விட்டன என நினைத்தபோது அவை மேலும் விஸ்வரூபம் எடுப்பது போலிருந்தது. தேவன் காசு அனுப்பவில்லையென்றால் விட வேண்டியது தானே ஏன் வாத்தியார் தன்னைக் கடமைப்பட வைக்கிறார்? தேவனின் தகப்பனாரின் மனம் குமுறியது.

முதன் முதலாகத் தேவனுக்குத் தகப்பன் கடிதம் எழுதினார். "தேவா! தன் வீட்டைக் கவனிக்காத பிள்ளை பெயருக்குத்தான் பிள்ளை. நீ உன்னைக் கவனிச்சாலே போதும். இவ்வளவு நாளும் எங்களைக் கவனிக்காத நீ இனியும் கவனிப்பாய் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஏதோ நாங்கள் பிழைச்சுக் கொள்கிறம்" உணர்ச்சிவசத்தில் மனதிலே வந்ததையெல்லாம் எழுத்தில் வடித்தார். கடிதத்தைத் தபாலில் சேர்க்கத் தபாற் பெட்டியை நோக்கி தேவனின் தகப்பன் நடந்தார். தூரத்திலே தம்பையா வாத்தியாரின் குடிசை தெரிந்தது. மனசுக்குள் மானசீகமாக தம்பையா வாத்தியாருக்கு நன்றிக்கடன் பட்டவராய்ப் பெற்ற மகனின் கல் நெஞ்சை விட வாத்தியாரே உங்கள் இளகிய மனம் எவ்வளவோ மேல் என்று எண்ணிக் கொண்டார்.

03.07.2004

-ஈழமுரசு-

ரொறன்ரோ, கனடா

ஒரே நேரத்தில் பத்துக்கும் மேற்பட்ட நாடுகளில் வெளிவரும் பத்திரிகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12
# பறக்க இடம் தேடும்.. அகதிப் பறவைகள்

அது ஓர் பௌர்ணமி நிலவு, பால் தெளித்துவிட்டது போல் பார்த்த இடமெல்லாம் வெள்ளை வெளேர் என்றிருந்தது. தேவிகா யன்னலூடாகப் பார்த்தபோது தெரிந்த இக்காட்சிகளைத் தொடர்ந்து பார்த்துகொண்டே இருக்கலாம் போலிருந்தது. வரண்டுபோன தேவிகாவின் நெஞ்சத்திற்குப் பூரண நிலவொளி குளிர்மையூட்டுவதாயிருந்தது. நள்ளிரவின் நிசப்தத்தைக் கலைத்ததாய் முன்வரவேற்பறையிலிருந்த சுவர்க்கடிகாரம் பன்னிரண்டு முறை அலறி ஓய்ந்தது. படுக்கையறை யன்னலோரம் இருந்த தேவிகா ‘‘அட அதுக்குள்ள இரவு பன்னிரண்டாச்சு” என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு முன் வரவேற்பறைக்கு வந்தார். ;பிள்ளைகள் மீனாவும், சித்திராவும் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தனர். வழமையிலே பதினொரு மணிக்குள் வேலை முடிந்து வரும் கணவர் வினாயகமூர்த்தி இப்போதுதான் கதவைத்திறந்துகொண்டு உள்ளே வந்தார். உடைகளை மாற்றிக் கால் கைகளை அலம்பிவிட்டுச் சாப்பாட்டு மேசையில் ஆயாசமாக வினாயகமூர்த்தி இருந்தார். சூடாக்கிய உணவைப்பரிமாறிய தேவிகாவைப் பார்த்து “இண்டைக்கு வேலைமுடியப் பிந்திப் போச்சுது” என்றார் கணவர். இருவரும் சாப்பிட ஆரம்பித்தனர். தேவிகாசாப்பாட்டைப் பிசைந்தபடி ‘‘ஏனப்பா நாளைக்கு நடக்கிற எங்கட அகதி வழக்கில் இந்தமுறையாவது வெல்லுவோமா?” விநயமாகக் கேட்டார். வினாயகமூர்த்தி ‘‘தேவிகா இது மாதிரி எத்தனை தரம் கேட்டுப்போட்டீர் ஏன் பயப்பிடுகிறீர்? நிச்சயமாக வெல்லுவம்” ஆறுதலாகச் சொல்லித் தேவிகாவின் முகத்தை அனுதாபத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தார் கணவர். வழக்கில் வெல்லுவோமா என்ற நம்பிக்கையற்ற மன நிலையிலிருந்தும் தேவிகாவுக்குத் தன் பயத்தை வெளிக்காட்டாதவராய் விநாயகமூர்த்தி தவித்தார். இதுபற்றிப் பேச ஆரம்பித்தால் தேவிகா கதையைத் தொடர்ந்து கொண்டு போவார். அதற்குள் விடிந்துவிடும். "தேவிகா நாங்கள் பயப்பிடுகிற அளவுக்கு வழக்குப் போகாது. சாதகமாய்த் தீரும். நீர் யோசிக்காமல் போய்ப்படும்." மனைவிக்கு மேலும் உற்சாகம் கொடுத்துவிட்டு வினாயகமூர்த்தி படுக்கையில் சாய்ந்தார். தேவிகாவுக்கு நித்திரை வரமறுத்தது. நித்திரைக்குப் பதிலாய்ப் பழைய சம்பவங்கள் தான் ஒன்றின் பின் ஒன்றாக ஞாபக மேடையில் தோன்றின.

சரியாக இருபது வருடம் என்று தேவிகாவுக்கு ஞாபகம். அப்போது மீனாவுக்கு இரண்டு வயது, சித்திராவுக்கு ஒருவயது தாயகத்தை விட்டு வெளிநாட்டுக்கு என்று புறப்பட்ட போது. விநாகயமூர்ததிக்குப் பார்த்த அரச உயர் உத்தியோகத்தை விட்டு வர மனமில்லாமல் தேவிகாவின் வற்புறுத்தலின் பேரில் புறப்பட்டார். புறப்பட்டபோது மனக்குழப்பங்களுக்குக் குறை வில்லை. பலர் ஜேர்மனிக்குப் போங்கோ என்று சொல்ல இல்லை பிரான்ஸ், சுவிஸ் பராவாயில்லை உழைக்கலாம் தானே என்று இன்னும் குழப்ப இலண்டனுக்குப் போனால் பிள்ளைகள் இங்கிலீசில் படிக்கலாம். தெரியாத பாசை போய்ப் படிக்கிறதைவிடத் தெரிஞ்ச பாசை ஆங்கிலம் பேசற இலண்டன் பிரயோசனம் என்று இருக்கிற குழப்பத்தைக் கிளறிவிட மீன் பிடித்தமாதிரி எந்த நாட்டைத் தெரிவு செய்வது என்று மண்டையைப் போட்டுக் குடைந்து கடைசியில் சுவிற்சர்லாந்துக் குப்போக முடிவானது. அன்றைய சிக்கலான பொருளாதார நிலமைக்கு ஏற்றாற்போல் தெரிந்த ஒரு முகவர் நேரே சுவிசில் கொண்டு போய் விட்டார். பேர்லின் ஊடாக அகதிகள் ஐரோப்பிய நாடுகளுக்குப் போன நேரத்திலே பட்ட அவஸ்தைகள் எதுவும் இல்லாமல் குறைந்த செலவில் முகவர் சுவிசில் கொண்டு போய்விட்டதே பெரிய காரியம். இதுவும் அங்கேபோய்ச் சேர்ந்தபோது சுவிசில் உள்ளவர்கள் சொல்லத்தான் கொஞ்சம் கொஞ்சமாய்ப்புரிந்தது. புறப்படும்போது யாரும் ஒன்றுமே சொல்லவில்லை.

சூரிச்சில் இருந்த நாலுவருடங்கள் எப்படிப்போனதோ தெரியவில்லை. அதற்குள் வந்து போன சம்பவங்கள் எதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுவில் மறப்பதற்கில்லை. வினாயகமூர்த்திக்குக் கிடைத்த வேலையே ஒரு திண்டாட்டமாயிருந்தது. அறிந்த தெரிந்த பலர் வேலை கிடைக்காமல் திண்டாடியபோது கிடைத்த வேலை கஸ்டமானது செய்யமுடியாது என்று கணவர் திண்டாடினார். அது போதாதென்று அகதிவழக்கின் அலைச்சல் ஒரு புறம். மூன்றுவருடகால இடைவெளிக்குள் இரண்டுதரம் விசாரணைக்குக் கூப்பிட்டுக் கடைசியில் அகதி நிலை நிராகரிக்கப் பட்டது என்று அறிவித்தார்கள். முதல் வழக்கு என்று அழைத்த நாள் முதல் முடிவு அறிவிக்கும் தீர்ப்பு நாள் வரை மனம் பட்டபாடு இருக்கிறதே, அப்பப்பா தினம் தினம் செத்துப் பிழைத்தவன் கதிதான். இந்தக் காலகட்டத்தில் வழக்கு நிராகரிக்கப்பட்டு இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டவர்கள் அதிகம் என்று கேள்வி. இதையெல்லாம் கேள்விப் படப் பயமும் மனக் கிலேசமும் எங்கள் குடும்பத்தையே சித்திரவதை செய்தது. சுவிசில் குடிவரவு குடியகல்வு காவல் துறையெல்லாம் ஒரே திணைக்களம் என்பதால் சாதாரணமாக வீதியில் காவல் துறையைக் கண்டால் போதும் கை கால் நடுங்கும் அளவுக்கு திருப்பி அனுப்பும் படலம் அடிக்கடி அரங்கேறியது. சுவிசை விட்டு வெளியேறும்படி கடிதம் வரமுன்னரே கனடாவுக்குப் போவதாய்த் தீர்மானித்தோம். காவல் துறை பிடித்துக் கொண்டுபோய் அனுப்பினால் நேரே இலங்கைக்குத்தான். விசயத்தில் முந்திக் கொண்டு புறப்பட்டுவிட்டோம். அதனால் சுவிஸ் மண்ணைவிட்டு வெளியேறியபோது பெரிதாக எதையும் கொண்டுவர முடியவில்லை.

ரொறன்ரோவில் விநாயகமூர்த்தியின் அண்ணனின் வீட்டில் கொஞ்சநாள் தங்கவேண்டி வந்தது. கடும் வேலைப்பளுவுக்கு மத்தியில் இவரின் அண்ணன் செய்த உதவிகள் என்றும் மறக்கமுடியாதவை. பின்னர் தொடர்மாடிக்கட்டிடத்திற்கு இடம் மாறியிருந்தோம். அப்போது தான் இடவசதியின் சுகத்தை மீனாவும் சித்திராவும் அனுபவித்தார்கள். சமூகநல உதவி, பாடசாலை அனுமதி, வேலை தேடல் என்று கொஞ்சநாள் ஒரே அமளியாயிருந்தது. புதிய நாட்டில் புதிய சூழலில் தெரிந்த சுறுசுறுப்பான வாழ்க்கை ஆரம்பத்தில் மகிழ்ச்சியாயிருந்தது. சுவிற்சர்லாந்தில் இல்லாத பல இங்கே காணக் கூடியதாய் இருந்தன. யாரைப்பார்த்தாலும் சொல்லும் தாரகமந்திரம் “நேரமில்லை நேரமில்லை”. பொழுதே போகவில்லை என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்புவோரும் கடைசியில் பாடுவது இந்தப்பல்லவியைத் தான். ஆரம்பத்தில் வினாயகமூர்த்தி அடிக்கடி சொல்லுவார் “இந்த நாட்டிலை இருக்கக்போறம் கனடிய நீரோட்டத்தில் இறங்கினாலும் எங்கடை சாயம் கழுவுப்படாமல் பார்த்துக் கொள்ளவேணும்” கணவர் சொன்னது நேற்று என்றது போலிருக்கிறது, அதற்குள் வருடங்கள் பல உருண்டோடிவிட்டன. வினாயகமூர்த்திக்கு நிதி நிறுவனமொன்றில் வேலை கிடைத்தது. தேவிகா பங்குச் சந்தை நிறுவனத்தில் நல்ல வேலையில் சேர்ந்தார். இலங்கையில்படித்த படிப்புக்கு ஒத்தது போல் தோதான வேலை இருவருக்கும் கிடைத்ததில் ஒரு திருப்தி. மீனாவும் சித்திராவும் பாடசாலை, படிப்பு என்று சுறுசுறுப்பாகி விட்டார்கள். அப்பா, அம்மா, பிள்ளைகள் நாலுபேரும் ஒன்றாக இருந்து சாப்பிடுவதே பெரிய சிரமமாயிருந்தது. அவ்வளவுக்கு எல்லோரும் ஓட்டமும் நடையும் தான். இந்த நேரத்தில் தான் அகதி வழக்கின் விசாரணை வந்தது.

சுவிசில் ஏற்பட்ட அனுபவத்தில் அகதி வழக்கு என்றதும் அத்தனை பயமும் ஒன்றாகச் சேர்ந்தது போல உடம்பெல்லாம் பதறியது. தேவிகாவுக்கு மட்டுமல்ல வினாயமூர்த்திக்கும் இதே உளச்சித்திரவதைதான். ஆனால் மனிதர் வெளிக்காட்டவில்லை. தனக்குள் அடக்கிக்கொள்வார். தேவிகா தனக்குள்பேசிக் கொள்வார். “நான் மட்டும் தான் பயத்தில் எல்லாத்தையும் உளறிக் கொட்டிவிடுவேன் போலிருக்கு. பயமே தெரியாத பிள்ளைகளிடம் பயத்தைக்காட்டப் பிள்ளைகள் விசாரணையில் உளறிவிட்டால் வழக்குத் தலைகீழாய்ப்போய்விடும்” பேதை மனம் வதைபட்டது. கணவரிடம் மனக்கிடக்கையைக் கொட்டித் தீர்த்தபோது அவரும் எச்சரித்தார். “தேவிகா! ஏதோ நடக்கிறது நடக்கட்டும். சுவிசில் என்ன நடந்தது. வீணாக நாங்கள் பயத்தில் செத்துப் பிழைச்சது தான் மிச்சம். முக்கியமாக மீனாவுக்கும் சித்திராவுக்கும் எங்கள் பயத்தைக் காட்டி வளர்க்கக் கூடாது” அதை ஆமோதிப்பது போல் தேவிகாவும் தலையசைத்தார்.

இதே நேரம் அகதி வழக்கு நிராகரிக்கப்பட்டதாய் அறிவிக்கப் பட்டது. பழைய குருடி கதவைத் திறவடி தொடர்கதையாகி விட்டதோ.“துணிவை வரவழைத்துக் கொண்டு மேன்முறையீடு செய்யுங்கோ’’ என்று வழக்கறிஞர் உற்சாகம் தந்து மேன்முறையீடு செய்தும், நிராகரிப்பு உறுதியாக்கப்பட்டது. பிறகென்ன எல்லாமே அடுக்கடுக்காய் நடந்தேறின. கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாகக் கனடாவுக்குள் புகுந்து, அமெரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையில் நயாகராவீழ்ச்சிக்கு அருகில் கொண்டுபோய் விட்டார்கள். “இதைத்தான் நாடுகடத்துதல் என்று சொல்லுவது” என்று விநாயகமூர்த்தி சொன்னபோது அதன் கருத்தின் தாக்கம் விளங்கியது. கடும் குற்றவாளிகள், நாட்டுக்கு மகா ஆபத்தானவர்களுக்குத் தரும் தண்டனையிது. எங்களைப் போல் பிறந்த நாட்டில் பாதுகாப்பில்லாமல் ஏதிலியாக வந்து அடைக்கலம் புகுந்தவர்களுக்குமா இது? அகதி வழக்கு நிராகரிக்கப்பட்டு விட்ட ஒரே ஒரு காரணத்துக்காக நாமும் குற்றவாளிகளும் ஒன்றாகிவிடுமா? மீண்டும் ஒரு மாதம் வரை அமெரிக்க எல்லையில் அகதி முகாம் வாழ்க்கை. பொழுது போகாது, சும்மாயிருக்க மனம் சஞ்சலப்பட்டது. பிள்ளைகளுக்கு பாடசாலை இறுதி ஆண்டுப் பரீட்சை ஒரு புறம். வேலைக்கு சம்பளம் இல்லாத விடுப்பில் இரண்டு பேரும் வந்து இங்கே இருக்கிறம். “ஏதோ நடப்பது நடக்கட்டும்'' விரக்தியிலும் இயலாமையிலும் விநாயகமூர்த்தி அடிக்கடி தேவிகாவையும் பிள்ளைகளையும் தேற்றுவார். அவரின் பேச்சுத்தொனியில் அவர் மனக் கஸ்டம் உணரக் கூடியதாய் இருந்தது. இடையிடையே ரொறன்ரோவுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதால் உள்ளூர்ப் புதினங்களை அறிவதோடு புண்பட்ட எங்கள் மனங்களுக்கு ஆறுதலாயுமிருந்தது.

திரும்பவும் கனடிய எல்லையூடாக ரொறன்ரோவுக்கு வந்தபோது ஏதோ அழையாத வீட்டுக்கு விருந்தாளியாக வந்தது போல விநாயகமூர்த்திக்கு இருந்தது. ‘‘இனி எதிர்காலம் எப்படியிருக்குமோ? என நினைக்க நினைக்கப் பதில் கேள்விக்குறியாகி மனவிம்பத்தில் தெரிந்தது. திரும்ப வீட்டுக்கு வந்தபோது ஒரு மாதமாய்ப் புழக்கம் இல்லாமல் எங்கும் தூசிமயமாயிருந்தது. வேலைக்குப் போன போது சக ஊழியர்களின் கேள்விக் கணைகள் எம்மைத் துளைத்தது. இலங்கைக்கு அவசரமாய்ப் போய்வருகிறோம் என்று சொல்லி ஒருமாத விடுப்பு ஏற்கனவே எடுத்ததால் எங்கே போய்வந்தோம் என்று யாருக்கும் தெரியவில்லைப் போலும். ஏதோ தப்பிக் கொண்டோம் என்று நினைக்க மீனாவும் சித்திராவும் பள்ளிக்கூடத்திலிருந்து வந்து புலம்பினார்கள். ஒரு மாதமாய்ப் பள்ளிக் கூடம் போகாததால் ஏராளமான பாடத்திட்டம் உடனடியாகப் படித்து முடிக்க வேண்டுமாம். எப்படிச் சாத்தியம் என்று எங்களையே கேட்டார்கள். என்ன செய்வது நாம் விரும்பியா போய் அஞ்ஞாதவாசம் மாதிரி இருந்துவிட்டு வந்தோம்? எங்கள் விதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை இலேசில் விட்டு விடுமா என்ன? அதன் பிறகு நகர்ந்த நாட்கள் மெதுவாக நகர்ந்தது போல் ஓர் பிரமை. யாரைப் பார்த்தாலும் அறிந்தவர் தெரிந்தவர் எவராவது "ஒரு மாதமாய் எங்கே போயிருந்தீங்கள்'' என்று கேட்டு விட்டால் என்ன சொல்லுவது என்ற சங்கடத்தடன் வெளியே திரிய வேண்டியிருந்தது.

வழக்கு நிராகரிக்கப்பட்டதாய் வழக்கறிஞர் அறிவித்தபோது தேவிகா தன்னைஅறியாமல் அழுதுவிட்டபர். கணவரோ இடிந்து போய்விட்டார். யாருக்கு யார் ஆறுதல் சொல்வது? வழக்கறிஞர் ஒரு யோசனை சொன்னார், அதாவது அல்பேட்டா மாகாணத்தில் கல்கேரியில் வழக்கை மேன்முறையீடு செய்யும்படி. நிராகரிக்கப்பட்ட வழக்குகள் அங்கே சரிவந்ததாய்க் குடிவரவு குடியகல்வு வட்டாரத்தில் ஓர் கதை அடிபடுகிறதாம். சரி ஏதோ வருவது வரட்டும் என்று நாலுமாதம் அங்கே போய்த் தங்கி மேன்முறையீடு செய்ய வேண்டி வந்தது. முன்பின் தெரியாத இடம், ஏதோ கொஞ்சத் தமிழர்கள் வாழும் இடமானதால் தெரிந்தவர் எவரும் இருக்கவில்லை. அங்கேயும் வழக்கு நிராகரிப்புத்தான் ''கொழும்பிலே நீங்கள் பாதுகாப்பாய் வசிக்கலாம்". இதற்காக வழக்கு நிராகரிக்கப்பட்டதாய்க் கோடிட்டுக் காட்டியிருந்தார்கள். என்ன செய்வது எல்லாமே வெறுத்த நிலையில் திரும்பவும் எங்கே போவது? ரொறன்ரோவைத் தவிர வேறு இடம் தெரியவில்லை கடைசிக் கருணை மனு என்று வழக்கறிஞர் ஒரு மனுத்தாக்கலை வித்தியாசமாய்ச் செய்தார். இப்போ எங்கே நிற்கிறோம் என்று சிலநேரங்களில் என்னையே நான் வினாவியிருக்கிறேன். அவ்வளவுக்கு அலைச்சல் ஆட்டிப்படைத்திருக்கிறது. நினைவுகளில் மூழ்கிய போது தூக்கம் விடைபெற்று விட்டது. தலையைத் திருப்பி மணிக்கூட்டை பார்த்தால் காலை 6.30 மணி காட்டியது. கொட்டாவி விட்டபடி கண்ணைக் கசக்கியபடி எழுந்திருந்தார் தேவிகா. இன்றும் கடைசி கருணை வழக்குச் சறுக்கி விட்டால் எங்கே போவது? சாதரணமாய் ஒரு பறவை என்றால் கூடச் சுதந்திரமாய் எங்கும் எப்பவும் பறக்கலாம். தடுத்து நிறுத்த யாரும் கிடையாதே நாங்கள் தான் அகதிப் பறவையாச்சே. எங்கே எப்போது சுதந்திரமாய்ப் பறப்பது?

09.07.2004
-முழக்கம்-
ரொறன்ரோ, கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

# நீறுக்குள் நெருப்பு

அப்படி என்னதான் நடந்துவிட்டது? இப்படி ஒரு இக்கட்டான நிலையில் நிமலன் என்றுமே இருந்ததில்லை. எதையோ இழந்துவிட்ட சோகம் தாண்டவமாடும் விம்பமாய் முகம் வெளுறியபடியிருந்து. பலசரக்குக் கடை ஒன்றின் உரிமையாளரான நிமலன் கடை திறந்து அரைமணி நேரம் கூட இருக்காது. அதற்குள் கேட்ட எறிகணைச்சத்தமும் துப்பாக்கி வேட்டொலியும் அவனை ஒரு கணம் உலுப்பி எடுத்து விட்டன. இந்தச் சத்தங்கள் ஈழத்திலே தமிழர் தாயகப்பகுதிகளில் ஒன்றும் புதியதல்ல. இன்று காலை விடியுமுன்னரே நிமலனின் தாயும் தங்கை செல்வியும் கிளிநோச்சி நகரிலுள்ள ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்குப் போயிருக்கிறார்கள். முதற் பேருந்து வரும் வரை காத்திருந்து இரண்டுபேரையும் வழியனுப்பிவிட்டுக் காலைக் கடன்களை முடித்து விட்டுக் கடையைத் திறந்து வியாபாரம் ஆரம்பித்த போது கேட்ட சத்தங்கள் தான் நிமலனுக்கு அதிர்ச்சியைத் தந்தன. கிளிநொச்சி நகரை ஆக்கிரமித்த எதிரி இராணுவத்தின் துப்பாக்கியும் எறிகணையும் கக்கிய ஓசை அது. நகருக்குள் சென்றவர் கதி என்னவோ தெரியாது. தாயின் உடல் நிலையை நினைக்க, அவனுக்குத் தவிப்பாகவிருந்தது. “அவவின் உடல் நிலைக்கு ஏதன் அவசரம் ஆபத்துக்கு ஓடவும் முடியாது. சேர்ந்து போன செல்விக்கு இடம் புதிசு. இந்த வெடிச்சத்தங்கள் தூரத்திலே எங்களுக்குக் காதைச் செவிடாக்குது. முன்னாலை நிக்கிற சனத்துக்கு அவலம் எப்படியிருக்கும்…?” நிமலனுக்கு நினைக்க நினைக்கக் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. ‘‘கடையை வேறு யாரையாவது பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்பத்திரிக்குச் சேர்ந்து போயிருக்கலாம், பெரிய உதவியாக இருந்திருக்கும் இப்ப இங்கே நின்று மூளையைப் போட்டுக் குழப்ப வேண்டி வந்திருக்காது'' தனக்குத்தானே பேசிக் கொண்டான் நிமலன். குட்டி போட்ட பூனையைப் போல் கடைக்குள் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து திரிந்த போது கடையின் எதிர்ப்புறம் தனியார் பேருந்து ஒன்று பிரயாணிகளை இறக்கிக் கொண்டிருந்தது. இந்தப் பேரூந்தில் திரும்பி வந்திருப்பார்களா? மனம் அங்கலாய்க்க வீதியில் இறங்கி நின்று பார்த்தபோதுதான் தெரிந்தது அவர்கள் இந்தப் பேரூந்தில் வரவில்லை என்று. நகரில் என்ன நடந்தது என்றாவது அறிந்துவிடவேண்டும், வந்திறங்கியவர்களிடம் கேட்டால் சொல்லுவார்களே" நிமலன் நினைக்க அதற்குள் முந்திக்கொண்ட இருவர் தங்களுக்குள் பேசிக் கொண்டு சென்றனர். "துப்பாக்கிச்சத்தம் இராணுவ முகாமுக்குக்கிட்டக் கேட்டவுடன் இராணுவம் நாலுபுறமும் சுட்டு எறிகணை வீசியிருக்கிறான். பயத்தில அங்கே போன பேருந்து திரும்பி வந்திருக்குது"

நிமலன் என்ன நடக்கும் என அனுமானித்தான், அம்மாவும் செல்வியும் நகருக்குள்தான் மாட்டுப்பட்டிருக்கினம். இராணுவம் நகருக்குள் யாரையும் உள்ளே போகவோ வெளியேவரவோ விட மாட்டான். இன்று ஆஸ்பத்திரி அலுவல்கள் எல்லாம் அம்போதான். நகரைச் சுற்றி வளைச்சுத் தேடினால் எப்பவிடுவானோ? என்ன செய்வானோ? உள்ளே போகவிட்டால் துவிச்சக்கர வண்டியில் உடனே போய் வரலாம். கடைக்குள் நின்று விடைகாணாத போதுதான் நிமலனுக்குப் போனமாதம் நடந்த சம்பவம் நினைவுக்கு வந்தது. நிமலன் கிளிநொச்சி நகருக்குள் ஒரு அலுவலாகப் போனபோது இராணுவம் பிடித்து இரண்டு நாள் முகாமில் வைத்து விசாரித்து விட்டாங்கள். நல்ல வேளையாக விட்டதே பெரிய விடயம். ஏனென்றால் சேர்ந்து பிடிபட்டவர்கள் யாரும் இன்றுவரை விடப்படவில்லை. என்ன நடந்ததோ தெரியாது. நிமலனுக்குத் துவக்குப் பிடியால் அடிவிழுந்தது உண்மைதான். தோள்பட்டையில் எலும்பு நோவு இன்னும் மாறவில்லை. தோளை ஒருகையால் தொட்டுப்பார்த்தான் நிமலன், விரல் படவே விண், விண்ணென்றிருந்து. விடுதலை செய்தபோது நிபந்தனை போட்டது இராணுவம்." சந்தேகப் படும்படி யாரும் இருந்தால் உடனடியாக அறிவிக்க வேணும் என்று "இன்று போகும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளம் கண்டுவிட்டால் போதும் திரும்பவும் பிடிச்சுப்போடுவான். வேண்டாம் கரைச்சல்" எனச் சிந்தனை வசப்பட்டவனாய் நிற்கச் சாமான் வாங்க வந்தவர் ஒருவர் ''முதலாளி முதலாளி'' என்று கூப்பிட்டபோதுதான் இந்த உலகத்திற்கு வந்தவன் போல் விழித்தான். இன்று அதிசயமாகக் கடைதிறந்தவுடன் இந்த நேரத்தில் வந்த இரண்டாவது வாடிக்கையாளர் இவர். வழக்கமாய்க் காலையில் வாற சனம் தேயிலை, சீனி, மாவு என்று தான் ஓடிவாறவை. வந்தவரோ புதினம் மட்டும் கேட்க வந்தார். ''முகாம் பக்கம் என்ன நடந்ததாம்" நிமலனுக்குமனம் பதைபதைக்கிற நேரம் இவரின் கேள்வி என்னவோ செய்தது.

வியாபாரம் கொஞ்சம் சூடுபிடிக்கத் தொடங்கிய நேரம் கிளிநொச்சி நகரப் பக்கத்திலிருந்து வாட்டசாட்டமான இளைஞர் ஒருவர் துவிச்சக்கர வண்டியில் வந்து கடைவாயிற்படியில் காலையூன்றியபடி "அண்ணை ஏனாம் ரவுனுக்கை ஆமிச் சுட்டு செல்லடிச்சானாம்''? என்று சாதாரணமாக வினாவினார். சாமான் வாங்க வந்த முதியவர் ஒருவர் ''ஏன் தம்பி அங்கியிருந்துதானே வாறாய் எங்களைக் கேட்கிறாய்" என்று சத்தமாய்க் கேட்டு விட்டார். சாமான் வாங்க வந்தவர்கள் எல்லோரும் திரும்பி ஒரு கணம் வாசலைப் பார்த்தபோது துவிச்சக்கர வண்டியில் நின்ற இளைஞருக்கு என்ன சொல்லுவது என்று தெரியாமல் முகம் வியர்த்துக் கொட்டியது. சில நிமிடத்தில் யாரும் அந்த இளைஞனைப் பார்க்காதபோது மாயமாக நழுவி விட்டார். முதியவரோ கோபம் அடங்கமால் "எங்கட மண்ணை ஆக்கிரமிச்சிருக்கிற எதிரிக்கே அதுக்கு காரணம் தெரியாது. சும்மா கையிலையுள்ள துவக்கைச் சுழட்டிச் சுடக்காரணம் மட்டும் சொல்லப் போறானோ? அதுக்குத்தான் அதிகாரம் குடுத்திருக்கு" என்று தனக்குள் முணுமுணுத்தபடி கையில் சாமான் பையுடன் கடைப்படியை விட்டிறங்கி வீதியல் நடந்தார்.

அன்று கிளிநொச்சி நகரம் முழுவதும் சுற்றிவளைக்கப் பட்டிருந்தது. நகருக்குள் போன அனைவரும் வயது பால் வேறுபாடின்றி ஆஸ்பத்திரி வளவுக்குள் நிலத்தில் இருத்தப்பட்டனர். அடையாள அட்டைபார்க்கப்பட்டுத் தலையாட்டி முன் நிறுத்தப்பட்டனர். பலர் விசாரணைக்காகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுத்து வைக்கப்பட்டனர். அனுராதபுரம் பெரிய ஆஸ்பத்திரிக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பவேண்டிய அவசரசிகிச்சை வண்டிச் சாரதியும் சிற்றூழியர்களும் தடுத்துவைக்கப்பட்டனர். மாலை நாலு மணியளவில் எல்லோரும் போக அனுமதிக்கப்பட்டனர். அதுவரை எவரும் இருந்த இடத்தை விட்டு நகரவோ பச்சைத் தண்ணீர் கூடக் குடிக்க விடவில்லையாம். செல்வி திக் பிரமை பிடித்தவள் மாதிரி எதுவும் பேசாமல் இருந்தாள். நிமலனின் தாயார் வந்தவுடன் கட்டிலில் சாய்ந்து எழும்ப முடியாமல் சிலமணிநேரம் கஸ்டப்பட்டார். நடந்தது என்ன வென்று சொல்லத் தொடங்கினார் தாயார். தொடரமுடியாமல் மூச்சுத் திணறியது. அப்போது தான் செல்வி வாய் திறந்தாள் கையை அமர்த்திப் பேச வேண்டாம் என்று சைகைக் காட்டிவிட்டு “அம்மா தான் பாவம் பெரிய கஸ்டப்பட்டா. இவ வருத்தக்காறி ஆஸ்பத்திரிக்கு வந்தவ என்று சொல்லியும் துவக்குப் பிடியால் ஆமி தள்ளிப் போட்டான்'' என்றாள். “எல்லாரையும் அடிச்சு உதைச்சு சித்திரவரை செய்தாங்கள். எங்களை ஒன்றும் செய்யவில்லை. எனக்கு நினைக்கவே உடம்பு பதறுது. அப்ப அம்மாவுக்கு எப்பிடியிருக்கும்” மீண்டும் செல்வி பேசினாள். செல்வியின் குரலிலும் முகத்திலும் சோகம் தெரிந்தது.

இருவாரங்கள் தாண்டியிருக்கும் வீட்டிலே கடிதமொன்று மேசையில் தென்பட்டது நிமலனின் தாயார் பரபரப்போடு வாசித்தார். “அம்மா, அண்ணா; எதிரியை எம்மண்ணில் வைத்து அழித்து மண்ணை மீட்கப் போராடப் போகிறேன். திடீரென்று முடிவெடுத்துப் போகவில்லை. நெடுநாள் மனப்போராட்டத்தில் எடுத்த முடிவு. நான் போராடப் போனதையிட்டு நீங்கள் மகிழ்ச்சியடைய வேணும். தவிர அழக்கூடாது. அம்மா நேரத்துக்க மருந்து சாப்பாடு இரண்டையும் கவனிக்கவும்” என்று செல்வி எழுதியிருந்தாள். இருந்தும் மகளின் பிரிவையிட்டு கண்களில் நீர் பொலபொலவென்று வழிந்தோடியது. வாய்விட்டழுதால் அபசகுனம் ஆகுமோ என்று நினைத்தபோது அழுகையைச் சிரமத்தின் பின் அடக்கிக் கொண்டார் நிமலனின் தாயார். செல்வி யாழ்ப்பாணத்தில் பல ஆண்டுகள் தங்கிப் படித்துக் கொண்டிருந்தவள். க.பொ.த. உயர்தரம் பரீட்சை எழுதிவிட்டு ஒரு மாதம் இருக்கும் வீட்டுக்கு வந்து ஆறுதலாக நிற்கிறாள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நினைத்து நிம்மதியடைந்த தாயின் எண்ணத்தில் இடிவிழுந்தது போல மனமுடைந்து போனார். செல்வி சமையலையும் வீட்டு நிர்வாகத்தையும் கவனிக்கத் தான் ஆறுதலாயிருக்கலாம் என்று நினைத்தபோது நெஞ்சு வலித்தது. உடம்பெல்லாம் வியர்த்தது. மருந்துக்குளிசை ஒன்றை வாயில் போட்டுவிட்டு உறங்கிவிட்டார்.

காலங்கள் உருண்டோடி இரு ஆண்டுகளின் பின் ஒரு நாள் நள்ளிரவு பெரும் இடியோசை கேட்டது. அதைத் தொடர்ந்து பீரங்கிகள், எறிகணைகளின் வெடியோசையும் கேட்டது. கிளிநொச்சி முகாம் தாக்கப்படுகிறது போல என்று நிம்மதியில் திரும்பவும் படுத்தார், நிமலனின் தாயார். நித்திரை கொள்ள முடியாதளவுக்கு சத்தங்கள் தொடர்ந்து கேட்டன. செல்வியின் நினைவுகள் தான் அடிக்கடி மனதில் நிழலாடியது.

செல்வி இயக்கத்திற்குப் போய் இரண்டு வருடம் ஆகிறது. ஒரு தரமாவது அவளைப்பார்க்க முடியவில்லை. பார்க்க வேண்டும் போல மனம் உந்தியது. "சண்டை என்று போனால் என்ன நடக்குமோ" என்று நினைக்க நெஞ்சு படபடத்தது. "கடவுளே என்ரைபிள்ளைக்கு மட்டுமல்ல சேர்ந்து போன போராளியளுக்கும் பொதுசனங்களுக்கும் ஒன்றும் நடக்கக் கூடாது" தாய் மனம் மனதாரவேண்டிக்கொண்டது. விடிந்த போது எந்தக் கடைகளும் திறக்கவில்லை. ஊர் எல்லாம் ஒரே பரபரப்பாகவிருந்து. போராளிகளின் வாகனங்கள் அங்கும் இங்கும் ஓடித்திரிந்த. பொது மக்கள் மகிழ்ச்சியில் போராளிகளுடன் குதூகலித்தார்கள். உணவு நீர் எல்லாம் போராளிகளுக்குக் கொடுத்து உபசரித்துக் கொண்டிருந்தார்கள். விழுப்புண் பட்ட போராளிகளை ஏற்றிக் கொண்டு அவசரவண்டிகள் அவசரமாகப் பறந்தன. முகாம் தாக்கி அழிக்கப்பட்டதன் நிம்மதி எல்லோரின் முகத்திலும் தெரிந்தது.

செல்வி விமலனின் கடைவாசலைத் தாண்டி வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு வீட்டின் உள்ளே போனாள். ''அம்மா, அண்ணா'' என்று கூப்பிட்டபோது ''பிள்ளை வந்திட்டியா" என்று தாயார் ஓடிவந்து கட்டிக் கொண்டார். சாப்பிட்டுக் கொண்டிருந்த நிமலன் எழும்பி வந்து தங்கையைப் பார்த்துக் கொண்டிருந்தான். யாரும் எதுவும் பேசவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனம் சிறிது நேரம் குடிகொண்டது. தாயும் மகளும் விசும்பும் சத்தம் மட்டும் இடையிடையே கேட்டது. "சாந்தமான உன் மனதுக்குள் இப்படி ஒரு தீ எரிந்து கொண்டிருக்கா" தாயார் மகளின் முகத்தைப் பார்த்து மனதுக்குள் எண்ணிக்கொண்டார். சீருடையில் மகளைப்பார்த்துத் தாய்மனம் பெருமைப்பட்டது. ''அம்மா சரி இப்ப என்னோடை வந்த போராளிகள் காத்திருக்கினம். பொறுப்பாளரின் அனுமதி கிடைச்சால் அடிக்கடி வருவேன். நான் போயிட்டுவாறன்" என்று செல்வி சொல்லிவிட்டு கண்ணைத்துடைத்தபடி புறப்பட்டாள். இப்போது அம்மாவும் அண்ணாவும் களிப்புடன் வழியனுப்பி வைக்கின்றனர்.

03.12.2004
-முழக்கம்-
ரொறன்ரோ, கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

# இவர்களும் மனிதர்களே

அது ஒரு கார்காலம் என்பது சொல்லத் தேவையில்லை. அந்தளவுக்குக் குளிர் தாங்கமுடியாமலிருந்தது. சுப்பையா அண்ணன் தன் மேலிருந்த சாம்பல் நிறப் போர்வையை மேலும் இறுக்கிவிட்டு வாயில் புகைந்து கொண்டிருந்த சுருட்டை இழுத்துப் புகையை வெளியே ஊதிய பின் சுருட்டை மீண்டும் வாயில் வைத்தார். கீழ் மலையிலிருந்து மேல் மலைக்கு நடக்கத் தொடங்கியதுமே களைக்க ஆரம்பித்தது. வழக்கமாக மனைவி தங்கமணியின் கையால் தேநீர் ஒரு குவளை வாங்கிக் குடித்தால்தான் குடிச்சமாதிரியிருக்கும். பிறகு இருக்கிற சாப்பாட்டைப் பகிர்ந்து சாப்பிட்டுவிட்டு ரொட்டியைக் கட்டிக் கொண்டு வேலைக்குப் போகிறவருக்கு இண்டைக்கு வெறும் வயித்தோடை நடக்கிறது என்பது முடியாமலிருக்கிறது. ஏதோ ஒன்று வாயில் இருப்பது போல் ஒப்புக்காய்ச் சுருட்டுப் புகையுதே தவிர வயிறும் தான் சேர்ந்து புகைக்கிறது சுப்பையாண்ணைக்கு. காலை நேரத்து வெயில் முகத்தில் அடித்தாலும் முகில் மலையடிவாரத்தை மறைத்தபடியிருந்தது. புகாருக்குள்ள நடந்து போறது ஆபத்துத்தான், மூலை முடக்கிலை திரும்புகிற வாகனங்களுக்கு பாதசாரியள் நடந்து வாறது சரியாகக் கண்ணுக்குத் தெரியாது. மூச்சிறைக்க மூச்சிறைக்க நடந்து ஒருவாறு மேல் மலைக்கு வந்து சேர்ந்த சுப்பையாண்ணன் தோட்ட வளவில் உள்ள பாறை ஒன்றில் இருந்து களையாறினார். அப்போது வீட்டு நினைப்பு வர மனத்திரையிலே வீட்டு வாசல் தெரிந்தது. அதிகாலை இருட்டு, தங்கமணி நித்திரை கொள்கிறாள். சின்ன யன்னலூடாக சூரிய வெளிச்சம் தெரிந்தது. லயத்துக் கோழிகள் கூவும் சத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது. தங்கமணிக்கு இந்தச் சத்தங்கள் எதுவும் கேட்கவில்லை போலும். ஏனென்றால் வழமையாக எல்லோரையும் முந்திக் கொண்டு எழும்பி மற்றவர்களையும் எழுப்புவது தங்கமணிதான். தங்கமணி எழும்பிவிட்டால் போதும் வீடே பரபரப்பாயிருக்கும். அதுவும் சமையலறை களை கட்டிச் சுறுசுறுப்பாய் இயங்கும்? பிள்ளைகள் தமிழரசி, அன்பரசன், முத்து மூன்று பேரும் அயர்ந்து தூங்குகின்றனர். சுப்பையாண்ணன் "தங்கமணி தங்கமணி'' என்று பல முறை கூறி எழுப்பிப்பார்த்தார். தங்கமணியால் கண்ணைக் கூடத் திறக்க முடியவில்லை. "என்ன என்ன" என்று முணுமுணுத்து விட்டு திரும்பவும் படுத்துவிட்டாள். தாய்க்குப் பக்கத்தில் படுத்திருந்த பிள்ளைகள் தான் அப்பாவின் குரலுக்கு செவிசாய்த்து எழும்பி கண்ணைக் கசக்கிக் கொண்டிருந்தனர். காலைக் கடனை முடித்துவிட்ட சுப்பையா அண்ணை சமயலறையைப் பார்த்தபோது அது வெறுமையாகவிருந்தது. பிள்ளைகள் மூவரும் தலைக்கு மேல் வளர்ந்தவர்கள். தோட்டத்து வேலைக்கு தவறாமல் போகிறவர்கள். ஆனால் வீட்டு வேலைகளுக்குத் தாயை விட்டால் வேறு நாதியில்லை. உழைக்கும் காசை தாயிடம் கொடுப்பதோடு சரி ''எங்கள் வேலை முடிஞ்சுது என்று நினைத்தார்களோ என்னவோ. சமையலறையில் யாரும் இல்லாததால் தேநீருக்கும் சாப்பாட்டுக்கும் தாமதிப்பதில் பயனில்லை என்று நினைத்த சுப்பையா அண்ணை தங்கமணியிடம் சொல்லிவிட்டு வேலைக்குப் புறப்படத் தயாரானார். அப்போதுதான் தங்கமணி தன் இயலாமையை வாய்விட்டுச் சொன்னாள். நேற்றுவரை ஓடியாடி சகல வேலையும் செய்தவளுக்கு இன்று கணவருக்கு ஒரு தேநீர் கூடப் போட்டுக் கொடுக்க முடியவில்லையே என்ற போது மனம் வருந்தியது. இந்த நேரம் தான் கோபம் பிள்ளைகள் மீது திரும்பியது. "அட எனக்குத்தான் உடம்பு இயலாமை, தமிழரசி ஒரு தேத்தண்ணி போட்டு அப்பாவுக்குக் குடுக்க முடியாதா?"

தங்கமணியின் மனம் சங்கடப்பட்டது. மனைவியின் மனச் சங்கடத்தை உணர்ந்த சுப்பையா அண்ணன். ''இல்லை தங்கமணி எனக்குத்தான் அவசரம். பரவாயில்லை தேத்தண்ணிதானே வேலையில் போனகையோடு குடிச்சாப்போச்சு. உடம்பைப் கவனி. மருந்து மாத்திரைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டால் முந்நூறு ரூபா இருக்கு எடுத்துக் கொள். நான் போட்டு வாரேன்" என்று புறப்பட்டுச் சென்றது அவரின் ஞாபகத்துக்கு வந்தது. சுய நினைவுக்கு வந்தார்.

அப்போது தான் சுப்பையா அண்ணனுக்கு வேலையின் ஞாபகம் வந்தது. எழுந்து வேகமாக நடந்தார். தேயிலைத் தோட்ட அலுவலகம் சுறுசுறுப்பாகக் காணப்பட்டது. கங்காணிமார் இருவர் உரத்த குரலில் தமக்குள் ஏதோ பேசிக் கொண்டு வாசலுக்கும் வெளிப்பூந்தோட்டத்துக்கும் இடையே நடந்து கொண்டிருந்தனர். அவர்களின் பேச்சின் தொனியில் ஏதோ ஒரு தொழிலாளியைப் பற்றிய பேச்சாக இருந்ததை சுப்பையா அண்ணன் தன் அனுமானத்தில் உணர்ந்தார். முப்பத்தொரு ஆண்டுகள் இந்த தோட்டத்தில் குப்பை கொட்டிக் கொண்டிருப்பவருக்கு இது கூடத் தெரியாதா?

தோட்டத்திலே வேலைக்குச் சேரும் போது இருந்த அதே கூலித் தொழிலாளியாகவே இப்பொழுதும் வேலை செய்து கொண்டிருப்பவர். ஒரு பதினைந்து வருடத்துக்கு முன்புவரை தேயிலைச் செடிக்குக் கப்பாத்து வேலைகள் செய்து கொண்டு வந்தவர், ஆஸ்மா நோயால் தாக்கப்படத் தொழிற்சாலைக்குள் வேலை மாற்றிக் கிடைத்தது. சுப்பையாண்ணனின் நேர்மையையும் சளைக்காமல் வேலைசெய்யும் திறமையையும் நேரில் கண்ட தோட்டத்துரை தேயிலைத் தொழிற்சாலைக்குள் கண்டிப்பாக இவர் தேவை என்று விரும்பி எடுத்திருக்கிறான். சுப்பையாண்ணை தன் உடலை வருத்தி வியர்வையில் நனைத்து உழைத்த உழைப்பு வீண் போகவில்லை என்று சொல்லுற அளவுக்கு தொழிற்சாலை லாபம் ஈட்டியது. நிர்வாகத்துக்குத் தெரிந்த முதல் உண்மையும் இதுதான். இதற்கு முன்பு தொழிற்சாலைப் பகுதியில் நடந்த ஊழல்கள் மோசடிகள், தேயிலைத் திருட்டுகள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போயின. அந்தஅளவுக்குச் சுப்பையா ண்ணை இல்லாமல் தேயிலைத் தொழிற்சாலையில் எதுவும் அசையாது என்றஅளவுக்குத் தன்னை அர்ப்பணித்ததில் தனக்குள் ஓர் பரம திருப்தி அவருக்கு. அவர் சம்பாதித்த அத்தனை ஊழியர் களினதும் அன்பு அதை விடப் பெரியது.

அங்கே மலையடிவாரத்தில் லயத்தில் நித்திரையிலிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கமணியின் உடம்பு நிலை திடீரென்று மோசமாகியது. படுக்கையை விட்டு எழும்பக் கஸ்டப்பட்டவள் இப்போ மூச்சுத் திணறலால் அவஸ்தைப்பட்டாள். பக்கத்து லயத்து விமலா அந்த நேரம் அங்கு வந்திருக்காவிட்டால் ஆஸ்பத்திரிக்கு உடனடியா கொண்டுபோயிருக்க முடியாது. அரசாங்க ஆஸ்பத்திரியிலிருந்த இரு வைத்தியர்களும் அங்கிருக்கவில்லை என்று சர்வசாதாரணமாகக் கடமையிலிருந்த சிற்றூழியர்கள் சொன்னார்கள். கடமையிலிருந்த தாதிகளோ கையை விரித்து விட்ட நிலையில் தனியார் ஆஸ்பத்திரிக்குத் தங்கமணியைக் கொண்டு போக வேண்டியிருந்தது. அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டதும் முற்பணம் ஒரு ஐயாயிரமாவது கட்டும்படி விமலாவிடம் தாதி ஒருவர் கேட்டார். அப்போது தான் தாங்கள் போதிய பணம் கொண்டு வரவில்லை என்று விமலா விழித்தாள். ஐயாயிரம் ரூபாவுக்குத் திடீரென்று எங்கே போவது? சுப்பையா அண்ணனுக்குத்தான் சொல்லியனுப்பிவிட வேண்டும். "அவர் வந்துவிட்டால் அவரே கவனிப்பார்" என்று நினைத்த விமலா யாராவது தெரிந்தவர்கள் நிற்கிறார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்தாள். தெரிந்த முகங்கள் யாரும் இல்லை. தென்பட்ட முகமெல்லாம் தம் அலுவலில் கண்ணாயிருந்தனர். விமலாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. சில விநாடிகளுக்குள் மூளைக்குள் பல கேள்விகள் தோன்றி மறைந்தன. தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் விபரீத விளைவைத் தரும் என்பது அவளின் மனதிலே மின்னலெனப் பளிச்சிட்டது. திடீரென்று அலுவலகத்தினுள் போய் "தங்கச்சி மேல்மலை தோட்டக் கந்தோருக்கு ஒரு போன் போட்டு அவசரமாய் ஒரு விசயம் சொல்லவேணும்..." என்றபோது அங்கிருந்த அலுவலரோ "அதெல்லாம் முடியாது ஆஸ்பத்திரித் தேவைக்கு மட்டும்தான் போன். வேற எங்கேயாவது போய் போன் பண்ணு" என்று சட்டென்று முகத்திலே அடித்தது போல் சொல்லிவிட்டு உள்ளே சென்று விட்டார். விமலாவோ விட்டபாடாயில்லை "தங்கச்சி வேறு ரெலிபோன் பக்கத்திலை இல்லையே. நான் எங்கே போறது? நீங்கதான் தயவு செய்து இந்த உதவியைச் செய்யவேணும்" என்று கெஞ்சிக்கேட்டும், கேளாதவர் போல தன் கடமையில் கண்ணாயிருப்பவர் போல் காட்டிக் கொண்டார் அந்தப்பெண் அலுவலர். அவருக்குப் பக்கத்து மேசையிலிருந்த இன்னுமொரு அலுவலர் தொலை பேசியில் யாரிடமோ வம்பளந்து கொண்டு அட்டகாசமாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்துக் கொண்டிருந்தார். அவரின் சிரிப்பலைகள் அந்தப் பகுதியெங்கும் வியாபித்திருந்தது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த முதியவர் ஒருவர் “ஏன் பிள்ளை இவர் மாதிரி என்ன ஊர் வம்பு பேசவா போன் கேட்டா இந்தப்பிள்ளை? அவசரமா நோயாளி சம்பந்தமாய்த்தானே யாருக்கோ அறிவிக்கப் போகுதாம். அது கூட ஆயிரக்கணக்கில காசுகட்டி வைத்தியம் பார்க்கிற ஆஸ்பத்திரியிலை அப்பிடி என்ன குறைஞ்சு போகும் ...” சத்தமாகப் பேசிக் கொண்டு உள்ளே போனார். தர்மசங்கடமான நிலையில் பெண் அலுவலரோ கையைப் பிசைந்து கொண்டு பக்கத்தில் தொலைபேசியில் மூழ்கியிருந்த சக அலுவலரைப் பார்த்தார். அவருக்குத் தான் அங்கு நடந்ததெதுவும் தெரியாதே. அடுத்த அறையிலிருந்த தொலைபேசியை எடுத்து விமலாவை உள்ளே வரும்படி கையைக் காட்டினார். விமலா உள்ளே போய் மேல்மலைத் தோட்ட அலுவலகத்துக்கு தொலைபேசியை அழைத்தாள்.

அந்திசாயும் நேரம் மலை முகடுகளுக்குள் ஆதவன் மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருக்கிறான். சுப்பையா அண்ணை வேலையை முடித்துவிட்டு வீட்டுக்குப் போகத் தயாரானார். அப்போது தான் தோட்டத்துரை ஓடிவந்து “சுப்பையா உன் பெஞ்சாதியை ஆஸ்பத்திரியிலை சேத்திருக்காம் ஒரு ஐயாயிரம் ரூபாவோடை நேரா ஆஸ்பத்திரிக்கு வரச்சொல்லி போன் வந்தது” என்றான். வேலைக்களைப்பில் நின்ற சுப்பையா அண்ணைக்கு தலை சுற்றுவது போலிருந்தது. நெற்றியைக் கையால் துடைத்துவிட்டு பதறியபடி “என்ன ஐயா சொல்றீங்கள்” என்றார். தோட்டத்துரைக்குக் கிட்ட நடந்தபடி. தோட்டத்துரையோ அலட்சியமாய் சுப்பையா அண்ணையைப் பார்த்து “ஏதோ ஒரு பிறைவேட் ஆஸ்பத்திரியாம் பூட்டுற நேரமாகப் போகுது, போ போ ” என்று சொன்னான். சுப்பையா அண்ணைக்கு வாயிலே வார்த்தைகள் வரத் தயங்கின. தடுமாறியபடி “ஐயா எத்தினை மணிக்கு போன் வந்துது” என்று சுப்பையாண்ணை கேட்க கோபமடைந்த தோட்டத்துரை ஒரு முறைப்புப் பார்வையா; ஆளை அளந்து கொண்டு “காலமை பத்துமணி போல போன் வந்தது” என்றான். சுப்பையாண்ணை “அதுக்கு உடனே சொல்லாமல் வீட்டுக்குப் போற நேரமா இந்த அவசரச் செய்தியைச் சொல்லுறீங்கள். என்னைக் கூப்பிட்டிருந்தால் என்ன விசயமமெண்டு விளக்கமாய்க் கேட்டிருப்பேனே”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபத்தில் சத்தமாகச் சுப்பையாண்ணை வார்த்தைகளைப் பொரிந்து தள்ளினார். "விசயத்தை உடனே சொன்னால் நீ உடனே லீவு போட்டுவிட்டுப் போவாய் உன் வேலையை யார் நானா செய்யுறது" என்று துரை ஆணவமாய்ப் பேசி முடிக்கு முன்னமே "உனக்கு ஒரு போன் அவசரமா வந்தால் போகாமல் நிண்டு வேலை செய்வியா துரை" என்று வாய்க்கு வந்தபடி சுப்பையாண்ணை பேசிவிட்டார். இன்னும் அங்கே நின்றால் கோபத்தில் துரையை ஏதும் செய்து விடுவேன் என்ற பயத்தில் உடனே வெளியே வர வேண்டும் போலச் சுப்பையா ண்ணைக்கு இருந்தது. தங்கமணிக்கு என்ன நடந்ததோ, என்ன வருத்தமோ என்று நினைக்கத் தலை விறுவிறுத்தது. ஆத்திரம் ஒருபக்கம் படபடப்பு ஒருபக்கம் என்ன செய்வது என்று இல்லாமல் ஓரிடத்தில் சுப்பையாண்ணை சிலையாக நின்றுவிட்டார். சுதாகரித்துக் கொண்டு நடக்க ஆரம்பிக்க குமாஸ்தா குமாரின் ஸ்கூட்டர் அருகே வந்தது. "அண்ணை காலமையே போன் வந்தது. வேலை முடியுறவரை யாரும் உனக்குச் சொல்லப்படாது என்று துரை எல்லாருக்கும் அபீசில சொல்லிவைச்சிட்டான்" என்றார் குமார். வந்த வேதனையை அக்கிக் கொண்டு "தம்பி ஒரு ஐயாயிரம் ரூபா இப்ப கைமாத்தா எடுக்கமுடியுமா, ஆஸ்பத்திரிக்குக் கட்டவேணும்" சுப்பையா அண்ணை உங்க அவசரத்துக்கு இல்லாத காசா எனக்கு வேணும்?" என்று முக மலர்ச்சியோடு குமார் உதவி செய்யச் சம்மதித்தார். ஆஸ்பத்திரி வாசலில் குமாரின் ஸ்கூட்டரிலிருந்து இறங்கிச் சுப்பையாண்ணை காசையும் வாங்கிக் கொண்டு பதைபதைக்க ஆஸ்பத்திரிக்குள்ளே நுழைகிறார்.

ஆஸ்பத்திரிக்கட்டிலில் தங்கமணி அசைவில்லாமல் கிடக்கிறாள். கணவர் சுப்பையாண்ணையோடு பிள்ளைகள் தமிழரசி, அன்பரசன், முத்து சுற்றிவர கண்கலங்கினபடி நிற்கின்றனர். தமிழரசி விசும்பியபடி கைக்குட்டையால் வாயைப் பொத்தியபடி அழுகின்றாள். மலைபோல் வரும் வேதனையை மடுவாய் நினைத்து அதை அடக்கியபடி பக்கத்தில் நின்று வைத்தியரைப் பார்த்துக் கொண்டு நிற்கிறார் சுப்பையாண்ணை. "எப்பவாவது கண் விழித்தால் மட்டும் உயிர் தப்பலாம். இல்லையெண்டால்... கடவுள் தான் காப்பாற்றவேணும். அது மட்டுமல்ல இந்த நோய்க்கு மூண்டு கிழமைக்கு மேல் இது மாதிரி கோமா தொடர்ந்தால் அதே ஆபத்து நிலமைதான். இண்டைக்குகூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோமாவில் போக முன்னமே ஒப்பிரசனுக்கு சம்மதித்தால் இப்படி வந்திருக்காது” இது வைத்தியர்கள் திடமாய்ச் சொல்லிவிட்ட அறிவுறுத்தல்கள். சுப்பையாண்ணைக்கு இதைக் கேட்கக்கேட்கத் தோட்டத்துரைமேல்தான் ஆத்திரம் இன்னும் கூடியது. விமலா கூட திருப்பியும் ஒருக்கால் அவசரமாய் எனக்கு போன் பண்ணியிருக்கலாம் பிள்ளையளுக்குச் சொல்லியனுப்பி இருக்கலாம். அவள் சின்னப் பெட்டை என்ன செய்வாள். ஏதோ இதையாவது செய்திருக்கிறாளே என்று தனக்குள் எழுந்த அங்கலாய்ப்புகளுக்கு முற்றுப்புள்ளியிட்டு ஆறுதலடைந்தார். சுப்பையாண்ணை மனசுக்குள் மானசீகமாக விமலாவுக்கு நன்றி சொல்லிக் கொண்டார்.

இதுவே தோட்ட லயமெல்லாம் பேச்சாயிருந்தது. துரையின் அலட்சிய, ஆணவப் போக்குக்குக் கண்டனம் தெரிவித்து ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்வதென்று தொழிற்சங்கம் அறிவித்தது. “சுப்பையாண்ணை இப்பிடியொரு சம்பவம் மேல்நாட்டில் நடந்தால் துரையிட்டை லட்சக்கணக்கிலே காசு கறந்திருப்பாங்கள். நம்மால் கோடுகச்சேரி எண்டு இழுபட முடியுமா? இப்படி வேலை நிறுத்தம் தான் செய்ய முடியுது. கூட வேலை செய்யும் நண்பர் சுப்பையாண்ணையின் லயத்திலே பிரஸ்தாதபித்துக் கொண்டிருந்தார். அடுப்படியில் எல்லோருக்கும் தேநீர் தயாரிக்கும் வேலையில் தமிழரசி மும்முரமாயிருந்தாள். அங்கே தோட்டமும் அலுவலகமும் வெறிச்சோடிக் கிடந்தன. தோட்டத்துரைமட்டும் தனியே அலுவலகத்தில் நிற்பானோ?

08.04.2005
-முழக்கம்-
ரொறன்ரோ, கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

# புதிதாய் ஓர் உறவு

அதிகாலை வெய்யில் முகத்தில் நேரே படக் கண் கூசியது. உந்துருளியில் வேகமாய்ச் சென்ற சீவகனுக்கு இதயம் உந்துருளியின் வேகத்தைவிட வேகமாக அடித்துக் கொண்டது. எதிர்க்காற்று உடம்பிலே படச் சில்லென்றிருந்து. இதமாகவும் இருந்ததால் இன்னும் பத்துக் கல்மைல் தூரம் அதிகமாய் போகலாம் போலிருந்தது. உடம்பிலே தெம்பு பிறந்தது. ஆனால் மனம்தான் என்னவோ சீவகனுக்குச் சப்பென்றிருந்தது. வீதியின் இரு மருங்கும் உந்துருளியாளர், பாதசாரிகள் எனப்பலர் சென்று கொண்டிருக்கின்றனர். அதிலே ஓர் உந்துருளி வேகத்தைக் குறைத்துச் சீவகனின் அருகே வந்து "டேய் சீவகா டேய்..." என்று கூப்பிடும் சத்தம் கேட்டுச் சீவகன் திரும்பினான். நண்பன் செவ்வேள் வாயெல்லாம் பல்லாய்ச் சிரித்தபடி தன் உந்துருளியை ஓரமாய் நிறுத்தினான். சீவகனும் உந்துருளியை நிறுத்தி "எங்கே இந்தப்பக்கம் போறாய்" என்று கேட்கச் செவ்வேள் "மாறன் இருக்கிற வீட்டுக்குப் போறன் வாறியா?" என்றான். எங்கே போகக் கூடாது என்று சீவகன் நினைத்தானோ அங்கு போக "நீயும் வாறியா" என்று செவ்வேள் கேட்டது சங்கடதைக் கொடுத்தது. இவனை எப்படியும் காய் வெட்டிவிட வேண்டும் என்று நினைத்த சீவகன் "அவசரமாய்க் கடைக்குப் போறன் நீ போ பிறகு நான் வாறன்" என்று சொல்லிச் செவ்வேளின் பதில் வரமுன்னரே உந்துருளியைத் திருப்பிப் புறப்பட்டான். சீவகனின் முகத்திலே கண்ட மாற்றமும் அவன் போன விதமும் செவ்வேளின் சந்தேகத்தை வலுவாக்கி " இவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற பக்கம் எந்தக் கடை திறந்திருக்கும்?'' என்று நினைக்கவைத்தது.

சீவகனின் மனம் செவ்வேளை நினைத்து வருந்தியது. “காய் வெட்டிப் போட்டு வந்ததில் என் மீது கோபம் இருக்குமோ?” சீவகனின் சொந்த இடம் வவுனியா, ஏழை விவசாயக் குடும்பத்தில் மூத்த பிள்ளை, இருதங்கைகள் உண்டு. செவ்வேளின் சொந்தக் கிராமம் காயாங்கேணி. ஓரளவு வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன். நெல் மொத்த வியாபாரி குடும்பத்தில் மூன்றாவது மகன். மாறன் நுவரெலியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவன். நல்ல வசதியான குடும்பத்தில் கடைக்குட்டி. காசுப் புழக்கத்திற்குத் தட்டுப்பாடில்லாத பேர்வழி. இந்த மூன்று பேரையும் ஒன்றாகச் சந்திக்க வைத்தவர் சந்திரசேகரம். யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலே உள்ள அவரது வீட்டின் இரண்டு அறைகளை இந்த மூன்று பேருக்கும் வாடகைக்குக் கொடுத்து அதே வீட்டில் இருக்கும் ஓய்வு பெற்ற அரச ஊழியர். மனைவியை நாலாண்டுகளுக்கு முன் இழந்த சந்திரசேகரத்தாருக்கு பிள்ளைச் செல்வம் கிடையாது. சுமார் நாலாண்டாகக் கலகலப்பில்லாத இவரின் வீடு இந்த மூன்று பேரின் வருகையால் கலகலப்பாகக் காணப்பட்டது.

பழகத் தொடங்கியசில நாட்களிலேயே “வாடா போடா ” என்று கூப்பிடும் அளவுக்க இறுக்கமானது இவர்களின் சிநேகிதம். மூன்றுபேரும் ஆரம்பத்திலே சமையலில் பட்ட கஸ்டம் இவர்களுக்குத் தான் வெளிச்சம். புது அனுபவம் சகல சாப்பாட்டிலும் துலாம்பாரமாகத் தெரிந்தது. சந்திர சேகரத்தாரின் உதவியால் பல விடயங்கள் கற்றுக் கொண்டனர் சமயலில். மூன்றுபேரும் ஏறக் குறைய ஒரே வயதுக்காரர்கள், தனியார் கல்வி நிலையத்தில் படித்து க.பொ.த. உயர்தரம் பரீட்சைக்கத் தோற்றவிருப்பவர்கள். விஞ்ஞான - கணித மாணவர்கள் என்பதால் சந்திரசேகரத்தாரின் உதவி இவர்களுக்குப் பெரிதும் கை கொடுத்தது. விஞ்ஞானப்பட்டதாரியான சந்திரசேகரத் தாருக்கு இவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதில் திருப்தியிருந்தது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழிமூலம் சந்திரசேகரம் படித்த போதுதான் மனைவி பத்மாவைக் காதலித்தது, பிறகு வேலை கிடைத்துப் பல ஆண்டின் பின் திருமணம் செய்தது எல்லாம். நீண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவெளிக்குப் பின் அந்தப் பாடங்களை மனதில் மீட்க மீட்க அவருக்குப் பல்கலைக் கழக வாழ்க்கைதான் ஞாபகத்தில் நிழலாடும். பேராதனைப் பூங்கா, மகாவலிகங்கைப் பாலம் என்று அந்த வட்டாரம் முழுக்க பத்மாவுடன் தான் சுற்றித்திரிந்த இடங்களின் நினைவுகளை மீட்டு மகிழ்வார். இருந்தாலும் பத்மாவின் இறுதிக்கால நினைவுகள் தவழும் போது அவரின் மலரும் நினைவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடும். அப்போதுதான் இவ்வுலகத்திற்கு நினைவுகளிலிருந்து மீண்டு வருவார்.

இந்த மூன்று நண்பர்களின் நட்புக்குக் கீறல் விழுந்த சம்பவம் குருநகர் இராணுவ முகாமுக்குள் இடம் பெற்றது. போராளிகளின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணக் குடாநாடு வராத காலமது. எப்போதாவது இராணுவம் ரோந்து வரலாம் என்ற பயம் எல்லோரிடமும் இருந்தது. மாறனின் நண்பனான போராளி ஒருவர் இவர்களின் வீட்டுக்கு வந்து போனதாய்க் கேள்விப்பட்ட இராணுவம் மூன்று பேரையும் பிடித்து முகாமுக்குக் கொண்டு வந்தது. இரண்டுநாள் தாங்கமுடியாத அடி உதை சித்திரவதை யில் செவ்வேள் உண்மையைக் கக்கிவிட்டான். மாறனின் நண்பன் தான் போராளி என்று சொல்லியதால் செவ்வேளும் சீவகனும் விடுதலை செய்யப்பட்டனர். போராளி நண்பனைக் காட்டிக் கொடுக்கும் படி மாறனுக்கச் சித்திரவதை தொடர்ந்தது. சீவகனும் செவ்வேளும் வீடு வந்து சேர்ந்தபோது தான் சந்திரசேகரத்தாருக்கு விளங்கியது இரண்டு நாட்கள் இவர்கள் எங்கே போனார்கள் என்று. வாடகைக்கு இருக்க வந்து சொற்ப மாதங்கள் என்பதால் இவர்களின் முழு விபரங்கள் சந்திரசேகரத்தாருக்குத் தெரியவில்லை. இதனால் எங்கே போய்த் தேடுவது என்று அந்த இரண்டு நாட்களும் திண்டாடிப் போனார். உடனடியாகக் கொழும்புக்குத் தொலைபேசியில் தன் செல்வாக்குள்ள நண்பர்கள் மூலம் தொடர்பு கொண்டு மாறனை விடுவித்தார் சந்திரசேகரத்தார். இராணுவத்தில் பெரும் புள்ளிகளின் செல்வாக்கிருந்தும் கூட மாறன் தன் பெறாமகன் என்று பொய் சொல்லி எத்தனையோ நிபந்தனையின் பேரில் தான் மாறனால் வரமுடிந்தது.

மாறன் வீட்டுக்கு வந்ததும் ஒரே நிசப்தம் நிலவியது. மாறனின் முகத்தில் ஈயாடவில்லை. மீதி மூன்று பேரும் அவனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தை உற்றுப் பார்த்போது அழுதுவிடுவான் போலிருந்தது. மாறனைத் தான் காட்டிக் கொடுத்துவிட்டேன் என்ற குற்ற உணர்வு செவ்வேளை முள்ளாய்க்குத்தியது. மாறனின் அமைதி அவனைக் கொல்லாமல் கொன்றது. தன் மீது தான் கோபம் இருக்கும் என்று பயந்த போது செவ்வேளையறியாமல் அழுகை வெடித்தது. “டேய் மாறன் என்னிலை கோபிக்காதை, அடி உதை வேதனை தாங்கமுடியாமல் என்னையறியமால் உண்மையைச் சொல்லிப்போட்டேன்.’’ செவ்வேள் விக்கியழுதான். செவ்வேள் பேசத் தொடங்க மாறனின் கண்ணில் நீர் தாரை தாரையாக வழிந்தது. “செவ்வேள் டேய் செவ்வேள் உன்னைப் போல் தான் எனக்கும் சீவகனுக்கும் அடி சித்திரவதை நடந்தது. ஆனால் வாய் திறக்கவில்லையே உனக்கு மடடும் ...” மாறன் பல்லைக் கடித்தபடி கர்ச்சித்தான். இந்தப் பாய்ச்சலை யாரும் எதிர் பார்க்கவில்லை. மாறன் அமைதியானவன் இவனுக்கு இவ்வளவு கோபமா? சந்திரசேகரத்தாருக்கு இந்த வாதங்களுக்கு நியாயம் தெரியவில்லை. அதைத் தடுக்கும் தைரியமும் வரவில்லை. அவ்விடத்தில் நின்றால் தானும் ஏதும் பேச வேண்டி வரும் என்று நினைத்து அந்த இடத்தை விட்டு நகர்ந்தார். “டேய் மாறன் சந்திரசேகரண்ணை செய்த இந்தப் பெரிய உதவியை நினைச்சு மனத் திருப்திபடு. கொஞ்சநாள் அவற்றை வீட்டிலை இருந்த காரணத்துக்காக உன்னை வெளியிலை கொண்டுவந்தாரே. அதுவும் தன் பெறாமகன் எண்டு சொல்லி. இந்தப் பெருந்தன்மை யாருக்கு வரும்” சீவகன் வாயாரப் புகழ்ந்தான். ஏற்கனவே கொதித்துப் போயிருந்த மாறனுக்கு இது எதுவும் காதில் ஏறவில்லை. மாறாக சீவகனின் தலைமயிரைப் பிடித்து இழுத்து குலுக்கியபடி “நீ யாருக்கு வக்காலத்து வாங்குகிறாய்” என்றான். இந்தத் தாக்குதலைச் செவ்வேளும் சீவகனும் எதிர்பார்க்கவில்லை. தடுமாறிய செவ்வேள் மாறனைச் சமாதானப் படுத்தினான். மாறன் தன் உடுப்புகள் புத்தகங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறினான். யாருக்கும் சொல்லவில்லை, காணவில்லை என்று தேடியபோது சொந்தக்காரரின் வீட்டிலே கண்டுபிடித்தனர். வீட்டிற்கு வாடா என்று செவ்வேளும் சீவகனும் மன்றாடியும் இருவரையும் விரட்டியடித்துவிட்டான் மாறன்.

இந்தச் சம்பவத்தால் மாறனின் முகத்தில் விழிக்கச் சீவகனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் கூசியது. இயலுமானவரை தவிர்த்து விட்டிருந்தான் சில நாட்களாக. செவ்வேள் உந்துருளியில் பின் தொடர்கிறானா என திரும்பிப் பார்த்தான் சீவகன். கண்ணுக்கெட்டிய தூரம் வரை யாரும் இல்லை. நாவலர் வீதிச் சந்தி வந்தது, கொஞ்சம் தள்ளி அந்தத் தேநீர்க்கடை தெரிந்தது. கடை வாசலில் உந்துருளியை நிறுத்திவிட்டுத் தன்னை யாரும் தெரிந்தவர்கள் பார்க்கிறார்களா என்று பார்த்துவிட்டுக் கடைக்குள் போய் சீவகன் அமர்ந்தான். வீட்டில் சமைக்கவோ சாப்பிடவோ யாருக்கும் மன நிலை சரியில்லை. நேற்று மத்தியானம் முதல் எதுவும் சாப்பிடவில்லை. கடையிலாவது ஏதாவது சாப்பிட்டிருக்கலாம், மனம் இல்லை. ஆனால் இப்பொழுது சீவகனுக்குப் பசி வயிற்றைப் பிடுங்கி எடுத்தது. உணவகத்திலிருந்து சமையல் வாசனை மூக்கைத் துளைத்தெடுத்துப் பசியைக் கிளறிவிட்டது. வயிறாரச் சாப்பிட்டுவிட்டுப் பணம் கொடுக்க எழுந்தபோது செவ்வேள் உணவகத்தில் பதுங்கியபடி நுழைந்தான். செவ்வேள் சீவகனைக் கண்ட அதிர்ச்சியில் “இங்கே நிற்கிறாய் சீவகா” என்றான் விசயத்தில் முந்தியவனாய் அதுவும் நக்கலோடு. முழுக்க நனைந்த பிறகு முக்காடு எதற்கு என்று நினைத்துக் கொண்டு சீவகன் “டேய் செவ்வேள் நீ எதுக்கு இங்கே வந்தாயோ அதுக்குத்தான் நானும் வந்தேன்” சிரிக்காமல் சொன்னான். செவ்வேள் சாப்பிடும் வரை காத்திருந்து அவனுக்கும் சேர்த்துப் பணம் கொடுத்துவிட்டுச் சீவகன் செவ்வேளோடு வெளி யேறினான். “செவ்வேள் நீ பசி பொறுக்கமாட்டாய் வீட்டிலும் சமைக்கவில்லை நீ எங்கேயாவது சாப்பிட்டிருப்பாய் எண்டு நினைத்து நானே பசி தாங்காமல் சாப்பிட வந்தேன். குறை நினைக்காதையடா'' என்றான் சீவகன் உந்துருளியை மிதித்தபடி. இப்படியே இருவரும் வீட்டுவாசலை அடைய அங்கே இன்ப அதிர்ச்சி இருவரையும் வரவேற்றது. அங்கே வாசற் கதவடியில் மாறன் மூட்டை முடிச்சுக்களோடு காத்திருந்தான். யாரும் பேசவில்லை. மாறன் குனிந்த தலை நிமிரத் தைரியமில்லாமல் தயங்கித் தயங்கி ''என்னைக் குறை நினைக்கவேண்டாம், பிழை விட்டிட்டன் உங்களுடன் வந்து இருக்கப் போறன்” என்றான். பதில் எதுவும் சொல்லாமல் செவ்வேள் கதவைத்திறந்து கொண்டு உள்ளே போக மாறனும் போனான். இருவரின் மௌனம் சம்மதம் என்று அர்த்தமா? இது மாறனின் மனதைக் குடைந்த கேள்வி. செவ்வேளும் சீவகனும் ஒருவரையொருவர் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறன் முள்ளின் மேல் நிற்பது போன்ற உணர்வால் தலை குனிந்தான். “சரியெடா இனி மேல் திடீரென்று கோபம் வந்தால் வீட்டை விட்டுப் போய்விடாதே. சரிதானே... எங்களை விட்டுத் தள்ளு, சந்திரசேகரம் அண்ணை நி விட்டுப் போனதிலிருந்து மனம் நொந்து போயிருக்கிறார். இவர் மாதிரி ஒரு வீட்டுச் சொந்தக்காரர் கிடைப்பாரா? எங்க மூன்று பேரையும் தன் பிள்ளைகளாய் நினைச்சுக் கவனிக்கிறார். இப்ப நீ உணராமல் விட்டால் ஒரு நேரம் உணருவாய்” சீவகனின் உபதேசம் மாறனுக்கு உறைத்திருக்க வேண்டும். சரிசரியென்றதற்கு அடையாளமாகப் புன்னகையோடு தலையை அசைத்தான்.

மாறன் வீடு திரும்பியதால் மனம் பூரிப்படைந்த சந்திரசேகரத்தாரின் அலுவல்கள் வழமைக்குத் திரும்பின. மூன்று பேரையும் பரீட்சைக்குத் தயார் செய்வதிலும் சமையலில் உதவி ஒத்தாசை செய்வதிலும் காலம் உருண்டோடியதே அவருக்குத் தெரியாமல் போனது.

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் அவசரமாகச் சேர்க்கப்பட்ட சந்திரசேகரத்தாருக்குச் சத்திர சிகிச்சை செய்யவேண்டியிருந்தது. இதுவரை நேரத்துக்குச் சாப்பிட்ட உணவும் மருந்துகளுமே அவருக்கிருந்த வியாதிகளைக் கட்டுப்படுத்தி வந்தன. இப்போது வயிற்றில் கட்டி வளர்ந்து விட்டதாம். ஆஸ்பத்திரிக் கட்டிலில் இருந்தபோது தான் ஞானங்கள் பலருக்குப் பிறக்கின்றன. இவர் மட்டும் என்ன விதிவிலக்கா? “கடவுளே ஏதும் நடக்கக்கூடாதது நடக்கக்கூடாது..,” அவர் மனம் பயத்தால் உறைந்தது. “சே எதுவும் நடக்காது...” மீண்டும் அவரின் உள்மனம் ஆறுதல் சொன்னது. பழையதுகளை நினைக்க நினைக்கக் கண்கள் பனித்தன. மாறன், செவ்வேள், சீவகன் மூன்று பேரும் அப்போது அவரின் கட்டிலருகே வந்தார்கள். இவர்களைக் கண்டதும் அவசரமாய்த் துவாயால் கண்களைத் துடைத்தார். தன் பதற்றத்தைக் காட்டிக் கொள்ளாமல் “பிள்ளையள் நீங்கள் சரியான நேரத்துக்கு என்னை ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறியள். இல்லையென்றால் என் பாடு...” என்று சந்திரசேகரத்தார் நன்றிப் பெருக்கால் பேசத் தொடங்க மாறன் குறுக்கிட்டு “உங்களுக்குச் செய்யாத இந்த உதவியை நாங்கள் வேறு யாருக்குச் செய்வோம்? நான் உயிரோடை இண்டைக்கு இருக்க நீங்கள் தானே காரணம்” என்றான். அப்போது அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த மருத்துவத் தாதி "உங்கள் மூன்று பேரின் ரத்தமும் இவருக்குப் பொருந்தும். உண்மையிலே இது அதிசயம் தான்" என்று சொல்லிவிட்டுச் சத்திர சிகிச்சைக்குரிய திகதி விபரங்களைக் கொடுத்தார். இதை எதிர்பாராத சந்திர சேகரத்தார் ஆனந்தக்கண்ணிர் பொங்க மூவரையும் பார்வையாலே கட்டியணைத்து "எனக்குப் பிள்ளை இல்லையே எண்டு ஏங்கினேன். ஆனால் ஒன்றில்லை மூன்று பேர் கிடைத்திருக்கு. எனக்கு நீங்கள் இருக்கிற தைரியமே போதும். அது என்னைப் பல காலம் வாழவைக்கும்" என்றார் நம்பிக்கையோடு.

கார்த்திகை 2005
முழக்கம் வெளியீடான பறை சஞ்சிகை, கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

# காத்திருக்கும் கடமைகள்

அன்றுதான் ரமணிக்கு விடுமுறை ஆரம்பமாகிறது. இந்த ஆண்டு பிறந்து ஆறுமாதம் ஓடி மறைந்து விட்டது. ஒரு நாளாவது வேலைக்குப் போகாமால் விட்டதில்லை. இந்த ஆண்டுக்குரிய விடுமுறைத் திகதி விபரங்களை ஏற்கெனவே கொடுத்து விட்டதால் இருவார விடுமுறைக்கு நிர்வாகம் அனுமதித்தது. எங்கே விடுமுறைக்குப் போகலாம் என்ற யோசனையில் குதூகலிப்புடன் ரமணி அமர்ந்திருக்கிறாள். கணவர் நேசன் நித்திரையால் எழும்பிக் காலைக்கடன்களை முடித்து விட்டுக் குளியலறையிலிருந்து வருகிறார். வந்ததும் வராததுமாய் ''ரமணி, ரமணி'' என்று உரத்துக் கூப்பிட்டார். சத்தம் காதையடைக்க எரிச்சலடைந்த ரமணி, "ஏன் காலங்காலத்தால ஓலம் போடுகிறியள்''. என்றாள். கணவர் நேசன் சிரித்துக்கொண்டே, "ரமணி நல்லா யோசித்துப் பார்த்தன், எங்கள் இரண்டு பேரின் விடுமுறையும் மூன்டுநாள் தான், ஒரே நாளாய் இருக்கிறதால் நின்று பிரயோசனம் இல்லை. பேசாமல் வேலைக்குப் போய்விட்டால் சம்பளமாவது மிஞ்சும்" என்றார். ரமணிக்கு வந்த கோபத்தில் என்ன செய்வது என்றில்லாமல் சுட்டெரிப்பது போல ஓர் பார்வை பார்த்தாள். "என்னப்பா நேரத்தோடை விடுமுறைக்கு எழுதிக்குடுங்கோ என்று தைப்பொங்கலுக்கு முன்னமே ஞாபகப்படுத்தியும் நீங்கள் கடைசிநேரத்தில் குடுத்ததால் விடுமுறை இப்பிடி எங்களுக்கு பிரயோசனமில்லாமல் தான் கிடைத்திருக்கு" என்று ரமணி கணவரைக் குற்றம் சாட்டாமல் சாட்டுவதாய்ச் சொன்னாள்.

இந்தப் பதிலை நேசன் எதிர்பார்க்கவில்லை. அந்த நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் காவியாவும், ஓவியாவும் ஓடிவந்து ரமணியைக் கட்டிப்பிடித்தார்கள். அவர்களுக்குள் ஓர் போட்டி அம்மாவை ஓடிப்போய் முதலில் யார் கட்டிப் பிடிப்பது என்று. விடுமுறையில் ரமணி வீட்டில் நிற்பதில் அவர்களுக்குள் அளவில்லா ஆனந்தம். தாய் கிழமை நாட்களிலும் வீட்டிலே நிற்பது இரட்டிப்பு மகிழ்ச்சி. அதில் ஆச்சரியமென்ன? பிள்ளைகளின் அமளியிலே பெற்றோரின் வாதம் அடிபட்டுப் போய்விட்டது.

கோடை வெயில் கொளுத்தி எரித்தது. காலையிலே வியர்த்துக் கொட்டியது. அப்போது தொலைபேசி கிணுகிணுத்தது. அதை எடுத்த ரமணிக்கு பேரிடிச் செய்தி காத்திருந்தது. கணவர் நேசனின் அப்பா மரணப்படுக்கையில் இருக்கிறார். முடிந்தால் உடனே வரும்படி நேசனின் அக்கா தகவல் சொல்லியிருந்தாள்.
“என்னப்பா உடனே ஊருக்குப் போகத்தானே வேணும்.” ரமணி பேச்சைத் தொடங்க பதில் ஏதும் நேசனிடமிருந்து வரவில்லை. ரமணி தொடர்ந்தாள். “நீங்கள் ஒரே ஒரு மகன், மாமா எப்படியோ உங்களை எதிர்பார்க்கிறார், போகத்தானே வேணும்.” திடீரெனத் தீர்மானிக்க முடியாத நேசன் அமைதியாக ரமணியைத் தன் பார்வையால் அளந்தார். அந்தப்பார்வையில் அர்த்தங்கள் பல பொதிந்திருந்தன. தகப்பன் மீதுள்ள பாசம் ஒரு புறம், விடுமுறை எடுப்பதில் கஸ்டம் மறுபுறம் என்று மனதைக் குடைய நேசன் தன் மௌனத்தைக் கலைத்தாள். “ரமணி இவ்வளவு கஸ்டத்துக்குள் ஊருக்குப் போகத்தான் வேணுமா?” என்று நேசன் முடிக்குமுன் ரமணி குறுக்கிட்டு “எதைக் கஸ்டம் என்று நினைக்கிறியள் , எல்லோரும் சேர்ந்து போய் வருவம்.” தன் ஆதங்கத்தை அவிழ்த்துவிட்டாள். பிள்ளைகளுக்கு உண்மையில் எங்கே போகப்போகிறோம் என்று தெரிய வில்லை. ஆனால் தாய் எல்லோரும் போய் வருவோம் என்றதும் ஏககுரலில் சொன்னார்கள் நாங்களும் வாறம் என்று. அப்போது நேசனால் எதுவும் மறுத்துப்பேச முடியவில்லை. நேசனின் மௌனம் சம்மதம் என நினைப்பதில் ரமணிக்குத் திருப்தியிருந்தது. அதைவிடத் தாயகம் போக விருப்பதால் தன் குடும்பத்தாரையும் பல ஆண்டுகளின் பின் காணப்போகும் மகிழ்ச்சியிலே மனம் ரமணிக்குக் குளிர்ந்திருந்தது.

நீண்ட விமானப் பயணத்தின் பின் நேசனின் குடும்பம் கொழும்பு போய்ச் சேர்ந்த போது குதூகலத்திற்குக் குறைவில்லை. புதிதாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானப் பயணம் என்பதில் பிள்ளைகளும் பெற்றோர் சகோதரங்களைப் பார்க்கப் போறோம் என்பதில் நேசனும் ரமணியும் மகிழ்ச்சியில் திளைத்திருந்தனர். ஊருக்குப் போகிறோமோ என்ற ஆவலில் ரமணியின் மனம் சிறகடிக்க அப்பாவின் உடம்பு நிலமை எப்படியோ என்று நேசனின் மனம் படபடக்கத் தனியார் பேருந்து வன்னியை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. ஓவியாவும் காவியாவும் பேருந்தில் யன்னல் ஊடாக வீதியின் இருமருங்கையும் பார்த்து இரசித்தபடி இருக்கின்றனர். கொழும்பிலே பார்த்த காட்சிகளுக்கும் வரும் வழியிலே காணும் காட்சிகளுக்கும் உள்ள வித்தியாசங்களை அசைபோட்டபடி இருவரும் இருக்கின்றனர். நெடும் பயணத்தின் பின் வன்னியில் நேசனின் அக்கா வீட்டையடைந்த போது மதியமாகிவிட்டது. பயணக்களை ஒரு பக்கம் விசாரிப்புகள் ஒருபக்கம் என்று நீண்ட நாளின் பின்னரான சந்திப்பு என்பதில் நேரம் போனது தெரியாமல் மதிய உணவு அருந்தினர். நேசனின் அக்கா தகப்பனின் கவலைக்கிடமான நிலமையைச் சொல்லிச் சொல்லி அழுதுகொண்டிருந்தார். "சாப்பிடுகிற நேரம் அழுதால் பயணக்காரர் சாப்பிட முடியுமே", இது அங்கு வந்திருந்த பக்கத்து வீட்டு முதியவர் ஒருவரின் முணு முணுப்பு. அன்றிரவு நெடு நேரம் வரை சொந்தக்காரர், அயல் வீடு என்று அமளி துமளிப்பட்டது. காவியாவும், ஓவியாவும் யாரிடமும் சேரவில்லை. ஒதுங்கியே இருந்தார்கள். அடுத்த நாள் அதிகாலை நேசனின் அக்கா அலறியடித்துக் கொண்டு நேசனை நித்திரையிலிருந்து எழுப்பினார். "அப்பா பேச்சு மூச்சில்லாமல் கிடக்கிறார்." எல்லோரும் ஓடிப்போய்ப் பார்த்த போது அவர் மரணமாகிவிட்டதை அங்கிருந்தவர்கள் உறுதிப்படுத்தினார்கள். அழுகை ஒலிகளுடன் அயல் சுற்றம் உறவினர்கள் என்று பெருங்கூட்டடம் கூடியபோது மருண்டு போய் காவியாவும் ஓவியாவும் தாயின் கையைப் பிடித்துக் கொண்டு நின்றனர். ஏதோ வித்தியாசமான நிகழ்வு போல அவர்களுக்கு இருந்திருக்க வேண்டும். முதல் நாள் அந்த வீட்டுக்கு வந்த போது குறும்புகள் செய்யும் திட்டத்துடன் இருந்த காவியாவும் ஓவியாவும் வீடு முழுவதும் நிறைந்து திரிந்தவர்களால் தங்கள் சுதந்திரம் மட்டுப்பட்டதை உணர்ந்தார்கள். மரணச் சடங்குகள் முடிந்ததும் காவியாவும் ஓவியாவும் நேசனின் அக்காவின் பிள்ளைகளுடன் பழகி ஓடித் திரிந்து விளையாடினார்கள். கனடியக் குழந்தைகள் பேசிய தமிழுக்கும் அந்த வீட்டுப் பிள்ளைகளின் தமிழுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சரிப்பில் சின்ன வித்தியாசம் இருந்தது. இதைக் கேட்டுத் தங்களுக்குள் சிரித்துக் கொண்டு விளையாடினார்கள்.

நேசனின் அக்காவும் அத்தானும் கையில் ஒரு சின்னப்பொதியுடன் வந்தனர், அக்கா தயக்கத்துடன் "நேசா இதென்ன தெரியுமா? அப்பா உன்னிடம் கொடுக்கச் சொல்லி இதை "இதை நேசனிடம் கொடுத்து விடு என்று எழுதியிருந்தார்." வியப்பு மேலிட்ட நேசன் அக்கா எனக்கு அவர் ஏன் இதைத் தாறார்? விழிகளை வில்லாக்கியபடி அந்தச் சிறுபொதியை தயக்கத்துடன் வாங்கினான். நேசனின் அத்தான் "நேசா அவர் படுக்கையில் போன நாள் தொடக்கம் தினசரி இரண்டு மூன்று தரமாவது சொல்லி ஞாபகப்படுத்துவார். இதை நேசனிடம் குடுத்து விடுங்கோ என்று". கணவர் சொன்னதை ஆமோதிப்பது போல் நேசனின் அக்கா தலையை ஆட்டினார். நேசன் பார்க்கத் திரும்பிய போது ரமணி நேசனைப்பார்த்துக் கொண்டிருந்தாள். ரமணியின் விழிகளும் நேசனின் விழிகளும் சந்தித்துக் கொண்ட போது ஏதோ பேசவாயெடுத்தாள் ரமணி. வாயசைந்தது. ஆனால் வார்த்தைகள் தான் வரவில்லை. அந்த இடத்தில் தான் ஏதும் சொல்லப் போக அது வீண் சிக்கலில் முடிந்து விடும் என்று ரமணி நினைத்தாளோ என்னவோ, "வேறு ஏதாவது சொன்னாரா அப்பா?'' என நேசனின் குரல் அமைதியைக் குலைத்தது. நேசனின் அக்கா , "குடுத்துவிடச் சொன்னார் அவ்வளவு தான்." சரி என்ன இருக்கு எண்டு திறந்து பார்த்தால் தெரியும் தானே, இது நேசனின் அத்தானின் குறுக்கீட்டுக் குரல். அதற்குள் அங்கு வந்த காவியாவும் ஓவியாவும் நேசனின் கையில் இருந்த பொதியைப் பிடித்தபடி, அப்பா இது என்ன, என்று இழுக்க முயன்றனர். பிள்ளைகளை ஒருகையால் அணைத்தபடி மறு கையால் பொதியை ரமணியிடம் கொடுத்தான் நேசன். திறந்து என்ன இருக்கு பார்ப்பம். என்று நேசன் சொல்ல முன்னரே ரமணி பொதியைத் திறந்தாள். அதற்குள் பிள்ளைகள் இருவரும் விளையாட்டில் இலயித்தபடி அவ்விடத்தை விட்டகன்றனர். அப்போது மீதி மூன்று சோடி கண்களும் பொதியையே உற்றுப் பார்த்தன. எல்லாம் காசுக்கட்டுக்கள். "அப்பா" ரமணி உரத்த குரலில் சூழலையும் மறந்து சொன்னாள். காசுக் கட்டுக்களுக்கு மேல் மடித்தபடி ஒரு துண்டு இருந்தது. நேசன் அதை எடுத்து உரத்த குரலில் வாசித்தான். "நேசனுக்கு அப்பா எழுதுவது. என்ரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒய்வூதியப்பணத்தில் சிறுகச் சிறுகச் சேர்த்த பணம் தான் இது. எதிர்காலத்தில் எங்கள் சந்ததிக்கு உதவ வேண்டும் எண்டு எண்ணினேனே தவிர இதில் மொத்தம் எவ்வளவு இருக்கு எண்டு எண்ணவில்லை. அதை நீயே எண்ணிப்பயன் படுத்திக்கொள்''. வாசித்து முடித்ததும் நேசனின் கண்கள் கலங்கின. ஏதோ இது நேசனின் சாதகக் குறிப்பு என்று நினைச்சன். நேசனின் அக்கா அப்பாவித்தனமாய் உளறினார் செயற்கைச் சிரிப்புடன்.

ரமணி நேசனைத் தங்கள் அறைக்குள் கூட்டிச் சென்றாள். கதைவைத் தாழிட்டபடி ரமணி "என்னப்பா இவ்வளவு காசும் கையிலை வந்த உடனே வாயடைச்சுப் போச்சா? அங்கே கனடாவில் உள்ள வங்கி கடன்களில் கால்வாசியாவது கட்ட இது போதும்..". என்று இழுத்தாள். அவள் முடிப்பதற்குள் நேசன் "சரி அது எனக்கும் விளங்கும். கனடாவில் ஆருக்குத்தான் கடன் இல்லை? "இந்தக் காசு ஒரு நல்ல நோக்கத்துக்காக அப்பா சேர்த்தார். வெறுமனே கொஞ்சக் கடன் தீர்க்க அதைப் பாவித்துக் கொச்சைப்படுத்தக் கூடாது." என்று ரமணியின் முகத்தைப் பார்த்துச் சொன்னான். இங்கே உள்ள சனம் முன்வந்து குடுக்கிறார்கள். இதே நிதிக்கு கனடாவில் வீடு தேடிவந்து கேட்ட போது பல பொய் சொல்லி குடுக்க மறுத்தோம். ஒரு வரலாற்றுக் கடமையிலிருந்து தவறியதால் மனச்சாட்சி என்னை உறுத்தி வருகுது. அதற்குப் பிராயச்சித்தம் செய்ய அரிய சந்தர்ப்பம் தேடி வந்திருக்குது. அர்தமுள்ள இந்த மண்ணில் நிற்கும் போது பார்த்தியா? எதிர்காலத்தில் இந்தப் பணம் எங்கள் சந்ததிக்குப் பயன் படவேண்டும் என்றுதான் அப்பா எழுதி வைத்தார். எங்கள் சந்ததி என்றதன் விளக்கம் எங்கள் குடும்ப வாரிசுகள் மட்டுமல்ல, தமிழ்ச் சந்ததியும் தான். இது மாதிரி மண் மீட்பு நிதிக்குத் தங்கள் பங்களிப்பை ஒவ்வொருவரும் செலுத்தித் தோள் கொடுத்தாலே போதும் தாயக சுதந்திரம் தானே பிறந்து விடும். இந்தக் காசை மண் மீட்பு நிதிக்குத்தான் குடுக்கப்போகிறோம் முழுமனதோடை என்றான் நேசன் திருப்தியோடு.

1.7.2006
"உங்கள் நண்பன்" சஞ்சிகை
ரொறன்ரோ, கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

## இன்றைய தொழிலாளி நாளைய பேராளி

அவள் ஒரு கூலித்தொழிலாளி. யாழிசைக்குழல்மொழி அவளது இயற்பெயரென்றாலும் மொழி என்று சுருக்கமாக அழைக்கப் பட்டாள். சுமாரான விவசாயக் கூலித் தொழிலோடு மொழியின் வாழ்க்கை வண்டி ஓடுகிறது. வானம் பொழிகிறது பூமி விளைகிறது என்று சொல்லுவார்கள், ஆது கூட பொழிய வேண்டிய நேரத்தில் பொழிந்தால் தான் பயிர் விளையிறமாதிரி விளையும். இரணைமடுக்குளத்தை நம்பி விவசாயம் செய்யும் வயல்களில் மொழியின் கால்கள் படாத இடம் இல்லை என்று சொல்லிவிடலாம். பதினைந்து ஆண்டுகளாய் இதே தொழிலில் மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்துவிட்டாள் மொழி.

மழை தூறிக் கொண்டிருந்தது, புழுதி வயல்களில் அது விழுந்தபோது புழுதி மணம் காற்றிலே மிதந்து வந்தது. மொழியின் வீட்டின் பின்புற யன்னலூடாக வீடு, அது வீடென்றும் சொல்லமுடியாது குடிசை என்றும் சொல்ல முடியாது. குடிசைக்கு ஓடு போட்டு பின் சீமெந்தினால் சுவர்எழுப்பிய வீடு என்றால் பொருத்தமாயிருக்கும். அவளின்உழைப்பின் சின்னமாய் திகழ்வதும் அது ஒன்று தான். நெல்விதைக்க இருக்கும் வயல் பாத்திகளைப் பார்க்கும் போது மனக்கண்ணிலே அவை நன்றாக நெல் விளைந்து பச்சைப் பசேலென்று காற்றிலே ஆடும் அழகான காட்சிகள் கனவாய் மிதக்கும். கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாய் நெல்விளைச்சல் அமோகமாகவிருந்தது. நெல் விற்ற காசோடு அடைவில் இருந்த நகைகள் எல்லாம் மீட்கவேணும் முதல் வேலையாக நெல்வித்தகாசும் நகையளும் ஈடு வைத்து ஒருவாறுகட்டிய வீடு அது மீதிப் பணம் இருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாயும் நகை செய்ய வேணும். இது மொழியின் அப்போதைய திட்டம். ஒரு நகை அடைவில் இருக்க இன்னொரு நகை வாங்க அவளின் மனம் ஒத்துக் கொள்ளாது. அவளின் பெண் மனம் பலதிசையிலும் சிறகடித்தது.

கால ஓட்டத்தில் பெரும் போக காலம் போனதே தெரியவில்லை. பயிர் விளைச்சல் அமோகமாயிருந்தது. வழக்கமாய் நன்றாக விளைந்தால் விலை மலிந்துவிடும். வழமைக்கு மாறாக இந்த முறை எங்கும் நன்றாக விளைந்தும் விலை இறங்கவில்லை. வன்னியிலிருந்து தாண்டிக்குளம் ஊடாக கொழும்புக்குப் போற பார ஊர்திகளை தாராளமாகப் போக இராணுவம் விட்டிருக்கிறது என்று கேள்வி. நெல்லை மொத்தமாக வாங்கிய வியாபாரி தந்த காசில் செலவுகள் போக லாபம் பாடுபட்டதுக்குப் போதும் இது. அவளின் பெருமூச்சில் இருந்து வந்த வார்த்தைகள் அவை. மீதிப்பணத்தை அடுத்த போகப் பயிர்ச் செய்கைக்கு பத்திரமாக எடுத்து வைத்து விட்டாள் மொழி. அப்போது பழைய நினைவுகள் அவளின் மனதிலே நிழலாடியது.

மொழி அப்பொழுது பத்தாம் வகுப்பு மாணவி, அப்பா நோயாளியாகிவிடத் தாயுடன் சேர்ந்து கூலிவேலை செய்து குடும்பத்தைக் கொண்டிழுத்தாள். தகப்பனின் மறைவின் பின் தாய் அதிர்ச்சியால் படுத்த படுக்கையில் விழப் படிப்பைக் கைவிடவேண்டி வந்தது. ஒழுங்காக வகுப்புகளுக்குப் போகா விட்டாலும் இறுதிப்பரீட்சையில் அதிகபுள்ளிகள் எடுத்துப் பாடசாலையை அதிசயிக்க வைத்தவள் தான் மொழி. படிப்பைத் தொடரமுடியவில்லையே என்ற ஏக்கம் தீராத சோகமாய் எப்பொழுதும் அவளின் அடிமனதில் குடிகொண்டிருக்கிறது. பாடசாலைக்குப் போகும் உயர்தர வகுப்பு மாணவிகளைப் பார்த்து ஏங்குவாள். தகப்பன் காலமாகும்போது. “பிள்ளை நீயாவது படிச்சு முன்னுக்குவர வேணும்” என்று சொல்லித் தன் ஆசையைச் சொல்லிவிட்டுப் போனார். ஆனால் அன்றைய குடும்ப நிலமை? “பள்ளிக் கூடப்படிப்பு இலவசம் தான், அதுக்காகத் தொடர்ந்து படிக்கவேணும் எண்டால் வீட்டைக் கவனிக்கிறது யார் பிள்ளை” இது மொழியின் தாய் அடிக்கடி சொல்லியது. வறுமையின் வதையில் தாய்சொல்லிக் காட்டியது வேதமாகப் பட்டது மொழிக்கு. நோயாளியான தாய்க்கு மருந்து வாங்க என்று தனியான செலவு இருக்கிறது. கொஞ்சநாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமில்லாமல் வேலைக்கும் பள்ளிக் கூடத்திற்கும் போய் வந்தாள். ஏதோ கொஞ்சக் காசு வந்தது. அது ஒரு நேரச் சாப்பாட்டுக்குக் கூட போதவில்லை. என்ன செய்வது கிடைத்த வேலைக்குப் போவதைத் தவிர வேறு வழியில்லை. நெருங்கிய சொந்தக்காறரும் எவரும் அருகில் இல்லை. ஆபத்து அவசரம் என்றால் பக்கத்து வீட்டுக்காரர்களையே எதிர்பார்க்க வேண்டியிருந்தது.

ஒரு நாள் சிறீலங்கா விமானப்படையின் விமானங்கள் நடாத்திய குண்டு வீச்சில் தாய் பலியானாள். குடியிருந்த குடிசையோடு சிதறிப் போயிருந்தார் தாயார் வயல் வேலைக்குப் போயிருந்த படியால் அதிஸ்ட வசமாய் மொழி தப்பிவிட்டாள். தாயின் திடீர் இழப்பால் தாங்கமுடியாமல் துடிதுடித்தாள். அந்தச் சிறு குடிசையில் குடியிருந்ததோ இரு பெண் ஜீவன்கள். அதில் ஒருவரின் இழப்பால் மற்றவர் நிர்க்கதியாக வேண்டி வந்தது. தாய் இறந்த அவலம் பற்றிய பயம், தனிமை, வறுமை எல்லாம்மொழியை வாட்டி எடுத்தன. இப்படியே இடிந்துபோய் இருந்துவிட்டால் எதிர்காலம் என்னவாகும்? வேலை வெட்டி என்று போனால்தானே சாப்பிடவாவது ஏதாவது தேறும். ஒருவாறு மனதைத்திடமாக்கிக் கொண்டு வேலைக்குப் போக வேண்டும் என்ற மனவைராக்கியம் மொழியின் மனதிலே இறுக்கமாகி வந்தது. உழைப்பதிலும் அதைச் சேமிப்பதிலும் கண்ணும் கருத்துமாயிருந்தாள். மொழியின் குடிசையிருந்த இரவல் காணி விற்க வந்த போது போட்டி போட்டுக் கொண்டு அதை வாங்கினாள். அக்கம் பக்கத்து விவசாயிகள் இவள் இதை வாங்கப் போகிறாள் என்று கேள்விப்பட்டதும் “மொழி! என்ன ஒரு சின்னக் குடிசை போடப் பெரிய காணி தேவையா? திடீரென்று உன்னிடம் அவ்வளவு பெரிய தொகை காசு இருக்கா” என்று பேச்சோடு பேச்சாக மொழியை நேரே கூடக் கேட்டார்கள் சிலர். தனக்காக இல்லாவிட்டாலும் இவர்களின் பொறாமைக் காகவாவது இதே காணிக்குள் ஒரு சிறியவீடு கட்டிக் காட்டத் தீர்மானித்தாள். இருந்த காசை எல்லாம் போட்டு சின்ன வீடு ஒன்று கட்டினாள். பலநாளைய ஒரு வீடு கடடவேணும் என்ற ஆசை நிறைவேறியது. ஒரு வீடுகட்ட இவ்வளவு பாடா? இரண்டு வருசத்துக்கு முன் இதே வீட்டைக் கட்டியிருந்தால் சீமேந்தும் கூலியும் அதிகமாய்க் கொடுக்க வேண்டியதில்லையே என்று மொழி வருந்தினாள். இருந்தாலும் பொருளாதாரத் தடை அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது என்று எத்தனையோ சோதனைகள் வந்தாலும் தனியே ஒரு பெண்ணாக நின்று உழைத்து சாதித்ததையிட்டு உள்ளூர மனம் குளிர்வாள். வயலிலே பயிர் நன்றாக விளைந்தது. மொழியின் அன்றாடச் செலவுக்குக் காசு வந்தது.

பக்கத்துக் கிராமத்திலிருந்த தெரிந்த ஒரு வயதான பெண் மொழியைத் தேடிவந்து "பிள்ளை தனியா இருந்து கஸ்டப் படுகிறாய் போல இருக்கு. தெரிஞ்ச இடத்திலை நல்ல மாப்பிள்ளை இருக்கிறார். கலியாணம் செய்வியா?" என்றார். திடீரென்று மொழிக்கு என்ன செய்வதென்று தெரியாமல் தலை குனிந்தபடி நின்றாள் " வெட்கப்படுறாய் போலை இருக்கு, மௌனம் சம்மதம் தானே'' என்று அந்தப்பெண் கேட்ட போதுதான் மொழி விழிததுக்கொண்டதோடு தான் அவ்வளவுநேரமும் ஏதோ தீவிர சிந்தனையில் இருந்ததை உணர்ந்தாள். தன்னைச் சுதாகரித்துக் கொண்டு "யோசிச்சுச் சொல்லுகிறேன்'' என்ற சமாளித்து விட்டாள். கல்யாணம் என்றவுடன் ஒரு பெண்ணுக்கு இயற்கையாக வரும் வெட்கம் தனக்கு வந்தபோது மீண்டும் வெட்கப்பட்டாள் பக்கத்து வீட்டுக்காரர் சிவநாதன் அண்ணர் குடும்பத்தார் மீது மொழி நல்ல நம்பிக்கையும் மரியாதையும் வைத்திருந்தாள். மொழிக்குண்டு எந்த உதவி வேண்டும் என்றாலும் தயங்காமல் கேட்கக்கூடிய வீடு அது. அது போல் அந்தவீட்டுக்கு ஏதும் உதவி தேவை யென்றால் மொழியிடம் ஓடி வருவார் சிவநாதன் அண்ணரின் மனைவி. மொழிக்கு தன் மனச் சுமையை இறக்கிவைக்க ஒரு சுமைதாங்கி தான் அந்த வீடு. சிவநாதன் அண்ணனிடம் அந்த மாப்பிள்ளை பற்றி விசாரித்தபோது தெரிந்தவர் நல்லவர் என்று புகழ்ந்தார். அவரும் தன் குடும்பத்துக்கு உழைத்துக் கொடுப்பதற்காக தனிக்கட்டையாக இருக்கிறார். இப்போது பொறுப்புகள் இல்லாததால் திருமணம் செய்யவிருக்கிறார். "தான் பேசி இந்தக் கலியாணத்தைச் செய்து வைக்கிறது தன்ரை கடமை" என்று சிவநாதன் அண்ணர் திருமணத்தைச் செய்தும் வைத்தார்.

பழைய நினைவுகளிலிருந்து விடுபட்ட மொழி தன் திருமணத்தில் சிவநாதன் அண்ணர் குடும்பம் செய்த உதவிகளை நினைத்து மானசீகமாய் நன்றி தெரிவித்தாள். கணவர் சுகுணன் பார்வைக்கு முரட்டுத் தனமாய் இருந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமைசாலி நேர்மையானவன் என்று நல்ல பெயர் அவரின் வியாபாரத்துறையில் உண்டு. தாயக விடுதலைக்காக அளப்பரிய தொண்டுகள் பல செய்தவர். "பொதுமக்களுக்குத் தற்காப்புப் பயிற்சி குடுக்கினம் போராளிகளுக்குப் பக்கபலமாய் நாங்கள் தான் துணைப்படையைப் பலப்படுத்த வேணும். நாங்கள் இரண்டுபேரும் சேருவோம்" என்று உறுதியுடன் சுகுணன் சொன்னான். மொழி புன்னகை தவழ "நானே உங்களைக் கேட்கலாம் என்றிருந்தேன். பார்த்தீங்களா நம்ம மன ஒற்றுமையை" என்றாள் உற்சாகத்துடன் 'வீட்டுக்காக உழைச்சிட்டோம் இதுவரை, இனிநாட்டுக்காக உழைச்சு நம் மண்ணை மீட்டேயாகவேணும் "என்ற விடுதலை வேட்கையில் பயிற்சியில் சேர்ந்தனர். திங்கள்கள் சில உருண்டோடப் பயிற்சிகள் மும் முரமாய் நடந்து முடிந்தன. பயிற்சி நிறைவு விழாவில் கலந்து கொண்ட மொழியும் சுகுணனும் வேறு பல போராளிகளுடன் உழவு இயந்திரத்தில் உற்சாகத்துடன் வீடு நோக்கி வந்தார்கள். தாயக விடுதலைப் போரில் தம்மை இணைத்துக் கொண்ட தம் வாழ்க்கைக்கு அர்த்தம் உள்ளதையிட்டுப் பேருவகை கொண்டார்கள்.

10. 11. 2006
-முழக்கம்-
ரொறன்ரோ, கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18

# மனங்கள் மாறட்டுமே

“அது சரி கமலம் ஆர் வந்தது? கதைச்சுச் சத்தம் கேக்குது” என்று சொல்லிக் கொண்டு முன் கூடத்திற்குள் சாலினி நுழைந்தாள். “வேறையார் இந்த விடியக் காலையிலை வந்து கதவைத் தட்டுகிறது எங்கடை மகாராணி மாலினி தான்” என்றாள் தங்கை கமலம். “என்னடி மாலினி அத்தி பூத்தாப்போல இந்தப் பக்கம். சாலினி கேட்டுக் கொண்டு மாலினியின் பக்கத்தில் அமர்ந்தாள். காலை வெயில் கண்ணைக் கூசியது. முற்றத்தில் நின்ற பெரிய அம்பலவி மாமரத்தில் பழங்களைக் கொத்தித் தின்னும் பறவைகளின் ‘‘கிரீச் கிரீச் ’’ ஒலி கேட்டுக் கொண்டிருந்தது. அக்கா சாலினியுடன் கமலமும் சேர்ந்து தன் பள்ளித் தோழியான மாலினியுடன் பேசிக் கொண்டிருந்தாள். ஒருவரை ஒருவர் கேலி செய்து கிண்டலடித்துக் கொண்டனர்.

நல்ல மாநிறத்தில் உயர்ந்த அழகியான மாலினியின் நீண்ட ஒற்றைப் பின்னலே தனியழகு. இதனால் தானோ என்னவோ இவளைப் பாடசாலையிலேயே “ மகாராணி” என்று தோழியர் பட்டம் சொல்லிக் கூப்பிடுவார்கள். மாலினி இப்போது பல்கலைக் கழக இறுதியாண்டு வர்த்தக மாணவி. கமலம் கடந்தஆண்டு தொழில் நுட்பக்கல்லூரியில் வர்த்தகக் கற்கைநெறி படித்து முடித்துவிட்டு வேலைகளுக்கு விண்ணப்பித்து விட்டு இருப்பவள். அக்கா சாலினி அதே கற்கை நெறியை மூன்று வருடங்களுக்கு முன் படித்து முடித்து விட்டு வேலை தேட விருப்பமில்லாமல் வீட்டோடு இருப்பவள். இப்படியே இருந்தால் இனியென்ன கலியாணம் கட்டிவைப்பார்கள் என்று நினைத்துக் கொண்டு கல்யாணக் கனவில் மிதப்பவள். “என்னடி மாலினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனகிழமை உங்கடை வளாகத்தில் பகிடிவதை சம்பந்தமாய் இறுதியாண்டு படிக்கிற நாலுமாணவரை இடைநிறுத்தம் செய்ததாய் செய்திகள் கேள்விப்பட்டோம் உண்மையா?" கமலம் தேநீரை மூன்று பேருக்கும் வைத்து விட்டுத் தன் இருக்கையில் அமர்ந்தாள். 'இப்ப தேத்தண்ணி குடிக்கத் திரும்பவும் வேர்க்கப் போகுது. வேண்டாமடி நீ பச்சைத் தண்ணியைத்தா அது போதும்'' மாலினி கையிலிருந்த மட்டையை விசிறியபடி சொன்னாள். "சரி சரி இப்ப கேட்டதுக்கு நீ பதில் சொல்ல வில்லையே? "கமலம் திரும்பவும் வினாவினாள். "மாலினி அது வந்து பகிடிவதை எண்டு புது மாணவர் யாரோ முறைப்பாடு செய்திருக்கினம். அவையளைத் திருப்திப்படுத்த வழமையாக நடக்கிறது தான் இது'' என்று வார்த்தைகளை விழுங்கிப் பேசினாள். "இல்லையடி மாலினி என்னதான் இருந்தாலும் இடைநிறுத்தம் செய்கிற அளவுக்கு ஏதோ நடந்திருக்கு, கண்டபடி இடைநிறுத்த முடியுமோ" கமலம் புதிர் போட்டுக் கொண்டே, காலை எழுந்ததற்கு வாரப்படாமலிருந்த தன் தலையை வார ஆரம்பித்தாள். இரட்டைப் பின்னல் சில நிமிடங்களில் ஒற்றைப் பின்னலானது.

இந்த உரையாடலில் இலயித்திருந்த சாலினி ஏதோ செய்ய வேண்டிய ஒன்றை மறந்து விட்டேன் என நினைத்துத் திடீரெனச் சமையலறைக்குள் விரைந்தாள். கையில் பெரிய தட்டில் முதல் நாள் காயப்போட்ட முருங்கைக்காய் வடகத்தை முற்றத்து வெயிலில் வைத்து விட்டு வானத்தைப் பார்த்தாள். இன்று மழை வருமா என்பது போல. மழைவரும் அறிகுறிகள் தென்பட வில்லை, பதிலாகவெயில் மட்டும் கொளுத்தியது போல அகோரமாயிருந்தது. "மாலினி வந்தனி நிண்டு மத்தியானம் சாப்பிட்டுத்தான் போகவேணும், இடையிலை எழும்பி ஓடிவிடாதே... என்ன சரியோ" என்று சமையலறையிலிருந்து குரல் கொடுத்தாள் கமலம். இதைக் கேட்ட மாலினி இருக்கையை விட்டு எழும்பி "கமலம் ஐயோ கமலம் சாப்பிட்டுக்கொண்டிருக்க நேரம் போயிடும். கொஞ்ச நேரத்திலை நான் போகவேணும். வீட்டிலை தேடப்போகினம்'' என்று சொல்லிக் கொண்டு சமையலறையைப் பார்த்தாள். கமலம் விடுவதாய் இல்லை. சாலினியும் சேர்ந்து கொண்டு வற்புறுத்தியும் மாலினியைச் சாப்பிடவைக்க முடியவில்லை. சாலினி எலும்மிச்சம் பழத்தண்ணி தா. அதைக் குடிச்சிட்டு நான் வெளிக்கிடப் போறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற மாலினி மீண்டும் உட்கார்ந்தாள். "எப்பிடி இந்த முறை இறுதியாண்டு சோதினையில் முதல் தரச் சித்தி கிடைக்கும் தானே மாலினி? வழமையாக உனக்குத் தானே" கிடைக்கிறது. மாலினியை கமலம் வினாவ மாலினி பதிலில்லாமல் அமைதியானாள்.கமலம் விட்ட பாடில்லை. உன்னைத் தானடி மாலினி இந்த முறை சோதினை பழம் தானே. திரும்பவும் கேட்டாள். மாலினி ஏதோ தர்மசங்கடத்தில் மாட்டியவள் மாதிரி ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு "ஓ.. ஒரு மாதிரிப் பழம் வரும் போல் இருக்கு" என்று மெல்ல விழுங்கினாள். இதையெல்லாம் மும்முரமாய்ச் சமையலில் இருந்த சாலினி கேட்டுக் கொண்டிருந்தாள். முன் கூடத்திற்கும் சமையலறைக்கும் இடையில் இருப்பது ஒரு யன்னலும் ஒரு கதவும் தான். முன்னே பேசுவது சமையலறைக்குள் நல்ல தெளிவாகக் கேட்கும்." கமலம் ஏன்டி இதைத் தோண்டித் தோண்டிக் கேட்கிறாய்?" மாலினி கமலத்தை நொந்தாள். "அது போகட்டும் படிப்பு கதையை விடு.பகிடிவதையில் இடைநிறுத்தப்பட்ட ஆக்கள் ஆர் தெரியுமா உனக்கு?தெரிஞ்ச ஆட்களோ." கமலம் கேள்விகளால் வளையமிட்டாள். "தெரியாது கமலம்" என்றபடி "மாலினி உன் வேலை விசயங்கள் எந்தக் கட்டத்தில் நிக்குது" என்று கதையைத் திசை திருப்பினாள். என்ன வெறுமனே பத்திரிகையையும் அரச வர்தமானியையும் பார்த்து விண்ணப்பித்துப் பிரயோசனமா? யாரையாவது பிடிச்சாத்தான் வேலை கிடைக்கும். "இது எனக்குச் சரிவராது. இது எனக்கு ஒத்து வராது எண்டு உனக்கே தெரியும். படிச்ச படிப்புக்கு வேலை கிடைச்சால் சரி. இல்லையென்றால் பரவாயில்லை" என்றாள் கமலம் சர்வ சாதாரணமாக. "ஏன்டி வேலையும் இல்லாமல் கலியாணமும் இல்லாமல் இருக்கப் போறியா?" மாலினி கிண்டலாய்க் கேட்டுவிட்டுச் சிரித்தாள். சாலினி சமையலை ஒருவாறு முடித்துவிட்டு முன் கூடத்துக்கு வந்து அமர்ந்து "என்ன உங்கடை வாதப் பிரதிவாதங்கள் இன்னம் முடியவில்லையே? மாலினி உன்னை நேரடியாகவே கேட்கிறேன். இந்த பகிடி வதைக்கும் உனக்கும் தொடர்பு ஏதுமிருக்கா?" என்று கேட்டாள். "என்ன சமைச்சு முடிஞ்சால் சாப்பிடவேண்டியது தானே" சாலினி என்று கேட்டாள் மாலினி. தான் கேட்டதுக்குப்பதில் சொல்லாதது கண்டு விசனம் கொண்டாள் சாலினி. முகத்திலும்சரி பேச்சுத் தொனியிலும் சரி எந்த விதவித்தியாசமும் காட்ட விரும்பாத சாலினி வரட்டுப் புன்னகையை உதிர்த்துவிட்டுத் தலையைக் குனிந்தவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாள். மாலினிக்கு சாலினியின் மௌனம் சங்கடத்தைத் தந்தது. அவளின் முகத்தைப் பார்க்கக்கூடக் கூச்சமாயிருந்தது. மாலினி-சாலினி இருவரின் சங்கடத்தைக் கண்ட கமலம் "சரி சரி சாப்பிடலாம் வாங்கோ பசிக்குது." என்றபடி எழுந்தாள். அப்போது தான் மாலினி-சாலினி இருவரும தங்களைச் சுதாகரித்துக் கொண்டு சுற்று முற்றும் பார்த்து விட்டுத் தங்களுக்குள் சிரித்துக் கொண்டார்கள்.அப்போது மாலினி, கமலம் நீங்கள் சாப்பிடலாம் தானே. இப்போ நான் வீட்டுக்குப் போகவேணும் என்று சொல்ல வாய் திறக்க முன்னரே கமலம் கதையில் முந்திக் கொண்டாள். "எடி இது இரண்டாம் முறை சொல்லுகிறாய். ஏன்டி எங்கட வீட்டிலை சாப்பிட்டால் குறைஞ்சு போவியோ." மாலினி ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அதற்குள் மீண்டும் இன்னோர் குறுக்கீடாய்ச் சாலினி, ''மாலினி நீ சாப்பிடாமல் போனால் பரவாயில்லை. நாங்களும் அதுமாதிரி உன்வீட்டுக்கு வந்தால் தேத்தண்ணி குடிக்காமல் விடலாம் பரவாயில்லைத்தானே?'' என்றாள். இருதலைக் கொள்ளி எறும்பாக செய்வதறியாமல் மாலினி மௌனமாக நின்றாள். மனதைக் கல்லாக்கிக் கொண்டு "எடி கமலம் நான் போய் வாறன் குறைநினைக்க வேண்டாம்.'' என்று சொல்லிக் கொண்டு புறப்பட்டாள் மாலினி. சாலினியோ கமலமோ தடுக்க விரும்பவில்லை. சரி போய்ட்டு வா மாலினி. என்று வழியனுப்பி வைத்தனர். மாலினி தன் சிவப்பு நிற துவிச்சக்கர வண்டியில் சிட்டாய் பறந்து சென்றாள்.

மதிய உணவை முடித்துக் கொண்டு இருவரும் ஓய்வாக இருக்கும் போது யாரோ வாசலில் கூப்பிடும் சத்தம் கேட்டது. கதைவைத் திறந்த போது மாலினியின் தாய் நின்றிருந்தார். "உள்ளே வாங்கோ." கமலம் வாயார வரவேற்றாள். இல்லை ''மாலினி நிற்கின்றாளா'' மாலினியின் தயார் உள்ளே நோட்டமிட்ட வாறு கேட்டாள் "காலமையிலிருந்து இங்கேதான் நின்றுவிட்டு இப்பதான் போனாள். ஏன் வீட்டை வந்து சேரவில்லையோ?'' சாலினி வினாவினாள். மாலினியின் தாயார் பேசிக்கொண்டே உள்ளே வந்து முன் கூடத்தில் அமர்ந்தார். ''அப்ப அவள் போக நீங்கள் இன்னுமொரு பக்கத்தால் வந்திருக்கிறியள்." அதனாள் அவளைச் சந்திக்க வில்லை போல. என்றபடி பக்கத்தில் அமர்ந்தாள் கமலம். மாலினியின் தாயார் மௌனமாக இருக்க கமலம் ஏன் வீட்டிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதும் பிரச்சனையோ என்று கேட்டாள். ஓம் தங்கச்சி அதை ஏன் பேசுவான். வாசிற்றியில் பகிடிவதை பண்ணினதாய் இவளோடை நாலுபேரை இடைநிறத்திப்போட்டினம். இன்று காலமைதான் சொன்னாள். நானும் தகப்பனும் கண்டபடி பேசிப்போட்டோம். கமலத்திடம் போட்டுவாறன் எண்டு போனவளைக் காணவில்லையே என்று தேடி வந்தேன். சரி நான் போயிற்றுவாறன். என்று சொல்லிவிட்டு பதிலுக்குக் காத்திராமல் மாலினியின் தாயார் எழுந்து காலில் செருப்பை மாட்டிக்கொண்டு புறப்பட்டார். கமலமும் சாலினியும் வாயடைத்துப் போய் மாலினியின் தாயார் போவதை உற்றுப் பார்த்துக்கொண்டு நின்றனர்.

அப்போது வீட்டு வாசலுக்குச் சற்று தள்ளித் துவிச்சக்கர வண்டியை நிறுத்தி விட்டு "அம்மா அம்மா"' என்று உரத்துக் கூப்பிட்டாள். முன்னே போன தாய் திரும்பிப்பார்த்த போது மாலினியைக் கண்டார். திரும்பி வீட்டு வாசலுக்கு விரைந்து வந்த போது கமலமும் சாலினியும் மாலினியைச் சூழ்ந்து கொண்டனர். "அம்மா வீட்டை போற வழியில் இங்கே நீங்கள் வந்ததாய்க் கேள்விப்பட்டு திரும்பி வந்தேன்." என்று கூறி மாலினி தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு அசைவற்று நின்றாள். சில வினாடி அங்கு நிசப்தம் குடிகொண்டிருந்தது. எல்லோர் பார்வையும் மாலினி மீது குவிந்திருந்தது. "என்ன கேட்கப் போகிறார்களோ?'' என்ற பயத்தில் மாலினிக்கு வாயடைத்துக் கொண்டது. காலை முதல் இருந்து எவ்வளவோ விடயங்கள் பற்றியெல்லாம் பேசிப் பேசி பொழுதுவிட்டு முக்கியமான ஒரு விடயத்தை மட்டும் மறைத்ததில் சாலினிக்கும் கமலத்திற்கும் என் மேல் கோபமா?மாலினியின் மனம் குடைந்து கொண்டேயிருந்தது. மாலினியின் தாயார் சரி மாலினி வீட்டை போவோம் வா என்றார்.

மாலினியைப் பார்வையால் அள்ப்பது போல சாலினி முறைத்துப் பார்த்தாள். தன் குற்றத்தை இனியும் மறைத்துப் பிரயோசனம் இல்லை என்றுணர்ந்தவுடன் மாலினி கமலம் என்னில் கோபப்படுவாய். எனக்குத் தெரியும். நீயும் அக்காவும் துருவித் துருவிக் கேட்ட போது கூட நான் உண்மையைச் சொல்லாதது என்ரை பிழை தான்." தயங்கியபடி சொல்ல ஆரம்பித்தாள் மாலினி. சொல்லி முடிக்க முன்னரே சாலினி குறுக்கிட்டாள். நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த உடனேயே உன்முகத்தைப் பார்க்கத் தெரிஞ்சு போச்சு ஏதோ மறைக்கிறாய் எண்டு. அது சரி இடைநிறுத்துற அளவுக்கு என்னது அப்படிச் செய்தாய்? இதையாவது ஒளிக்காமல் சொல்லு. கமலம் பேசினாள். முகம் வாடிய நிலையிலும் புன்னகை ஒன்று மாலினியின் முகத்தில் தெரிந்தது. அது தன்னையறியாமல் வந்த புன்னகையா அல்லது கமலத்தின் காரமான கேள்வியை நினைக்க வந்த புன்னகையா? அது மாலினிக்கே வெளிச்சம். இனி எதையும் மறைக்காமல் சொல்லிவிட வேண்டியது தான். மாலினியின் உள்மனம் பேசியது. "கமலம் நானும் சேர்ந்து தான் பகிடிவதை செய்தேன். ஆனால் மற்ற மாணவர்கள் மிருகத்தனமான முறையில் நடந்ததால் புது மாணவிகள் இரண்டு பேர் காயப்பட்டு ஆஸ்பத்திரியில் இருக்கினம்..." என்று மாலினி சொல்லிக் கொண்டிருக்கச் சாலினி பாய்ந்தாள். ''நீயும் தானே செய்திருக்கிறாய், பிறகு ஏன் மற்றவையைக் குற்றம் சாட்டுகிறாய்? " மாலினி சரி சரி வா போவம்" என்று மாலினியின் தாயார் வாதத்திற்கு முற்றுப்புள்ளிவைக்க முயன்றார். சாலினி விடுவதாய் இல்லை. "இது மாதிரி மிருகத்தனமான பகிடிவதை தாங்க முடியாமல் மாணவர்கள் தற்கொலை செய்கிற அளவுக்கும் போகலாம் தெரியுமா? களனிப்பல்கலைக்கழகத்தில் ரூபா என்ற சிங்கள மாணவிபகிடிவதை தாங்காமல் மாடியில் இருந்து குதித்துத் தற்கொலை செய்தது கேள்விப் பட்டிருக்கிறாயா? பகிடிவதை என்றால் பகிடியாக இருக்கவேணுமே தவிர வெறித்தனம் இருக்கக் கூடாது. இதை மீறின உங்களுக்கு இந்தத் தண்டனை போதாது. இன்று பட்டதாரியான நீ நாளைக்குப் பேராசிரியையாகி எத்தனையோ ஆயிரம் பட்ட தாரிகளை உருவாக்கி இந்த நாட்டுக்கே வழிகாட்டலாம். ஆனால் உன்னை நீயே சிறுமைப்படுத்தி விட்டாய். பல்கலைக்கழகம் என்றால் வெறும் பட்டதாரியளை மட்டும் உருவாக்கிற கட்டடிடத் தொகுதி அல்ல. எங்க கல்விச் செல்வத்தை மேம்படுத்தி இந்த நாட்டுக்கு அறிவாளியளை அர்ப்பணிக்கிற கோயில் அது. இந்த உயர் புனிதமான இடத்தில் மிருகத்தனம் இருக்கலாமா? இதன் தாக்கம் என்ன தெரியுமா? இந்த செய்தியைக் கேள்விப்படுகிற சாதாரண பாடசாலை மாணவர் தாம் பல்கலைக் கழகம் போக வேண்டுமா என்ற தயக்கம் உளவியல் ரீதியாக வருகுதாம். இந்த உண்மை பல பேருக்குத் தெரியாது மாலினி, என்று மூச்சு விடாமல் பேசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்தாள் சாலினி. மாலினியின் கண்களில்தாரை தாரையாக நீர்ப் பிரவாகம் எடுத்தது. கண்ணீரைத் துடைத்தபடி துவிச்சக்கர வண்டியை உருட்டிக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டாள் மாலினி. குற்ற மனப்பான்மையால் தன்னால் எதுவும் பேச முடியாது என்ற போது மாலினியால் நிற்க முடியவில்லை. "போய் வருகிறேன் என்றதற்கு அடையாளமாகத் தலையை மட்டும் அசைத்துக் கொண்டு நடக்கிறாள்.தாயாரும் சேர்ந்து நடந்து செல்ல இவர்கள் போக கமலமும் சாலினியும் கையசைத்து விடை கொடுத்தனர்.

5.1.2007-
"முழக்கம்"
ரொறன்ரோ கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19

# அவலங்கள் எதுவரை....?

அவர்கள் இருந்த அந்தக் கூடத்தின் சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் மூன்று முறை அலறி ஓய்ந்தது. அந்தச் சத்தம் அங்கு நிலவிய நிசப்தத்தைக்கலைத்தபோது குரு சோம்பலை முறித்துக் கொண்டு எழுந்தான். அருகிலிருந்த தங்கை அபிராமி அரைத் தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து சுற்று முற்றும் பார்த்த போது "இப்ப இரவா அல்லது பகலா" என்று அண்ணன் குருவுக்கே வெளியிலைபார் இருட்டுத்தானா? என்ற குருவுக்கே முதலில் குழப்பமாகவேயிருந்தது. இருவரின் பேச்சுச் சத்தத்தில் அங்கிருந்தவர்களும் எழுந்து விட்டனர். ஆறேழு மணித்தியாலங்களுக்கு முன்பு தான் வீட்டை விட்டு வெளியேறி எறிகணை வீச்சால் மூன்று கிலோமீற்றர் தூரத்தில் ஒரு வீட்டில் குருவும் அபிராமியும் நுழைந்தனர். புறப்பட்ட நேரம் முதல் நடந்தும் ஓடியும் களைத்து மேலும் முடியாமல் ஓர் வீட்டின் கதவைத் தட்டிய போது வீட்டுக்காரர் வாயார வரவேற்றார். செல்கள் இங்கேயும் விழுந்தால் எல்லோரும் சேர்ந்து ஓடுவம்" என்று நகைச்சுவை ஒன்றை வீசினார், இலேசான புன்னகையுடன். ஆனால் குருவுக்கோ மனம் இருப்புக் கொள்ளாமல் தவித்தது. வீட்டைவிட்டு வரும் போது தாயும் தமயனும் வெளியே போயிருந்தார்கள், வீடு திரும்பவில்லை. வீட்டு வாசல் வரை குருவும் அபிராமியும் வந்து காத்திருந்து பார்த்தார்கள். தாயும் தமயனும் வரவேயில்லை. " அண்ணா அவை எங்கேயாவது பாதுகாப்பாய் நிற்பினம்" என்று அபிராமி தொடங்க " நீ பேசாமல் இரு" என்று அவளின் வாயை அடைத்தான் குரு. மேலும் எறிகணைகள் பல அருகில் விழுந்து வெடித்துச் சத்தம் காதைப்பிளக்க தாங்கமுடியாமல் இருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டைப் பூட்டி விட்டு வெளியேறியிருந்தார்கள். அபிராமியின் வாய் சும்மாவிருக்கவில்லை “அண்ணை இது ராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி தானே, அப்ப ஏன் தங்கள் பகுதிக்குள் செல்லடிக்கிறான்?” என்று கேள்விகளால் குடைந்து கொண்டே வந்தாள்” தங்கள் படைகள் இந்தப் பக்கம் இல்லை என்றால் மீதியெல்லாம் தமிழ்ச்சனம்தானே எண்டு செல்லை அடிக்கிறான். தமிழன் செத்தால் லாபம் தானே அவனுக்கு....” குரு அலுத்துக் கொண்டே பதில் சொல்லியபடி நடந்தான். காரிருளில் அயலவர்கள் பலரும் இடம் பெயர்ந்து கொண்டிருந்தார்கள். “இன்றைக்கெண்டு பாத்து உந்துருளியை தமையன் வெளியே கொண்டு போயிருந்தான். இல்லையென்றால் கையிலும் தோளிலும் காவுகிற இவ்வளவு சாமான்களையும் அதிலை ஏற்றியிருக்கலாம்தானே தன் விதியை நொந்தவாறு சுமக்க முடியாத சுமையோடு நடந்தான் குரு அபிராமியுடன்.

“இண்டைக்கு காலைதானே சுற்றிவளைப்பு நடந்தது. யாரோ போராளிகள் ஊடுருவியிருக்கினமாம். பிடிக்க வேண்டியது தானே. கிட்டப்போகவே துணிவில்லாத ஆமி முகாமுக்குள் நின்று அப்பாவிச் சனத்துக்குச் செல்லடிக்கிறான் கோழைப் பயல்கள்” யாரோ இருளில் பேசிக்கொண்டு போவது தெளிவாகக் கேட்டது.

இப்போது விடிந்து கொண்டிருக்கிறது. சூரியன் இன்னும் முழுமையாகத் தெரியவில்லை சேவல்கள் கூவப் பறவைகளின் “கிறீச் கிறீச்” சத்தம் இடையிடையே கேட்டுக்கொண்டிருந்தது. குருவுக்கும் அபிராமிக்கும் மனம் தாயையும் தமயனையுமே சுற்றி வந்தது. அவர்கள் எங்கே? வீட்டில் தான் இருக்கிறார்களா? அபிராமியை அந்த வீட்டில் நிற்கச் சொல்லிவிட்டுக் குரு தனியாக வீட்டுக்குப் போனான். இரவு விழுந்த அளவுக்கு எறிகணைகள் இல்லாவிட்டாலும் இடையிடையே விழுந்து வெடிக்கும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. எறிகணைகள் கூவி வரும் திசைபார்த்து நடந்து நடந்து ஒருவாறு வீடுபோய்ச்சேர்ந்தான். முன் வாசல் கதவு பூட்டியபடியே இருந்தது. குரு நிம்மதிப் பெருமூச்சு விட்டான். எதற்கும் வளவை ஒருக்கால் சுற்றிப் பாப்பம்” என்று வளவை நோட்டம் விட்ட குருவுக்கு பின்புறக் கதவு திறந்திருந்தது தெரிந்தது. குருவின் மனதில் ஒரு பொறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறந்தது. "இதென்ன நேற்றிரவு பூட்டின கதவு திறந்திருக்கு." என்று தனக்குள் சொல்லிக் கொண்டு வீட்டினுள் எட்டிப் பார்த்தான். வீதி வெளிச்சம் மட்டும் மங்கலாகத் தெரிந்தது. அம்மா தம்பி உள்ளே நிற்கலாம் என்று நினைத்து "அம்மா அம்மா" என்று கூப்பிட்டுப் பார்த்தான். பதில் இல்லாததால் வீட்டை முழுவதும் தேடினான். சாமான்கள் பெரும்பாலும் நிலத்திலே சிதறிக் கிடந்தன. யாரும் வீட்டில் இல்லை. அச்சத்தில் தேகம் பதறியது, வியர்த்துக் கொட்டியது குருவுக்கு அந்தக் காலை வேளையில்.

பெறுமதியான பொருட்கள் பெரும்பாலும் சூறையாடப் பட்டிருக்கலாம் போலத் தெரிந்தன. இராணுவத்தின் சப்பாத்து அடையாளங்கள் வீட்டிற்குள் தெரிந்தது. அக்கம் பக்கத்து வீடுகளையும் பார்த்தபோது அவைகளும் அதே பாணியிலே பின் கதவுகள் உடைபட்டுக் கிடந்தன. ஆட்கள் இல்லாத வீடுகள் இராணுவத்தால் சூறையாடப்பட்டிருக்கின்றன. ஆள் அரவம் இல்லததால் நிற்கவும் பயமாயிருந்தது. ஆத்திரமேலீட்டால் உடம்பு தகதகவென்று கொதித்தது. நடைப்பிணமாய் திரும்பவும் தங்கியிருந்த வீட்டுக்கு நடந்து போனபோது தங்கை அபிராமி பதட்டத்துடன் ஓடி வந்து "அம்மா அண்ணா எங்கே" என்று கேட்டாள். குருவின் மௌனம் அவளுக்கு மேலும் பயமூட்ட "என்னண்ணா அவை எங்கே காணவில்லையா" என்று சொல்லியழ ஆரம்பித்தாள். அபிராமியைத் தேற்றிய குருவுக்கு அங்கே கண்டதைச் சொல்வதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. கனத்த அவனின் மனதுக்கு அந்த நேரம் அது ஒரு விதத்தில் ஆறுதலாகவும் இருக்க இதய பாரம் இலேசாகியது. வாசற் படியிலே தொப்பென்று இருந்துவிட்டான்.

அன்றைய வானொலிச் செய்தியில் அந்தப் பகுதியை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்திப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது. "யானைவரும் பின்னே மணியோசை கேட்கும் முன்னே" எண்ட மாதிரி செல்லடிச்சு சனத்தை ஓடச் செய்து சாமானுகளைக் கொள்ளையடிச்சுப்போட்டு இப்ப உயர் பாதுகாப்பு வலயமாம், குரு மனதுக்குள் கறுவிக்கொண்டான். "அப்பிடிப்பார்த்தால் கொஞ்ச நாளிலே இந்த இடமும் பாதுகாப்பு வலயமாகிவிடும்." என்றார் வீட்டின் சொந்தக்காரர் தன் ஆற்றாமையுடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிகணை வீச்சில் குருவின் தாயாரின் கையில் காயம் ஏற்பட்டது. வடிந்த குருதியும் தாயாரின் அலறலும் தமையன் தயானந்தனை பதற வைத்தன. உடனடியாக ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சிகிச்சை பெற்றுக் கொண்டார் தயானந்தனின் தாய். அங்கே அடுத்த கட்டிலில் ஓர் இளம் பெண் எறிகணை வீச்சிலே காலிலே காயம் என்று சத்திரசிகிச்சை செய்து அவசரமாய் இரத்தம் தேவை என்று அறிவித்தனர். "யாரோ எவரோ ஊர் பேர் தெரியாத ஆள் இந்த நேரம் இரத்தம் கொடுத்து உதவினால் பெரும் புண்ணியம் கிடைக்கும்" என்று தயானந்தனின் தாயார் தன் காயத்தின் வேதனையையும் மறந்து சொல்லிக் கொண்டிருந்தார். தாய் தன் தலையைத் திருப்பிப் பார்த்தபோது மகன் தயானந்தன் சற்றுத் தள்ளி ஓர் வார்ட் கட்டிலில் படுத்திருந்தான். தாதிமார் இருவர் தயானந்தனின் இரத்தத்தைச் சேகரித்துக் கொண்டிருந்தனர். அதே இரத்தம் உடனடியாக அந்தப் பெண்ணுக்கு ஏற்றப்பட்டது. தயானந்தன் தாயின் கட்டிலருகே சென்ற போது "தம்பி களையெண்டால் கட்டிலில் இரு" என்று சொல்லி தன் கட்டிலில் இருக்கச் சொன்னார் தாயார். மகனின் தாராள குணத்தை நினைத்துத் தாய் மகிழ்ச்சியடைந்தார். மணித்தியாலங்கள் சில ஆமை வேகத்தில் நகர்ந்தன. சத்திரசிகிச்சை செய்த பெண் லேசாகக் கண் திறந்தாள். தயானந்தனும் தாயும் அந்தப் பெண்ணின் கட்டிலுக்கருகே போய்ச் சுகம் விசாரித்தார்கள். அந்தப் பெண் "அம்மா உங்கட மகன் குடுத்த இரத்தம் என்ர உயிரைக் காப்பாத்தியிருக்கு. இரத்தத்துக்குக் கடும் தட்டுப்பாடு உள்ள இந்த நேரம் செய்த இந்தப் பெரிய உதவியை மறககமாட்டன். இதுக்குரிய காசை வீட்டுக்காரர் வரவாங்கித் தாறன். எவ்வளவு எண்டு சொல்லுங்கோ" என்று நன்றிப் பெருக்கால் சொன்னாள். தயானந்தன் "இல்லையக்கா இது இரத்த தானம். சந்தோசமாய் ஏற்றுக் கொள்ளுங்கோ. நான் இரத்தத்தை விலைபேசுறவன் இல்லை" என்று மறுத்தான். "நேற்றுக் கொழும்பில் இருந்து வந்து வீட்டுக்குப் போற வழியில் செல்விழுந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்தினம். நான் வாறதே வீட்டுக்காறருக்கு தெரியாது. எங்க வீட்டிலை சொல்லிவிடமுடியுமா நான் இங்கேயி ருக்கிறதா.? கணவரும் பிள்ளைகளும் வருவினம்." என்றாள் அந்த இளம் பெண். "எங்களை இண்டைக்குத் துண்டு வெட்டி வீட்டுக்குப் போகச் சொல்லியாச்சு. உங்கள் வீட்டில் விசயத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி விடுகிறோம்” என்றார் தயானந்தனின் தாய்.

குருவும் அபிராமியும் தங்கியிருந்த வீட்டைத் தயானந்தனும் தாயும் கண்டுபிடித்துக் கதவைத் தட்டியபோது அபிராமியே வந்து கதவைத் திறந்தாள். தாயையும் தயானந்தனையும் கண்டதும் அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சியில் “அம்மா என்று கட்டி அழுதாள். வந்த விடயத்தைத் தயானந்தன் சொன்னதும் வீட்டுக்காரர் நன்றி பெருக்கால் தயானந்தனின் கைகளைப் பிடித்துக் கொண்டார். பேசுவதற்கு நா எழுந்தது. வார்த்தைகள் வரவில்லை. வீட்டுக்காரருக்குக் கையும் காலும் ஓடவில்லை. உடனேயே ஆஸ்பத்திரிக்குப் போகத் தயாரானார். அதற்குள்அவரின் பிள்ளைகள் உடுப்புகள் மாற்றியபடி அவரை அவசரப் படுத்தினார் கள். இந்த அமளிக்குள் தயானந்தனின் தாய் நடந்த சம்பவங்களை அடுக்கடுக்காய்ச் சொல்லி கொண்டு அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்தார். முன் கூடத்திற்கு வந்த வீட்டுக்காரர் “அம்மா தம்பி இருந்து சாப்பிடுங்கோ, இங்கேயே இருங்கோ'' என்று சொல்லிப் பதிலுக்குக் காத்திராமல் தலையணை, சுடு தண்ணீர்ப் போத்தல், சாப்பாடு, உடுப்பு எல்லாம் ஒரு கூடையிலே போட்டுக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் பிள்ளைகளுடன் புறப்பட்டார். குரு “அபிராமி நீ இங்கே அம்மா, அண்ணாவுடன் நில் நான் இவர்களோடு ஆஸ்பத்திரிக்குப் போய்வாறன்'' என்று சொல்லிக்கொண்டு அவர்களுடன் புறப்பட்டான். அப்போதும் கூட இராணுவம் அடித்த பாழாய்ப்போன எறிகணை ஒன்று எங்கேயோ விழுந்து வெடிக்கும் சத்தம் தூரத்தில் கேட்கத்தான் செய்தது.

30.03.2007
முழக்கம்
ரொறன்ரோ, கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20

# இது தான் எங்கள் வாழ்க்கை

அருமைநாயகம் நடந்து கொண்டிருந்த பாதையெங்கும். மரங்களிலிருந்து சொரிந்த பூக்களாலும், இலைகளாலும் நிறைந்திருந்தது. அன்று அதிகாலை பெய்த மழைக்கும் சுழன்றடித்த காற்றுக்கும் தாக்குப் பிடிக்க முடியாமல் வீழ்ந்த பூக்களையும் இலைகளையும் காலால் தட்டியவாறு அருமைநாயகம் மெல்ல மெல்ல நடந்து கொண்டிருக்கிறான். வானம் மப்பும் மந்தாரமுமாய் இருந்ததால் காலை பத்துமணி ஆகியும் வெயில் வெளிச்சம் குறைவாகவே இருந்தது. அருமைநாயகத்திற்கு இப்பொழுது கொஞ்ச நாளாகவே காலைச்சாப்பாடு என்ற ஒன்று மறந்து போயிற்று.

"எனக்கு மட்டுமா? இலங்கையில் வடக்குக் கிழக்கில் பல வீடுகளில் இதே நிலைமைதானே" என்று அருமைநாயகம் தனக்குள் சமாதானம் செய்து கொள்வான். எவரும் வெளியே சொல்வதில்லையே. மாதச் சம்பளம் உள்ளவர்களே அல்லாடும் போது அருமைநாயகம் பாவம் என்ன செய்வான்? யாழ்ப்பாணத்தில் சொந்தமாய் இயந்திரப்படகும் இருந்தது. அதில் இரண்டு மூன்று பேரை வைத்துக் கடற்றொழில் செய்து வந்தவன் அருமைநாயகம். இன்று தொழில் இழந்து இடம் பெயர்ந்து வந்து தன் கஸ்டத்தை வெளியே சொல்ல முடியாதவனாய் இருக்கிறான். மனைவி மாலதி விடிந்ததும் விடியாததுமாய்... "இருந்த சாமான்கள் முடிஞ்சுது, அரிசி, மா, சீனி எல்லாம் வாங்க வேணும்" என்று சொல்லியருந்தது அவனுக்கு ஞாபகம் வந்தது. கையில் இருக்கிறது இரண்டு ரூபாய்க் குற்றி ஒன்று மட்டும் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதுக்குக் கடையில் என்ன வாங்கலாம்?" நினைத்ததும் அருமைநாயகத்துக்குச் சிரிப்பாயும், வெட்கமாயும் இருந்தது. மனம் ஒரு கணம் சிந்தித்தது. போன கிழமை வரை இருந்த சொற்ப காசிலை வீதியோரம் சில்லறை வியாபாரம் செய்ய முடிஞ்சது. ஒரு வருடமாய் அந்த வியாபாரத்தால ஏதோ வாழ்க்கை ஓடிச்சுது. மாலதியின் கெட்டித்தனமும் என்று கூடச் சொல்லலாம். சிறிய வருமானத்தை வைத்து இரண்டு பிள்ளைகள் கொண்ட குடும்பம் யாழ்ப்பாணத்தில் சீவிக்கிறது என்றது.

ரோந்து போற இராணுவத்தின் கெடுபிடியால் வீதிவியாபாரம் தொடரமுடியாமல் கைவிட்டுப் போட்ட முதல் கூடத் தேறவில்லை. ஏதோ ஒரு தொழில் தேவை என்று கூலி வேலை செய்யவும் தயாராகிவிட்டான் அருமைநாயகம். ஆனால் அது தான் கிடைக்க முடியாத முயற்கொம்பு மாதிரிப் போயிற்று. சொந்த ஊரில் முதலாளி என்ற பெயர் இருந்தது. இப்பொழுது இருக்கிற நிலமையில் அப்படி ஒன்று இருந்ததை நினைக்கவே மனம் விரும்புவதில்லை.

இருபது வருடத்துக்கு முன் கடல் வலயத் தடைச்சட்டத்தால் பாதிக்கப்பட்ட பல்லாயிரம் மீனவக் குடும்பங்களில் அருமைநாயகத்தின் குடும்பமும் ஒன்று. அது கடற் தொழிலாளருக்கு வயிற்றில் விழுந்த முதல் அடி. ஆழ்கடலில் மீன் பிடிக்க முடியாது, குறிப்பிட குதிரைச் சக்தி வலுவுள்ள இயந்திர வள்ளங்கள் கடலுக்குள் போக முடியாது என்று ஆரம்பித்த சட்டச் சுருக்குக் கயிறு இன்று கடற்றொழிலாளர் களின் முழுக் குரல்வளையையே நெரித்துக் கொண்டிருக்கிறது. இவை மீனவர் சங்கக் கூட்டத்தில் ஒருவர் பாடிய கவிதை வரிகள். அப்போதே தொழில் இழந்த பலர் வெளிநாடுகளுக்கும் வேறு தொழிலுக்கும் போக மனம் வைராக்கியம் மாறாமல் சொந்தமாய் ஒரு தொழில் இருக்கிறது என்ற திருப்தியோடு அருமைநாயகம் ஊரில் இருந்தவன். இன்று அவனின் சொந்த ஊரில் யாரும் குடியிருக்க முடியாமல் கூடு கலைந்த குருவிகள் மாதிரி சிதறடிக்கப்பட்டு விட்டார்கள். இடம் பெயர்ந்து தொழில் வசதிக்காகக் குருநகர் பகுதியல் குடியிருக்கும் அருமை நாயகத்தின் குடும்பம் பங்கீட்டு அட்டைக்குக் கிடைக்கும் சாமான்களை நம்பி வாழ வேண்டியிருக்கிறது. இதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு காலத்துக்கோ? அது ஆண்டவனுக்கும் தெரியாது. குடும்பச் சொத்து என்று சொல்லக்கூடியதாய் படகும், உந்துருளியும் மட்டுமே நிற்கின்றன. படகு இராணுவக் கண்காணிப்பில் நிறுத்தப்பட்டிருக்கிறது. சுழற்சி முறையில் வாரத்தில் இரண்டு நாள் மட்டும்பகலில் ஐந்நூறு மீற்றர் தூரத்திற்குள் இராணுவக் கண்காணிப்பில் மீன் பிடிக்கலாம். கரைக்கு வந்து மீனைவிற்கத் தொடங்க ஊரடங்கு சட்டம் தொடங்கிவிடும். இலேசில் மீனை விற்க முடியாது. இந்தச் சூழ்நிலையில் கடற்தொழில் செய்கிறது கட்டுப்படியாகாததால் அருமைநாயகம் சில்லறை வியாபாரம் செய்ய வேண்டி வந்தது.

கையில் இருக்கும் இரண்டு ரூபாக்குற்றியை அவன் இடையிடையே தடவிப் பார்த்தான். யாரிடம் போய்க் கடன் கேட்கிறது என்று மனம் தயங்கியது. மேலும் நடக்கவோ நிற்கவோ விரும்பாமல் அருகிலிருந்த பெரிய கல் ஒன்றின்மேல் இருந்தான். அப்போது பழைய நினைவுகளைச் சுற்றிச்சுற்றி அவன் மனம் வட்டமடித்தது.

தானுண்டு தன் வேலையுண்டு என்று அமைதியாய் குடும்பம்நடாத்திய அருமைநாயகம் கடுமையான உழைப்பாளி. கடலுக்குப் படகு போனால் அதிகாலை கடற்கரையில் காத்திருப்பான். படகுவர மீன்களை இறக்கிவிட்டுத் தொழிலாளர்களின் சம்பளத்தை அங்கேயே கொடுத்து விட்டுத்தான் மீனை விற்கத் தொடங்குவான். லாபம் அதிகமாய்க் கிடைத்தால் அதிலும்பங்கு கொடுப்பான் தொழிலாளர்களக்கு. ஒரு நாள் மனைவி மாலதி “என்னப்பா இப்ப ஓரளவு வசதியிருக்கின்ற நேரம் ஒரு லொறி வைச்சிருந்தால் கொழும்புக்கு மீன் ஏத்தலாம்” என்றாள்.

அருமைநாயகத்துக்கும் அது சரியெனப்பட்டது. இருந்த காசைப் போட்டு லொறி வாங்கிக் கொழும்புக்கு மீன் ஏற்றக் காசு வசதிகள் அதிகமாய்ப் புளங்கியது. பொற்காலம் என்று சொல்லுகிற அளவுக்கு வாழ்க்கை நன்றாயிருந்தது. போக்கு வரத்துத் தடைப்படக் கொழும்புக்கான வியாபாரம் வீழ்ந்தது. ஆனால் கடற்தொழில் கைகொடுத்துதவியது. பிறகு வந்த இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து கஸ்டங்கள் வளரத் தொடங்கின. உயர் பாதுகாப்பு வலயம் என்று இராணுவம் வீட்டை விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேற்றியபோதுதான் அருமை நாயகத்தின் மனம் தள்ளாட ஆரம்பித்தது.

அவன் நினைவுகளிலிருந்து விடுபட்டுப் பார்த்த போது நேரம் போனதே தெரியவில்லை. அப்போதுதான் மாலதி வாங்கச் சொன்ன சாமான்களின் ஞாபகம் வரப் பிள்ளைகள் சாப்பிட்டார்களோ? மாலதி தன்னைத் தேடுவாளோ? என்று மூளைக்குள் ஒரு மின்னல் வெட்டியது.

“எதுக்கும் வீட்டை போவம்” என்று விறுவிறு என்று நடந்து வீட்டை அடைந்தான். பிள்ளைகள் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள் மாலதி, “கடனுக்கு நீங்கள் எங்கேதான் போவீங்கள் பாவம். நானே பக்கத்து வீட்டில சாமான்கள் கடனா வாங்கிச் சமைச்சன். என்றாள். சாப்பிட்டுக் கொண்டிருந்த மூத்தமகள். “அப்பா, நாலு நூள் கொப்பி இல்லாமல் நாளைக்குப் பள்ளிக்கூடம் போகமாட்டேன்” என்றாள். அருமை நாயகம் மௌனமானான். மாலதி தரையைப் பார்த்தாள். மௌனத்தைக் கலைத்து அருமை நாயகம், “இப்படியே எத்தனை நாளைக்கு காலம் தள்ளுறது. பேசாமல் கிழமையில் இரண்டு நாளாவது கடலுக்குப் போறதுதான் வழி. ஏதோ கிடைக்கிறது கிடைக்கட்டும்” என்ற படி அறைக்குள் நுழைந்தான். சமயலறையில் நின்ற மாலதி “ஒவ்வொன்றாய் இழந்து இப்ப தொழில் செய்யவாவது ஒரு படகிருக்கு. அதை வைச்சுப் பிழைக்க வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை” என்றாள்.

“சரி நாளைக்கு எங்க முறை வருகுது. கடலுக்குப் போறன். உதவிக்கு ஒரு ஆள் வைச்சால் போதும்” என்றான் அருமை நாயகம் உறுதியுடன். இத்தனை நாள் இராணுவக் கண் காணிப்பில் நின்ற அருமைநாயகத்தின் படகு நாளை தொழிலுக்காகக் கடலுக்குப் போகப்போகிறது.

20.04.2007
-முழக்கம்-
றொறன்ரோ, கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியர் பற்றி



இணுவில் ஆர்.எம்.கிருபாகரன்(முருகேசு கிருபாகரன்) 1958ஆம் ஆண்டு இணுவிலில் பிறந்தவர். இணுவில் மத்திய கல்லூரி, யாழ் பரி. யோவான் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி யாழ் பல்தொழில்நுட்பக் கல்லூரி என்பவற்றில் கல்வி பெற்றவர்.

தமது முதலாவது எழுத்தினை 1975இல் கலகலப்பு சஞ்சிகையில் வெளிவரப் பெற்றதைத் தொடர்ந்து இவர் ஈழநாடு, ஈழமுரசு, உதயசூரியன் போன்ற இதழ்களில் கவிதைகளையும் அரசியல் பொருளாதார ஆய்வுக்கட்டுரைகளையும் தாயகத்தில் எழுதி வந்தார். பலகவியரங்குகளில் முழங்கினார்.

இவர் கனடா வந்ததிலிருந்து கடந்த 21 ஆண்டுகளாக அரசியல் ஆய்வுக்கண்ணோட்டங்களையும், சிறுகதைகளையும் கொழும்பு வீரகேசரியிலும் கனடாவின் செங்கதிர், ஈழமுரசு, நம்நாடு, முழக்கம், உதயன், ஈழநாடு, பறை, உங்கள் நண்பன் ஏடுகளிலும் எழுதிவருகிறார்.

ஈழத்தாயத்தில் இணுவில் கலை இலக்கியக் கழகத்தின் செயற்பாட்டில் தீவிரமாகப் பங்கெடுத்த இவர் இன்று கனடாவில் இயங்கும் இணுவில் திருவூர் ஒன்றியத்தின் இயங்கு சக்தியாகக் கடந்த 7 ஆண்டுகளாக செயலாளராகப் பணியாற்றி வருகிறார்.

சுருங்கிய பேச்சும் விரிந்த செயற்பாடுங் கொண்ட படைப்பாளி இணுவில் ஆர். எம். கிருபாகரனின் மனத்தை முழுமையாக ஆட்சிசெய்வன தமிழ்ப்பற்றும் இனப்பற்றுமே என்பதை அவரது படைப்புக்கள் நிறுவிநிற்கின்றன. அத்தோடு இன, மத, தேச எல்லைகளைக் கடந்த மனித நேயமும் அவரது கதைகளில் புலப்பட்டு நிற்பதைக் காணமுடிகிறது.

கனடாவில் பிறந்து வளரும் இணுவில் தமிழ்ச்சிறார்கள் தாய்த் தமிழையும் தமிழ்க்கலைகள், பண்பாடு, சமய ஒழுக்கங்களையும் ஆர்வத்தோடு கற்கவைக்கவேண்டும் என்ற இலட்சியத்தோடு உழைக்கும் ஆர். எம். கிருபாகரனின் பணிகள் அனைத்தும் தொடர என் வாழ்த்துக்கள்!

கனடா
27.04.2007

இசைக்கலைமணி
க. அருட்சோதி

Published by Inuvil Thiruvoor Ontriam

Design & Print @ Graphic Land - 647 219 7576

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org